# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 12 ஞாயிற்றுக்கிழமை (28.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 002


### 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில்

# அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுப் பொதியே

# நிரந்தர அரசியல் தீர்வுக்கு வழிசமைக்கும்

## இந்தியாவின் நம்பிக்கை இது என்கிறார் அமைச்சர் கிருஷ்ணா

யாழ்ப்பாணம், நவம்பர் 28

ஆயுதப் போராட்டம் முடிவுற்ற நிலையில் தேசிய நல்லிணக்கத்துக்கான அரிய சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. இந்தச் சாதகமான நிலைமையைப் பயன்படுத்தி 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் அமைந்த அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுப் பொதி, ஒரு நிரந்தர அரசியல் தீர்வுக்கான சூழ்நிலையை ஏற்படுத்தும் என்று இந்தியா நம்புகிறது. அதற்கான பேச்சுவார்த்தைகள் சமூகங்களின் பங்களிப்புடன் விரைவில் ஆரம்பமாகும் என்று நாம் நம்புகிறோம்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா மேற்கண்டவாறு தெரிவித்தார். (30ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா, டிராக்டர்களின் திறப்பைக் கையளிப்புச் செய்யும் போது....

## கிருஷ்ணா தமிழில் உரையாற்றினார்

யாழ்ப்பாணம்,நவ.28

அரியாலை நாவலடியில் நேற்று இடம்பெற்ற வீட்டுத் திட்ட அடிக்கல் நடும் நிகழ்வில் இந்திய அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா தமிழில் உரையாற்றினார்.

யாழ்ப்பாணத்தல் அமைக்கப்படவுள்ள இந்திய அரசாங்கத்தின உதவியுடனான (02ஆம் பக்கம் பார்க்க)



நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று சனிக்கிழமை மாலை இலங்கை வந்த பாகிஸ்தான் ஜனாதிபதி ஆஸிப் அலி ஸர்தாரியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வரவேற்றார். பாகிஸ்தான் ஜனாதிபதி ஆஸிப் அலி ஸர்தாரிக்கு விமான நிலையத்தில் செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது.

## தமிழ்மக்களின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு கூட்டமைப்பு ஒன்றுபட்டு உழைப்பதற்குத் தயார்

### வலி.வடக்கு மீள்குடியேற்ற நிகழ்வில் மாவை

கீரிமலை,நவ.28

தமிழ்மக்களின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒன்றுபட்டு உழைக்கத் தயார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

வலி.வடக்குப் பகுதியில் இளவாலை வடக்கு, வடமேற்கு, வித்தகபுரம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் நேற்று இடம்பெற்ற மீள்குடியேற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (02ஆம் பக்கம் பார்க்க)

## மக்களை மீட்கும் மனிதாபிமான நடவடிக்கை முதல் இன்று வரையான இந்தியாவின் உதவி தொடர்கிறது

### அரியாலை வீட்டுத் திட்ட நிகழ்வில் பஸில் ராஜபக்ஷ

யாழ்ப்பாணம், நவ.28

மக்களை மீட்டெடுக்கும் நோக்குடன் மனிதாபிமான நடவடிக்கையை இலங்கை அரசாங்கம் ஆரம்பித்த நாள் முதல் இந்தியா எமக்கு உதவிகள் செய்து வந்தது. யுத்தம் முடிந்த பின்னரும் மக்களின் மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வுப் பணிகளுக்கு இந்தியாவினதும் இந்திய மக்களினதும் உதவி தொடர்ந்தும் கிடைத்து வருகின்றது.

இதற்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சார்பிலும் இலங்கை மக்கள் சார்பிலும் நன்றி கூறுகின்றோம். (02ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கில் 970 குடும்பங்கள் மீள்குடியமர்வு

### 6 மணிநேரம் காத்திருந்து நிகழ்வில் பங்குபற்றினர்

கீரிமலை,நவ.28

வலி.வடக்கில் 20 வருடங்களின் பின்னர் 970 குடும்பங்களைச் சேர்ந்த 3, 448 பேர் தமது சொந்த இடங்களுக்கு நேற்றுத் திரும்பினர்.

இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு, வித்தகபுரம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலேயே அவர்கள் (02ஆம் பக்கம் பார்க்க)


வீட்டையோ வேலைத் தளத்தையோ எந்தநேரமும் எங்கிருந்தும் கண்காணிக்க

CCTV Camera



தொடர்பு:
Athavan Technology
இல.111/2,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Hot Line: 0750421776


**உதயனின் வெள்ளி விழா உலா**

**வாசகர் நெஞ்சங்கள் தொடர்ந்தும் பேசும்**


எந்தவொரு சிங்கர் பிளஸ், சிங்கர் காட்சியறைகளிலும் நீங்கள் கொள்வனவு செய்யும் கைனடிக் சப்பாரி (Kinetic Safari) மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 7000 பெறுமதியான DVD பிளேயர் இலவசம்.

இச் சலுகை நவம்பர் டிசம்பர் மாதம் வரை மட்டுமே......!



**இன்றே விரையுங்கள்**



| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். | ஆலடிச் சந்தி, மானிப்பாய். | பருத்தித்துறை வீதி, நெல்லியடி. | கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 021 222 5408 | 021 222 4389 | 021 224 0555 | 021 225 5343 | 021 226 4937 | 077 9508957 |

சிங்கர் - யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழர்களின் இன விகிதாசாரத்தைக் குறைக்க வடக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள்

## நாடாளுமன்றில் மங்கள சமரவீர குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.28

தமிழ் மக்களின் இன விகிதாசாரத்தைக் குறைக்கும் வகையில் அரசு வடபகுதியில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டுள்ளது.

கிளிநொச்சியில் ஆயிரம் இராணுவக் குடும்பங்கள் நிரந்தரமாகக் குடியேற்றப்பட்டு காணிகளும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் இனப் பரம்பலை வீழ்ச்சியடையச் செய்யும் அரசின் திட்டமிட்ட சதிச் செயலால், முடிந்து விட்டதாகக் கூறும் யுத்தம் மீண்டும் வெகு பயங்கரமாக வெடிக்கும். அதற்கு அரசே களம் அமைத்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி தேசிய அமைப்பாளர் மங்கள சமரவீர நேற்று நாடாளுமன்றில் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்தார்.

அரசின் இந்தச் செயல் இஸ்ரேலில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத்தில் ஏற்பட்ட பாரிய விளைவுகளை இங்கும் ஏற்படுத்தும் எனவும் சுட்டிக் காட்டினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசும் போது,

நாட்டின் இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை என சிறுபான்மை இனத்தவர்களை மறந்து விட்டு செயல்படும் அரசாங்கம் வடக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதன் மூலம் அங்கு மக்களின் இன விகிதாசாரத்தைக் குறைக்கத் திட்டமிடுகிறது.

வடக்கில் புத்தர்சிலைகளை நடுவதினால் மட்டும் பிரச்சினைகள் தீர்ந்து விட்டதாகக் கருதக் கூடாது. பிரபாகரனின் பயங்கரவாதம் அழிக்கப்பட்டு விட்டது என்று கூறினாலும் மஹிந்த ராஜபக்ஷவின் பயங்கரவாதம் தலைதூக்கி உள்ளது. தமிழ் மக்களின் மனதை வென்று சமாதானத்தை ஏற்படுத்துவோம் என்று கூறுபவர்கள் தமிழர்களின் மத வழிபாட்டுக்குக் கூட தடை விதித்துள்ளனர்.

இந்துக்களின் அதி புனிதமான கார்த்திகை தினத்தன்று தீபம் ஏற்றவும் - மெழுகுதிரிகளை ஏற்றவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. கார்த்திகைத் தீபத் திருநாளன்று மெழுகுதிரி ஏற்றிய ஒருவருக்கு யாழ்ப்பாணத்தில் படையினர் தண்டனை வழங்கி உள்ளனர். மதவழிபாட்டுக்கே தடை விதிக்கும் இவர்கள் எப்படித் தமிழ் மக்களின் மனதை வெல்லப் போகின்றனர்.

அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தில் முறிகண்டியில் ஆயிரம் இராணுவக் குடும்பங்களைக் குடியேற்றி உள்ளனர். அங்கு மேலும் இராணுவக் குடியேற்றங்களை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

இது தமிழ் மக்களின் இன விகிதாசாரத்தைத் திட்டமிட்டுக் குறைப்பதற்கான ஒரு சதித்திட்டமே. அரசின் இந்தச் செயல் இஸ்ரேலில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றம் போன்ற ஒரு பயங்கரமான நிலைமையையும், தொடர்ச்சியான உள்நாட்டுப் போரையும் ஏற்படுத்தும். இஸ்ரேலில் இன்றும் தொடர்ச்சியாக யுத்தம் நடைபெறுகின்றது. இந்த நிலைமை இங்கு மீண்டும் உருவாகும். அதற்கே அரசு தளம் அமைத்துள்ளது.

இங்கே சில முட்டாள்கள் யுத்தம் முடிந்து விட்டதாகக் கூறுகின்றனர். ஆனால் இனிமேல் தான் பயங்கர யுத்தம் ஒன்று உருவாகப் போகின்றது. அந்த யுத்தம் குப்பிகளைக் கழுத்தில் கட்டிக் கொண்டு முல்லைத் தீவுக் காட்டில் அல்ல. அந்த யுத்தம் தொழிற்சாலையிலேயே உருவாகப் போகின்றது.

வரவு செலவுத் திட்டத்திலும் கூட வடபகுதி பெரிதும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இன்றும் ஒரு லட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் மீளக் குடியர்த்தப்படாமல் நண்பர்களினதும், உறவினர்களினதும் வீடுகளில் வசிக்கின்றனர். சிறு தொகையினர் மீளக் குடியமர்த்தப்பட்டிருந்தாலும் அவர்களுக்கு இரண்டு தூண்களும் எட்டுக் கூரைத் தகடுகளும் மட்டும் வழங்கப்பட்டுள்ளன.

அவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவிகளிலும் கூட 35 ரூபா வெட்டப்பட்டுள்ளது வேதனையானது.

வடபகுதியில் அண்மையில் வழங்கப்பட்ட அரச நியமனங்களில் கூட தமிழர்கள் முற்றாகப் புறக்கணிப்பட்டுள்ளனர்.

சிற்றூழியர்களாக அம்பாறையில் 30 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் 29 பேர் சிங்களவர்கள். ஒருவர் மட்டும் தமிழர். மட்டக்களப்பில் 21 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் 17 பேர் சிங்களவர்கள். 4 பேர் தமிழர்கள். ஒரு முஸ்லிம். வவுனியாவில் 21 பேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதில் 19 பேர் சிங்களவர். ஒருவர் தமிழர். ஒருவர் முஸ்லிம்.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இந்தப் பிரதேசங்களில் தமிழ் மக்களுக்கு வாய்ப்பளிக்காவிட்டால் அங்கே எப்படி சமாதானத்தை ஏற்படுத்த முடியும் - என்றும் மங்கள சமரவீர குறிப்பிட்டார். (த-2)

### தமிழ்மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

உங்கள்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து 22 வருடங்கள் தற்காலிக இடங்களில் காத்திருந்ததுபோல இங்கும் சுமார் 5½ மணித்தியாலங்கள் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது.

மீள்குடியமர்வு தொடர்பான கூட்டங்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கலந்துகொண்டபோது, தமிழ் மக்களின் மீள்குடியமர்வு மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளில் அரசுடன் இணைந்து ஒன்றுபட்டு உழைக்கத் தயார் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் பல தடவை கூறியிருந்தோம்.

போர் முடிவுற்ற சூழ்நிலையில் தமிழ் மக்களின் பிரதேசங்களில் இராணுவப் பிரசன்னம் தேவையில்லை என்பதைப் பல தடவை வலியுறுத்திக் கூறியுள்ளோம். தொடர்ந்தும் இதனை வலியுறுத்துவோம்.

2006ஆம் ஆண்டு உயர் பாதுகாப்பு வலயம் குறித்து உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தோம். அதன் பிரகாரம் மக்களை வெளியேற்றிவிட்டு இராணுவத்தினர் அப்பகுதிகளை ஆக்கிரமித்திருப்பதென்பது சட்டவிரோதமான செயல் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

தற்போது ஏற்பட்டுள்ள சுமுகமான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு தமிழ் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். இன்னும் பல பகுதிகள் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் முடங்கியுள்ளன. அவற்றினையும் நீக்கி மக்கள் சொந்த இடங்களில் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

போரினால் இழக்கப்பட்ட சொத்துக்களுக்கும், அங்கவீனமானவர்களுக்குமான நிவாரணங்களையும் பெற்றுக் கொடுத்து குடியமர்த்துவதுதான் உண்மையான மீள்குடியேற்றம். எனவே இன்று இப்பகுதியில் மீள்குடியேற்றப்படுகின்ற மக்களின் வாழ்வாதாரம் சகல வழிகளிலும் மேம்படுத்தப்பட வேண்டும்.

உயர்பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியேற்றுமாறு எத்தனையோ போராட்டங்களை நடத்தியுள்ளோம்.

எனவே தமிழ்மக்களின் மனிதாபிமான மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பான நடவடிக்கைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் இணைந்து செயற்படும் என்பதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மட்டுமல்ல ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமும் வலியுறுத்தியுள்ளோம் என்றார். (ஓ-9-86)

### கிருஷ்ணா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டுத்திட்டத்துக்கான ஆரம்ப நிகழ் வில் கலந்துகொள்வது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது.

இலங்கை மக்கள் சந்தோஷமாகவும் சுகமாகவும் வாழ எமது நாட்டு உதவிகள் கிடைக்கும். போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டு வசதிகள், கல்வி வசதிகள் வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இவ்வாறு சற்றுச் சிரமத்துடன் தமிழில் உரையாற்றினார் கிருஷ்ணா.

சில நிமிடம் வரையில் அவர் இந்தப் பேச்சை பேசி முடிந்தார். தொடர்ந்து அவர் ஆங்கிலத்தில் உரையாற்றினார்.(ஒ-14-15)

### மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப்படவுள்ள 50 ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் முதற்கட்டமாக அமைக்கப்படவுள்ள ஆயிரம் வீட்டுத்திட்டத்தை அரியாலை நாவலடியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வில் பேசுகையில் இப்படிக் கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இறுதி யுத்தத்தின் போது இடம் பெயர்ந்த மக்களின் வைத்திய தேவைக்காக புல்மோட்டையிலும் வவுனியாவிலும் வைத்தியசாலைகள் அமைத்து இந்திய அரசாங்கம் உதவிபுரிந்தது. அது மட்டுமல்லாமல் 40 ஆயிரம் மருத்துவப் பொதிகளையும் தந்து உதவி இருந்தது. இடம்பெயர்ந்த மக்களுக்கு இது பெரும் உதவியாக அமைந்தது.

இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறுவதற்காக கண்ணிவெடி அகற்றும் பணியிலும் இந்திய இராணுவம் ஈடுபட்டுள்ளது. இலங்கை இராணுவத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவு பணிகளைத் தொடங்க முன்னரே இந்தியாவின் இரு குழுக்கள் அந்தப் பணிகளை மேற்கொண்டன. அத்துடன் மீள்குடிமர்ந்த மக்களுக்காக சிமெந்து பக்கற்றுக்கள், விவசாய உபகரணங்கள் முதன் முதலாக இந்தியாவே வழங்கியது.

முப்பது வருடகாலமாக இலங்கை மக்கள் அதிலும் குறிப்பாக வட பகுதி மக்கள் பல துன்பங்களை அனுபவித்திருக்கின்றார்கள். நீங்கள் நீண்ட காலமாக விவசாயம் செய்ய முடியாதிருந்த நிலங்களில் இன்று விவசாயம் செய்யும் நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. நாம் தொடர்ந்தும் நிரந்தர வாழ்க்கைக்கான திட்டங்களை முன்னெடுப்போம், என்றார். (ஒ-14-15)

## யாழ். துணைவேந்தர் தெரிவுத் தேர்தலில் வசந்தி 14 வாக்குகளுடன் முதலிடத்தில்

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ். பல்கலைக்கழகத்துக்கு புதிய துணைவேந்தரைத் தெரிவு செய்வதற்காக நேற்று இடம்பெற்ற தேர்தலில் மருத்துவ பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் 14 வாக்குகள் பெற்று முதலிடத் தில் உள்ளார்.

அடுத்ததாக தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், பொறியியல் பீட இணைப்பாளர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் ஆகியோர் தலா 9 வாக்குகளைப் பெற்றுள்ளனர்.

இந்தத் தேர்தலில் எட்டுப்பேர் போட்டியிட்ட போதும், வாக்குகளின் அடிப்படையில் முதல் மூவரின் பெயர்கள் துணைவேந்தர் தெரிவுக்காக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படும்.

மூவரின் ஒருவரைத் துணைவேந்தராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமிப்பார்.

பேராசிரியர் சத்தியசீலனுக்கு 8 வாக்குகளும் பேராசிரியர் ஞானகுமாரனுக்கு 5 வாக்குகளும் பேராசிரியர் இராஜரத்தினத்துக்கு 2 வாக்குகளும் கிடைத்தன.

ஏனைய இரு வேட்பாளர்களுக்கும் வாக்குகள் ஏதும் கிடைக்கவில்லை.

## வடக்கில் ரயில் பாதை அமைப்புக்கு நிதி வழங்கும் ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, நவ.28

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் வடக்கில் அமைக்கப்பட்டுவரும் ரயில் பாதைகள் திட்டத்துக்கு 416 அமெரிக்க டொலர்களை கடன் அடிப்படையில் வழங்கும் ஒப்பந்தம் நேற்றுக்காலை ஜனாதிபதி செயலகத்தில் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கையின் சார்பில் திறைசேரியின் செயலாளா; பீ.பி.ஜயசுந்தரவும் இந்தியாவின் சாம்பல் இந்திய எக்ஸிம் வங்கியின் நிர்வாகப் பணிப்பாளர் நடீம்பஞ்சதனும் இதில் கைச்சாத்திட்டனர்.

### வலி.வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீளக்குடியமர்ந்துள்ளனர்.

மீள்குடியமர்வு நிகழ்வு காலை 8 மணிக்கு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்ததை அடுத்து அப்குதியில் மீளக்குடியமரவேண்டிய குடும்பங்கள் நேற்றுக் காலையே கீரிமலையை வந்தடைந்தனர். எனினும் மீள்குடியேற்ற நிகழ்வு பிற்பகல் 2 மணிக்கே இடம் பெற்றது.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளின் பின்னர் பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இந்த மீள்குடியேற்ற நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா பணமும், சிமெந்தும், கூரைத்தகடுகளும் வழங்கப்பட்டன. அத்துடன் விடுவிக்கப்பட்ட மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளிலும் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்ட ஊழியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இப்பகுதியில் மீள்குடியமர்த்தப்படும் மக்கள் கீரிமலை நகுலேஸ்வரா வீதி, சேந்தாங்குளம் வீதி, ஆலடி வீதி ஆகியவற்றைப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தலாம் என்று அங்கிருந்த மக்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்லேஸ்திரி அலன்ரின் உதயன், யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் ஈ.பி.டிபியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் க. கமல், வலி.வடக்குப் பிரதேச செயலர் எஸ். முரளிதரன், 515 ஆவது படைப்பிரிவின் இராணுவத் தளபதி எல்.ரெந்தேனியா உட்பட்ட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக நேற்றுக் காலை 8 மணியளவில் நிகழ்வு நடைபெறவிருந்த விடத்துக்கு பொது மக்கள் சேந்தாங்குளம் பகுதி ஊடாக பஸ்களில் ஏற்றிவரப்பட்டிருந்தனர்.

(ஓ-9-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுப்பாலம்...



உதவிகள்: நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா தலைமையிலான குழுவினர் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடபகுதி விவசாயிகளுக்கு என இந்திய மக்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட டிரக்டர்களுக்கான சாவியைக் கையளிக்கும் நிகழ்வு யாழ்.பொது நூலகத்துக்கு முன்னால்இடம்பெற்றது. அதன்போது இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் டிரக்டர் சாவியை வழங்குவதை முதலாவது படத்திலும்-
கந்தர்மடம், பலாலி வீதியில் இந்திய துணைத் தூதரகத்துக்கான அலுவலகத்தை வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா திறந்து வைப்பதை இரண்டாம் படத்திலும்-
அரியாலை நாவலடியில் ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் ஆரம்ப நிகழ்வின்போது அங்கு வைக்கப்பட்டிருந்த மாதிரி வீட்டுத் திட்டக் காட்சியை குழுவினர் பார்வையிடுவதையும் மூன்றாம் படத்திலும் காணலாம்.

# நெருக்கடியான வேளைகளில் எல்லாம் இலங்கையைக் காப்பாற்றியது இந்தியா

## இனியும் தொடர்ந்து உதவும் என்கிறார் இந்தியத் தூதுவர்

யாழ்ப்பாணம், நவ.28

இலங்கை எதிர்கொண்ட பல்வேறு நெருக்கடிகள், சவால்கள் மற்றும் பிரச்சினைகளின்போது கைகொடுத்துதவிய இந்தியா, யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கும் தன்னாலான உதவிகளைத் தொடர்ந்து வழங்கும்.

இவ்வாறு தெரிவித்தார் இந்தியத் தூதவர் அசோக் காந்தா.

கந்தர்மடம், பலாலி வீதியில் அமைக்கப்பட்ட இந்தியத் துணைத் தூதரகத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு-

கலை, கலாசாரம், வர்த்தகம் உள்ளிட்ட விடயங்களில் யாழ். குடாநாட்டு மக்களுக்கும் தென்னிந்திய மக்களுக்குமிடையில் ஒத்த தன்மை காணப்படுகின்றது. இந்தியாவின் துணைத் தூதரகம் இலங்கையில் திறந்து வைக்கும் நிகழ்வானது முக்கிய மான வரலாற்று நிகழ்வாகும். நீண்ட நாள்களாக இந்தியா - இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையேயான உறவுகளை மீண்டும் புதுப்பித்துக் கொள்வதற்கான வாய்ப்பாக இது அமைந்துள்ளது.

இந்த அலுவலகத்தின் திறப்பு விழா நிகழ்வில் இரு நாடுகளினதும் வெளிவிவகார அமைச்சர்களும் கலந்து கொண்டுள்ளனர். இது இரு நாட்டு உறவுகளையும் மேம்படுத்தப் பேருதவியாக இருக்கும். அது மட்டுமல்ல இரண்டு நாட்டு மக்களுக்குமிடையேயும் உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ள முடியும்.

இந்தியா பல்வேறு வழிகளில் இலங்கைக்கு உதவி வருகின்றது. மீள் புனருத்தாரணம், மீள்கட்டமைப்பு என்ற இரண்டு விடயங்களை முதன்மைப்படுத்தி தற்போது உதவிகளை வழங்கி வருகின்றது - என்றார்.

யாழ்.பொது நூலகத்தின் முன்னால் இடம்பெற்ற நிகழ்வில், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது உரையில் தெரிவித்தமை வருமாறு-

உலகத்தின் ஒளியாகவும், சமாதானத்தின் தூதுவராகவும் யேசு பிரான் அவதரித்த நாள்கள் நெருங்கிக் கொண்டிருக்கும் தருணத்தில் நீதிக்காகவும், தர்மத்துக்காகவும் உபதேசம் செய்த கிருஷ்ண பரமார்த்தாவின் வடிவமாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.. கிருஸ்ணா இங்கு வந்திருக்கிறார். அவரைத் தமிழ் மக்களின் சார்பாகவும், அரசாங்கத்தின் சார்பாகவும் வரவேற்கின்றேன்.

எமது மக்களின் அரசியல் உரிமைக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஜனாதிபதிக்கும் எமக்கும் உறுதுணையாக எமது நட்பு நாடாகிய இந்தியா இருக்கின்றது. அதற்கு அடையாளமாக மனிதாபிமான உதவிகளுடன் இந்திய அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா வருகை தந்திருக்கின்றார்.

எமது அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் கைகுலுக்கி நேச சக்திகளாகச் செயற்பட்டு கொண்டிருப்பது தமிழ் மக்களுக்கு பெரிதும் சாதகமான விடயம்- என்றார்.

இந்த நிகழ்வின்போது இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். நிகழ்வில் அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார், அரசு தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்நாடாளுமன்றஉறுப்பினர்கள், சமயத் தலைவர்கள், திணைக்கள அதிகாரிகள், ஆகியோர் கலந்து கொண்டனர்.

(14-15)

# தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்கும் வரை கௌரவமான சமாதானத்தை ஏற்படுத்த முடியாது

## சபையில் அரியநேந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு

இந்த நாட்டில் இனவாத சித்தனை இருக்கும் வரை - தமிழர்களுக்கான அரசியல் தீர்வு வழங்கப்படும் வரை ஒருபோதும் கௌரவமான சமாதானத்தை ஏற்படுத்த முடியாது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறியுள்ளார்.

நாடாளுமன்றில் வரவு, செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு-

தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கோரி எமது தலைவர்கள் ஆரம்பத்தில் அஹிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப் போராட்டத்துக்குத் தீர்வு வழங்கப்படாமல் அது தோற்றுப் போனதால் ஆயுதப் போராட்டம் தொடங்கப்பட்டது.

இரண்டு போராட்டங்களை மேற்கொண்ட போதிலும் அரசியல் தீர்வு வழங்கப்படவில்லை. யுத்தம் முடிவுற்ற நிலையில் அரசியல் தீர்வு தொடர்ந்தும் இழுத்தடிக்கப்பட்டால் கௌரவமான சமாதானத்தை ஏற்படுத்த முடியாது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் நலன்களுக்காக இந்த வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படவில்லை. இதை நாம் சுட்டிக் காட்டினால் எம் மீது இனவாதிகள் என்ற முத்திரை குத்தப்படும்.

இலங்கையில் உள்ள 17 சிறைச்சாலைகளில் 765 தமிழ்க் கைதிகள் உள்ளனர். அவர்களில் 50 பேர் பெண்கள். எதுவிதக் குற்றங்களும் செய்யாத 5 குழந்தைகளும் உள்ளனர்.

இந்தக் குழந்தைகள் செய்த குற்றங்கள் என்ன? இவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடினார்களா? பெண் உரிமை என்றும் குழந்தைகள் பாதுகாப்பு என்றும் கூறுகின்ற ஜனாதிபதி இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறார்?

இந்த வரவு - செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நடத்தமுன் இந்த 5 குழந்தைகளையும் அரசால் விடுவிக்க முடியுமா? நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் நான் இந்தக் கேள்வியை முன்வைக்கின்றேன்.

வடக்கு - கிழக்கில் சிவில் நிர்வாகம் இடம்பெற்றுள்ளது என்று அரசு கூறுகின்றது. ஆனால் அங்கு காட்டுச் சட்டம்தான் நடைமுறையில் உள்ளது.

உண்மையில் இந்த நாடு ஆசியாவில் ஆச்சரியமிக்க நாடு அல்ல. உலகிலேயே ஆச்சரியமிக்க நாடு. ஒன்றரை வயதுக் குழந்தையை சிறையில் வைத்துள்ள இந்த நாடு உலகில் ஆச்சரியமிக்க நாடாகும் - என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரினால் பாதிப்புற்ற மக்களுக்கு புனர்வாழ்வு அதிகார சபை உதவி

## நிறைவேற்று அதிகாரி ஜினதாச தகவல்

யாழ்ப்பாணம், நவ.28

போரினால் மோசமாகப் பாதிப்படைந்த மக்களுக்குப் பல்வேறு வழிகளில் உதவிகளை வழங்கப் புனர்வாழ்வு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. சபையின் நிறைவேற்று அதிகாரி ஜினதாச தெரிவித்துள்ளார். நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற போரால் பாதிப்படைந்த மக்களுக்கு உதவிகளை வழங்குவது தொடர்பான நேர்முகத் தேர்வில் கலந்து கொண்ட அவரிடம் சபையின் நடவடிக்கை குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

எமது அதிகார சபையும், இலங்கை வங்கியும் இணைந்து போரால் மோசமாகப் பாதிப்படைந்த மக்களுக்கான உதவித் திட்டங்களை வழங்கி வருகின்றோம்.


நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் வைத்து 230 பேருக்கு உதவிகள் வழங்கப்பட்டன. முல்லைத்தீவில் கடந்த மாதம் இந்த உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வு நடந்தது.

4 வீதக் குறைந்த வட்டியுடன் இரண்டரை இலட்சம் பெறுமதியான உதவிகள் வழங்கப்படவுள்ளன. இது சாதாரண பொதுமக்களுக்கு வழங்கப்படும். 10 வருடகாலத் தவணையில் வழங்கப்படும். இதனை விரிவுபடுத்த உள்ளோம். போரால் பாதிப்படைந்த வீடுகளை புனரமைப்புச் செய்தல், குறைந்த வட்டியுடன் கடன் வழங்கும் திட்டம் ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சியில் 500 பேருக்கு வீடுகட்ட கடனுதவி வழங்கியுள்ளோம். அடுத்த மாதம் இந்த உதவிகள் வன்னிப் பிரதேசத்தின் பல்வேறு பிரதேசங்களுக்கு விரிவுபடுத்துப்படும்.

நேற்று யாழ்ப்பாணப் பிரதேசத்தில் போரால் மோசமாகப் பாதிப்படைந்த 250 பேரைத் தெரிவு செய்ய நேர்முகத் தேர்வை நடத்தினோம். இதில் 150 பேருக்கு வீட்டுத் திட்டமும், 100 பேருக்கு கடன் வசதிகளும் வழங்கத் தீர்மானித்துள்ளோம் - என்றார் அவர். (த-319)

# விளக்கேற்றும் வேளையில்...



கார்த்திகை விளக்கீடு என்பதால் எல்லோருமே பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள். பெரியவர்கள் கிளுவந்தடிகளில் வெள்ளைத் துணிகளைச் சுற்றி பந்தங்களை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களைச் சுற்றி சிறுசுகள் தமக்குரிய பந்தத்தை கைப்பற்றிக் கொள்வதில் கவனம் கொண்டிருந்தனர். இன்னும் சிறிது நேரத்திற்குள் இருள் கவ்விவிடும். ஆனாலும் இருளைத் தொலைத்து அன்றைய நாளை ஒளியின் நாளாக மாற்றுவதற்கு எல்லோரும் முயன்று கொண்டிருந்தார்கள். மிக நீண்ட காலத்திற்குப் பின்னர் தமது சொந்த இடங்களுக்கு இவர்கள் இப்போது தான் மீண்டிருந்தார்கள். இத்தனை நாளும் போரின் நெடிய கரங்கள் இவர்களது இருப்பை அலைக்கழித்துக் கொண்டிருந்தன. எத்தனையோ வருடங்களுக்குப் பின்னர் தமது வீட்டிற்கு வந்த சந்தோஷத்தால் எப்படியும் இம்முறை கார்த்திகை விளக்கீட்டை வழமையை விடவும் சிறப்பாக அனுஷ்டிக்க முடிவு செய்திருந்தார்கள். ஆனாலும் முடிவுகள் இவர்களால் தீர்மானிக்கப்படுவதில்லையே!

''இந்த முறை கார்த்திகைத் தீபத்துக்கு வீட்டுக்கு வெளியில் சிறு வெளிச்சம் கூடத் தெரியக் கூடாது. அதையும் மீறி தீபங்கள் ஏற்றப்பட்டால் விளைவுகளுக்கு நாம் பொறுப்பல்ல'' மிகக் கண்டிப்பான தொனியில் சீருடை அணிந்த சிலரால் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதன்பின்னர் கார்த்திகை விளக்கீட்டை கொண்டாடும் உற்சாகம் இருந்த இடம் தெரியாமல் பறந்தோடி விட்டது. வீட்டிலே வழமையாகக் கொளுத்துகின்ற கைவிளக்கைக் கூட அணைத்துவிட்டு இருளுக்குள்ளேயே அன்றைய இரவை அவர்கள் கழிக்க வேண்டியிருந்தது.

தீபங்களின் திருநாளாக இந்துக்களால் தீபாவளி கொண்டாடப்பட்டாலும் உண்மையான தீப வழிபாடு கார்த்திகை விளக்கீடாகவே யாழ்ப்பாணத்தில் இருக்கின்றது. விளக்கீடு அன்று குடாநாடு முழுவதுமே தீபங்களின் அணிவரிசை கண்ணைக் கொள்ளை கொள்ளும். கிளுவம் தடிகளுக்கும், வாழைக்குற்றிகளுக்கும், மண்சுட்டிகளுக்கும் மவுசு வந்துவிடும். எங்கெல்லாமோ தேடித்திரிந்து இலுப்பெண்ணை வாங்கி விளக்கேற்றினால்தான் விளக்கீடு முழுமை பெறும் என்று நம்புபவர்களும் இருக்கிறார்கள். பந்தங்களாகவோ, சுட்டிகளாகவோ உருக்கொள்ளும் தீபங்கள் சமையலறை, கிணற்றடி, உரல், அம்மி, ஆட்டுக்கல், மாட்டுத் தொழுவம், பணம்பாத்தி என்பவற்றிலெல்லாம் குந்தியிருந்து ஒளி பரப்பி நிற்கும். இதை விட எல்லாத் தீபங்களுக்கும் தாய்த் தீபமாக வீட்டு வாசலுக்கு முன்னால் வாழைக்குற்றியை நட்டு அதன் நடுவே தேங்காய்ப் பாதி தீபத்தை ஏற்றிவைத்து காவல் இருப்பது வழமையான விடயம். எப்படித்தான் காவல் இருந்தாலும் கண்ணிலே மண்ணைத் தூவிவிட்டு அந்த தீபங்களை சட்டென அடித்துவிட்டோடும் இளைஞர்களும் இருக்கத்தான் செய்தார்கள். சில இளைஞர்களுக்கு பிறரின் வீடுகளுக்கு முன்னால் உள்ள தீபங்களை அடித்து நொருக்குவது ஒரு அலாதி இன்பம். இவ்வாறு பக்கத்து ஒழுங்கைகளிலுள்ள தீபங்களை அடித்துவிட்டு இந்த இளைஞர்கள் வரும்போது இவர்களது வீட்டுக்கு முன்னால் உள்ள தீபங்களை வேறு சிலர் சிதைத்திருப்பார்கள்.

ஆனால் இம்முறை குடாநாட்டின் ஒரு சில இடங்களிலும், கிளிநொச்சியின் சில பகுதிகளிலும் கார்த்திகை விளக்கீட்டை அனுஷ்டிக்கக்கூடாது என்று ஒருசில படைவீரர்களால் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதன் பின்னர் குறித்த பகுதிகளில் பலரும் தமது வீடுகளுக்குள்ளேயே தீபங்களை தமது மனச் சாந்திக்காக ஏற்ற வேண்டிய நிலை. ''இவ்வாறான தடை உத்தரவொன்று பிறப்பிக்கப்பட்டுள்ளதா?'' என்று படை அதிகாரிகளோடு தொடர்புகொண்டு கேட்ட போது, ''அத்தகைய எந்தவிதத் தடையும் விதிக்கப்பட்வில்லை'' என்று பதில் வந்தது. அப்படியானால் மேலதிகாரிகளுக்குத் தெரியாமல் கீழ்மட்டப் படைவீரர்கள் தன்னிச்சையாக இத்தகையதொரு செயற்பாட்டை நிகழ்த்தியிருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம் கொள்ள வேண்டும். அது ஆபத்தானதொன்று. ஏனெனில் இராணுவம் என்பது ஒழுங்குகளின் இறுக்கமான கட்டமைப்பைப் பேணுகின்ற அமைப்பு. மேலதிகாரிகளின் எந்தவித ஒப்புதலையும் பெறாமல் தமது நாளாந்தக் கடமைகளைக் கூட தன்னிச்சையாக நிறைவேற்ற முடியாது. உயிரே போனாலும் கூட தமக்கு இடப்பட்ட கட்டளைகளை எந்தவொரு இராணுவ வீரனும் மீறக்கூடாது. அப்படியிருக்கையில் மேலிடத்தின் அனுமதி பெறாமல்- அவர்களுக்கே தெரியாமல் - தமிழர்கள் காலம் காலமாக அனுஷ்டித்துவரும் கார்த்திகை விளக்கீட்டை தடைசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட படை வீரர்கள் மீது ஏன் இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? இதுவே பலரின் சந்தேகம் கலந்த கேள்வியாக இருக்கிறது. குறித்த படையினர் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதால் விளக்கேற்றும் வேளையில் நிகழ்த்தப்பட்ட இந்தக் குறுக்கீடு மேலதிகாரிகளின் மறைமுக ஆதரவோடோ அல்லது திட்டமிடப்பட்டோதான் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் எழுவதற்கும் ஏதுவாகிவிடும்.

கலாசாரத்துக்கு ஆப்பு வைக்கும் கேளிக்கை நிகழ்வுகள், களியாட்டங்கள் போன்றவற்றை இரவிரவாக நடத்துவதற்கு எந்தவிதத் தடையும் யாழ்ப்பாணத்தில் இல்லை. அத்தோடு போர் முடிந்த பின்னர் இங்கு இயல்பு வாழ்வு குடிகொண்டு விட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் காலம் காலமாக அனுஷ்டிக்கப்பட்டு வந்த மத ரீதியான- மக்களின்-ஜதீகம் சார்ந்த- நிகழ்வொன்றுக்கு படையினர் சிலர் தன்னிச்சையாகவே தடைவிதித்திருக்கிறார்கள். இது அப்பட்டமான



மனித உரிமைகளை மிதிக்கும் ஒரு செயல்தான். நாகவிகாரையில் பெரஹரா கொண்டாட்டங்களும், வெசாக் தினத்தில் வெளிச்சக்கூடுகளும் நிறைந்திருந்த யாழ்ப்பாணத்தில் தொன்றுதொட்டு மரபு ரீதியாக வழிவந்த கார்த்திகை விளக்கீட்டை அனுஷ்டிக்க முடியாமல் போயிருப்பதாக மக்கள் இன்னமும் மனதுக்குள் புழுங்கிக் கொண்டிருக்கிறார்கள். நாட்டில் இன,மத, பேதமற்ற ஆட்சியே நிலவுவதாக அடிக்கடி மார் தட்டப்படுகிறது. ஆனாலும் யதார்த்தம் இதற்கு நேர்விரோதமான காட்சிகளையே கண்முன் நிறுத்துகின்றது.

இம்முறை கார்த்திகை விளக்கீட்டை அனுஷ்டிக்க வேண்டாமென்று அறிவுறுத்திய படையினர் அதற்கான எந்தவித காரணத்தையும் சொல்லவில்லை. ''எல்லாம் மேலிடத்து உத்தரவு'' என்ற பதில் மட்டும்தான் அவர்களிடமிருந்து மக்களுக்குக் கிடைத்தது. படையினரின் உத்தரவை மீறினால் விபரீதம் ஏதாவது நடந்துவிடக் கூடும் என்ற பயத்திலேயே பலரும் தமது கார்த்திகை விளக்கீட்டு அனுஷ்டானங்களை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனாலும் ஒரு சிலர் படையினரின் இந்தச் செயலுக்கான காரணத்தை தமக்குள்ளேயே தேடிக் கண்டறியவும் செய்தனர். முன்னர் புலிகளால் மாவீரர் நாள் ஒருநாள் மட்டும் அனுஷ்டிக்கப்படுவதில்லை. மாவீரர் வாரமே- அதாவது 7 நாள்களுக்கு - நவம்பர் 21 தொடக்கம் நவம்பர் 27 வரை பிரகடனப்படுத்தப் பட்டிருந்தது. இம்முறை கார்த்திகை விளக்கீடு அனுஷ்டிக்கப்பட்ட நாள் நவம்பர் 21 ஆம் திகதி. எனவே மாவீரர் வார ஆரம்பத்தில் வீடுகளுக்கு முன்னால் ஏற்றப்படும் தீபம் போராட்டத்தையும், அதன் பின்பற்றப்பட்ட நடைமுறைகளையும் மீளவும் மக்கள் மனதில் தோற்றுவித்துவிடும் என்பதற்காகவே இவ்வாறு தடைவிதிக்கப்பட்டிருக்கலாம் என்ற ஊகங்களும் மக்களிடம் இருக்கத்தான் செய்கின்றன.

கார்த்திகை விளக்கீடு ஒன்றும் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் கலகச் செயல் அல்ல. தம் மனதில் இருக்கும் இருளை அகற்ற மக்களால் கொண்டாடப்படும் ஒரு சமயநிகழ்வு. ஒரு சமய நிகழ்வுக்கே அரசியல் சாயம் பூசி, அதைத் தாம் நினைத்தபடி தடைசெய்யும் துணிவு படைவீரர்களுக்கு வந்திருக்கிறதென்றால் நிச்சயமாக அதன் பின்னணியில் அதிகாரத்தின் கரங்கள் இருக்கவே செய்யும். போருக்குப் பின்னான காலத்தில் வடபகுதியில் இனமுரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் சூழமைவுகள் தென்படத் தொடங்கியுள்ளன. சிங்கள மக்களின் குடியேற்றம், இந்து ஆலயங்கள் இராணுவப் பயன்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டமை என்பவற்றின் வரிசையில் இப்போது இந்து மதம் சார்ந்த பாரம்பரிய நிகழ்வொன்றுக்கும் தடைவிழுந்திருக்கிறது. தம்பாட்டில் இருக்கும் தமிழ் மக்களிடத்தே ஒருவித இனவெறுப்புணர்வை தோற்றுவித்து அதன் ஊடாக வன்முறை ரீதியான வழிமுறைகளைத் தமிழர்கள் தேடிச் செல்லவேண்டுமென்று இவர்கள் எதிர்பார்க்கிறார்கள். தொடர்ச்சியாக பிரயோகிக்கப்படும் அழுத்தங்களும் நெருக்கடிகளும் பீறிட்டுக் கிளம்பும் போது அது வன்முறையாகவே வெடிக்கும். ஆகவே தமிழர்களைச் சீண்டுவதன் ஊடாக அவர்களை வன்முறைக்குள் இழுத்து. 'தமிழர்கள் இன நல்லிணக்கத்தை விரும்புகிறார்கள் இல்லை. அவர்கள் எப்போதுமே வன்முறையையே தமது வழியாகக் கொண்டிருக் கிறார்கள்' என்ற விம்பத்தை உலகளவில் நிறுவுவதற்கும் அவர்கள் முனையக்கூடும். அவ்வாறான தோற்றப்பாட்டை நிலைநிறுத்தி விட்டால் இனப்பிரச்சினைக்கான தீர்வு, அதிகாரப் பகிர்வு என்பன பற்றியெல்லாம் அரசு அக்கறை கொள்ளத் தேவையில்லை.

## ஔண்யன்

இப்போது போலவே இழுத்தடிக்கலாம். 'குட்டக்குட்ட குனிபவனும் மடையன். குட்டுபவனும் மடையன்' என்று பெரியோர்கள் சொல்வார்கள். நம்மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் என்ன நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படுகின்றன என்பதை பகுத்தறிந்து செயற்படவேண்டியது பொறுப்புள்ள ஒவ்வொருவரினமும் கடமையாகும். அதேவேளை ஜனநாயகம் மலர்ந்துவிட்டது, வசந்தம் வீசுகின்றது என்றெல்லாம் வார்த்தை ஜாலம் காட்டும் ஆட்சியாளர்கள் ஓர் இனத்தின் மரபார்ந்த சடங்குக்கு இடையூறு செய்யும் 'சின்னப்பிள்ளைத் தனமான' செயற்பாடுகளில் இறங்குவது அவர்களின் பொய்முகமூடிகளை கிழிக்கவே உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## "டக், டிக், டொஸ்" ராஜதந்திரம்

சில மாதங்களாக எதிர்பார்க்கப்பட்ட இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவின் இலங்கை விஜயம் நடந்தேறியுள்ளது. எதிர்பார்க்கப்பட்டது போன்று இந்திய அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கும் வந்து திரும்பியுள்ளார்; நேற்று அவர் இங்கு மூன்று நிகழ்வுகளில் பங்குபற்றினார். அவற்றில் இந்தியாவின் துணைத் தூதரகத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் தமிழ் மக்கள் எதிர்பார்த்த முக்கிய அம்சம் ஒன்றையும் தொட்டுச் சென்றிருக்கிறார்.

போர் முடிவுற்றுவிட்டதால், இந்த நாட்டின் முக்கியமான பிரச்சினைகளை புரிந்துணர்வுடனும் பரஸ்பர விட்டுக்கொடுப்புடனும் அணுகி உண்மையான நல்லிணக்கத்தை நோக்கிய நகர்வுக்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

பதின்மூன்றாவது அரசமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் கட்டி எழுப்பப்படும் அர்த்தமுள்ள அதிகாரப் பொதி ஒரு நிரந்தர அரசியல் தீர்வுக்கான சூழ்நிலையை ஏற்படுத்துமென நம்புகிறோம்.

அதற்கான பேச்சுவார்த்தைகள் வெவ்வேறு கருத்துக்களை உடைய எல்லாத் தரப்புகளினதும் பங்களிப்புடன் நடைபெறும் என்றும் நாம் நம்புகிறோம் -

அந்தத் தீர்வுப் பொதி, நிரந்தர அரசியல் இணக்கத்துக்கான நிலையை உருவாக்கும் என்று நம்புகிறோம் - என்றெல்லாம் அமைச்சர் கிருஷ்ணா கூறிச் சென்றுள்ளார்.

இங்கே நோக்கப்பட்டவேண்டியது என்னவெனில், 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு மேலாக அல்லது கூடுதலாக ஓர் அரசியல்தீர்வுக்கு வர வழி கிடைக்கும் என்று அமைச்சர் கிருஷ்ணா நம்பிக்கை தெரிவிக்கவில்லை.

இந்த வருட முற்பகுதியில் புதுடில்லி சென்றிருந்த இலங்கையின் முக்கூட்டு உயர் அதிகாரிகளிடம் இனப்பிரச்சினைக்கான தீர்வு பதின்மூன்றாவது அரசமைப்புத் திருத்தத்துக்கு கூடுதலாக (13+) இருக்க வேண்டும் என்று இந்திய அரச சார்பில் யோசனை தெரிவிக்கப்பட்டதாகச் செய்திகள் வெளியாகி இருந்தன.

அதாவது பஸில் ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ, லலித் வீரக்கோன் ஆகியோரைக் கொண்ட, ஜனாதிபதிக்கு நெருக்கமான மூவர் குழுவிடம் இந்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்ட யோசனையை அது தணித்துக் கொண்டதா அல்லது சுருக்கிக்கொண்டதா என்ற ஐயம் ஏற்படவே செய்கிறது.

பதின்மூன்றாவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்கள் மிகக் குறிப்பாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை வெட்டிக் கழித்து அவற்றை மத்திய அரசு கைவசப்படுத்தி உள்ள சூழ்நிலையில் -

பதின்மூன்றுக்கும் கூடுதலான (13+) அதிகாரப் பரவல் தீர்வு ஒன்றைக் கொண்டுவர, - உருவாக்க - மஹிந்த அரசு எப்படி ஒருப்படும் - இணங்கும் - என்ற கேள்வி இப்போது எழுந்திருக்கிறது.

பதின்மூன்றுக்குக் கூடுதலாக இலங்கை அரசு அரசியல் தீர்வு ஒன்றை வழங்கமாட்டாது என்பதனை தெரிந்து கொண்டுதான் - புரிந்துகொண்டுதான் - அமைச்சர் கிருஷ்ணா யாழ்ப்பாணத்தில் அடக்கி வாசித்தாரா - இந்திய நிலைப்பாட்டை அமுக்கி வாசித்தாரா - என்பது தெளிவில்லை.

இதேவேளை -

அர்த்தபுஷ்டியுடனான அதிகாரப் பரவல் தீர்வுப் பொதி இலங்கையில் இறுதியானதும் நிலையானதுமான சமாதானத்தை உருவாக்க உதவும் என்று கொழும்பில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த பின்னர் தெரிவித்த கிருஷ்ணா -

யாழ்ப்பாணம் வந்தபோது -

பதின்மூன்றாவது அரசமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் கட்டி எழுப்பப்படும் என்று இரட்டைக் கருத்துப்படக் கூறியிருப்பது ஒரு வகைக் குழப்பத்தை உண்டாக்கி உள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ தமது இரண்டாவது பதவிக் காலத்தை ஏற்பதற்கு முன்னரே நிறைவேற்றிய பதினெட்டாவது அரமைப்புத் திருத்தம் நடைமுறைக்கு வந்திருக்கும்போது, தமிழ் மக்கள் விடயத்தில் இந்தியா எதனைத்தான் செய்யமுடியும் என்ற நிலை அதனிடம் தோன்றியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

ஆகையால், இந்தியாவின் உதவியுடன் அல்லது அனுசரணையுடனேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்ற ஈழதமிழ் மக்களின் நம்பிக்கை நசிந்துபோய்விடும் என்பதற்கான முன்னோட்டம் என்று கூட இதனைக் கருதலாம்.

இந்திய அமைச்சர் கிருஷ்ணா இலங்கையில் நிற்கும்போதே, பாகிஸ்தான் ஜனாதிபதி கொழும்புக்கு வந்திருக்கிறார். சீன அமைச்சர்கள் அதிகாரிகள் அடிக்கடி கொழும்பு வந்து செல்கிறார்கள். எல்லாமே ராஜிக (Diplomatic) விஜயங்கள்தான். மொத்தத்தில் இந்தியா, சீனா, பாகிஸ்தான் ஆகிய காய்களை வைத்து "டக், டிக், டொஸ்' ராஜதந்திர விளையாட்டை ஆடிவரும் ஜனாதிபதி மஹிந்தவின் அரசியல் சாணக்கியத்தை குறைத்து மதிப்பிடவே முடியாது.

# சுயாதீன ஆணைக் குழுக்களுக்கான பட்டியல் ஜனாதிபதி செயலகத்திடம்

கொழும்பு,நவ.28

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட, 7 சுயாதீன ஆணைக்குழுக்களுக்குமான அங்கத்தவர்களின் பட்டியல் பூர்த்தியாக்கப்பட்டு ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகம் இந்த ஆணைக் குழுக்களுக்கான அங்கத்தவர்களின் நியமனத்தை இறுதி செய்து 18ஆவது யாப்பு திருத்தத்தின்படி நாடாளுமன்ற கவுன்ஸிலுக்கு அனுப்பும் எனவும் டிசெம்பர் நடுப்பகுதியில் இந்த ஆணைக் குழுக்கள் இயங்கத் தொடங்கும் எனவும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரத்துங்க தெரிவித்தார்.

இருப்பினும் 18ஆவது அரசமைப்பின் படி 7 சுயாதீன ஆணைக் குழுக்களையும் நியமிக்கும்போது ஜனாதிபதி நாடாளுமன்ற கவுன்ஸிலின் கருத்தை கேட்பதை மட்டுமே செய்வார்.

7 நாள்களுக்குள் நாடாளுமன்ற குழு தனது அபிப்பிராயத்தை சமர்ப்பிக்கவேண்டும். 7 நாள் சென்றபின், நாடாளுமன்ற குழுவின் அபிப்பிராயத்தை கருத்தில் எடுத்தோ எடுக்காமலோ சுயாதீன ஆணைக்குழுக்களை ஜனாதிபதி அமைக்கலாம்.

ஊழல் மற்றும் லஞ்சக் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழு, தேர்தல், பொலிஸ், பொதுசேவை, நிதி, எல்லை நிர்ணயம், மனித உரிமைகள் ஆகியனவே மேற்படி 7 சுயாதீன ஆணைக் குழுக்கள் ஆகும். (த)

# புலிகளின் நாடு கடந்த அரசுக்கு வல்லரசு நாடுகள் ஒத்துழைப்பு!

## தகவல் ஊடகத்துறை அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.28

புலிகளின் முக்கியஸ்தரான உருத்திரகுமாரைப் பிரதமராகக் கொண்டு அண்மையில் அமைக்கப்பட்ட நாடு கடந்த அரசுக்கு அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகள் ஒத்துழைப்பதாக தகவல் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல குற்றஞ் சாட்டியுள்ளார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சராக மீண்டும் பதவியேற்றுள்ள அமைச்சர் ரம்புக்வெல நேற்றுமுன்தினம் தமது அமைச்சில் தமது கடமையைப் பொறுப்பேற்ற பின் ஊடக அமைச்சு மற்றும் தகவல் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மத்தியில் உரையாற்றினார். இதன் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் -

அரசு முன்னெடுக்கும் அபிவிருத்தி இலக்கை வெற்றிகொள்வதில் சிறுபான்மை மக்களும் பூரண பங்களிப்பு வழங்கவேண்டும்.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டதென நாம் ஓய்ந்துவிட முடியாது. சர்வதேச நாடுகளில் அதன் செயற்பாடுகள் துடிப்புடன் இடம்பெறுகின்றன. ஜனநாயகத்தின் காவலர்கள் என்று கூறப்படும் நாடுகளே அதற்கு ஒத்துழைப்பை வழங்குகின்றன.

புலிகளின் முக்கியஸ்தரான உருத்திரகுமாரைப் பிரதமராகக் கொண்ட நாடு கடந்த அரசு அண்மையில் அமைக்கப்பட்டது. இதற்கு அமெரிக்கா போன்ற நாடுகள் ஒத்துழைப்பை வழங்கியுள்ளன. அதே போன்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராகவிருந்த தமிழ்ச் செல்வனுக்கு பிரான்ஸில் சிலை வைக்கப்பட்டுள்ளது. அதன் திறப்பு விழாவில் அந்நாட்டின் பிராந்திய ஆளுநர் ஒருவரே பிரதம அதிதியாகக் கலந்து கொண்டுள்ளார்.

அரசு எத்தகைய தீர்மானங்களை எடுத்தபோதும் அதனை சில மணித்தியாலங்களுக்குள் மாற்றவேண்டிய நிர்ப்பந்தத்தை எங்கோ பதுங்கு குழிக்குள் இருந்த ஒரு தனி மனிதன் ஏற்படுத்திய யுகம் ஒன்றை மறந்துவிட முடியாது.

இந்நிலையில் தனித்துவமும் இறைமையும் உள்ள நாடு என்ற வகையில் நாம் பெற்ற சுதந்திரத்தையும் உரிமையையும் இலங்கையர் என்ற அடையாளத்தையும் பாதுகாப்பதில் நாம் முன்னிற்க வேண்டும். அதற்கு ஊடகத் தகவல் துறை அமைச்சின் பங்களிப்பு மிக விசாலமானது என்பதை உணர்ந்து செயற்படவேண்டும். - என்றார். (த)

# யுத்தத்தினால் பெற்றோரை இழந்த 1,746 பிள்ளைகள் வடக்கில் உள்ளனர்

## அவர்களில் 1,551 பேர் மாணவர்கள்

கொழும்பு,நவ.28

யுத்தத்தினால் வடக்கில் பெற்றோரை இழந்த பிள்ளைகள் 1,746 பேர் உள்ளனர். அவர்களில் 1,551 பேர் பாடசாலை மாணவர்கள் என அரசு தெரிவித்தது.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது அனுரகுமார திஸாநாயக்க கேட்டிருந்த கேள்விகளுக்கான பதிலை ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சபைக்கு ஆற்றுப் படுத்திய பதிலிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாய்மூல கேள்வி நேரத்தில் அனுரகுமார திஸாநாயக்க மீள்குடியேற்ற அமைச்சரிடம் வடக்கு பிரதேசத்திலுள்ள யுத்தத்தினால் பெற்றோரை இழந்த பிள்ளைகளின் எண்ணிக்கை, இப்பிள்ளைகளில் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை, பாடசாலை செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்காகவும் பாடசாலை செல்லாத மாணவர்களுக்காகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் என்ன? போன்ற கேள்விகளைக் கேட்டிருந்தார்.

இக்கேள்விகளுக்கு மன்றுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பதிலின் பிரகாரம் யுத்தம் காரணமாக வடக்கில் பெற்றோரை இழந்த 1,746 பிள்ளை கள் உள்ளனர்.

அவர்களில் 1,608 பேர் பாடசாலை மாணவர்கள் எனினும் 1,551 பேரே பாடசாலை செல்கின்றனர். இவர்களுக்காக அவுஸ்திரேலிய உதவி வழங்கும் அமைப்புகள் நிதி உதவி வழங்கி வருகின்றன. பாடசாலை மாணவர்களுக்கான சீருடை, சப்பாத்து, தைத்த ஆடை என்பன வழங்கப்படுகின்றன. மாலை வேளைகளில் விசேட வகுப்புகள் நடத்தப் படுகின்றன.

தொழிற் பயிற்சி வழங்க 17 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் சுயதொழில் அறிவை மேம்படுத்த விசேட திட்டங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. (த)

## நாளை

கார்த்திகை 13 29.11.2010
திங்கட்கிழமை
திதி: : அட்டமி
பி.ப.12.37 வரை
நட்சத்திரம் : பூரம்
பி.இ. 02.0? வரை
[illegible] : 12.13 - 01.43 வரை
ராகுகாலம் : 07.43 - 09.13 வரை

# மீன்பிடி வள்ளங்கள் தொடர்பில் புதிய நடைமுறைகள் அறிமுகம்

கொழும்பு,நவ.28

கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் வள்ளங்கள் தொடர்பில் புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உரிய தரத்தில் அமையாத வள்ளங்களை கொண்டு எதிர்காலத்தில் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என அரசு அறிவித்துள்ளது.

மீன்பிடி வள்ளங்களின் தரம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் விசேட சன்றிதழ் ஒன்று வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சான்றிதழ்களை உடைய மீன்பிடி வள்ளங்கள் மட்டுமே கடலில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாவனைக்கு உதவாத மீன்பிடி வள்ளங்களின் மூலம் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் பல்வேறு சிக்கல்களை எதிர் நோக்கி வருவதாகவும், இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் அரசு புதிய நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக தொழிநுட்ப கோளாறு காரணமாக பல மீன்பிடி வள வள்ளங்களில் அண்மைக்காலமாக விபத்துக்கள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மீன்பிடி வள அமைச்சினால் வள்ளங்களுக்கான தரச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி தனபாலராஜா மேரிகௌசலா



வயாவிளானைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கு ஸ்ரேசனடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுசி என்று அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் திருமதி தனபாலராஜா மேரிகௌசலா 24.11.2010 புதன்கிழமை அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னார் தனபாலராஜாவின் பாசமிகு மனைவியும், தியாகராஜா- தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் மற்றும் ருக்குமணி தம்பதியரின் அன்பு மருமகளும், சர்பிகா, சர்பிகன், தௌசிகா (பானு) ஆகியோரின் பாசமிகு தாயும், ஜெயக்குமார் (பட்டு), சுபோசலா(உமா), மன்மதகுமார் (மதன்), தவுசலா (சசி), சதீஸ்சலா (சோபி), சதீஸ்குமார் (குட்டி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுகந்தி, தேவன், அனுஷா , ஜெனி, காந்தி, வினோ ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (28.11.2010) ஞயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஞா.தனபாலராஜா (கணவர்),
மு. தியாகராஜா (தந்தை).

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (106603)

# மரண அறிவித்தல்

## சிவப்பிரகாசம் யோகநாதன்



சாவகச்சேரி, பெரியமாவடியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் யோகநாதன் 22.11.2010 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிவப்பிரகாசம் - காலஞ்சென்ற செல்லம்மா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புனிதவதி அவர்களின் ஆருயிர்க் கணவரும், யோகராணியின் (சுவிஸ்) அன்புச் சகோதரனும், செல்வறஜனி, ஜெயச்சித்திரா, பிறேமினி, லக்ஸ்மன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவராஜாவின் சித்தப்பாவும், நந்தகோபன் (லண்டன்), சுரேந்திரராஜா (லண்டன்), ஜெயசீலன் (லண்டன்), சோபா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சதீசன், லக்சனா, லக்சிகா ஆகியோரின் அன்பு மாமா வும், நடராஜா, கமலாவதி, மீனாட்சிப்பிள்ளை, லீலாவதி,சந்தான வடிவாம்பிகை, ஜெகதீசன், சிவானந்தன் சிவபாதம், கணேசநாதன் ஆகியோரின் மைத்துனரும், சஜீவன், கிஷான், அனுராகவன், சுஜன், சஜன், சஜந்தா, அபிதா, அஸ்வின், ஆரியன், அதித்தி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.12.2010 புதன்கிழமை அன்று மு. ப. 11 மணிக்கு லண்டனில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
சித்ரா - +442088451314
லக்ஸ்மன் - +447702132939 (106605)

தகவல்:
குடும்பத்தினர்.


Jinadasa

# குருநாகலை மாநகரத்தில் உயர்வான ஒரு தொழில்

30 வருட காலமாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஆடைகள் ஏற்றுமதி செய்யும் முதன்மையான கூட்டு நிறுவனமொன்றான ஜினதாஸ கூட்டு நிறுவனத்தின் குருநாகலை ஜினதாஸ பெனட் (தனியார்) நிறுவனத்துடன் கைகோர்க்க உங்களுக்கும் ஒரு அரிய வாய்ப்பு...

பயிற்சியற்ற உங்களுக்கு வருமானத்துடன் கூடிய பயிற்சிக்கான வாய்ப்பு...

- மெசின் ஒப்பரேடர்
- தரக்கட்டுப்பாட்டாளர் (கொளிடி கொன்ரோலர்)
- உதவியாளர்கள்



உங்களுக்கேயான...

- அனைத்து வசதிகளுடனான விடுதி
- இலவச காலை உணவு
- சலுகை விலையில் பகல் மற்றும் இரவு உணவு

உங்களது திறமை மற்றும் தகுதியின் அடிப்படையில் அரசு அங்கீகரித்த சம்பளத்தை விடவும் கூடுதலாக உழைக்கும் வாய்ப்பு மற்றும் தொழிலில் பதவி உயர்வு வழங்கப்படும்.

வியாபாரத்தை விரிவுபடுத்தும் போது, உங்களது பிரதேசத்திற்கும் தொழிற்சாலையை பரப்பும் நோக்குடன் **11 டிசம்பர் 2010ம் திகதி க்ரீன் க்ராஸ், இல: 33, ஆசிர்வாதம் ஒழுங்கை, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்** என்ற இடத்தில் நடைபெறும் ஆட்சேர்க்கும் பாசறைக்கு, குறைந்தது 8 சித்தியடைந்த வயது 16க்கு மேலான உங்களை அழைக்கிறோம்.

அன்றைய தினம் உங்கள் பெற்றோர்களுடன் வந்து, சரியான பாதையை அறிந்து, உயர்வான தொழிலுடன் கூடிய பாதுகாப்பானதொரு எதிர்காலத்திற்கு எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்.

## ஜினதாஸ பெனட் (தனியார்) நிறுவனம்

நீர்கொழும்பு வீதி, உஹுமீய, குரு நாகலை.
தொலைபேசி: 037- 5262031/2
தொழிற்சாலை முகாமையாளர்: 0777-[illegible] மனிதவள முகாமையாளர்: 0777-426780


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. விலை 90 -150 ரூபா வரை.

தொடர்பு: விஜயகுமார்
குளப்பிட்டி வீதி, 0773823260

## மணமகள் தேவை

யாழ். இந்து அரச துறை பதவி நிலையில் (STAFF OFFICER) தொழில் பார்க்கும் மணமகனுக்கு 1970 ஆம் ஆண்டுக்குப் பின் பிறந்த மணமகள் தேவை.

தொடர்பு:-0113150369,0723721290

## TVகள் மலிவு விற்பனை

50இற்கும் மேற்பட்ட Sony wega Flat 14''-9000/=, 21''-14,000, 25''-20,000/=, 29''-25,000/= பொக்ஸ் வகைகள் (JBL), அம்பிளிவயர்கள் DTS, குளிர்சாதனப் பெட்டிகள், Cassete, Deck, Radioகள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.VCR, DVD என்பனவும்.

தொடர்பு: 0771393670, 0214920853.
இ.மகேஸ்வரன் (அம்மன் ரேடியோ),
[illegible]

## அச்சக வேலையாள்கள் தேவை

- ★ இயந்திர இயக்குநர்
- ★ கணினி வடிவமைப்பாளர்
- ★ புத்தகம் கட்டுநர்

(பயிலுநர்களும் விரும்பத்தக்கது)
திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்
தொடர்பு: தொ.பே: 0770710689,
யாழ்.நகர்

## ஒத்துமாறல்

மேல்மாகாணப் பாடசாலையில் இந்து சமயம் கற்பிக்கும் ஆசிரியர், யாழ்.மாவட்டத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு: 0779690990,
0245688323

## விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் 64, மருதடி வீதி, நல்லூர் என்ற விலாசத்திற்குரிய கோயிலில் இருந்து சுமார் 200 யார் தூரத்தில் 1 பரப்பும் 5குளியும் அளவுள்ள காணியில் அமைந்த 5 அறைகளைக் கொண்ட சகல வசதிகளையுந் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய இலக்கங்கள்:
0113 040720 அல்லது 0770739904

## விரையுங்கள் ! தெரிவு செய்யுங்கள்!!

வாடிக்கையாளர்களே...!
வர்த்தகப் பெருமக்களே..! 2011

கொழும்பிலிருந்து தருவிக்கப்பெற்ற பலவிதமான டிசைன்களைக் கொண்ட வர்ணப் படக் கலண்டர்கள், பஞ்சாங்கக் கலண்டர்கள், டயறிகள், அனைத்தையும் நியாயவிலையில் பெற்றுக்கொள்ளவும் உங்கள் விளம்பரங்களை வடிவமைத்து அச்சேற்றிப் பெற்றிடவும் இன்றே விரையுங்கள்

**ஷாம்பவி பதிப்பகம்**
276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கன்னாதிட்டி சந்தி அருகில்)
தொ.பே: 021 222 4143, 0776184425

## யாழ்ப்பாணத்தில் அலுவலகத்திற்கு இடம் தேவை

கொழும்பைத் தளமாகக்கொண்ட வேலை வாய்ப்பு நிறுவனம் ஒன்று யாழ்பாணத்தில் தனது கிளையை ஆரம்பிப்பதற்கு பொருத்தமான கீழ்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக இடத்தைத் தேடுகிறது.

- ★ யாழ்.நகர எல்லைக்குள்
- ★ தளபாடங்களுடன் (கட்டாயமில்லை)
- ★ இணைந்த குளியலறையுடனான இரண்டு அறைகள்

ஆரம்பத்தில் குறுகிய காலத்திற்கு வாடகைக்குத் தர வீட்டு உரிமையாளர்கள் விரும்பும் பட்சத்தில் உங்கள் விலை விவரத்துடன் 0777778586 எனும் தொலைபேசி இலக்கத்தில் திரு.ராஜ் என்பவருடன் தொடர்பு கொள்ளவும்.

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி சிவன்கோயிலடி தெற்கு வீதிப் பக்கமாக உள்ள காணிகள் விற்பனைக்கு உண்டு.

காணிகளின் விவரம்

1. சிவன்கோயில் குளத்துக்குத் தெற்குப் பக்கமாக உள்ள பழுதடைந்த வீட்டுடன் உள்ள காணி 5 பரப்பு.
2. வெறுங்காணி 2 பரப்பு.
3. வயலுடன் சேர்ந்த காணி 6 பரப்பு.

தொடர்புகளுக்கு: 021 321 6682

# வறுமைக்கோட்டு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மத்திய வங்கியால் கடன் திட்டம்

நவாலி,நவ.28

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களை மீட்டெடுத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு புதிய கடன் திட்டங்களை இலங்கை மத்திய வங்கி அறிமுகப்படுத்தவுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் திட்டக் குழுத்தலைவர் சிறீ பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி மானிப்பாய் மகளிர் கல்லூரியில் சுதுமலை யுவஜீவி அபிவிருத்திக் குழுவால் மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையின் அனுசரணையுடன் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்:-

வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் வருமானம் குறைந்து வறுமையில் இருக்கும் மக்களை மீட்டு அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு இந்தக் கடன் திட்டம் கை கொடுக்கும்.

இலங்கைமத்தியவங்கி ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்புக்கான நிறுவனத்தின் நிதி உதவியுடன் 14 அங்கீகரிக்கப்பட்ட வங்கி நிறுவனங்களூடாக இந்தக் கடன் உதவி வழங்கப்படும்.

மேற்படி கடன் உதவிகளைப் பெறுவோர் மீளச் செலுத்திவிட்டு தேவைக்கேற்ப மேலும் மேலும் கடன்களைப் பெறமுடியும். அதனைப் பயனுள்ள வகையில் பயன்படுத்தி முன்னேற்றம் அடைய இந்தக் கடன் திட்டம் கைகொடுக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அபிவிருத்திக் குழுத் தலைவி பிரபாகரன் கௌசிகாதேவி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிராந்திய அபிவிருத்தித் தலைவர், மத்திய வங்கி அத்தியட்சகர், ஈசா சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் நிறுவன அதிகாரி, இலங்கை மத்திய வங்கியின் பயிற்சி நிறுவன உத்தியோகத்தர் சிறீநந்தா, மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் க.இலட்சுமணசர்மா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(201-313-100)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## மீளக்குடியமர்த்தப்படாத மக்களுக்கு உதவிப் பொருள்கள் கிடைக்குமா?

தென்மராட்சி,நவ.28

எழுதுமட்டுவாழ், கரம்பகம், ஒட்டுவெளி, கிளாலி, முகமாலை, இத்தாவில் போன்ற இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்காத மக்களுக்கு உதவிப் பொருள்கள் கிடைக்குமா என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வீட்டுத்திட்டம், விவசாய உபகரணங்கள், உழவு இயந்திரங்கள் போன்றவை வழங்கப்படுகின்ற போதிலும் இன்னமும் மீளக்குடியமர அனுமதிக்காத பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு அந்த உதவிகள் வழங்கப்படாதது குறித்து மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மீளக்குடியமர அனுமதிக்காத பகுதிகளின் மக்கள் உறவினர், நண்பர்களின் வீடுகளில் அவர்களுடன் இணைந்து வசித்து வருவதாகவும் அந்தக் காணியில் தற்காலிகமாக வசிப்பதற்கு அரை நிரந்தர வீடு அமைத்துக் கொடுக்கவும், இந்த மக்களில் பெரும்பாலானோர் விவசாயிகளாக உள்ளதால் அவர்களுக்கு விவசாய உபகரணங்கள், உழவு இயந்திரம் போன்றவை மானிய விலை யில் வழங்கவும் உரிய அதிகாரி கள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா எனவும் தெரிவித்துள்ளனர்.

எழுதுமட்டுவாழ் தெற்கு பகுதிகளில் மீளக்குடியமர படையினர் அனுமதி வழங்கியுள்ள போதிலும் குடியமர்த்துவதற்கான அனுமதிச் சான்றிதழ் இது வரை வழங்கப்படாததால் பிரதேச செயலகம் மீளக்குடியமர அனுமதிக்கவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

(204-207)

### நீர் இறைக்கும் இயந்திரத்தை திருட முயன்றவர் பிடிபட்டார்

யாழ்ப்பாணம், நவ.28

கோப்பாய் இராச வீதியிலுள்ள வீடொன்றில் தண்ணீர் இறைக்கும் மோட்டர் ஒன்றைத் திருட முயன்றவர் வீட்டு உரிமையாளரிடம் கையும் களவுமாகப் பிடிபட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது:

நீண்ட நாள்களாக பெய்து வரும் மழை, அத்துடன் பிரதேசங்கள் இருள் சூழ்ந்து காணப்படுவதும் திருடர்களுக்கு சாதகமாக வுள்ளது.

எனவே கடந்த புதன்கிழமை மழை இருளைச் சாதகமாகப் பயன்படுத்தி மேற்படி வீட்டில் தண்ணீர் இறைக்கும் இயந் திரத்தை திருட முற்பட்டவேளை வீட்டு உரிமையாளர் விழிப்படைந்து திருடனை மடக்கிப் பிடித்துக் கொண்டார்.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட திருடன் உரிமையாளரால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (201-313-26)

### இராஜகோபுர கட்டுமான வேலைகள் ஆரம்பம்

சுழிபுரம், நவ.28

காலையடி முருகன் ஆலய இராஜகோபுர கட்டுமான வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. மூன்று முகப்புத் தளம் கொண்ட கோபுர வேலைகளை ஆலய பரிபாலன சபையினர் ஆரம்பித்துள்ளார்.

பொது மக்கள் வழங்கும் நிதியைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள மேற்படி திருப்பணிகள் தற்போது கீழ்த்தளம் வரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

(201-311-28)

## யாழ்.போதனா வைத்தியசாலை ஏற்பாட்டில் நீரிழிவு தினத்தை முன்னிட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.28

உலக நீரிழிவு தினத்தையொட்டி யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தின் ஏற்பாட்டில் "உதயனின்" ஊடக அனுசரணையில் கடந்த 14 ஆம் திகதி நடந்து முடிந்த மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டிகளில் இருநூறுக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

இந்தப் போட்டியானது நல்லூர், கோப்பாய், சாவகச்சேரி, அளவெட்டி, சண்டிலிப்பாய், பருத்தித்துறை, அல்லைப்பிட்டி ஆகிய இடங்களில் நடைபெற்றன.

போட்டி முடிவில் வெற்றி பெற்றோருக்குப் பரிசில்களும், பங்குபற்றியோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. அத்துடன் மேற்படி இடங்களில் நீரிழிவு தொடர்பான கருத்தரங்குகளும், பிரதேசங்கள் தோறும் 'நீரிழிவை வெற்றி கொள்வோம்' விழிப்புணர்வுக் கழகங்களை அமைப்பதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்றன.




நல்லூரில் நடைபெற்ற நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் திருமதி பவானி பசுபதிராஜா, பிரதம தாதிய பரிபாலகர் திருமதி மாலினி மற்றும் நீரிழிவு சிகிச்சை நிலைய வைத்தியர் திருமதி பி.செல்வகரன் மற்றும் 'நீரிழிவு வெற்றி கொள்வோம்' கழகத் தலைவி செல்வி சசிரேகா ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.

நல்லூர், கோப்பாய் பிரதேசங்களுக்குரிய 'நீரிழிவை வெற்றி கொள்வோம்' விழிப்புணர்வுக் கழகங்களே அந்த இடங்களில் சைக்கிள் ஓட்டப்போட்டிகளை நடத்தின. இதன்மூலம் மேற்படி கழகங்கள் இனிவரும் காலங்களில் உருவாகவுள்ள விழிப்புணர்வுக் கழகங்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாய் அமைந்தன.

ஆர்வமுடையவர்கள் தமது கிராமங்களில் இவ்வாறான கழகங்களை அமைக்க விரும்பின், 021 222 0179 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு அதற்குரிய வழிகாட்டல்களை பெறறுக் கொள்ளலாம்.

## வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு கருத்தரங்கு

தென்மராட்சி,நவ.28

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு காணி தொடர்பான கருத்தரங்குநாளைமறுதினம்செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் நடத்தப்படவுள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தின் அனுசரணையுடன்டெனிஸ் அகதிகள் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் நல்லூரில் உள்ள யூரோவில் நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் வருமானப் பரிசோதகர் அல்லது வருமான மேற்பார்வையாளர், சபையில் காணிவிடயங்களுக்குப் பொறுப்பான அலுவலர் உட்பட இருவரைக் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கலந்துரையடலில் யாழ். மாநகர சபை சட்ட ஆலோசகர் சட்டத்தரணி ஏ.இராசரத்தினம், சட்டத்தரணி ஜே.ஜெயரூபன், யாழ். மாவட்ட மேலதிக பதிவாளர் பீ.பிரபாகர், டெனிஸ் அதிகாரிகள், சபை சட்ட அலுவலர் கார்த்திகா ஆதித்தன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

(201-207)

## வீரசிங்கம் மகா வித்தியாலய காணி கொள்வனவுக்கு நிதி கோரல்

தென்மராட்சி,நவ.28


மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திற்கு காணி கொள்வனவு செய்வதற்கு வித்தியாலய பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளிடமிருந்து நிதி பெற வித்தியாலய நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள ஒன்பது பரப்புக் காணி கொள்வனவு செய்வதற்கு நிதி கோரியுள்ளனர்.

வித்தியாலயம் தற்போது தரம் உயர்த்தும் திட்டத்துக்குள் இணைக்கப்பட்டுள்ளதால் கட்டடங்கள் அமைக்க இக்காணி கொள்வனவு செய்யவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வித்தியாலயத்திற்கென நிரந்தர விளையாட்டு மைதானத்துக்கு பழைய மாணவர் சங்கத்தினால் ஏழரைப் பரப்புக் காணி கொள்வனவு செய்து வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (204-207)

### அதிசயம்...



உண்மை:-கோழிக்குஞ்சு ஒன்று நான்கு கால்களுடன் காணப்படுகிறது. மூன்று மாதங்களாக இந்தக் கோழி நான்கு கால்களுடன் சாதாரணமாக நடமாடுகிறது. சண்டிலிப்பாய் கிழக்கு இராஜராஜேஸ்வரி அம்மன் கோயிலருகில் உள்ள சி.செல்வநாயகம் என்பவரின் வீட்டில் உள்ள கோழியே இது. (மு-9)

## சட்டவிரோதமான மதுபான உற்பத்தி யாழ்.மாவட்டத்தில் குறைவடைந்தது

மதுவரித் திணைக்களம் தெரிவிப்பு

யாழ்பாணம்,நவ.28

யாழ்.மாவட்டத்தில் தீவகம் தவிர்ந்த ஏனைய இடங்களில் இந்த வருடம் சட்டவிரோத மதுபான உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் 10 பேர் சட்டவிரோத மதுபான உற்பத்தி செய்ததால் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் அதிகமானோர் புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள்.

இந்த வருடமும் சட்ட விரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்டவர்களாக 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 5 பேர் தீவகப் பகுதியைச் சேர்ந்தவர்கள் இருவர் மட்டுமே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத மதுபான உற்பத்திக்கு அதிக தண்டனை, தண்டப்பணம் என்பன நீதிமன்றம் விதிப்பதாலே இவ்வாறான சட்டவிரோத மதுபான உற்பத்தியாளர்களின் தொகை குறைவடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(204-313-311)

## உப்பள நிரந்தர ஊழியருக்கு கொடுப்பனவு வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.28

வட பிராந்திய ஆனையிறவு உப்பள முன்னைய 'லங்கா சோல்ட் லிமிட்டெட்' நிரந்தர ஊழியர்களின் பின்னுரித்தாளர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக சங்கத்தில் முன்னாள் உறுப்பினர்களின் நெருங்கிய உறவினர்கள் இருந்திருப்பின், அவ்வாறான உறுப்பினர்களின் சட்டபூர்வமான பின்னுரித்தாளர்கள் தமது தற்போதைய முகவரியை, இலங்கை வர்த்தக கைத்தொழில் பொது தொழிலாளர் சங்கத்துக்கு அனுப்பி வைக்குமாறு சங்கத்தின் பொதுச் செயலாளர் பாலா தம்பு அறிவித்துள்ளார்.

ஏற்கனவே 50 ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள், பணிக்கொடை மற்றும் தொழில் இழப்புக்கான நட்டஈடு ஆகியன வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (204-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி பாடசாலைகளுக்கு உதவி

வடமராட்சி, நவ.28

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரிக்கு ஓட்டோ ஒன்றும், குடத்தனை கரையூர் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு 25 கதிரைகளும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில்கள் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கப்பட்டுள்ளன.

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் பயிலும் மாணவிகளின் கல்விச் செயற்பாட்டுக்கும் கல்லூரியின் நிர்வாகத் தேவைகளுக்கும் முச்சக்கரம் ஒன்று தேவைப்படுவதாக கல்லூரி அதிபர் அமைச்சரிடம் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து முச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

இதேவேளை குடத்தனை கரையூர் அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் கணனிக் கூடத்திற்கு போதிய கதிரைகள் இல்லாததினால் அவற்றைப் பெற்றுத்தருமாறு குறித்த அமைச்சுக்கு அதிபர் கோரிக்கை விடுத்ததன் பேரில் அப்பாடசாலைக்கு 25 கதிரைகள் வழங்கப்பட்டன. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சார்பில் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் கமல் முச்சக்கர வண்டியையும் 25 கதிரைகளையும் அண்மையில் குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு வழங்கினார்.

இந்த நிகழ்வுகளில்பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரிபா.இராகுநாதன், ஈ.பி.டி.பியின் வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

(201-236)

## மரண அறிவித்தல்

### சிவநாதன் துஷ்யந்

**(St. Johns College, Grade- 10)**



இல 60 புங்கன்குளம் வீதி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவநாதன் துஷ்யந் 26.11.2010 அகால மரணமானார்.

அன்னார் நடராஜா சிவநாதன் - சறோஜினி தம்பதியினரின் கனிஷ்ர புத்திரனும் குமணனின் அன்புத் தம்பியும், காலஞ்சென்ற நடராஜா தனலக்ஷ்மி, நடராஜா அன்னப்பிள்ளையின் பேரனும், தில்லைநாதன் (அமரர்), மற்றும் சிதம்பரநாதன், சோதிநாதன் (அமரர்) மற்றும் ஜெயந்திராதேவி, சுபாசினிதேவி, குமுதினி தேவி, ரஞ்சினிதேவி, ஆகியோரின் பெறாமகனும் சறோஜினி தேவி, விக்னேஷ்வரி, சிவனேஸ்வரி, அன்னலக்சுமியின் மருமகனும், துளசியா, அனுஜா, பானுஜா, லதுர்ஜா, சிந்துஜா, விதுசாந், அபிஷேகா, அன்வஸ்கா, ரக்சனா, நிஷாந்தினி, குமார், சிந்து, தாரி, றஜனி, குகதாஸ், யசோ, றஞ்சி, ஆகியோரின் சகோதரனும் சுரேஷ், சித்திரா, ரமேஷ், சோபா, கேமா, தர்சி, யாழினி, சஞ்ஜி, கிராஞ்ஜி, தீபன், தாபன், சுபாஜினி, பிரசன்னா, வித்தியாதரன், ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2010) மு.ப 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*60, புங்கங்குளம் வீதி,*
*யாழ்ப்பாணம்*

தகவல்:
நடராஜா சிவநாதன்
(தந்தை, செல்வா மினி)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு
02.12.1934

உதிர்வு
30.10.2010

### அமரர் கோவிந்தன் ஆறுமுகம் கந்தசாமி

***K.A.Kanthasamy- J.P All Island- Sworn Translator***

கடந்த 30.10.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (29.11.2010) திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் தெணியம்மன் கோயில் அந்தியேட்டி மடத்திலும் சபிண்டீகரண வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளன. இந் நிகழ்வுகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

22 1/2, விநாயகமுதலியார் றோட்,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.
021 226 4758.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### செல்வி மாணிக்கவாசகர் ராதிகா



**மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் செம்மணி வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மாணிக்கவாசகர் ராதிகா 25.11.2010 வியாழக்கிழமை காலமானார்.**

**அன்னார் காலஞ்சென்ற மாணிக்கவாசகர் மற்றும் இராசலட்சுமி தம்பதியினரின் பாசமுள்ள மகளும் காஞ்சனா (சுவிஸ்), ஜெயகாந்தன் (ஜனகன்), சந்திரிக்கா (சுவிஸ்), சுபத்திரா, ஜெயச்சந்திரன் (பிரான்ஸ்), ஜெயதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சச்சிதானந்தன் (சுவிஸ்), யோகராசா (சுவிஸ்), சாந்திடில்லிராஜா, தயந்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அஜந்தா, அபிநயா, அனுசியன், அவர்னன் (சுவிஸ்), பிரவீன், சஞ்சீவன், ரோஜனா, துஷானா ஆகியோரின் சிறிய தாயாரும் லோகிதா, வேணுஜன் ஆகியோரின் மாமியாரும் தர்மலிங்கம், சரவணமுத்து (அருச்சுனன்) ஆகியோரின் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், நாகராசா மற்றும் பவளம் (லண்டன்), பத்மநாதன் ஆகியோரின் மருமகளும் நாகேஸ்வரி, சோதிஅம்மா ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

**இல.16, அரசடிப் பிள்ளையார் வீதி,**
**செம்மணி றோட், நல்லூர்.**
**021 320 5618, 0778695971**

(106593)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி ஜெயபுரம் கிராம வீதியின் மோசமான நிலையால் மக்கள் பாதிப்பு

பூநகரி,நவ.28

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி வாடியடிச் சந்தியிலிருந்து ஜெயபுரம் கிராமத்திற்குச் செல்லும் வீதி மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதி வாடியடிச் சந்தியிலிருந்து பல்லவராயன்கட்டுச் சந்திவரை 22 கிலோ மீற்றர் நீளம் கொண்டது. ஆனால் குண்டும் குழியுமாக மோசமான நிலையில் காணப்படுவதால் இதனூடாகப் பயணிக்கும் மக்கள் அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

ஜெயபுரம் தெற்கு, வடக்கு, பல்லவராயன் கட்டு, சோலை, கரியாலை நாகபடுவான், செக்காலை, பத்தினிப்பாய் போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நாளாந்தம் இவ்வீதியூடாகச் சிரமத்தின் மத்தியிலேயே பயணிக்கின்றனர். அத்துடன் பேருந்துகள் உட்பட வாகனங்கள் இந்த வீதியால் மிகவும் குறைந்த வேகத்திலேயே பயணம் செய்ய வேண்டிய நிலையினுள்ளன. இதனால் தமது நாளாந்தக் கடமைகளை ஆற்றுவதிலும், அரச அலுவலகங்களுக்குச் சென்று கருமங்களை ஆற்றுவதிலும் மக்கள் சிரமப்படுகின்றனர். அத்துடன் பரந்தன் - பூநகரி ஊடாக மன்னார் செல்லும் பயணிகளும் தினமும் சிரமப்படுகின்றனர்.

ஆகவே உரிய தரப்பினர் இந்த வீதியை இனியும் தாமத மின்றிப் புனரமைத்துத் தமது சிரமங்களுக்கு முடிவு கட்டுமாறு பாதிக்கப்படும் மக்கள் கவலையுடன் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-406)

# முள்ளியவளையில் திருடர் தொல்லை

முல்லைத்தீவு,நவ.28

முள்ளியவளை தண்ணீரூற்றுப் பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இரவு வேளைகளில் இனந் தெரியாதநபர்கள் வீடுகளில் புகுந்து உந்துருளி முதல் வேறு பொருள்களையும் எடுத்துச் செல்வதால் இரவு வேளைகளில் தாம் அச்சத்துடன் விழித்திருக்கின்றனர் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். மீள்குடியேறிய மக்களின் வாழ்விடங்கள் பாதுகாப்பற்ற நிலையில் கதவு, யன்னல்கள் அற்ற நிலையில் காணப்படுவதால் திருடர்களுக்கு வாய்ப்பாக அமைந்து விட்டதாகவும் அவர்கள் கவலை தெரிவித்தனர். (க-500)

## இதுவொரு விதியோ.....?



குறையாத மனவுறுதி:-ஏ9 வீதியின் அருகில் மீளக்குடியமர்ந்த குடும்பமொன்று கடும்மழைகாரணமாக வெள்ளம் சூழ்ந்த தமது கொட்டிலின் முன் நிற்கின்றனர். (405)




# பாலங்கள் உடைந்து காணப்படுவதால் நீர் வழிந்தோட முடியாத நிலை

## முல்லைத்தீவில் மக்கள் அவதி

முல்லைத்தீவு,நவ.28

முல்லைத்தீவிலுள்ள வீதிகளின் பாலங்கள் உடைந்தும், தூர்ந்தும் காணப்படுவதால் நீர் வழிந்தோட முடியாத நிலை காணப்படுகின்றன.

சுமார் 40 வருடங்களுக்கு மேலாகப் புனரமைப்பு வேலைகள் நடைபெறாத வீதிகளின் பாலங்களே உடைந்தும், தூர்ந்தும் காணப்படுகின்றன.

இவற்றினூடாக நீர் பாய்ந்தோட முடியாது தேங்கி நிற்பதால் நுளம்புகள் பெருகிக் காணப்படுகின்றன. இதனால் பல்வேறு நோய்த் தாக்கங்களுக்கும் தாம் ஆளாகிவிடுவோமென இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

ஆகவே வீதிகளின் ஓரமாக நீர் வழிந்தோடக்கூடிய வகையில் வடிகால்களையாவது அமைக்க வேண்டுமென இவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-500)

# கடும் மழை காரணமாக மன்னார் மாவட்டத்தில் 600 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்வு

யாழ்ப்பாணம்,நவ.28

மன்னார் மாவட்டத்தில் உள்ள நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் சுமார் அறுநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளப் பாதிப்பினால் இடம்பெயர்ந்துள்ளன.

வங்காலை, போட்டக்கடை, சிறு கண்டல், ரசூப்புதுவெளி, நானாட்டான், சூரிய கட்டக்காடு, பகுதிகளில் உள்ள மக்களே இரண்டு நாள்களாகப் பெய்து வரும் கடும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

இவர்களுக்கான உதவிகளை நானாட்டான் பிரதேச செயலகம் வழங்குவதற்கான முன் நடவடிக்கைகள் கிராம அலுவலர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடர்ந்து மழை பெய்யுமானால் மேலும் பல நூற்றுக் கணக்கான குடும்பங்கள் இடம் பெயர வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை காணப்படுவதாகவும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-86)

# குடமுறுட்டிப் பாலத் திருத்தப் பணிகளால் 20 வருடகால அவலம் நீங்கும் அறிகுறி

கிளிநொச்சி,நவ.28

பரந்தன் - பூநகரி வீதியில் காணப்படும் குடமுறுட்டி ஆற்றுப் பாலத்தின் புனரமைப்பு வேலைகள் கடந்த சில மாதங்களாக நடைபெற்று வருகின்றன.

இப்பாலமானது கிளிநொச்சியின் பாரிய குளங்களில் ஒன்றான அக்கராயன் குளத்தின் வான்பாயும் நீர், மேலதிக நீர் தென்னியன்குளம், பூநகரி முட்கொம்பன் குளம், பூநகரி கொக்குடையான் குளம் மற்றும் பூநகரியின் ஏனைய கிராமங்களிலிருந்து வெளியேறும் மேலதிக நீரை ஆனையிறவு நீர் ஏரிக்கு வழங்கும் பிரதான ஆற்றுப் பாலமாக இது காணப்படுகின்றது.

இந்த ஆற்றுப் பாலம் கடந்த 20 வருடங்களாகப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாத நிலையில் காணப்பட்டது. இதனால் பரந்தன் - பூநகரி வீதியால் பயணிக்கும் மக்கள் பருவமழை காலத்தில் படகுகள் மூலம் இவ்வாற்றைக் கடக்கும் நிலையில் இருந்தனர்.

தற்போது இந்த ஆற்றுப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருவதால் இதனூடாகப் பயணிக்கும் மக்களுக்கு மிகவும் நன்மை பயக்கும் என்பதில் ஐயமில்லையென பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (க-406)

# இனங்காணப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் வாகன உரிமையாளர்களிடம் கையளிப்பு

கிளிநொச்சி,நவ.28

கடந்த 22, 23, 24 ஆம் திகதிகளில் மோட்டார் திணைக்களப் பரிசோதகர்களால் பரிசோதிக்கப்பட்ட வாகனங்களில் 324 மோட்டார் சைக்கிள்களுக்கான உரிமையாளர்கள் உரியவர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து இவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் கிளி நொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் அறி வித்துள்ளார்.

வாகனங்களின் விவரம்:-
(தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| 71. 131-8452 | 94. NPJS-2935 | 117. JS-7498 | 140. MH-8317 |
| 72. 143-2031 | 95. 133-0386 | 118. NPGS-4317 | 141. GQ-5270 |
| 73.138-6335 | 96. NPMF-3546 | 119. NPGT-5148 | 142. 115-8908 |
| 74. 131-4179 | 97. MF-7803 | 120. NPHO-3983 | 143. NPHO-6092 |
| 75. 113-6584 | 98. NPJW-1965 | 121. HX-4338 | 144. 103-9608 |
| 76. 144-0201 | 99. HQ-7526 | 122. NPJO-9711 | 145. MV-8205 |
| 77.148-0952 | 100. MV-2249 | 123. GX-5901 | 146. GF-6338 |
| 78. 500-9340 | 101. MA-9006 | 124. NPMS-6172 | 147. ME-3576 |
| 79. 142-5259 | 102. NPHG-1510 | 125. NPJT-9928 | 148. HW-1599 |
| 80. GO-6338 | 103.HO-2368 | 126. MC-3006 | 149. JZ-2988 |
| 81. NPHM-2257 | 104. JU-7558 | 127. NPHM-9326 | 150. JE-6361 |
| 82. WPMR-4222 | 105. GR-2483 | 128. NPMS-6177 | 151. 144-0290 |
| 83.NPHU-4677 | 106. 153-4018 | 129. HW-4131 | 152. GP-2823 |
| 84. HC-2346 | 107. NPJR-7454 | 130. HI-6626 | 153. 119-3517 |
| 85. NPHU-0368 | 108. NPHM-0833 | 131.GH-2006 | 154. 147-8479 |
| 86. NPJV-0070 | 109. NPMR-2259 | 132. GS-6902 | 155. 103-2330 |
| 87.JU-9545 | 110. JO-3142 | 133. GJ-9153 | 156. HD-6483 |
| 88.NPJK-0703 | 111. NPJY-8606 | 134. ME-4773 | 157. 153-4019 |
| 89. NPGO-6066 | 112. NPHO-9534 | 135. 112-5352 | 158. JQ-1179 |
| 90. NPJY-6141 | 113.NPJW-8690 | 136.156-0561 | 159. ME-6519 |
| 91. NEHI-6410 | 114. NPMQ-6557 | 137. GN-4248 | 160. HM-1088 |
| 92. GY-6767 | 115. MM-4096 | 138. [illegible]-2374 | 161. [illegible] |
| 93. EPMC-0224 | 116. NPJR-2285 | 139. NPMW-8528 | 162. MQ-3536 |

(வளரும்)

# வடக்கின் துரித மீட்சித் திட்டம் கிளிநொச்சியில் பணிமனை திறப்பு

கிளிநொச்சி,நவ.28

வடக்கின் துரித மீட்சித் திட்டப் பணிமனை கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தையொட்டியே இந்தப் பணிமனை திறந்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள இந்தப் பணிமனையின் திறப்பு விழா மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரனின் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் கலந்து கொண்டார்.

இந்தப் பணிமனையின் பெயர்ப்பலகையை அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் திரை நீக்கம் செய்து வைத்தார்.


''எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்கும் மீள் வாழ்வுக்கும் நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. அபிவிருத்தியில் மக்கள் முழு ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டும். அபிவிருத்திக்காக ஒதுக்கப்படுகின்ற பெருமளவு நிதியைத் தனியே ஒரு சிலர் எடுத்துக் கொள்வதற்கோ அல்லது நிர்வாக அதிகாரிகள் தவறான வகையில் பயன்படுத்துவதற்கோ அனுமதிக்காது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்'' என்று நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவித்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AMCO

## அறிமுகமாகிறது... அம்கோ வெயிட் கெயின்

எடையைக் கூட்டுவதற்கு இலகுவான வழி!



அம்கோ வெயிட் கெயின் என்பது உங்கள் உடல் இழையங்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை உள்ளடக்கியதாக மோல்ட் சாற்றிலிருந்து விஞ்ஞான ரீதியாகத் தயாரிக்கப்பட்ட புரதச்சத்து நிறைந்த பாலாகும். அது லைசின் பதார்த்தம் கொண்டு செறிவூட்டப்பட்டுள்ளதால், உடலின் எடையை அதிகரிக்கும் ஆற்றலை அல்லது புரத உள்வாங்கலை (புரத வினைத்திறன் விகிதம்) முன்னேற்ற உதவும். சமபோஷாக்கான உணவுடன் அம்கோ வெயிட் கெயின் எடுத்தால் உங்கள் எடையை அதிகரிக்கலாம்.

**சிறுவர்களுக்கும் வளர்ந்தோருக்கும் 450கி. டின்களில் கிடைக்கின்றது.**

சிபாரிசு செய்யப்பட்ட அம்கோ வெயிட் கெயின் அளவு ஒவ்வொரு உணவு வேளைக்கும் 1 மணிநேரம் கழித்து ஒரு கிளாஸ் சூடாக அல்லது குளிரூட்டிப் பருகவும். (நாள் ஒன்றிற்கு குறைந்தது 3 கிளாஸ்கள்)

இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளவை தகவலுக்காக மட்டுமே. எப்போதும் உங்கள் வைத்தியரின் ஆலோசனையை நாடவும்.

**எடுப்பான தோற்றம். நலமான வாழ்வு.**

அம்கோ வெயிட் கெயின் மூலம் உங்கள் எடையைக் கூட்டுங்கள்

AMCO

weight GAIN




ஏக விநியோகஸ்தர்:

**சூரி ட்ரேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்**

இல. 6, பங்களாவத்தை வீதி, மாபோல, வத்தளை, இலங்கை.
தொலைபேசி: +94 11 4810251 ஈ-மெயில்: info@suritrading.com
வெப்தளம்: www.suritrading.com

**அறிமுக விலை**
**சிறுவர் ரூ.980/=**
**வளர்ந்தோர் ரூ.1,200/=**

## களஞ்சியசாலை அல்லது வெற்றுக்காணி தேவை

-யாழ் நகரில்-

யாழ் நகருக்கருகாமையில் 10.000 அல்லது அதற்கு மேற்பட்ட சதுர அடி நிலப்பரப்புக் கொண்ட வெற்றுக்காணி அல்லது களஞ்சிய சாலை உடனடித் தேவை.

மேலதிக தொடர்புகளுக்கு:
சஜித் - 0773 295 715

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No 1 புறொயிலர் குஞ்சுகள் (நியாயமான விலையில்) 6.12.2010 அன்று காலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் லேன், நல்லூர்.

## விற்பனை அதிகாரிகள் தேவை

**SALES EXECUTIVES**

கொழும்பில் உள்ள இரண்டு பிரபல நிறுவனங்களுக்கு யாழ்.மாவட்டத்தில் வேலை செய்வதற்கு G.C.E. A/L கல்வித் தகைமையும் முன் அனுபவமும் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**அபிராமி எலக்ரிக்கல்ஸ்**
62/34, ஸ்ரான்லி பக்க வீதி,
யாழ்ப்பாணம். T.P. 222 7989




## வாக்காளர் பதிவு 2010

**வாக்களிப்பதற்குப் பதிவு செய்து விட்டீர்களா?**

✓ வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மற்றும் இடம் பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வாழும் மக்களுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் 2010 நவம்பர் 30ம் திகதி வரை தொடரும்.

✓ மேலதிகத் தகவல்கள் மற்றும் படிவங்களைப்பெற்றுக் கொள்ள இன்றே உங்கள் கிராம சேவை அலுவலர் அல்லது மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரை அணுகுங்கள்.

இத் தகவலை உங்களுக்கு வழங்குவோர்:

CPA

minority rights group international




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இளம்பெண் கொழும்பு சென்று லொட்ஜில் பிரசவம்

## சிசுவின் சடலம் ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

கொழும்பு, நவ. 28

கொழும்பு, மருதானையில் உள்ள லொட்ஜ் ஒன்றில் குழந்தையை பிரசவித்த 21 வயதுடைய இளம் பெண் ஒருவர் பிரசவத்தின் பின் ஏற்பட்ட கடும் உதிரப்போக்கினால் பொரளை காசல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இப்பெண்ணிடம் வைத்தியர்கள் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து பொலிஸின் மையொன்றில் இடப்பட்ட நிலையில் சிசுவின் சடலத்தை யுவதியின் தாய் மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்த யுவதி கடந்த 3ஆம் திகதி தமது தாயுடன் கொழும்புக்கு வந்து மருதானையில் உள்ள லொட்ஜ் ஒன்றில் தங்கியிருந்துள்ளார். கடந்த புதன்கிழமை லொட்ஜில்குழந்தையை பிரசவித்தபின் ஏற்பட்ட கடும் உதிரப்போக்கினால் வியாழக்கிழமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். குழந்தை இறந்தே பிறந்ததா அல்லது பிறந்தபின் கொல்லப்பட்டதா என்பதை அறிந்து கொள்ள சடலம் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. யுவதி பொரளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-5)

## அபிவிருத்தியின்றி...



நெருக்கடி: சோமசுந்தரம் வீதி - கச்சேரி நல்லூர் வீதியை இணைக்கும் குறுக்குவீதி கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றது.
வீதியின் நடுப்பகுதியில் கற்கள் கொட்டப்பட்டுள்ளதால் போக்குவரத்து நெருக்கடி நிலவுகின்றது.
போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை உள்ளது. உரியவர்கள் இவ் விடயம் குறித்து கவனம் எடுக்க வேண்டும் என்று அப் பகுதி மக்கள் கேட்கப்பட்டுள்ளனர். (7)

# நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கவுள்ளார் ஹக்கீம்

கொழும்பு, நவ. 28

நிதி அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம், ஜனாதிபதியால் அமைக்கப்பட்டுள்ள 'கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு' முன்னிலையில் சாட்சியம் அளிக்கவுள்ளார். 'கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அம்பாறை மாவட்டத்திற்கான பயணத்தின் போதே அவர் சாட்சியம் அளிக்கவுள்ளார் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழு எதிர்வரும் 10ஆம் திகதி அம்பாறை மாவட்டத்திற்கு பயணம் மேற்கொள்ளவிருக்கிறது. எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் நேரில் சென்று மக்களிடம் சாட்சியங்கள் பதிவு செய்யப்படவுள்ளன.

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், நவ. 28

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் இலவச வைத்திய முகாம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது. (204-236)

## நீர்வேலிவடக்கில் ஆலயத்தில் திருட்டு

நீர்வேலிவடக்குஇராஜேஸ்வரிஅம்பாள்ஆலயதில் (பழைய அம்மான்) கடந்த வியாழக்கிழமை இரவு திருடர்கள் உட்புகுந்து மூலஸ்தான விக்கிரகத்தை அசைத்தும் மற்றும் ஆலய பயன்பாட்டில் இருந்த சுமார் 15 பவுண் நகைகளையும்எடுத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. கோப்பாய் பொலிஸில் முறையிட்டதைத் தொடர்ந்து அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (201-72)

# துறைமுகத்திலிருந்து வரும் கொள்கலன்களைக் கடத்தி பண்டங்களைக் கொள்ளையடித்து வந்த 21 பேர் கைது

## பொருள்கள் கிராண்ட்பாஸில் மீட்பு

கொழும்பு, நவ.28

கொழும்பு துறைமுகத்திலிருந்து பொருள்களை ஏற்றிவரும் லொறிகளையும், கொள்கலன்களையும் பலவந்தமாகக் கடத்திச் சென்று அவற்றிலுள்ள பொருட்களைக் கொள்ளையிட்டு வந்த 21 பேரடங்கிய பாதாள உலகக் கும்பலொன்று கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கடந்த திங்கட்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளது.

இவர்களால் கொள்ளையடிக்கப்பட்ட பெருந்தொகையான பொருள்கள் கிராண்ட் பாஸ் பகுதி களஞ்சியசாலை ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களின் பெறுமதி பல கோடி ரூபா எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவுக்குக் கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் தொடர்ந்து ஆறு மணித்தியாலங்களாக மேற்கொண்ட தேடுதலின் பின்னரே இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொள்ளைக் கும்பலால் கடத்தப்பட்ட பொருட்களுடன் மூன்று லொறிகளும் பிடிபட்டுள்ளன. அத்துடன், இவர்களால் கடத்தப்பட்டு களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த பெருந் தொகை கிழங்கு, வெங்காயம், மிளகாய் உட்பட பல்வேறு பண்டங்கள் மீட்கப்பட்டுள்ளன.

துறைமுகத்திலிருந்து வரும் லொறிகளிலும் கொள்கலன்களிலும் உள்ள முத்திரைகளை அகற்றிவிட்டு அவற்றிலுள்ள பெரும் பகுதியை இறக்கிய பின் மீண்டும் போலி முத்திரைகளைப் பொருத்தி அனுப்புவது இவர்களது வழக்கமாக இருந்துவந்துள்ளது - என்பது விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. இவர்களிடமிருந்து போலி முத்திரைகளும் அவற்றைப் பொருத்தும் கருவிகளும் மீட்கப்பட்டுள்ளன.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பதில் பணிப்பாளர் உபுல் நில்மினியின் மேற்பார்வையில் பொறுப்பதிகாரி ஹேமந்தத் ஒவிட்டவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (சி)

# புதையல் தோண்ட முயற்சித்த பெண் உட்பட 10 பேர் கைது

## குருநாகலில் சம்பவம்

கொழும்பு, நவ. 28

குருநாகல் குருக்கெட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள புராதன விகாரையொன்றில் கடந்த வியாழக் கிழமை இரவு 7 மணியளவில் புதையல் தோண்ட முயற்சித்த பெண் ஒருவர் உட்பட பத்து சந்தேக நபர்களை கொஹுரல்ல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன், குறித்த சந்தேக நபர்களை கைதுசெய்யும்போது அவர்கள் பயன்படுத்திய வான் ஒன்றையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் ஹோமாத்தகம, பிலிமத்தலாவ, மாவனல்லை, கடுகண்ணாவ மற்றும் வியாங்கொடை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, கைதுசெய்யப்பட்டவர்கள் குருநாகல் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். அத்தோடு, கொஹுரல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (சி)

# வடக்கின் வசந்தம் ஊடான உதவிகள் மக்களைச் சென்றடைவதில் தாமதம்

## நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் மன்றில் உரை

கொழும்பு, நவ. 28

வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடான உதவிகள் மக்களைச் சென்றடைவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மக்கள் இதன் பயனை அடையமுடியாத நிலையிலுள்ளனர். ஆகநூறுக்கும் குறைவானவர்களே இதனால் பயன் அடைந்துள்ளனர் - என குழுக்களின் பிரதித் தலைவர் முருகேஷ் சந்திரகுமார் கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டினார்.

வரவு - செலவுத்திட்ட உரை மீதான இரண்டாவது நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சந்திரகுமார் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

மாகாண மட்டத்திலான அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டங்களில் ஆராயப்பட்ட விடயங்கள் இந்த வரவு - செலவுத்திட்டத்தில் பிரதான விடயங்களாக உள்ளடக்கப்பட்டுள்ளமை அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படைகளை வெளிக்கொண்டு வருவதாகவுள்ளது. இது பாராட்டுதற்குரியது. நடைமுறைச் சாத்தியமான வழிகளின் ஊடே அதிகாரப் பரவலாக்கம் என்பதை நிரூபித்துச் சொல்லும் செயற்பாடாக இது அமைகிறதென நம்புகின்றேன்.

இந்த வரவு - செலவுத் திட்டம் கற்பனைக்கு உகந்ததாக இருக்குமேயல்லாது, நடைமுறையில் சாத்தியமாக அமையாது.

ஆனால், மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதிலும் அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் ஒரு வரவு - செலவுத் திட்டம் முதன்மையளித்திருக்குமானால் அது வரவேற்கப்பட வேண்டியதாகும்.

அதேவேளை நாட்டின் பாதுகாப்பையும் அதனுடைய அபிவிருத்தியையும் அதனுடைய முன்னேற்றத்தையும் அது சமநிலையில் பேணுவதாக இருந்தால் அந்த வரவு - செலவுத் திட்டத்தை நிச்சயமாக எவராலும் வரவேற்க முடியும்.

நாடு இப்போதுதான் போரிலிருந்து மீண்டிருக்கிறது. முப்பது தாண்டுப் போரின் பாதிப்புகள் என்பது சாதாரணமானதல்ல. அதை மாற்றவேண்டிய பொறுப்பை இந்த வரவு - செலவுத் திட்டமும், மன்றமும் கொண்டிருக்கின்றன.

வடக்கு, கிழக்கு நிலை என்பது நாட்டின் ஒரு பகுதியுடையதே. ஆனால் அதுவே இந்த நாட்டின் முழுமையையும் பிரதிபலிக்கின்றது.

போரின் பாதிப்புகளை நிவர்த்திக்கும் பணிக்காக அரசு வடக்கின் வசந்தம் திட்டம் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு ஆகியவற்றை உருவாக்கியிருக்கிறது.

ஆனால், வடக்கின் வசந்தம் துரித அபிவிருத்திப் பணிகளுக்கும், மீள்குடியேற்ற அமைச்சின் நடவடிக்கைகளுக்கும் ஒரு கால எல்லையை நிர்ணயம் செய்து நிலைமைகளை மீளளிக்க வேண்டும்.

இதற்கு இரு தரப்புகளின் செயற்பாடு களையும் ஒருங்கிணைத்து, தேசிய அபிவிருத்தியின் சமநிலைக்கேற்ப - அவற்றின் செயற்பாடுகளை வழிநடத்துவதற்கு நாடாளு மன்றக் குழுவொன்றை அந்தப் பிரதேசங்களில் அமைக்கவேண்டும். (சி)

# வடக்கில் முஸ்லிம்கள் மீள்குடியமர ஜனாதிபதி மஹிந்தவே காரணம்

## அஸ்வர் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ. 28

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் திறமையான ஆட்சி காரணமாக வடக்கில் இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் தற்போது மீள்குடியமர்ந்து வருகின்றனர் - என நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றிய அஸ்வர் மேலும் கூறியவை வருமாறு:-

'இந்த நாட்டு மக்களின் ஆதரவு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், அவரது குடும்பத்திற்கும் என்றென்றும் உண்டு. அது புண்ணியம் செய்த குடும்பம். இந்த நாட்டை ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடாக மாற்ற இந்த குடும்பத்தால் மாத்திரமே முடியும்.

30 வருட யுத்தத்தில் இடம்பெயர்ந்த வடக்கு முஸ்லிம்கள் இப்போது மீள்குடியேறியுள்ளனர். யாழ்.பள்ளிவாசலில் தொழுகை நடத்தப்படுகின்றது- குர் ஆன் சத்தம் கேட்கின்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே இந்த நிலைக்குக் காரணம்.

மஹிந்த ராஜபக்ஷ ஒரு செயல்வீரர். இந்த நாடு ஓர் இனத்திற்கு மாத்திரம் சொந்தமானதல்ல. அனைவருக்கும் சொந்தம் என்பதை அவர் தெளிவுபடுத்தியுள்ளார். 70 சதவீத முஸ்லிம்களின் ஆதரவு ஜனாதிபதி மஹிந்தவுக்கே - என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாவது குழந்தைக்கு ஒரு லட்சம் ரூபா சன்மானம்

# யுத்தக் களத்தில் சண்டையிட்ட படையினரை வீடுகளில் போரிட வைத்துவிட்டார் ஜனாதிபதி

இந்த அரசிற்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட மூத்த உறுப்பினர்கள் பத்துப் பேரை ஜனாதிபதி அவமானப்படுத்தியுள்ளார். சிரேஷ்ட அமைச்சர்கள் என்ற பெயரில் அவர்களை ஒன்றுமே இல்லாத 'சும்மா' அமைச்சர்களாக்கிவிட்டார் ஜனாதிபதி. இது அவர்கள் செய்த சேவைக்கு இழைக்கப்பட்ட மிகப்பெரிய அகௌரவம் என்று பெரிதும் கவலையுடன் கூறினார் ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட உறுப்பினரான பாலித்த ரங்கே பண்டார.

வரவு - செலவுத்திட்ட உரை மீதான நான்காவது நாள் விவாதத்தின்போதே ரங்கே பண்டார எம்.பி. இப்படிக் கூறினார்.

நான்காவது நாள் விவாதம் நேற்றுமுன்தினம் சபாநாயகர் தலைமையில் ஆரம்பமானது. வழமையான வினா - விடைகளின் பின் விவாதம் ஆரம்பித்தபோது எதிர்க்கட்சி உறுப்பினரான ஜோன் அமரதுங்க ஆரம்பத்திலேயே சபையில் சூட்டைக் கிளப்பிவிட்டார்.

உள்நாட்டில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான பட்டதாரிகளும், இளைஞர், யுவதிகளும் தொழில் வாய்ப்புகள் இன்றி வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துகின்றனர்.

ஆனால், அரசு இந்தியாவிலிருந்தும் சீனாவிலிருந்தும் தொழிலாளர்களை இறக்குமதி செய்கின்றது என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

அது மட்டுமல்ல, உலக நாடுகளிலேயே மிகப்பெரிய அமைச்சரவையைக் கொண்ட நாடு என்ற சாதனை படைத்து இலங்கை கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துவிட்டது என்றார் ஜோன் அமரதுங்க.

உலகிலேயே ஆகக்கூடிய சனத்தொகையுடைய நாடுகளான இந்தியா நூறு கோடி, சீனா 103 கோடி மக்களைக் கொண்டபோதும், இந்நாடுகளின் அமைச்சரவையில் 35, 21 பேரே இடம்பிடித்துள்ளனர். அதேபோன்று அமெரிக்கா, கனடா, ஜப்பான், பாகிஸ்தான், பிரிட்டன் போன்ற நாடுகளிலும் 15 முதல் 38 பேர் வரையிலான உறுப்பினர்களே அமைச்சர்களாக இருக்கின்றனர்.

ஆனால், அந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த சனத்தொகையைக் கொண்ட இலங்கையில் 91 அமைச்சர்கள் இருக்கின்றனர். இது கின்னஸ் சாதனை. பாவம் இவர்கள் மூன்று மாதத்திற்கு ஒரு முறைதான் அமைச்சரவைக் கூட்டங்களுக்குக் கூட செல்ல முடியும் என்று சுட்டுக்காட்டினார் ஜோன் அமரதுங்க.

இவ்வேளையில் குறுக்கீடு செய்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, எதிர்க்கட்சி உறுப்பினர் கூறுவது பொய் என்றார்.

இவர்கள் பிரதி வாரமும் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டங்களுக்குச் செல்ல முடியுமா என்று ஜோன் அமரதுங்க மீண்டும் கேட்டபோது, அமைச்சரிடமிருந்து நேரடியாகப் பதில் கிடைக்கவில்லை.

### கருங்கற்கள் குஞ்சு பொரிக்குமா?

அமைச்சர் விமல் வீரவன்ஸ பேசிக்கொண்டிருந்தபோது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அடிக்கடி இடைமறிப்புகளைச் செய்துகொண்டே இருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் புத்தளம் மாவட்ட எம்.பி. ரங்க பண்டார, சபைக்குள்வரும்போதேஎதையோ கூறிக்கொண்டுவந்தார்.

அப்பாடா, இதோ தடியடி வாங்கி மண்டை உடைபட்ட மனிதர் வந்துவிட்டார். உள்வீட்டுக்காரர்களால் அடித்து உதைத்துப் போட்டாலும் இவர்களுக்குப் புத்திவராது. அது எப்படி

## சபையில் கேட்டவை

என்றால் நல்ல முட்டைகளை சூட்டில் வைத்தால் குஞ்சு பொரிக்கும், ஆனால், கருங்கற்களைச் சூட்டில் வைத்தால் எப்படிக் குஞ்சு பொரிக்கும். அதுதான் இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் நிலை என்று தலையில் குட்டிவிட்டார் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

### அதிகாரப் பரவலாக்கம் இன்றேல் அபிவிருத்தி இல்லை

ஜனாதிபதி தனது வரவு - செலவுத் திட்ட உரையின்போது,

நாட்டில் சமாதானம் இன்றேல் அபிவிருத்தி இல்லை என்றார். நாட்டில் சமாதானம் ஏற்பட்டாலும் அதிகாரங்கள் பகிரப்படாவிட்டால் எந்த அபிவிருத்தியும் ஏற்படாது என்று கூறினார் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான பொன்.செல்வராசா.

தனக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைத்தால் தமிழ் மக்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதி முன்பு கூறி காலம் கடத்தினார்.

இப்பொழுது தேவைக்கும் அதிகமான பெரும்பான்மை இருக்கின்றது, எதிரிகளும் இல்லை. இருந்த ஒரே ஒரு எதிரியும் இப்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இப்பொழுதாவது நியாயமான தீர்வை முன்வைக்கலாம்தானே என்றார் பொன். செல்வராசா.

### அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் உபதேசம்

அரசு மேற்கொள்ளும் நல்ல விடயங்களைக் கூட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கண்களை மூடிக்கொண்டு எதிர்த்துப் பேசுகின்றனர். இவர்கள் சிறிகோத்தாவில் கூறப்படுவதை இங்கே சபையில் கூறுகின்றார்கள். தேர்தல் மேடையில் எப்படியும் பேசலாம். ஆனால், சபையில் கண்ணியத்துடன் பேசப் பழகிக்கொள்ளவேண்டும் என்று அமைச்சர் கெஹலிய கூறினார்.

நானும் உங்களுடன்தான் இருந்தேன். அங்கே இருந்து கொண்டு உண்மை பேசமுடியாது. பேசினால் அடியும் உதையும்தான்.

உங்கள் தலைவர் 1977ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 21 தேர்தல்களில் தோல்விகண்டவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

தொடர்ந்தும் நீங்கள் இப்படிப் பேசினால் உங்களை நாட்டு மக்கள் ஒட்டுமொத்தமாக நிராகரித்துவிடுவார்கள் என்று உபதேசம் செய்தார் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

### சும்மா அமைச்சர்களும் ஈச்சம்பழ மரமும்

அமைச்சர்களின் உபதேசங்களைத் தொடர்ந்து ஐ.தே.க. உறுப்பினரான ரங்க பண்டார உரையாற்றும்போது இடையூறுகளும் அதேவேளை, கலகலப்பும் உச்சக் கட்டத்திற்கே போய்விட்டன.

ரங்கே பண்டாரவின் முழுப் பேச்சும் சிரேஷ்ட அமைச்சர்களின் நியமனம் தொடர்பாகவே இருந்தது. அப்போது அஸ்வர் எம்.பி. இடைவிடாமல் ஒழுங்குப் பிரச்சினை - ஒழுங்குப் பிரச்சினை என்று இடைமறித்தார்.

அப்போது ரங்க பண்டார -

ஐயா! இந்த மனிதர் கொஞ்சக் காலம் இந்த சபையில் இல்லாமல் இருந்தார். அப்போது நாங்கள் நிம்மதியாக இருந்தோம். மீண்டும் வந்து சபையைக் குழப்பி எங்கள் நிம்மதியையும் கெடுத்துவிட்டார் என்றார்.

ரட்ணசிறி விக்கிரமநாயக்க பிரதமராக இருந்தவர். அனுருத்த ரத்வத்த நிதி அமைச்சராக இருந்து சேவையறிந்தவர். இவர்கள் எல்லாம் இந்த ஜனாதிபதியின் வெற்றிக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்கள். இப்போது சும்மா (வெற்று) அமைச்சர்களாக்கப்பட்டுவிட்டனர் என்றார் ரங்க பண்டார.

இவ்வேளையில், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, கௌரவ உறுப்பினர் தனிப்பட்ட முறையில் உறுப்பினர்களின் பெயர்களைச் சேர்த்துப் பேசுகின்றார் எனக் கூறினார்.

ஆனால், விட்டேனா பார் என்று அடுத்த சிரேஷ்ட அமைச்சர்களின் பெயர்களையும் ரங்க பண்டார கூறினார்.

சும்மா இருப்பாரா அஸ்வர், சபாநாயகர் அவர்களே, இந்த மனிதர் இரகசியமாக அலரி மாளிகையில் போய் எங்கள் ஜனாதிபதியைச் சந்தித்துவிட்டு இங்கு வந்து வீரம் பேசுகின்றார் என்றார்.

ஐயா!

இவரைக் கொஞ்சம் அமைதியாக இருக்கச் சொல்லுங்கள். எங்களிடமிருந்து ஈச்சம் பழங்களை எடுத்துக்கொண்டு போய்ச் சாப்பிட்டுவிட்டு இங்கே சத்தம் போடுகின்றார். நத்தார் பப்பா போன்று ஒரு சிவப்புத் தொப்பியையும் போட்டுக்கொண்டு அலைகின்றார் எனச் சூடேற்றினார் ரங்க பண்டார.

### அஸ்வருக்கு ஆத்திரம்

இது அஸ்வரை ஆத்திரத்தின் உச்சிக்கே கொண்டு [illegible] மனிதன் எங்களின் புனித இஸ்லாம் மதத்தையே நிந்தனை செய்கின்றார். இவரது கூற்றுகள் அனைத்தும் பதிவேட்டிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்தினார் அஸ்வர்.

ஐயா!

நான் எந்த ஒரு மதத்தையும் நிந்திப்பவன் அல்லன். இந்து, பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் மதங்களை மதிப்பவன். அஸ்வர் அவர்கள் புதிதாக சிவப்புத் தொப்பியுடன் வருவதைத்தான் கூறினேன் என்று சரிக்கட்டி விட்டார் ரங்க பண்டார.

உதயன் சபைச் செய்தியாளர்:
இரா.புத்திரசிகாமணி

அப்படியே தொடர்ந்தார் ரங்க பண்டார. முன்னாள் அமைச்சர்களான திஸ்ஸவிதாரண, பி.தயாரத்ன, டி.யூ குணசேகர அத்தாவுட செனவிரத்ன போன்றவர்கள் பல முக்கிய பொறுப்புகளிலிருந்து பணியாற்றி பாராட்டுப் பெற்றவர்கள். இன்று வெற்று மனிதர்களாக்கப்பட்டுள்ளனர் என்று கூறினார் ரங்க பண்டார.

அப்போதும் சும்மா இருக்கமுடியவில்லை அஸ்வர் எம்.பியால்.

ஐயா!

இந்த உறுப்பினர் மீண்டும் மீண்டும் கௌரவ உறுப்பினர்களின் தனிப்பட்ட விடயங்களையே பேசுகின்றார் என்று அவர் ஆட்சேபனை எழுப்பினார்.

ஐயா!

இந்த ஈச்சம்பழ மாமாவை சும்மா இருக்கச் சொல்லுங்கள். கத்திக் கத்திச் சத்தம் போட்டும், டிப்புட்டி கூட கிடைக்கவில்லை. நான் எந்த ஒரு நபரையும் நிந்திக்கவில்லை. அவர்கள் ஆற்றிய சேவைகள் பற்றிப் பெருமைப்படுத்தியே கூறினேன். இந்த மனிதருக்குப் புரியாவிட்டால் நான் என்ன செய்வது என்றார் ரங்க பண்டார.

இவ்வேளையில் முதன் முறையாக சபையில் 'கொமன்ட்' அடித்தார் ஆளுங்கட்சி உறுப்பினர் நிருபமா ராஜபக்ஷ.

அதாவது, கௌரவ உறுப்பினரின் பேச்சு 'அனுதாப உரை' போன்று அல்லவா அமைந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

### பாவப்பட்ட அமைச்சர்கள்

இதனைச் செவிமடுத்த ரங்க பண்டார, கவலைப்படாதீர்கள். மேலும் பலருக்கு அனுதாப உரையாற்றவேண்டும் என்று கூறிவிட்டு,

பாவம் இந்த சிரேஷ்ட அமைச்சர்கள். அவர்களுக்கு ஒரு அலுவலகம் இல்லை. மேசை நாற்காலி இல்லை. செயலாளர்கள் இல்லை. அமைச்சரவைக் கூட்டங்களுக்குப் போகமுடியவில்லை. என்ன பாவம் செய்தார்களோ திட்டம்போட்டு அவமானப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த நிலைமை இங்கு துள்ளிக்குதிப்பவர்களுக்கும் ஏற்படும் என்று எச்சரிக்கை செய்து தனது பேச்சை முடித்துக் கொண்டார் ரங்க பண்டார.

மட்டு. மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான யோகேஸ்வரன், கிழக்கு மாகாணம் விடுவிக்கப்பட்ட பின்னரும் 150 பேருக்கு மேல் கடத்தப்பட்டுள்ளனர். இதனைச் செய்தவர்கள் புலிகளா, அரசா என்பது பரமரகசியம் என்று கூறினார்.

அத்தோடு, பௌத்த நாடு என்கின்றனர். எந்த ஒரு மதமும் சூதாட்டத்தை ஆதரிக்கவில்லை. இந்தச் சபையில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் இருக்கின்றார். அவரும் கூட இந்தச் சூதாட்ட ஆலோசனைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார் என்றும் அவர் கூறினார்.

### ஹக்கீம் மறுப்பு

இதனை ஆட்சேபித்தார் அமைச்சர் ரவூப் ஹக்கீம். நாங்கள் அரசுடன் இணைந்து செயற்பட்டாலும் இந்தச் சூதாட்ட சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை என்று தெளிவுபடுத்தினார்.

வரவு - செலவுத் திட்ட உரை மீதான நான்காவது நாள் விவாதம் வழமைக்கு மாறாக காலை முதல் மாலை வரை சுறுசுறுப்பாகவும், சூடாகவும் இருந்தது. இந்தச் சூடு மாலை நேரத்தில் மிகவும் அதிகரித்தது.

ஜே.வி.பி. உறுப்பினர் விஜித ஹேரத் வரவு - செலவுத் திட்டத்தைக் கடுமையாக விமர்சனம் செய்தார். இதனால், ஆளும் தரப்பினருக்கும் விஜித ஹேரத்துக்கும் இடையில் கடும் சொற்போர் மூண்டது. வார்த்தைப் பிரயோகங்கள் உச்சக் கட்டத்தை அடைந்தன.

விஜித ஹேரத், பல சுவையான விடயங்களைக் கூறினார்.

ஐயா!

இப்போதைய உத்தியோகத்தர்களும், டாக்டர்களும், இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பெற வேண்டாம். அது உடல் ஆரோக்கியத்தையும், பொருளாதாரத்தையும் பாதிக்கும் என்று ஆலோசனை வழங்குகின்றனர்.


ஆனால், இனிமேல் அப்படி ஆலோசனை வழங்கினால் அது ஜனாதிபதியின் கட்டளையை மீறும் தேசத்துரோகக் குற்றமாகும். சிலவேளை தண்டனையும் வழங்கப்படலாம் என்று எதிர்வுகூறியதோடு, இன்னும் ஒரு விடயத்தையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

அதாவது, இராணுவத்தினருக்குப் பிறக்கும் மூன்றாவது குழந்தைக்கு ஒரு லட்சம் ரூபா வழங்கப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார். இவ்வளவு காலமும் யுத்த களத்தில் இராணுவத்தினர் கடுமையாகச் சண்டையிட்டனர். இப்பொழுது வீடுகளில் அதைவிட வேகமாக யுத்தம் புரியவைத்துவிட்டார் ஜனாதிபதி.

இப்படிப் பிறக்கும் பிள்ளைகளுக்கு 'ஒரு லட்சம் பிள்ளை' என்று பெயர் இடலாம். ஆனால், அப்படிப் பிறந்த குழந்தைகள் அடப் பாவிகளா, ஒரு லட்சம் ரூபாவுக்காக எங்களைப் பெற்று பட்டினி போட்டுக் கொல்கிறீர்களே என்றுதான் சபிக்கும் என்றார் விஜித ஹேரத் எம்.பி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெத்தாச்சி



**ந.மயூரரூபன்.**

வெயிலில் வெறித்திருந்த வளவுக்குள் பெத்தாச்சியின் நடமாட்டத்தைக் காணேல்ல... வரம்பால இறங்கி பெத்தாச்சி வீட்டு ஒழுங்கைக்குள் ஏறி நடந்தன். வீட்டு முத்தத்துக்கு கிட்டவா நிண்டிருந்த ரண்டு தென்னையையும் காணேல்ல. நடு முற்றத்துப் பனை நிண்டிருந்த புட்டியும் வெளிச்சிருந்தது.

அப்புவின்ர உடைஞ்சுபோன வண்டிலும் ஒருதற்ற கையும் படாததால உக்கத் தொடங்கி யிருந்தது.

வீட்டுக் கூரை இறக்கத்தின் மூலையோடுகள் உடைஞ்சிருக்கு...

ஒரு பக்கச் சுவரும் இடிஞ்சு, பிறகு கட்டினது மட்டும் துருத்திக்கொண்டு தெரியுது.

நான் ஊர்ப் பள்ளிக்கூடத்தில படிக்கேக்குள்ள நெடுகவும் பெத்தாச்சியோடதான் இருப்பன். இப்ப ரவுணுக்கு போனதால அவவைப் பாக்கக்கூட முடியிறேல்ல.

நானும் பெத்தாச்சியும்தான் ஆட்டுக்கு குழைவெட்ட மணலுக்குப் போறனாங்கள். பெத்தாச்சியோட போறதெண்டா ஒரே கொண்டாட்டந்தான். நிறைய கதையளெல்லாம் சொல்லிக்கொண்டு வருவா. அவ சொல்லித்தான் இஞ்ச இருக்கிற ஒவ்வொரு இடமும் எனக்கு நல்லாத் தெரியும். ஊரில பாக்கிற எல்லா இடத்திலயும் பெத்தாச்சியத்தான் என்னால காணமுடியுது.

மணல்ல பாலை, சீந்தில், தவிட்டை குழையளைத்தான் பெத்தாச்சி தேடித்தேடி அறுப்பா. அவவுக்கு தெரியும் எந்தெந்த ஆட்டுக்கு எந்தெந்தக் குழை பிரியமெண்டு.

குழைவெட்டுறதுக்கெண்டு பிள்ளைத் தடியொண்டும் பெத்தாச்சியிட்ட இருக்கு.

ஒரு கைக்கடக்கமான தடியில கத்தி கட்டியிருக்கும். குழை அறுக்குறதுக்குத் தோதானதுதான்.

குழையோட திரும்பி வரேக்குள்ள ஒவ்வொரு விறகுக்கட்டும் கொண்டுவருவம். முக்காவாசித்தூரம் என்ர சின்ன விறகுக்கட்டையும் பெத்தாச்சியே தூக்கிகொண்டு வருவா.

பூசின சுவரைப் பாத்துக்கொண்டு படலையடில நிண்டு கூப்பிட்டன்;

''பெத்தாச்சி பெத்தாச்சி... ணேய் பெத்தாச்சீய்ய்...''

ஒரு அசுமாத்தத்தையும் காணேல்ல.

ஆனா கனபேர் கதைக்கிற மாதிரியான சத்தமும் கேக்கிற மாதிரிக் கிடக்கு.

ஒருத்தரயும் என்னால பாக்க முடியேல்ல.

கிழவி வீட்டில இல்லயோ?

கிழவி வீட்டில எங்க நிக்கும், குடு குடுவெண்டு எங்கையெண்டாலும் ஓடிக்கொண்டெல்லே இருக்கும்.

இப்படித்தான் குழைவெட்ட ஒரு நாள் போனம். பெத்தாச்சி முன்னுக்குப் போய்கொண்டிருந்தா.

அவ கையில வச்சிருந்த பிள்ளைத் தடியை,

''ணேய் உத இஞ்ச கொண்டு வாணை.'' எண்டு இழுத்தன்.

டேய் பெடி பேசாம வா..இது உன்ர கையில இருந்தா அருமந்த குழையளையும் தடியளையும் அறுத்து விழுத்திக் கொண்டு வருவாய்.. என்னட்டயே கிடக்கட்டும்.வா.''

மள மள வெண்டு மணலில் கால் புதையப் புதைய நடந்துகொண் டிருந்தாள்.

பாதை மாறிப்போட்டுது.

கிழவி எனக்குச் சொல்லேல்ல, அங்கையுமிஞ்சையும் எதையோ தேடிக்கொண்டிருந்தாள்.

கடற்கரையும் வந்துட்டுது... தூரத்துல அஞ்சு கொட்டிலுகள் தெரிஞ்சுது.

''அதென்னணை ஆச்சி?''

தொலைவா மரங்களப் பாத்து கணக்குப் போட்டுக் கொண்டிருந்த ஆச்சி திரும்பி,

''அதுதான் மேன வாடிவீடு!''

''வாடிவீடோ? எண்டு கேக்க நினைச்சு கேக்கிறதுக்குள்ள ஆச்சியின் முகத்தப் பாத்து கேள்வியக் கைவிட்டன்.

யோசனைக்குள் புதைஞ்சிருந்தது முகம்.

''பெடியா! வரேக்குள்ள அந்தக் கொடிய மிதிச்சனியே?''

''எந்தக் கொடிய?''

''அது தான்ரா பச்சையும் சிவப்புமா சுருண்டிருக்கும்''

''காலுக்குள்ள ஏதோ இழுபட்டதுதான் நான் பாக்கயில்லையணை''

''உதுதான்ரா எங்கள இப்படி ஏய்க்குது.'' என்று பெருமூச்சு விட்டாள் பெத்தாச்சி.

(20 ஆம் பக்கம் பார்க்க)

# தாமரைக் கண்ணனின் தாம்மரைமுகம்

## இலக்கியக் காட்சி 67

இராமன்-சீதை திருமணம் நடைபெற்றுப் பன்னிரண்டு ஆண்டு காலம் கழிந்து விட்டது.

அன்பும் அறமும் பொருந்த இல்லறத்தில் இணைந்து உள்ளங்கள் ஒன்றாகி வாழ்ந்து வந்தனர்.

அவதார புருஷனாக மக்கள் போற்றினாலும் இராமன் சத்திரிய தர்ம நெறியில் உலகமக்களை முறை செய்து காக்கக் கூடிய எல்லா நலன்களும் கொண்டவனாக விளங்கினான்.

தசரதன், தன் மகனுக்குப் பட்டாபிஷேகம் செய்து இராச்சிய பாரத்தை ஒப்படைத்து விட்டுத் தான் ஓய்வு பெற விரும்பினான்.

ஒரு நாள், இராமனைத் தனது அரண்மனைக்கு அழைத்தான். அங்கு சென்ற இராமனிடம் தனது உள்ளக் கிடக்கையை எடுத்து இயம்பினான் தசரதன்.

''நின்னை மகனாகப் பெற்றெடுத்த யான், இந்த மகப்பேற்றினால் பெறற்பாலதாகிய கருமங்களில் முக்கியமானதாக ஒன்று உள்ளது. யான் இப்பொழுது தளர்வடைந்து போன நிலையில் அதற்கு நீ உதவ வேண்டும்.''

இவ்வாறு தந்தை வேண்டிய பொழுது, இப்படித் தந்தை கேட்பதை எதிர்பார்த்திராத இராமன்''அப்பா எதனை நீங்கள் சொல்வீர்களோ அதனைச் செய்து வருவது தானே எனக்கு உறுதிப் பொருள்'' என உணர்வினாலும் நினைவினாலும் ஒன்றி உரைத்தான்.

*தாதை அப்பரிசு உரைசெய*
*தாமரைக் கண்ணன்*
*காதால் உற்றிலன்; கடன் இது*
*என்று உணர்ந்தும்,*
*''யாது கொற்றவன் ஏவியது,*
*அது செயல் அன்றோ*
*நீதி எற்கு'' என நினைந்தும்*
*அப்பணி தலை நின்றான்.*

என்பார் கம்பர்.

பின்னர்,இராமனது பட்டாபிஷேகம் சம்பந்தமாக கருமங்களைச் செய்யுமாறு வசிட்ட முனிவரை வேண்டிக் கொண்டான் தசரதன்.

அயோத்தியிலுள்ள மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியில் ஆழ்ந்து கொண்டிருக்கும் போது, தசரத மன்னனது அரண்மனை வளாகத்தின் ஒரு பகுதியில், இராமன் முடி புனைவதைத் தடுக்கும் உபாயம் நடைபெற்றுக் கொண்டு இருந்தது!

ஆம்.இராமன் சிறு வயதில், வில்லில் வைத்து அடித்த மண் உருண்டை தன் முதுகில் பட்டதைச் சாட்டாகக் கொண்டு, அவன் மேல் வஞ்சந்தீர்க்க, மந்தரை என்ற பணிப்பெண் முற்பட்டாள். கைகேயியின் உறவுக் காரியான அவள், கைகேயியிடம் சென்று, அவளுடைய மகன் பரதனுக்கு முடிசூட்டவும், இராமனை பதினான்கு ஆண்டு வனவாசஞ் செய்யக் காட்டுக்கு அனுப்பவுமாக இரண்டு வரங்களைக் கேட்கும் படி புத்திமதி கூறினாள்.

முன்பு, ஒரு முறை தசரதனுக்குத் தேர்ச்சாரத்தியம் செய்து கைகேயி அவனுக்கு வெற்றியை தேடித் தந்தாள். அதனால் மகிழ்ச்சியடைந்த மன்னன் இரண்டு வரங்கள் தருவதாகக் கூறினான். அப்பொழுது, வரம் பெறுவது நாகரிகம் இல்லையெனக் கருதி கைகேயி இன்னொரு சந்தர்ப்பத்தில் பார்க்கலாம் என்று சொல்லி வைத்தாள்.

அந்த நிகழ்வை மந்தரை, இப்போது கைகேயிக்கு ஞாபகமூட்டி இவ்வாறு வரங்கேட்கத் தூண்டினாள்.


கைகேயியின் தூய சிந்தையும் மந்தரை என்ற கூனியின் தந்திரத்தால் திரிபடைந்தது!

இராமனது முடிசூட்டு வைபவம் பற்றிக் கூற மகிழ்ச்சியோடு கைகேயியின் மாளிகைக்குச் சென்ற தசரதனிடம் முன்னர் தருவதாகக் கூறிய இரண்டு வரங்களை இப்பொழுது தரவேண்டும் என்று கைகேயி கேட்டாள்!

''இவைதான் வரங்கள்'' என முன்னர் சொல்லப்படவில்லை. இப்பொழுதும் வரங்கள் இரண்டும் எவையெனத் தெரிந்துகொள்ளக் கேட்கவும் இல்லை. சத்தியம் தவறமாட்டான் என்பதனால் இராமன் மேல் ஆணையிட்டுச் சொல்லுமாறு கேட்டாள். இராமன் மேல் ஆணையிட் டான்.

வரங்கள் இரண்டையும் கூறக் கேட்ட மன்னன் கலக் கமடைந்தான்.'இராமனைக் காட்டுக்கு அனுப்பாதே, அவனை என்னிடமிருந்து பிரிக்காதே' என்று மன்றாடிக் கேட்டான். பலன் இல்லை.'தந்தேன் வரம்'என்று கூறி மயக்கமுற்றான்.

இந்தச் செய்தி அரண்மனை வளாகத்துக்குத் தெரியு முன் தனது கருமத்தைச் செயற்படுத்துவதில் குறியாக இருந்த கைகேயி இராமனைத் தனது மாளிகைக்கு அவசரமாக அழைத்தாள்.



வரங்கள் இரண்டையும் தான் நினைத்தபடி கேட்பதற்காகத் தான் கிடந்த இடத்தில் தசரத மன்னனைக் கிடக்க வைத்துக் கைகேயி, தலைவாசலில் இராமனுக்காகக் காத்து நின்றாள். இராமா தந்தை உனக்குக் கூறும் படி சொன்ன ஒரு வாசகம் உண்டு அதன்படி,

*ஆழி சூழ் உலகம் எல்லாம்*
*பரதனே ஆள, நீ போய்...*
*பூழி வெங்கானம் நண்ணி.......*
*ஏழ் இரண்டு ஆண்டின் வா' என்று*
*இயம்பினன் அரசன்..'*

என்று கைகேயி சொன்னாள்.

அவ்வாறு சொல்லக் கேட்ட இராமனது முகம்,' அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது' என்கிறார் கவிச் சக்கர வர்த்தி கம்பர்.

முன்பு, தனக்குப் பட்டாபிஷேகம் செய்து முடி புனைவது பற்றிய செய்தியைக் கேட்டான். பின்பு, பரதனுக்குத்தான் பட்டா பிஷேகம். நீ பதினான்கு ஆண்டு வனவாசம் செய்து வரவேண்டும் என்ற செய்தி கேட்டான்.

இந்த இரண்டு சந்தர்ப்பத்திலும் இராமனது திருமுகச் செவ்வி நோக்கினால் அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்ற என்கிறார் கம்பநாட்டார்.

முன்பு பட்டாபிஷேகம் பற்றிச் சொன்னபோது 'தாமரைக் கண்ணன்' என்று இராமனைக் காட்டிய கம்பர், பட்டா பிஷேகம் உனக்கில்லை தம்பி பரதனுக்கே என்ற போது இராமனது முகமே தாமரை முகமாக' அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினையும் வென்றது' என்று காட்டும் இலக்கிய நயம் கற்று இன்புறத்தக்கது.

✱

நா.நல்லதம்பி
மட்டுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதாந்த உதவிப் பணம் டிசெம்பரில் வழங்க ஏற்பாடு

தென்மராட்சி, நவ.28

தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு கடந்த ஜனவரி தொடக்கம் உதவிப் பணம் நிலுவையுடன் டிசெம்பர் மாதம் வழங்கப்படவுள்ளது.

இந்த உதவிப்பணம் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்கள் அதற்குரிய கொடுப்பனவு அட்டையினை டிசெம்பர் முதலாம் திகதி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்தக் கொடுப்பனவினைப் பெறுபவர்கள் டிசெம்பர் ஐந்தாம் திகதிக்கு முன்னர் அதற்கான அட்டையினைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (204-207)

## மாணவர் கௌரவிப்பு நிகழ்வு

தென்மராட்சி, நவ.28

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் இந்த வருடம் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் வே.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு, முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் கு.சிவானந்தரும், சிறப்பு விருந்தினர்களான முன்னாள் தென்மராட்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம், தென்மராட்சி ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா, வித்தியாலய பழைய மாணவர் சங்க கனடாக் கிளை பிரதிநிதி சி.சுந்தரலிங்கம் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (204-207)

## வீதி புனரமைக்கக் கோரிக்கை

கோப்பாய், நவ.28

தென்மராட்சி ஏ-9 பிரதான வீதியில் அமைந்துள்ள பிரதேச செயலகத்தின் முன்பகுதி குன்றும் குழியுமாக உள்ளதால் இப்பகுதியில் வெள்ளம் நிரம்பிக் காணப்படுகிறது.

இப்பகுதியில் செல்லும் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இப்பாதை சீரில்லாமையினாலும், வெள்ளம் நிரம்பிக் காணப்படுவதாலும் மாணவர்களின் சீருடைகள், அலுவலகங்களுக்குச் செல்வோரின் உடைகள் என்பன அழுக்கடைவதால் இவர்கள் போக்குவரத்துக்களை மேற்கொள்ள முடியாமல் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.உரிய அதிகாரிகள் இதனைக் கருத்திற்கொண்டு இப்பாதையைச்சீரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ற-496)

## குளம் புனரமைப்பு

தென்மராட்சி, நவ.28

கமநல சேவைகள் நிலையத்தினரால் கொடிகாமம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் புனரமைக்கப்பட்ட கேவில் குளம் ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பு நிகழ்வையொட்டி கடந்த 20ஆம் திகதி சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உதவிப் பிரதேச செயலர் செல்வி ர.நவரத்தினம் கலந்துகொண்டு திறந்து வைத்துள்ளார். (204-207)

### யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்-வ.து
### வெற்றுப் பொருள்களுக்கான கூறுவிலை கோரல்

| வெற்று பொருள்கள் | எண்ணிக்கை |
|---|---|
| அரிசி-50 கிலோ கிராம் வெற்றுப் பை | 5600 |
| சீனி-50 கிலோ கிராம் வெற்றுப் பை | 1200 |
| மா-50 கிலோ கிராம் வெற்றுப் பை | 4200 |
| மா-25 கிலோ கிராம் வெற்றுப் பை | 4000 |
| சில்லறை-25 கிலோ கிராம் வெற்றுப் பை | 425 |

மேற்படி கூறுவிலை விண்ணப்பங்கள் 2010.12.02ஆம் திகதிக்கு முன்னதாக தலைவர், யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், இல.127, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வெற்றுப் பொருள்களுக்கான கூறுவிலை கோரல்'' என எழுதப்பட்டு நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ.து.

(சி/572587)

### காணி விற்பனைக்கு

ஏ-9 வீதியில் கைதடி தெருவடிப் பிள்ளையார் கோயிலுக்கு மேற்குப் பக்கமாக உள்ள இயற்றைபுலம் தோட்டம் என்னும் நி.பர.25 விஸ்தீரண ஆதனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
தொ.பே: 0750402302

(106563)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

(C/564561)

### பூச்சாடிப் பிரியர்களுக்கு....

பாவனைக்கு இலகுவான DSI பூச்சாடிகளை பெற நீங்கள் நாடவேண்டிய இடம் இல. 220, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 021 222 1378

### தேவை

யாழ். நகரில் உள்ள மருந்தகத்திற்கு மருந்து விற்பனையில் அனுபவம் உள்ள ஊழியர்கள் தேவை.

தொடர்பு:-
021 222 4586

### காணி விற்பனை

பலாலி வீதியில் 2½ பரப்புக் காணி பங்குக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. நல்லூர்ப் பிரதேச செயலகத்திற்கு அருகில்.

தொடர்புகளுக்கு: 0777111400.

(103866)

### வீடு வாடகைக்கு விடப்படும்

கோண்டாவில் மேற்கு, நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயிலுக்கருகாமையில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 0772093215

### வீடு வாடகைக்கு

பலாலி வீதி, தபாற்பெட்டிச் சந்தியில் 1500 ச.அடி விஸ்தீரணம் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. காரியாலயம், காட்சி அறைக்கு உகந்தது.

தொடர்புகளுக்கு:- 0771331784

### வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் சகல வசதிகளுடன் விசாலமான வீடு உடன் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு:- 0728977591

### வீட்டுடன் காணி தேவை

நல்லூரை அண்மித்த பகுதிகளில் 2 பரப்புக் காணியும் வீடும் உடன் தேவை. (தரகர் தேவையில்லை, நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்). தொடர்பு: 0779963186

### மனதார வாழ்த்துகின்றோம்



16.10.2010 பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (HNDA) பட்டத்தினைப் பெற்றுக் கொண்ட

செல்வி
**நாகேஸ்வரா சுஜனி**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் சீரணி நாகபூசணி அம்மனின் திருவருளால் இவர் மேலும் பல பட்டங்களைப் பெற மனதார வாழ்த்துகிறோம்.

என்றும் வாழ்த்துவோர்:
பெரியப்பா, பெரியம்மா, குடும்பத்தினர்.
சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

### யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் விசேட பொதுச்சபைக் கூட்டம்

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின்விசேட பொதுச்சபைக் கூட்டம் இன்று (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சங்கத் தலைவர் திரு.இ.பேரின்பநாயகம் அவர்கள் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் சகல அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

முக்கிய கவனிப்பு-குறித்த நேரத்தில் கூட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஏற்றவாறு அனைவரும் வருகை தரவும்.

கா.பாஸ்கரன்
செயலாளர்.

(சி/572586)

### வீடு விற்பனைக்கு

ஊரெழு கிழக்கு, பலாலி வீதியிலிருந்து 50 யார் தொலைவில் 2ஆவது காணி,6 பரப்பு நவீன வசதிகள் கொண்ட 2000 சதுர அடிக்கு மேற்பட்டது. சுற்று மதிலுடன், கராஜ், கொட்டில் வசதிகளுடன் கூடிய வீடு, வளவு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776522098
0775099332
0776553701
0214908310

(சி/572542)

### நூற்றாண்டு விழாவும் நூல் வெளியீடும்

பைரவர் கோயிலென வழங்கப்படும் சுழிபுரம் குடியிருப்பு ஓடையம்பதி அருள்மிகு பாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர தேவஸ்தான ஸ்தாபகரும், பொன்னாலை வரதராஜப் பெருமாள், சுருவில் (ஊர்காவற்றுறை) ஐயனார் கோயில் பிரதம குருவுமாகிய அமரர் 'கிரியா கலாப முத்தாமணி' ஸ்ரீவத்ஸ சோ. நடராஜக் குருக்களின் ஞாபகார்த்த நூற்றாண்டு விழாவும் ''நித்ய பூஜா'' நூல் வெளியீடும்

தலைவர்-குருமணி, டாக்டர் நா.சர்வேஸ்வர குருக்கள், சுன்னாகம்.
இடம் - சுன்னாகம் கதிரமலை சிவன்கோயில்
காலம் - இன்று (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி

அனைவரும் வருக

22, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். (106557)

ந.பத்மநாப சர்மா
விழா அமைப்பாளர்.

BRITISH COUNCIL

## British College of English

# IELTS



IELTS Registration Centre for British Council

நீங்கள் எங்கு IELTS படித்திருந்தாலும் எமது நிலையத்தில் வந்து பதிவு செய்து பரீட்சை எடுக்கமுடியும்.

கடந்த August 2010 இல் நடைபெற்ற IELTS பரீட்சைகளில் எமது கல்லூரியில் படித்துப் பரீட்சை எழுதிய மாணவர்களில் ஒருவர் Band - 8 இருவர் 7.5 நால்வர் 6.5 எடுத்து சாதனைபுரிந்துள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**We Provide**

* A Placement test which determines to which level to which level of English you belong.
* Updated course modules.
* Materials approved by British Council Which are quite new incliding Cambridge 7
* 20 Practice test .
* Frees IELTS pack & Mock Exams .

| Course Schedule | Sat & Sun |
|---|---|
| Duration | 10 Weeks |
| Time | 8.30 to 11.30<br>2.00 to 5.00 p.m |
| Commencement | Dec 4 th |

எமது கல்லூரிக்கு யாழ்ப்பாணத்தில் வேறு கிளைகள் இல்லை.

வகுப்புக்கள் 04.12.2010 இல் ஆரம்பமாகும்.

BRITISH COLLEGE OF ENGLISH
143, Adiyapatham Road, Thirunelvely.
T.P:0213216027 - 0778803887

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நெருக்கடி

**கொழும்பில் இருந்து வெளியாகும் டெய்லி மிரர் ஆங்கில நாளேட்டில் அதன் பத்தி எழுத்தாளர் எம்.எஸ்.எம்.அயூப் எழுதிய கருத்தினை மொழியாக்கம் செய்தவர் தி.வண்ணமதி**

கடந்த ஆண்டு மே மாதம் விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் அல்லாத முன்னாள் தமிழ் ஆயுதக் குழுக்களின் உறுப்பினர்கள் அனைவரும் ஒதுக்கி ஓரங்கட்டப்பட்டிருப்பதாக தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் என்ற புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் பி.பி.ஸி. செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டிருந்தார்.

''விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வு பற்றி மாத்திரமே பேசப்படுகிறது. எங்களுடன் இணைந்திருந்த போராளிகள் செல்லும்போது அவர்களது குடும்பத்தினைத் தாங்குவதற்கான எந்த வழிவகையும் அவர்களிடம் இருக்கவில்லை. இறுதியில் குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டார்கள்'' என இந்தச் செவ்வியின் போது சித்தார்த்தன் குறிப்பிட்டிருக்கிறார்.

தொழில் வழங்குநர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்க மறுப்பதால் இவர்கள் பெரும் இடர்களுக்கு முகம் கொடுத்திருப்பதாக அந்த அமைப்பின் முன்னாள் ஊடகப் பேச்சாளரான தயா மாஸ்ரர் என அழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதி அவர்கள் யாழ்ப்பாணம் காரைநகரிலுள்ள சென். ஹென்றி தேவாலயத்தில் இடம்பெற்ற கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் தோன்றி சாட்சியமளித்தபோது குறிப்பிட்டிருக்கிறார்.

போரின் இறுதி நாள்களில் சிறிலங்கா அரச படையினரிடம் சரணடைந்த தயா மாஸ்ரர் சட்டவிரோத செயற்பாடுகள் எதிலும் ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் எதுவுமில்லை என்பதால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

தற்போது தடுப்பிலுள்ள அந்த அமைப்பின் போராளிகள் விடுதலைப் புலிகளின் தலைமைக்கு முழு விசுவாசமாகச் செயற்படாதமையினால் அவர்கள் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படுவதோடு மீண்டும் குடும்பங்களுடன் இணைக்கப்படவேண்டும் என தயாமாஸ்ரர் கேட்டுள்ளார்.

ஆயிரக்கணக்கான பட்டதாரிகளுக்கே வேலை வழங்குவதற்கு அரசு திண்டாடி வருகையில் முன்னாள் போராளிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்குவது எந்தளவு தூரம் சாத்தியம் என்பது தெரியவில்லை.

நாட்டின் வேலைவாய்ப்புக்காகக் காத்திருக்கும் ஏனைய இளைஞர்களின் கல்வித் தரத்துக்கு ஒப்பான நிலைக்கு இந்த முன்னாள் போராளிகளது கல்வி நிலையும் வரும்போது இவர்களுக்கான வேலை வாய்ப்புக்கள் தொடர்பாகக் அரசு கவனத்திலெடுக்கலாம்.

இதுபோன்ற அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட்டவர்கள் பெரும்பாலும் அவர்களது பாடசாலை நாள்களிலேயே கட்டாய ஆட்திரட்டலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தமையினால் இவர்கள் மத்தியில் கல்வியறிவு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தடுப்பிலுள்ள விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுள் 70 சதவீதமானவர்கள் எட்டாம் ஆண்டுக்கு மேல் படிக்கவில்லை எனப் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் சீர்திருத்த அமைச்சர் டியூ குணசேகர கூறுகிறார்.

எது எவ்வாறிருப்பினும் வடக்குக் கிழக்கில் நிலைமைகள் வேறுமாதிரியாக இருக்கும்போது சித்தார்த்தன் வித்தியாசமானதொரு தோற்றப்பாட்டினைக் காட்ட முனைகிறார்.

''விடுதலைப் புலிகளைப் போலவே ஆயிரக்கணக்கான போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சிகள் வழங்கியவர்கள் நாங்கள்'' என்றும் ''மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரும்'' என்றும் சித்தார்த்தன் எச்சரிக்கிறார்.

''ஆயுதங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது மாத்திரமே அவர்களுக்குத் தெரியும். இந்த உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதோடு பொருத்தமான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் தவறுமாயின் தமிழ் மக்கள் மத்தியில் விளைவுகள் மோசமானவையாக இருக்கலாம்'' என சித்தார்த்தன் கூறுகிறார்.

''எங்களது அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் சிலர் குறிப்பட்ட சில குற்றவியல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பதை நாமறிவோம். ஆயுதங்களைக் கையாளுவதைத் தவிர வேறு எதுவும் அவர்களுக்குத் தெரியாது. இந்தப் போராளிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்படவில்லை. இவர்களும் சமூகத்துடன் மீளவும் இணையும் வகையில் தொழிற்பயிற்சிகளும் வேலை வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும்'' என முக்கியமானதொரு விடயத்தினை சித்தார்த்தன் நேரிடையாவே கூறுகிறார்.

முன்னாள் ஆயுதக் குழுக்களின் உறுப்பினர்களிடம் உள்ள ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் தொடர்பான முறையான விவரங்கள் எதுவும் இல்லாத காரணத்தினால் குறிப்பிட்ட உறுப்பினர்கள் தங்களிடமிருந்த ஆயுதங்களை முழுமையாக ஒப்படைத்துவிட்டார்களா அல்லது இல்லையா என உறுதிப்படுத்துவது முடியாத காரியமே என ஆயுதக் குழுக்களின் தலைவர்களும் அரச அதிகாரிகளும் கூறுகிறார்கள் என்கிறது பி.பி.ஸியினது செய்திக் குறிப்பு.

விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களின் மத்தியில் காணப்படும் விரக்தி நிலையினை விட புலிகள் அல்லாத ஏனைய தமிழ் ஆயுதக் குழுக்களின் உறுப்பினர்கள் அதிக விரக்தியுடன் இருப்பதாகவே தெரிகிறது.

1987ம் ஆண்டு முதல் இந்த ஆயுதக் குழுக்களின் உறுப்பினர்கள் தங்களது ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு அரசியல் பணி செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்.

இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட்ட இதர தமிழ் ஆயுதக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு எதிரான விடுதலைப் புலிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக இவர்கள் தங்களது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தங்களின் அங்கங்களைக் கூட இழந்து நிற்கிறார்கள்.

1987ம் ஆண்டு ஜூலையில் இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னான காலப் பகுதியில் தான் புலிகள் அல்லாத ஏனைய தமிழ் ஆயுதக் குழுக்கள் இலங்கை அரச படையினரை எதிர்த்துப் போரிட்டனர்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழ் ஆயுதக் குழுக்கள் அனைத்தும் தங்களது ஆயுதங்கள் அனைத்தையும் இலங்கை அதிகாரிகளிடம் கையளித்துவிட்டு 'சனநாயக' அரசியல் நீரோட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் ஆயுதக் குழுக்கள் அனைத்தும் தங்களிடமிருந்த அனைத்து ஆயுதங்களையும் கையளித்துவிட்டு நாட்டினது சட்டத்திற்கு அமைய தங்களை அரசியல் கட்சிகளாகப் பதிவுசெய்து கொண்டனர்.

எவ்வாறிருப்பினும் விடுத்லைப் புலிகள் அமைப்பு தங்களிடமிருந்த குறிப்பிட்ட சில ஆயுதங்களை மாத்திரம் கையளித்துவிட்டு செப்ரெம்பர் 1987ம் ஆண்டு முதல் இந்திய அமைதிப் படையினருக்கு எதிரான போரை முடுக்கிவிட்டது. இந்திய- இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது முதல் தற்போது வரை புலிகள் இல்லாத இந்த ஆயுதக் குழுக்கள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

இன்று சித்தார்த்தன் கூறுவதைப் போல அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற வேண்டிய தேவை தமக்கு இல்லை என இந்தி இதர தமிழ் குழுக்கள் கருதக் கூடும்.

# எடுத்ததற்கெல்லாம் பந்தயம் கட்டும் விசித்திரப் பழக்கம் கொண்டிருந்த அரசாங்க அதிபர்

**ஆவணப் பெட்டகம் 20**

**யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை அறிந்து கொள்வோம்**

**தாண்டவன்**

குறிப்பு

*யாழ்ப்பாணத்தில் தாம் கடமையாற்றிய வேளையில் தமது சிவில் நிர்வாகக் கடமைகளின்போது தாம் பெற்ற அனுபவங்கள் குறித்து லியனார்ட் வூலப் தாம் எழுதிய நூலில் விபரித்துள்ள குறிப்புக்கள் இவ்வாரமும் தொடர்கின்றன.*

புழுதிப்படலம் அடங்கியவுடன்தான் பார்த்தேன் எனக்கருகே குதிரை வண்டியில் சட்டத்தரணி ஹரிசந்திரசேகர நின்று கொண்டிருந்தார். நான் எனது விளக்கத்தை மத்திய அரசுக்கும் ஆளுநருக்கும் அனுப்பினேன். நான் சந்திரசேகரவையோ அல்லது வேறு யாரையுமோ யாழ்ப்பாணத்திலோ வேறு எந்தப் பாகத்திலோ திட்டமிட்டுத் தாக்கவில்லை; அதுவும் குதிரைச் சவுக்கால். சில வேளை சந்திரசேகரவின் குதிரை வண்டியை எனது குதிரை சுற்றிவந்தபோது எனது சவுக்கு அவரது முகத்திற்கு அண்மையில் போயிருக்கக்கூடும்.

ஆளுநரும் அரசாங்கமும் எனது விளக்கத்தை ஏற்றுக் கொண்டார்களோ தெரியாது.

நான் தினமும் காலையில் வேளைக்கே வேலைக்குச் சென்று விடுவேன். அங்கு மலை போல் குவிந்திருக்கும் கடிதங்களுக்குப் பதில் எழுதுவேன். அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பிக்க வேண்டிய கடிதங்களை அவரது இல்லத்திற்கு எடுத்துச் செல்வேன். வேலை நாள்களில் பிறைஸின் வீட்டில் தான் எனக்கு மத்தியான சாப்பாடு. மதியம் ஒரு மணிக்கு நான் மதிய போசனத்திற்கு கிளம்பிவிடுவேன். அரசாங்க அதிபர் எடுத்ததற்கெல்லாம் பந்தயம் கட்டும் சுபாவமுடையவர்.

தினமும் காலநிலை அறிக்கை தயாரிப்பதும் எனது கடமைகளில் ஒன்று. மழை பெய்திருந்தால் குறிப்பிட்ட இருபத்துநான்கு மணிநேரத்தில் எவ்வளவு மழை பதிவாகியுள்ளது என அறிக்கையிட வேண்டும். மழை காலத்தில் எத்தனை அங்குலம் மழை பெய்யும் என்பதற்குக் கூட அரசாங்க அதிபர் பந்தயம் பிடிப்பார். பந்தயப் பணம் ஒரு ரூபாய். மதிய போசனம் முடிந்து வந்து மாலை நாலரை, ஐந்து மணி வரையும் வேலை செய்வேன். பின்னர் பிறைஸின் வீட்டிற்குச் சென்று தேநீர் அருந்தி விட்டு முற்ற வெளிக்கு குதிரையில் செல் வோம். முற்றவெளியில் பெரும்பாலும் 'கோல்ப்' விளையாடுவோம். திருமதி பிறைஸ் சிலவேளைகளில் 'கோல்ப்' விளையாடுவார். சிலவேளை நாயுடன் நடைப்பயிற்சிக்குச் சென்று விடுவார்.

1906ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மன்னார் உதவி அரசாங்க அதிபர் சுகயீனம் காரணமாக ஒரு மாதம் லீவு எடுக்க நான் அவருக்குப் பதிலாக பதில் கடமையாற்றுவதற்கு மன்னா ருக்குச் சென்றேன். 1 1/2 வருட அனுபவத்துடன் நான் மன்னாருக்குக் கடமையாற்றச் சென்றேன். மன்னார் மாவட்டம் 400 சதுர மைல் பரப்பளவுடையது. மன்னார் மாவட்டத்தில் மன்னார் தீவு மட்டும்தான் பட்டணம்.

ஏனைய பகுதி காடு. 400 சதுர மைல் பரப்பிலும் நான் ஒருவனே வெள்ளையன். எனது கட்டுப்பாட்டிலேயே மன்னார் மாவட்டம் இருந்தது. ஏதாவது விடயங்களைப் பற்றி கலந்துரையாடுவதற்குக் கூட ஒருவருமில்லை. இவ்வாறு நானே தீர்மானங்களை மேற்கொள்வது நல்லதாகவே எனக்குப்பட்டது.

மன்னாரில் கடமையாற்றிய வேளையில் காடுகளைப் பார்வையிடுவதிலேயே கூடுதலான நேரத்தைச் செலவிட்டேன்.

மன்னாரில் எனது ஒரு மாத கடமையை முடித்துவிட்டு யாழ்ப்பாணம் திரும்புவதற்கு ஆயத்தப்படுத்திக்கொண்டு எனது குதிரைப்பாகனைத் தேடினேன், ஆனால் காணவில்லை. வேலைக்காரர்களிடம் விசாரித்தேன். அவர்கள் தாங்கள் காணவில்லை என்று சொன்னார்கள். எனக்கு ஒரு சந்தேகம். இவன் எங்காவது குடித்து விட்டு வீழ்ந்து கிடப்பானோ என்று.

நான் சந்தேகப்பட்டது சரிதான். சிறிது தூரத்தில் எனது குதிரைப்பாகன் வீழ்ந்து கிடந்தான் நிறை வெறியில். எனது குதிரையைச் செலுத்தக் கூடிய துணிவு மன்னார் மாவட்டத்தில் எவருக்குமே இருக்கவில்லை.

இறுதியில் காட்டுவாசி ஒருவனை அழைத்து வந்தார்கள். அவனுக்கும் குதிரை செலுத்துவதில் முன் அனுபவம் கிடையாது, எனினும் நான் பயப்படவில்லை, எனது குதிரை யைச் செலுத்துவதற்கு ஒரு ஆள் கிடைத்தது எனக்கு ஆறுதலாயிருந்தது. உண்மையில் அவன் ஒரு சிறந்த குதிரைப்பாகன். யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் அந்தக் காட்டுவாசியை பக்குவமாக மறுபடியும் காட்டுக்கு அனுப்பி வைத்தோம்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடிவரும் விளைவுகள்; எய்ட்ஸ் ஓர் எச்சரிக்கை!

யாழ்ப்பாணத்தில் எய்ட்ஸ் பற்றிய தகவல்கள்அதிர்ச்சியூட்டு வனவாகவே உள்ளன. அதைவிட இளம் வயதினரே எய்ட்ஸ் தாக்கத்துக்கு உள்ளாகியிருக்கின்றனர் என்று இனம் காணப்பட்டதைப் பற்றி நினைக்கும்போது எமது எதிர் காலம் என்ன என்ற வினாவுக்கு விடை சொல்ல வேண்டிய பொறுப்பு யாருக்கு உண்டு என்பதே தெரியாமலிருக்கிறது.

நமது சமூகம் மிகப்பெரும் இறுக்கமான சூழ்நிலையில் எய்ட்ஸ் நோயின் விசமத்தனமான பரவலை எதிர் கொள்ள வேண்டிய நிலையில் தற்போது உள்ளது. விழிக்கத் தவறிய தால் எம்மினம் டெங்கு நோயால் உண்டான இறப்புக்களைச் சந்தித்து விட்டது. அதுபோன்றதாக அல்லாமல் அதைவிடப் பல மடங்கு உக்கிரமான ஒரு எதிர் விளைவை எய்ட்ஸ் மூலம் சந்திக்கும் திராணி நம் சமூகத்துக்கு உள்ளதா? என்ற கேள்வியும் எம் மனக்கண்முன் எழத்தவறவில்லை.

தற்போதுள்ள திறந்த பாலியல் கலாசார சூழலில் கலாசாரச் சீரழிவு கள் மிகையுற்றுவிட்டன. திரும்பும் திசையெல்லாம் இப்படியே அமைகின்றன. இச்சீரழிவுகள் எல்லாவற்றுக்கும் வலுச் சேர்க்கும் வண்ணம் பல சாதகமான புறச் சூழ்நிலைகளும் உருவாக்கப்பட்டு விட்டன். அத்துடன் ஏதோ ஒரு இயந்திரம் திட்டமிட்டு எய்ட்ஸ் நோயை நகர்த்துகின்றதோ என்ற சந்தேகமும் ஏழாமல் விடவில்லை.

அலைபேசியூடான அறிமுகமில்லாத காதல் தொட்டு விபசாரம், போதை மருந்துகள் இவைதாண்டி வேலையின்றி வீதி தோறும் வெளி நாட்டுப் பயணத்தால் செழுமையுற்ற இளைஞர் கூட்டம் இப்படியான பரிதாபம்! அத்துடன் எமது சமூகத்தில் போரின்பின் விதவைகளின் எண்ணிக்கை 89,000ஐ அண்மித்துள்ளதாக அண்மைக்காலத் தரவுகள் சொல்லிக்கொள்கின்றன. இவற்றை இப்படியே விடமுடியது. இங்குதான் இன்னொரு பிரச்சினை கருக்கொள்கின்றதுஇந்த விதவைகளின் இளம் விதவைகளின் எண்ணிக்கையே அதிகளவிலுள்ளது. இவர்களின் பொருளாதார நிலை குடும்பத் தலைவரின் துணையின்மை, வேலைதேட வேண்டிய குடும்பச்சூழல், அங்கவீனச் சிறுவர்கள், தங்கி வாழ்வோரின் எண்ணிக்கை என்னும் காரணிகள் இளம் விதவைகளை வேறுதிசைகளுக்கு இட்டுச் செல்கின்றன.

வறுமை ஒருபக்கம், வறுமையின் ஊடும், வாழ்வியல் ரீதியான உணர்வும் என்ற ஒரு சொல் அது வெறும் சொல் என்று கருத முடியாது. எந்திரன் படத்தில் உணர்வு என்ற சொல்லை உணர முடிந்தது. இயந்திர மனிதனுக்கே உணர்வால் இந்தநிலை என்றால் இங்குள்ள ஆயிரக் கணக்கான இளம் விதவைகளின் உணர்வு நிலை பற்றியும் அவர்களின் மறுவாழ்வு பற்றியும் கவனம் செலுத்த வேண்டியது காலத்தின் தேவையாகவே உள்ளது.

வறுமை மற்றும் உணர்வு என்னும் இவ்விரு பலவீனங்களும் விபசாரம் தன் இருப்பை விசாலிக்க வழிவகுத்து விடுகின்றன.

இதைவிட பல சமூகங்களில் செவ்விந்தியர் மற்றும் அவுஸ்திரேலிய ஆதிக்குடிகள் இப்படிப்பலர் அடியோடு அருகிப்போன நிலையில் விபச்சாரத்தின் விசமத்தனமான பரவல்தன் விஸ்வரூபத்தைக் காட்டியது வரலாற்றின் மறு பக்கங்கள்.

இன்னும் போரின்பின் ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் போன்ற நாடுகளிலும் மிக மோசமான எய்ட்ஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது காலத்தின் பிரதிபலிப்பாகவே உள்ளது.

இங்கு சிந்திக்கத் தவறின் போர்ப் புயலில் சிக்கிய பூவினம் எம் சமூகத்தில் உள்ளது என்பதும் கோடிட்டுக் காட்ட வேண்டியதாகவே உள்ளது.

ஈராக் யுத்தத்தின் பின் ஜோர்தான் மற்றும் சிரியாவில் தஞ்சம் புகுந்த அகதிகள் 'பாலியல் பண்டத்தை' விற்கும் பரிதாபகதியில் உள்ளமை உலகத்தின் நிகழ்காலச் சாட்சியமாகவே உள்ளது. இறுக்கமான மத நடைமுறைகளைக் கொண்ட ஈராக்கிய கலாசாரமே இல்லாது சீரழிந்து விட்ட நிலையில் எம் சமூகம் இத்தகைய கலாசார யுத் தத்தை எதிர்கொள்ளுமா?

எய்ட்ஸ் நோயின் தொற்றுப்பற்றி நாம் ஒரு நோயாளியின் நீர்ப்பீடன சக்தியைப் பொறுத்துத்தான் எயிட்ஸ் அறிகுறிகள் தென்படும். சில நோயாளிகள் எய்ட்ஸ் தொற்று ஏற்பட்டு 15 வருடத்தின் பின்னர் கூட நோய் அறிகுறிகள் தென்படலாம். இளம்பருவத்தினருக்கு உடலில் நிர்ப்பீடன வல்லமை சற்று அதிகம் என்றுதான் கூறவேண்டும். அவர்கள் எயிட்ஸ் நோயாளிகளாக இனம் காணப்படும்போது அவர்களின் மூலம் தொற்றுக்கு ஆளானவர்களின் எண்ணிக்கை மிக நீண்டதொரு வரிசையில் இருக்கும்.

யாழ்ப்பாணத்தில் இனம் காணப்பட்ட எய்ட்ஸ் நோயாளிகள் தற்செயலாகவே இனம் காணப்பட்டவர்கள். தேடிச் சென்று இனம் காணப்பட்டதாக பதிவு கள் இல்லை. எழுந்தமானமாகவே எய்ட்ஸ் நோயாளிகள் இனம் காணப் படும் நிலை உருவாகிவிட்டது. தற்போது இளம் வயதினர் எய்ட்ஸ் நோயாளிகளாக இனங் காணப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இனியும் இந்த விடயத்தைக் கருத்தில் கொள்ளத் தவறின் அது நாம் சமூகத்திற்கு செய்யும் மிகப் பெரும் வரலாற்றுத் தவறு.

தொற்றுநோய்க்குள்ளானோர் கண்டு பிடிக்கப்படும் போது, இனம் காணப்பட்டவர்களின் எண்ணிக்கையை விட வும் இனம் காணப்படாதோரின் எண் ணிக்கை அதிகமானதாக இருப்பது வழமை. இது நீரின் மீது மிதக்கும் பனிக் கட்டியின் பரிமாணத்துடன் ஒப் பிடக் கூடியது. ஏனெனில்பனிக்கட்டியின் வெளித் தெரியும் பகுதியைவிட அமிழ்ந்து தெரி யாமல் இருக்கும் பகுதி அதிகமானது.

எய்ட்ஸ் நோயை டெங்கு நோயு டன் ஒப்பிட்டுப்பார்க்க முடியாது. ஏனெனில் எய்ட்ஸை மருந்து மாத்திரைகளால் குணப்படுத்த முடியாது. வேண்டுமானால் சிகிச்சை மூலம் நோயாளியின் ஆயுட்காலத்தைச் சற்று அதிகரிக்கலாம்; அல்லது உபாதைகளைக் குறைக்கலாம். அதைவிட எய்ட்ஸ் நோய்க்கான மருந்தின் விலை மிக அதிகம். டெங்கு நோய் விழிப்புணர்வு பற்றி எமது சூழலில் பதாகைகள் பலவும் அண்மைக்காலத்தில் மிக அதிகமாக கட்டப்பட்டுள்ளன. எங்குமே பச்சை,சிவப்பு வர்ணத்தில் அசைந்தபடி உள்ளன. ஆனால் எய்ட்ஸ் நோய் பற்றிய பதாகைகள் எல்லாம் இப்போது ஒளியிழந்து போய் விட்டன.

முன்னைய சூழ்நிலையில் எய்ட்ஸ் பற்றி அச்சம் கொள்ள வேண்டிய நிலை எதுவும் இங்கு இருக்கவில்லை. ஆனால் காலத்தின் கொடுமையான மாற்றம் இங்கு பிரதிபலிக்கின்றது. 'எய்ட்ஸ் தொடர்பான பதாகைகளும் டெங்கைப் போல் ஒளிரவேண்டிய நிலை. எனவே மக்கள் எய்ட்ஸ் பற்றிச் சிந்திக்கின்ற நிலையும் ஒரு விழிப் புணர்வும் அவசியம் வேண்டும். இனியும் காலம் தாழ்த்த முடியாது. டெங்குநோயினால்இழப் பிணைக் கண்டபின் எம் சமுகம் விழித்துக் கொண்டது போல் எய்ட்ஸ் நோயினால் இழப்பினைக் கண்டபின்தான் சமுகம் விழிக்கு மென்றால் எஞ்சுவோரின் எண்ணிக்கை எண்ணிக்கொள்ளக் கூடிய அளவிலேயே - சிறிய தொகையிலேயே இருக்கும். விழிக்க வேண்டியது காலத்தின் கட்டளை.

எய்ட்ஸ் பரவலுக்குச் சாதகமான காரணிகள் நாளாந்தம் உருவாகி வருகின்றன.

இந்த நிலையில் நாட்டில் பாலியல் வல்லுறவு ஏனைய குற்றச்செயல்களும் அதிகரித்துக் கொண்டே செல்கின்ற கால வெளியில் நாம் எய்ட்ஸ் தினத்தை ஆண்டுக்கு ஒரு முறை கொண்டாடினால் அது எய்ட்ஸ் தொடர்பான ஆண்டுத்திவசமாக அமையும்.

எய்ட்ஸ் தொற்றுக்கள் இனம் காணப்படல் மிக உயிர்த்துடிப்புடன் அமைய வேண்டும். பாலியல் தொழிலாளர்கள் மற்றும் போதைப் பாவனையாளர்கள் என்போர் திரையிடப்பட்டு எய்ட்ஸ் தொற்று உள்ளதா என்பது கண்டறியப்பட வேண்டும். அதை விடத்தொற்று ஏற்பட ஏதுவாகும் காரணிகள் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

அறிமுகமில்லாத - தவறான பாலியல் ரீதியான தொடர்புகளின் ஆபத்துப் பற்றியும் சமூகத்துக்கு நன்கு தெளிவு படுத்தப்பட வேண்டும்.

தோடு குற்றும்போது பயன்படும் ஊசிவகை கூட மாற்ற வேண்டிய விடயமாகவே உள்ளது. இவற்றின் தவறான பாவனையில் இளம் சந்ததி எய்ட்ஸ் நோயை வாங்கிக் கொண்டால் அதைப் பரிதாபம் என்றுதான் கூறவேண்டும். சிகை அலங்கரிப்பாளர்கள் சவர அலகுகளை மாற்றிக் கொள்வதும், தனி நபர் பாவனையை உறுதி செய்வதும் மெச்சத்தக்க விடயமாகவே உள்ளன.

தவறுவிட்ட ஒருவர் சமூகத்தில் மீளவும் தொடர்ச்சியாக அதே தவறான எண்ணத்துடன் அணுகப்படுவதும் தவிர்க்கப்பட வேண்டும்.

அதாவது ஒருமுறை பாலியல் வல்லுறவுக்கு ஆளான பெண்ணைத் தீண்டத் தகாதவராக ஒதுக்குவது தவறா னது. நாய் கடித்து விட்டது என்றால்நாம் எவரை யாவது சமூகத்தில் இருந்து ஒதுக்கு கின்றோமா? ஏ.ஆர். எஸ், ஏ.ஆர்.வி. போன்ற மருந்துகள் கொடுத்து காப்பாற்று கின்றோம். எனவே சமூகத்தில் இருந்து இவ்வாறானவர்களை ஒதுக்காமல் அவர் களை மீட்கும் பணியில் சமூகம் ஈடு பட வேண்டும்.

இளம் விதவைகளில் யாரேனும் ஒருவர் விபச்சாரத்தின் பிடியில் சிக்கி எய்ட்ஸ் நோயின் மடியில் சாவதைவிட மறுமணம் என்ற சொல்லே அர்த்தம் மிக்கது.

எம் சமுக்த்தின் ஆன்மாவை மீண்டும் உயிரூட்ட எய்ட்ஸ் விழிப்புணர்வு வேண்டும். அது உயிர்த்துடிப்புடனும் அமைதல் வேண்டும்.

அந்த விழிப்புணர்வு ஏற்படாவிட்டால் இனிவரும் காலங்களில் திரு மணத்துக்குக் கூட எய்ட்ஸ் நற்சான்றிதழ் வேண்டும் என்ற நிலைகூட உருவாகலாம். போரின் அழிவுகளை மட்டும் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கும் நாம் போரின்பின் ஏற்படும் எய்ட்ஸ் போன்ற அழிவுகளைக் கணக்கிட்டுப் பார்க்க மறந்துவிட்டோம். உண்மையில் இது போரை விட பெரிய அழிவாக அமைந்துவிடும். இப்போது சமூகம் எதிர் கொள்ளும் கண்ணுக்குத் தெரியாத காத்திரமான தருமயுத்தம் என்றுதான் எய்ட்ஸைச் சொல்ல வேண்டும். எனவே வருடமொரு முறையென்றில்லாமல் நாளும் விழிப் புணர்வு நம் சமூகத்துக்கு வேண்டும். "பொறுப்புக்களில் இருந்து நாம் விலகி ஓடலாம் - ஆனால் விளைவுகள் நம்மை நோக்கியே தேடி வரும்"

டாக்டர் வெ.நாகநாதன்

# தமிழரின் அரசியல் அறநெறி

அண்மையில் தென்னிலங்கையில் இருந்து வந்த அரசியல்கட்சி யாழ்ப்பாணத்தில் காணாமல்போன குடும்பங்களின் ஏக்கங்களை அரசியல் லாபமாக்க ஆர்ப்பாட்டம் ஒன்றினைச் செய்தது. இதற்குச் சில தமிழ்க் கட்சிகளும் ஆலோசனை வழங்கி இருந்தன. எதிர்காலத் தேர்தல்களை இலக்கு வைக்கும் இவ்வாறான நிகழ்வுகளால் சமூகத்தில் வன்முறைகள் தலைதூக்குகின்றன. இவற்றின் பின்னணியில் புலனாய்வு அமைப்புக்கள் இருக்கக்கூடும்.

தமிழ் மக்களுக்கு இன்றைய தேவை நுண்பொருளியல் விருத்தியும் (Microtinace developement) கல்வி மேம்பாடுமே ஆகும்.

வன்முறை அரசியலிலும் ஒருவரை ஒருவர் தாக்கும் அரசியலிலும் ஈடுபடும் கீழ்த்தரமான அரசியல்வாதிகளாலேயே எமது சமூகம் ஆபத்தான நிலைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

சாதாரணமாக ஓர் ஆத்மா ஒருவரின் உடலில் நான்கு இடங்களில் செயற்படலாம். அதற்கேற்ப அவர்களின் குணாதிசயங்கள் மாறுபடும். இது அரசியல்வாதிகளுக்கும் பொருந்தும். முதலாவது இடுப்பு மட்டத்தில் செயற்படும் ஆத்மாவினை உடையவர்கள். இவர்கள் ஆசைமிகுந்தவர்கள்; வஞ்சனை உடையவர்கள். இரண்டாவது வகையினர் இதய மட்டத்தில் ஆத்மாவை உடையவர்கள். இவர்கள் இதய பூர்வமாகச் செயற்படுவார்கள். அடுத்து கழுத்து மட்டத்தில் ஆத்மா உடையவர்கள். இவர்கள் காரண காரியங்களுடன் செயற்படுவார்கள். அடுத்து மூளையறைக் கோளத்தில் இருந்து செயற்படும் ஆத்மா கொண்டவர்கள். இவர்களே சிறந்த அரசியல் ஞானிகளாக அமைவார்கள். எனவே எம்மை வழி நடத்த முற்படும் அரசியல்வாதிகளின் ஆத்மா எந்த மட்டத்தில் உள்ளது என்பதை மக்கள் கண்டறிந்து கொள்ளவேண்டும்.

வடபகுதியில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டமை எமக்கு ஒரு செய்தியினைச் சொல்லுகின்றது. அதாவது இலங்கை அரசு, ஐக்கிய இலங்கை என்பதனை நிலத்தை ஆக்கிரமிப்பது அல்லது எல்லாப் பிரதேசங்களிலும் சட்டபூர்வமாக தமது கட்டடங்களை [illegible] என்பதாகவே [illegible] கொள்கிறது.

மாறாக ஐக்கிய இலங்கை என்பது இலங்கையின் எல்லாப் பகுதியிலும் வாழும் மக்களின் மனங்களை ஒரு முகப்படுத்தும் விதமாக அமைய வேண்டும். அதாவது நிலங்களைச் சொந்தமாக்குதலைத் தவிர்த்து அல்லது ஆக்கிரமித்தலைத் தவிர்த்து மக்களையே அதாவது தமிழ் மக்களை சொந்தமாக்க முயற்சி செய்தல் வேண்டும். உதாரணமாக அயல் வீட்டுக் காரனுடன் ஐக்கியமாகிறோம் என்று கூறிக்கொண்டு வேலியினை வெட்டி விட்டு அவனது கொல்லையில் நாம் போய்த் தூங்கி விடுவோமா? அவ்வாறான நடுநிலையே நாவற்குழி யில் உள்ள தூக்கமும் துக்கமும். ஆயுதத்தினாலும் அதிகாரத்தினாலும் மேற்கொள்ளும் கொள்ளப்படும் வல்லிணக்கங்கள் களையப்படும் போது நல்லிணக்கம்தானே உருவாகும். இனங்களிற்கு இடையே இதற்காக தமிழ் மக்கள் ஆழ்ந்த அரசியல் வழியை, அமைதி வழியினை தந்தை செல்வா வழியில் கடைப்பிடித்தல் வேண்டும்.

இந்தியாவில் விடுதலைப் புலிகள் [illegible]ப்பட்டமை மூன்று [illegible] உலகிற்கு சொல்கின்றது. முதலாவது, விடுதலைப் புலிகள் இலங்கையில் முற்றாக அழிக்கப்பட்ட பின்பு கூட புலித்தடையை நீடிப்பது என்பது இதுவரை காலமும் தமிழ் மக்கள் அனைவரையும் வேண்டத் தகாதவர்களாக அதாவது பயங்கரவாதிகளாக நடத்திய தனது செயலை தொடர்வதற்கு புலித்தடை என்ற சட்டம் அதற்குத் தேவையாக இருக்கின்றது.

டாக்டர் சி.யமுனானந்தா

இரண்டாவதாக, இந்திய அரசின் அரசியல் இருப்புக்காக தமிழ் மக்களை அது தொடர்ந்தும் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப் போகின்றார்கள். இதற்குக் கட்டியமாகவே புலித்தடை நீடிப்பு அமைகின்றது.

மூன்றாவது, இந்தியாவிற்கு இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் அனைவருமே புலிகள் என்ற கருத்து உண்டு. எனவே முள்ளிவாய்க்காலில் அழிக்கப்பட்டது போல் யாழ்ப்பாணம் அழிக்கப்படும் வரை புலித்தடை நீடிக்கும் என்பதில் ஐயமில்லை. இதற்காக அவர்கள் பல்வேறு வகைகளில் சிந்தித்துச் செயற்படுவார்கள். ஆனால் தமிழ் மக்கள் அமைதியாக தமது அறவழியில் நின்று அன்றாட வாழ்வினை மேம்பட உழைத்துப் போராடவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாக் கனியாகுமா இனப்பிரச்சினைத் தீர்வு?

சந்திரசேகர ஆசாத்

ஞாயிறு காரம்

கடந்த 19 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் இரண்டாவது பதவியேற்பு வைபவம் வெகு கோலாகலமாக நடந்தேறியது. மேடையில் பொலிஸ் மா அதிபர் பிரசன்னமாகியிருக்காத போதிலும் முப்படைகளின் தளபதிகள், அமைச்சர்கள் எனப் பலரும் வீற்றிருக்க பதவிப்பிரமாணம் இடம்பெற்றது. மாலைதீவின் அதிபர் உட்பட பல வெளிநாட்டு ராஜதந்திரிகள் வருகை நமது இவ்விழாவை மேலும் சிறப்பித்தனர். காலி முகத்திடலில் மூன்று நாள்கள் கண்காட்சி, வீதித்தடைகள், பாடசாலைகள் விடுமுறை அலங்காரத் தோரணங்கள், 'கட்அவுட்' டுக்கள் என உள்ளூர் ஏற்பாடுகளும் இவ்விழாவையொட்டி முழுநாட்டையும் ஜனாதிபதி மாளிகையை நோக்கித் திருப்பிவிட்டன.

பிரதம நீதியரசர் அசோக டி.சில்வா முன்னிலையில் பதவியேற்பும் சத்தியப்பிரமாணமும் முறைப்படி இடம்பெற்றன. பதவியேற்பு உரையும் இடம்பெற்றது?

இங்குதான் தமிழ் மக்களுக்கு ஒருபெரும் ஏமாற்றம் காத்துக் கிடந்தது. அதாவது ஜனாதிபதி தனது இரண்டாவது பதவிக் காலத்தில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக எடுக்கப்போகும் முயற்சிகள் தொடர்பாக ஏதாவது கூறுவார் என்ற தமிழ் மக்களின் எதிர்பார்ப்புப் பலனற்றுப் போனது.

ஜனாதிபதி இனப்பிரச்சினை என ஒன்று இருப்பதாகவே காட்டிக் கொள்ளவில்லை.

அடுத்து அவரின் இரண்டாவது பதவிக்காலத்தின் முதல் வருடத்துக்கான வரவு செலவுத் திட்டம் அவரால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அப்போதும் ஒரு நீண்ட உரையை ஆற்றினார்.

அப்போதும் இனப்பிரச்சினைத் தீர்வு மறக்கப்பட்டுவிட்டது. மீள்குடியேற்றங்கள் தொடர்பாகவும் இனி செய்யப்பட இருப்பவை தொடர்பாகப் பெரிதாக எதுவும் சொல்லப்படவில்லை!

அது இரண்டாவது ஏமாற்றம்!

அடுத்தது இரண்டாவது பதவியேற்பின் பின்பு வெளிநாட்டுப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டி. இந்தியாவிலிருந்து வெளிவரும் ஆங்கில பத்திரிகையான 'இந்து'வுக்கு இரண்டாவது பதவிக்காலத்தின் முதல் செவ்வி வழங்கப்பட்டது.

இதில் ஜனாதிபதி நாம் அவர்களின் கேள்விக்கு விடையளிக்கும் போது தெளிவான ஒரு அரசியல் தீர்வு தன் மனதில் இருப்பதாகவும் அதேசமயம் மக்களின் கருத்துக்களை அறிந்துகொள்ள வேண்டும் எனவும் அதற்காகக் குழுவொன்றை அமைத்துக் கலந்துரையாட வேண்டும் எனவும் தெரிவித்தார். மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவும் மக்களின் ஆதரவும் தேவையெனவும் பிரபாகரன் விரும்பியதை வழங்க முடியாதெனவும் அவர்கள் ஏனையோரின் உணர்வுகளை அறிந்திருக்க வேண்டும் எனவும் புதிய தலைமைத்துவத்தை ஏற்படுத்துவதில் தமிழ் மக்கள் விருப்பம் கொண்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் இங்கு விஜயம் செய்யவுள்ள வேளையில் அவர் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகச் சில முயற்சிகளை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படும். இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி இந்தியப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி முக்கியமானதாகவே கருதப்படுகிறது.இது சில சமயம் இனப்பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி இந்தியாவுக்கு விடுத்த ஒரு முன்னறிவித்தல் தானோ எனவும் எண்ண வேண்டியுள்ளது. இந்திய வெளியுறவு அமைச்சரின் இலங்கை விஜயத்திற்கு முன்பாக தமிழக முதல்வர் கருணாநிதி இலங்கையில் இனப்பிரச்சினை தொடர்பாக முன்னேற்றகரமான நடவடிக்கை எடுக்கப்படாதது தொடர்பாகவும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் திருப்திகரமற்றிருப்பது தொடர்பாகவும் கடிதம் ஒன்றை வெளிவிவகார அமைச்சருக்கு அனுப்பியுள்ளார். முதல்வர் கருணாநிதி இடையிடையே தமிழ் மக்கள் தொடர்பாக மத்திய அரசுக்குக் கடிதம் எழுதுவதும் பின் அதைப் பற்றி சில காலத்திற்கு மறந்து விடுவதும் வழமைதான். ஆனால் இப்போது இந்திய மத்திய அமைச்சரின் இலங்கை விஜயம் இடம் பெறவுள்ள சந்தர்ப்பத்தில் இக்கடிதம் ஒரு பலனையாவது கொடுக்கும் எனக் கருத வேண்டியுள்ளது.

அதேவேளையில் எஸ்.எம்.கிருஷ்ணாவின் வருகையை இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் பயன்படுத்துவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முனைப்புடன் உள்ளது. தமிழ்க் கட்சிகளின் அரங்கமும் சில முயற்சிகளில் ஈடுபடுவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

இப்படியான ஒரு சூழ்நிலையில் தான் ஜனாதிபதியின் மேற்படி கருத்து வெளியிடப்பட்டுள்ளது. இன்னும் சொல்லப் போனால் இவ்விவகாரத்தில் அவர் என்ன நிலைப்பாட்டை எடுக்கப்போகிறார் என்பதன் முன்னறிவித்தலாகவும் இருக்கலாம்.

ஜனாதிபதியின் கருத்தை மேலோட்டமாகப் பார்க்கும் போது இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வை எட்டுவதற்கான முனைப்பு அவரிடம் இருப்பதாகவே தோன்றும். ஆனால் வரலாற்று அனுபவங்களையும் நடைபெற்று வரும் சில சம்பவங்களையும் நோக்கி அவற்றின் அடிப்படையில் அவரின் வார்த்தைகளை அலசும் போது பிரச்சினையை இழுத்தடித்து மேலும் விவகாரங்களைச் சிக்கலாக்கும் நோக்கம் இருப்பதாகவே தோன்றுகின்றது. அவரின் ஒவ்வொரு வசனங்களும் துல்லியமாக எந்த ஒரு கருத்தையும் வெளியிடாதவாறு குழப்பம் நிறைந்த சொற் சிலம்பமாகவே காணப்படுகிறது.

முதலாவது பிரபாகரன் கேட்டதை நாங்கள் வழங்கப் போவதில்லையாம்! பிரபாகரன் கேட்டது தமிழ் ஈழம் அதாவது தனித் தமிழ் நாடு. இப்போது எவருமே அதைக் கேட்கவில்லையே! தமிழ் தேசியக் கூட்டமைப்புக் கூட ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் வடக்கு கிழக்கு இணைந்த நியாயமான உரிமைகளுடன் கூடிய ஒரு தீர்வையே கோருகின்றனர்.

இந்நிலையில் பிரபாகரன் கேட்டவை என்ற விடயம் இங்கு ஏன் வந்தது. பேட்டியின் இன்னொரு இடத்தில் ஜனாதிபதியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டது வரவேற்கக் கூடியது எனக் குறிப்பிடுகிறார். அப்படியானால் பிரபாகரன் கேட்ட எதைக் கேட்கக் கூடாது என எதிர்பார்க்கிறார்?

இரண்டாவது இது தொடர்பாக மக்களின் கருத்தை அறிய வேண்டுமெனவும் அதற்காகக்

## நாளுக்கொரு கருத்தும் வேளைக்கொரு பதிலும்

குழுவொன்றை அமைக்கப் போவதாகவும் கூறியுள்ளார். தேசியம், சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்டு வடக்குக் கிழக்கு இணைந்த அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு வழங்கப்படும் என்ற வகையில்தானே தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு ஆணை வழங்கினர். மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்ற அடிப்படையில் தானே மக்கள் ஈ.பி.டி.பிக்கு ஆணை வழங்கினர். இவற்றை விட மக்கள் விருப்பத்தை அறிய ஒரு குழுவொன்று அமைக்கப்பட வேண்டுமா? இது காலத்தை இழுத்தடிக்கவும், மக்கள் கருத்து என்ற வகையில் சில குழப்பங்களை ஏற்படுத்தவும் மேற்கொள்ளும் ஒரு தந்திரமல்லவா?

மூன்றாவது அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏனையோரின் உணர்வுகளை அறிந்திருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். அப்படியானால் அந்த ஏனையோர் யார்? வடக்குக் கிழக்கெங்கும் சிங்களக் குடியேற்றங்களையும் புத்தர் சிலைகளையும் நிறுவ முயலும் ஆக்கிரமிப்பு எண்ணம் கொண்ட சிங்களக் கடுங்கோட்பாட்டாளர்களா? வரலாற்றையே நினைவுபடுத்தி இலங்கை முழுவதும் சிங்களவர்களுக்கே உரியது எனவும் இலங்கையில் தமிழர் முஸ்லிம்கள் என்று எவருமே இல்லை. அனைவரும் சிங்களவர்களே என்று கூறும் இனவெறியர்களா?

அவர்களின் உணர்வுகள் ஏற்கப்படுமானால் இனப்பிரச்சினைத் தீர்வு ஏற்படுமா? இந்த நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலைக்க முடியுமா?

நான்காவது புதிய தலைமைத்துவத்தை ஏற்படுத்துவதில் தமிழ் மக்கள் விருப்பம் கொண்டுள்ளனராம். ஒரு தலைமைத்துவம் என்பது அதே இனமக்கள் மத்தியில் இயல்பாக உருவாவதாகும்.

வேறு எங்கிருந்தும் எவராலும் திணிக்கப்பட முடியாததாகும். இந்தியா முதற்கொண்டு பலரும் தமிழ் மக்களுக்கான தலைமைகளை உருவாக்க முயன்று தோல்வியடைந்ததை வரலாறு காட்டும். எனவே ஜனாதிபதி எதிர்பார்ப்பது போன்று ஒரு புதிய தலைமைத்துவத்தை எவருமே தோற்றுவித்துவிடவும் முடியாது, திணிக்கவும் முடியாது. சமாதானமான வழிமுறைகளில் இனப்பிரச்சனைத் தீர்க்கப்படாமல் இன ஒடுக்குமுறையும், இனஅழிப்பும் தொடருமானால் சில சமயம் புதிய தலைமை தோன்றலாம்.

எல்லாவற்றிலும் மேலாகத்தான் ஒரு தீர்வு வைத்திருக்கிறாராம். அதற்காக மக்களின் கருத்தை அறிந்துகொள்ள வேண்டும். முழு நாட்டினதும் ஜனாதிபதி என்ற வகையில் ஒரு தீர்வை முன்வைக்கும் உரிமை அவருக்கு உண்டு. ஆனால் அதை முன் வைக்காமல் எப்படி மக்கள் கருத்தை அறிய முடியும்? அப்படி முன் வைப்பது ஒரு தொடக்கப் புள்ளியாகவும் அமையலாம்.

ஆனால் முன்வைக்கப் படவுமில்லை. முன்வைக்கப்படப் போவதுமில்லை. எனவே இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான முயற்சிகள் திசை திருப்பப்பட்டு இழுத்தடிக்கப்படும் நிலைமையே தொடரும் என எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

ஆனால் இன்னொருபுறம் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளுக்கு விரோதமாக இனமோதல்களுக்கும், இனங்களுக்கிடையேயான கசப்புணர்வுகளை வளர்க்கவும் மேற்கொள்ளப்படும் முயற்சிகளை நாம் அலட்சியப்படுத்திவிட முடியாது.

• யாழ்ப்பாண நூல் நிலையச் சம்பவம், நாவற்குழியில் சிங்கள மக்களின் அத்துமீறிய குடியேற்றம், தந்தை செல்வா நினைவாலயத்தில் சேதம் விளைவித்தமை, இந்து மக்களின் கார்த்திகை விளக்கீடு வழிபாடுகளுக்கு இடையூறு செய்தமை போன்ற சம்பவங்கள் ஒரு பெரும் ஆபத்தின் அறிகுறிகளாகவே தென்படுகின்றன. இவை தொடர்பாக உரியவர்களுக்கும் ஜனாதிபதிக்கும் முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதும் இவை தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இப்படியாக நடைமுறையில் நேரெதிரான சம்பவங்கள் இடம்பெற்று வரும் போது இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக குழப்பமான கருத்துகளையே ஜனாதிபதி வெளியிட்டு வருகிறார். இன்னொரு புறம் சில அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களே இனவிரோதக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே இந்திய வெளியுறவு அமைச்சரின் விஜயம் மேற்கொள்ளப்படுகிறது. அவருக்கு எவ்விதமான பதில்கள் வழங்கப்படும் என்பதை நாம் இப்போதே புரிந்துகொள்ள முடியும்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ்க் கட்சிகளின் அரங்கமும் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டிய தருணம் இது. இந்திய வெளியுறவு அமைச்சரிடம் சில உண்மைகளைத் தெளிவுபடுத்த வேண்டிய கட்டாயம் அவர்களுக்குண்டு.

இந்தியா- இலங்கை மீது அழுத்தம் கொடுக்காது என்பது உண்மை என்ற போதிலும் அவர்களின் ஆலோசனைகளுக்குப் பல்வேறு வகைகளிலும் பெறுமதி உண்டு என்பதை நாம் மறக்கக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலி

41 ஆம் ஆண்டு | 5 ஆம் ஆண்டு

தோற்றம்: 04.08.1883

தோற்றம்: 17.07.1902





மறைவு: 12.11.1969

அமரர் **முருகேசு சுவாமிநாதன்**

திதி: ஸப்தமி

மறைவு: 22.11.2005

அமரர் **சுவாமிநாதன் வள்ளியம்மைப்பிள்ளை**

அன்பின் அணிகலனாக பாசத்தின் உறைவிடமாக விளங்கி எம்மையெல்லாம் வழிநடத்திய எம் தாய், தந்தையரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(106543) முதலியார் வளவு, கோப்பாய் மத்தி, கோப்பாய். பிள்ளைகள், குடும்பத்தினர்.

## மஹோற்சவம்

கோண்டாவில், இருபாலை வீதியில் அமைந்துள்ள யாழ். சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தில் மஹோற்சவம் ஆரம்பமாகவுள்ளது. நாளை திங்கட்கிழமை மாலை கிராமசாந்தி முதலான கிரியைகள் இடம்பெறும்.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகி எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை இரதோற்சவமும் நடைபெறும்.

எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும், 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்காவனமும், 11ஆம் திகதி ஆஞ்சநேயர் வழிபாட்டுடன் மஹோற்சவம் நிறைவடையும். (ற-496)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

**பாலச்சந்திரன் ஜெயபாலன்**

தோற்றம் 28.01.1978

மறைவு 16.10.2010



கடந்த 16.10.2010 அன்று அகாலமரணமடைந்த எமது குடும்பத்தலைவன் பாலச்சந்திரன் ஜெயபாலனின் 45ஆம் நாள் ஆத்ம சாந்தித் திருப்பலி நாளை (29.11.2010) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு புனித அஞ்சனந் தாழ்வு புனித கொலை விலக்கி மாதா தேவாலயத்தில் நடைபெறும். இத்திருப்பலியிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி.தர்மபிள்ளை (மாமா) (C.T.B- Ret. Electrical Forman),
பா.சுகந்தினி (மனைவி),
பா.ஜெயதுவாரகன் (மகன்),
பா.ஜெயதுவாரகா (மகள்).

"செல்வமாளிகை",
இல.15, வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 11 . 11 . 1949 சாவகச்சேரி



விண்ணில் 17 . 11 . 2000 BREMEN, GERMANY

## அமரர் சிதம்பரப்பிள்ளை செல்வரத்தினம்

(முன்னாள் ஆசிரியர், பாண்டியன்குளம் அரசினர் தமிழ்ப் பாடசாலை)

திதி: 28.11.2010

*ஆயிரம் துயரங்கள் வந்தாலும் ஆணிவேராக இருந்து*
*எம்மைத் தளராது வழிநடத்தும் அன்புத் தெய்வமே!*

ஆண்டுகள் பத்து ஆனாலும் ஆறாது எங்கள் வலி
மீண்டும் உங்கள் முகம் காண்போமா என்ற ஏக்கம்
அன்பாலும் பண்பாலும் அரவணைத்த அப்பாவே!
கண் மூடித் திறக்கு முன்னே காலன் உமைக் கவர்ந்தது ஏன்?

கவிபாட உங்கள் பேச்சுக் கண்கொள்ளாப் புன்னகையும்
உறுதியான பக்தியும் இனி எப்போ கேட்போம் நாம்
நினைந்தோறும் உங்கள் நினைவு கனந்தோறும் கண்ணீராய்
நினைந்தேங்கி வாடுகின்றோம் நிம்மதியைத் தொலைத்து விட்டோம்

வாழ்க்கைத் துன் அங்கமாக வெம்மி நந்த தடுமாறி
வாழ்ந்த வாழ்க்கையை வர்ணிக்க வார்த்தை உண்டோ

செல்வமே இதயமே செம்மலைச் சூரியனே!
செல்வமும் பிரிந்து சென்றனையோ எம்மை விட்டு

பத்தாண்டுகள் என்ன பலநூறு ஆண்டுகள் சென்றாலும்
பத்தாவே உங்கள் அன்புமுகம் நீங்காது எம்மைவிட்டு
மாண்டவர் மீள்வதில்லை மண்ணுலக நியதியெனில்
மீண்டுமொரு பிறப்புண்டேல் எம் கணவர் நீங்களேதான்

பத்தாண்டுகள் நிறைவினில் எம்முயிரை உங்களிடம் பகிர்ந்து
உங்கள் ஆத்ம சாந்திக்காகக் கண்ணீர்ப் பூக்களால்
தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

20, ஈச்சமோட்டை,
காற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
(106507)

*என்றும் உங்கள் ஞாபகங்களைச் சுமந்து வாழும்:*
**அன்பு மனைவி, பிள்ளைகள்.**
பிரதீப் செல்வரத்தினம் (GERMANY) 0049421581684
திரு-நு-சிவபாலசுந்தரம் (இலங்கை) 0777078803.

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன்,நல்லூர்.

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி, கச்சாய் வீதியில் றெயில்வே லைனில் இரண்டு பரப்புக் காணியில் மேல் மாடி வீடு 14 அறைகள், கிணறு, குழாய் கிணறு வசதிகளுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777732214 (106544)

## கோழிக் குஞ்சு விநியோகம்

தரமான புறொயிலர் No - 1 கோழிக்குஞ்சுகள் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்க இருக்கின்றன. (Nelna Farm) மிகக் குறைந்த விலையில் நம்பிக்கையாகப் பெற்றிட நாடவேண்டிய இடம் இலங்கையின் தலைசிறந்த விநியோகஸ்தர்கள்

**(Mafa Farm House)**

தொடர்புகளுக்கு
0773657008, 0773760445.
மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு உண்டு. ஆகக் கூடிய சில்லறை விலை - 110/
உடன் தொடர்புகொள்ளவும்.

## தேவை

எமது நிறுவனத்துக்கு முன் அனுபவமுள்ள / அனுபவம் இல்லாத விற்பனையாளர் (ஆண் / பெண்) இருபாலாரும் தேவை. நேரில் வரவும்.
**கஜேஸ் ஒவ் செலெக்ஷன்,**
இல. 22, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

## தேவை

லவன் கபேக்கு சகல வேலைகளும் தெரிந்த றொட்டி தயாரிப்பாளர் தேவை. தகுந்த வேதனம் வழங்கப்படும்.
தொடர்பு:- லவன் கபே, கண்டி வீதி, மாம்பழம் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம். தொ.பே:- 0770856457

## புறொயிலர் விற்பனை

நிறை கூடிய புறொயிலர் கிலோ 300/=, சுத்தம்செய்யப்பட்டது கிலோ 450/=. திங்கள், புதன், சனி, ஞாயிறு தினங்களில் நண்பகல் 12மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
**குமரன் பாம்**, 227, (நரியன் குண்டுக்கு அருகில்), பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (106540)

## கோழிக்குஞ்சு விநியோகம்

பைரகா புறொயிலர் குஞ்சு 27/11/2010 இலும் 03/12/2010 இலும் விநியோகிக்கப்படும்.
விவரங்களுக்கு S.கிருஷ்ணகுமார், மானிப்பாய்.
T.P.No.0772338084 (106541)

## சாரதி/ சாரதி உதவியாளர் தேவை

ATM ரான்ஸ்போட் சேர்வீஸ், கொழும்பு, வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு லேடன் (10 சில்லு, 06 சில்லு) பார ஊர்திகளுக்கு சாரதி/ சாரதி உதவியாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

தகுதி உடையவர்கள் சுய விபரங்களுடன் கீழ்உள்ள முகவரிகளுடன் தொடர்பு கொள்ளவும்.

இருபாலைச்சந்தி, கோப்பாய்.
T.P: 0212225784

230- 232, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு- 13.
T.P: 0114602130

ATM எரிபொருள் நிரப்பு நிலையம்,
மூன்று முறிப்பு,
கண்டி வீதி, வவுனியா.
(106362)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*தோற்றம்* 21 . 03 . 1937



*மறைவு* 09 . 12 . 2009

## கந்தையா இராசலிங்கம்

*(இளைப்பாறிய இராணுவ லான்ஸ் கோப்ரல்)*

திதி: தேய்பிறை அட்டமி (28.11.2010)

எமது குடும்பத் தலைவரின் ஓராண்டு சிரார்த்த தினமான இன்று அவரைப் பாசத்துடன் நினைவு கூருகின்றோம்.

27/6, துரையப்பா ஒழுங்கை,
ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். (ச/572522)

என்றும் நினைவில்:
**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி Town இற்கு அருகாமையில் தபாற்கந்தோர் வீதியில் [Post Office Rd] முகப்பாகக்கொண்ட 14 3/4 பரப்புக் காணி (14.75) விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: தொ.பே. 0112591720 (கொழும்பு) 021 222 7661 (யாழ்ப்பாணம்). தரகர் தேவையில்லை.

## காணியுடன் வீடும் விற்பனைக்கு

நவாலி வடக்கு முருகன் கோயிலுக்கு அண்மையில் (ஆண்டாவளவு) 12 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. இங்கு பல பயன் தரும் மரங்களும் உண்டு. மா, தென்னை, இலுப்பை, பலா, வேம்பு போன்ற பயன்தரும் மரங்கள் உள்ள பெறுமதியான காணி.
தொடர்பு:- 0770868517, 0778356074

## VICKY & MURUGAN WEDDING CARDS

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட டிசைன்களில் இந்து மற்றும் கிறித்தவ திருமண அழைப்பிதழ்கள், புதுமனைப்புகுவிழா, பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் அழைப்பிதழ்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.
தொடர்பு கொள்க:- 0750422465
(106179)

## காணவில்லை



இப்படத்தில் காணப்படும் **விஜயகுமார் அன்ரன் ராஜ்குமார்** (வயது - 26) என்பவர் 24.11.2010 அன்று சாரதி பயிற்சிப் பரீட்சையின் பெறுபேறு பார்க்கச் சென்றவர் வீடு திரும்பவில்லை. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:
கட்டைப்பாலி லேன்,
கூழாவடி, ஆனைக்கோட்டை.
முருகையா ஜெலிசன் (அத்தான்).
0779228756

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.கோட்டை தமிழ் மக்களின் பெரும் சொத்து; அதனைப் பாதுகாப்பது அவர்களது பொறுப்பு!



யாழ்.கோட்டை புனரமைப்பு, அங்கு இடம்பெறும் அகழ்வாய்வுப் பணிகள், குடாநாட்டில் தொல்லியல் சின்னங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் பற்றி இலங்கைத் தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனரத் திஸநாயக்கவுடன் நிகழ்த்திய நேர்காணல்.

கே:-யாழ் கோட்டை அகழ்வாராய்வுப் பணிகள் தற்போது முழு வீச்சில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அது பற்றி விளக்க முடியுமா?

ப: யாழ்ப்பாண கோட்டை தமிழ் மக்களின் சொத்து. தமிழ் மக்களுக்கு உரித்தான சொத்து. அதனை பாதுகாக்க வேண்டிய முழுப்பொறுப்பு ஒவ்வொரு தமிழருக்கும் உண்டு. கோட்டையையும் அதனுள் இருக்கும் சேதமடைந்த கட்டடங்களையும் மீளப் புனரமைப்புச் செய்து மக்களுக்கு புதுப்பொலிவுடன் ஒப்படைக்க தொல்லியல் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

கே: யாழ். கோட்டையில் தொல் பொருள்கள் பலவும் மீட்கப் படுவதாக தகவல்கள் வெளி வருகின்றன. அவற்றை எப்படி பாதுகாக்கப் போகிறீர்கள்?

ப: யாழ்ப்பாணம் கோட்டையில் மீட்கப்படும் தொல் பொருள்களை அனுராதபுரம், மாத்தறை, கொழும்பு போன்ற அரும் பெருள் காட்சி யகங்களுக்கு எடுத்துச் செல் லப்போவதில்லை. அவற்றினை யாழ்ப்பாணக் கோட்டைக்கு மிக அருகாமையில் தொல் பொருள் காட்சிச்சாலை ஒன்றை நிறுவி அங்கேயே வைத்து பாதுகாக்கப் போகின்றோம்.

அதன் பின்னர் இவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பை நாம் தமிழ் மக்களிடமே விட்டு விடப் போகின்றோம். தொல்பொருள்களை மீட்டெடுத்தல், மீளமைத்தல் என்பன தொல் பொருள் திணைக்களத்தின் கடமை. அவற்றைப் பாதுகாக்கும் பாரிய பொறுப்பு மக்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே யாழ்ப்பாணக் கோட்டையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு யாழ்.மக்களுக்கு உண்டு.

கோட்டையை மீளுருவாக்கம் செய்ய பல்வேறு வழிகளில் எமது திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. கோட்டையை பாதுகாக்கும் பொறுப்பு யாழ். பல்கலைக்கழக தொல்லியல்துறை, உள்ளூராட்சி திணைக்களம், யாழ். மாநகர சபை என்பவற்றுக்கும் உண்டு.

கோட்டையில் தற்போது ஆய்வுகளை தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினரும் மேற்கொண்டு வருகின்றனர்.

கே: கோட்டையை பாதுகாப்பதன் மூலம் எத்தகைய நன்மைகள் விளையக்கூடும் என எதிர்பார்க்கிறீர்கள்?

ப: ஒரு தொல்லியல் சின்னத்தைப் பாதுகாப்பது என்பதன் முக்கிய நோக்கம் அதை எதிர்கால சந்ததிக்கு கையளிப்பதற்கே ஆகும். இப்படியான தொல்லியல் சின்னங்களை பாதுகாப்பதன் மூலம் பல்வேறு நன்மைகள் உண்டு. கோட்டையைப் புனரமைப்புச் செய்யும் பணிகளில் தொல் பொருள் திணைக்களம் யாழ்ப்பாண பல்கலைக்கழக தொல்லியல் துறைப் பட்டதாரிகளையும் ஈடுபடுத்தியுள்ளது. எதிர்காலத்தில் இதன் மூலம் 125 தமிழ் தொல்லியல் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பும் வழங்கப்படவுள்ளது.

யாழ்.கோட்டை யாழ்ப்பாணத்தவரின் சொத்து. எனவே தமிழ் மக்கள் இதனை பாதுகாக்க ஒத்துழைக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

தொல்லியலின் நோக்கம் கடந்த காலத்தை அறிவது மட்டுமல்ல எதிர்காலம் பற்றியும் அறிவதுதான். இது கோட்டை ஆய்வின்போது எமக்கு கிடைத்த அனுபவம். கோட்டை பற்றிய ஆய்வின் மூலம் கடந்த கால சமுதாயத்தைப் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது. அதுமட்டுமல்லாது எதிர்காலம் பற்றியும் அறிந்து கொள்ள கோட்டை பற்றிய ஆய்வு உதவியுள்ளது.

கே: கோட்டை ஆய்வின் மூலம் எத்தகைய அனுபவத்தைப் பெற முடிந்துள்ளது?

ப: மீட்கப்பட்ட கோட்டைத் தொல்பொருள்கள் மூலம் ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்கையை தெரிந்து கொள்ள முடிகின்றது. கோட்டை பற்றிய ஆய்வின் முக்கிய நோக்கம் மீள ஒரு சமுதாயத்தை உருவாக்குவதே ஆகும். தொல்லியல் சின்னங்கள் பயன்பாட்டிலிருந்து மறைந்துவிட்டன; ஆனால் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இதுவே இந்த ஆய்வின் மூலம் நாம் கற்றுக்கொண்டுள்ள பாடமாகும்.

கே: தொல்பொருள் திணைக்களத்தின் எதிர்கால நடவடிக்கை பற்றி...?

ப: வட இலங்கையில் தொல் பொருள்கள் உள்ள இடங்கள் இனங்காணப்பட்டு வருகின்றன. அவைபற்றிய தகவல்களைத் திரட்டி வருகின்றோம். இதுவரை கந்தரோடை பௌத்த சின்னம் மற்றும் இந்துக் கோயில்கள் என்பன இனங்காணப்பட்டுள்ளன. இனிவரும் காலங்களில் தொன்மையான இந்துக் கோயில்கள் இனங்காணப்பட்டு அவற்றிலும் தொல்பொருள் எச்சங்கள் பற்றிய ஆய்வுகள் நடத்தப்படும்.

இதற்கும் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை மாணவர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். தற்போது 14 மாணவர்கள் தமது அகழ்வாராய்வுப் பயிற்சிகளை கோட்டையில் மேற்கொண்டு வருகின்றனர். அவர்களுக்கு நிரந்தரமான நியமனங்களை வழங்கத் தொல்லியல் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

கே: தமிழர்களின் இருப்பினை உறுதிப்படுத்தும் தொல்



பொருள் எச்சங்கள் ஏதேனும் உங்களது திணைக்களத்தால் மீட்கப்பட்டுள்ளதா?

ப: அந்த ஆய்வுகள் இனி வரும் காலங்களில் முழு மூச்சாக மேற்கொள்ளப்படும். தற்போது கோட்டையை மையமாக வைத்தே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வுகள் விரிவாக்கப்படும் போது - இந்துக் கோயில்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படும்போது - பல உண்மைகள் வெளிவரலாம்.

முக்கியமாக இந்த ஆய்வுகளில் தமிழ்த் தொல்லியலாளர்களை முற்று முழுதாக ஈடுபடுத்த தொல்லியல் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. அவர்களின் விஞ்ஞான பூர்வமான - உண்மையான - தொல்லியல் ஆய்வுகள் மூலம் உண்மைகளை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

கே: தொல்பொருள் சின்னங்கள் தொடர்பாக தமிழ் மக்களிடம் எவ்வகையான ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறீர்கள்?

ப: தொல்லியல் எச்சங்கள் பற்றிய தகவல்களை யாழ்.மக்கள் உடனுக்குடன் எமக்கு அறியத் தரவேண்டும். தொன்மையான ஆலயங்கள், தொல்பொருள் மையங்கள் பற்றிய தகவல்களையும் எமக்கு அவர்கள் வழங்கலாம்.

**நேர்காணல்- ஹரிஸ்**

இதன் மூலம் தமிழர்களது பண் பாட்டையும் இருப்பின் தொன்மையையும் எம்மால் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். தற்போது தொல் பொருள்கள் உள்ள இடங்களின் எல்லைகளை எமது திணைக்களம் அவற்றை அடையாளப்படுத்தி வருகின்றது. எனவே தொல்பொருள் எச்சங்களை பாதுகாக்க தமிழ் மக்கள் எமக்கு தொடர்ந்தும் உதவ வேண்டும்.

---

## இருட்டைக்கண்டு பயப்படுவது ஏன்?

ஒருவன் விடியற் காலையில் ஆற்றில் மீன்பிடிக்கச் சென்றான்.இன்னும் பொழுது விடியவில்லை..... அதற்குள் வலையை எடுத்துச் கொண்டு கிளம்பிச் சென்று விட்டான். பொழுது விடியும் வரை என்ன செய்வது? சும்மா கரையில் உட்கார்ந்து காலை ஆட்டிக் கொண்டிருந்தான்.

அப்போது காலில் ஏதோ ஒரு மூடை தட்டுப்பட்டது. இருட்டில் என்ன என்பது அவர்களுக்குச் சரியாகத் தெரியவில்லை அந்த மூடைக்குள் சிறிய கற்கள் இருந்தன. சும்மா பொழுது போக வேண்டும் என்பதற்காக ஒருவொரு கல்லாக எடுத்து வீசிக் கொண்டிருந்தான். பொழுது விடிவதற்கான அறிகுறி தெரிந்தது.

அதற்குள் மூடைகளில் இருந்த கற்கள் அனைத்தையும் வீசியெறிந்து முடித்து விட்டான் கடைசியில் ஒரு கல் மட்டும் அவனது கையில் இருந்தது. வெளிச்சம் வந்ததும் கையில் இருந்த கல்லைப் பார்த்து திகைத்து விட்டான்.ஏன் தெரியுமா? அவன் கையில் இருந்தது. வெறும் கல் அல்ல விலையுயர்ந்த இரத்தினக்கல். அவனுக்கு அழுகையே வந்தது.

வாழ்கையை வசதி நிறைந்ததாக மாற்றிக் கொள்வ தற்கு மிகப்பெரிய வாய்ப்பு அவனுக்கு கிடைத்தது. இருந்தாலும் இருட்டில் அதை இழந்து விட்டான். ஒரு வகையில் அவனுக்கு கொஞ்சம் அதிஷ்டம் இருந்திருக்கிறது. கடைசிக்கல்லை எறிவதற்கு இடையில் வெளிச்சம் வந்து விட்டது.

வாழ்க்கை என்பது மிகப்பெரிய புதையல். அதைப் புரிந்து கொள்ளாமலே மனிதன் அதை வீசியெறிந்து கொண்டிருக்கிறான் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள்.

## போதும் என்ற மனமே ...

க.நிலா

மனிதன் என்பவன் நிச்சயமாக தேவையையும் ஆசையையும் கொண்டிருப்பது வழமை. அவற்றை நம் தேவைக்கேற்ப தொடர்ந்தும் மிகவும் சிக்கனமாகவும் பயன்படுத்தப் பழக வேண்டும்.வீண் விரயம் செய்யக் கூடாது.சிலர் ''தமக்கு ஒசியில் கிடைக்கிறது தானே! எல்லோருக்கும் பொதுவானது தானே'' என்று தலை கால் தெரியாமல் அவற்றை வீண் விரயம் செய்வார்கள்.

சிலருக்கு பொதுச்சொத்துக்களை அழிப்பதில் அலாதிப்பரியம்.இன்னும் சிலர் 'எனக்கு ஒன்று தானே கிடைத்திருக்கிறது.இன்னும் ஒன்று வேண்டும்' என்று சண்டை பிடிப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். நமக்குச் சில வேளைகளில் தேவைக்கதிகமாக பொருட்கள் கிடைத்தால் அவற்றைச் சேமிப்பது. இல்லாதவர்களுக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கப் பழக வேண்டும். தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற எண்ணம் ஒரு போதும் இருக்கக் கூடாது. பிறரும் அனுபவிக்க வேண்டும். பயன் பெற வேண்டும் என்று நினைக்க வேண்டும். இயற்கையாகக் கிடைக்கின்றது என்பதற்காக வாரிச் சுருட்டிக் கொள்ள நினைகக் கூடாது. பிறருக்கும் பயன்பட வேண்டும் என்பதற்காக அவற்றை நீடித்து நிலை பெறும் வகையில் பயன்படுத்த வேண்டும்.

இயற்கையில் உள்ள பொருள்களை அளவுக்கு மீறி நுகரும் போது எதிர்கால சந்ததியினரையும் கருத்திற் கொள்ள வேண்டும். இயற்கை வளங்கள் எல்லோருக்கும் பொதுவானது. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 140

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| ■ | 9 | | | 10 | | ■ | |
| 11 | | ■ | 12 | | | | ■ |
| 13 | | 14 | | ■ | | ■ | 15 |
| | ■ | | ■ | 16 | | 17 | |
| 18 | | | 19 | | ■ | 20 | |
| | ■ | 21 | | ■ | 22 | | |

அனுப்புபவர் பெயர்:.......................................

விலாசம்:.......................................

.......................................

கையொப்பம்:.......................................

### இடமிருந்து வலம்

1.வெளிச்சம்/ ஒளிமயம்.
5.இது இரண்டொழிய வேறில்லை.
7. வரவேற்பதற்கு வைப்பது, ஆலயத்திலும் வைப்பர்.
8. கூந்தல்/ முடி
9. இப்போது வாழ்வுக்கு அத்தியவசிமானது.
11. கழித்தல் குறி.
12. அறுக்கும் கருவி.
13. கோல்/நடப்பட்ட மரம்.
16. தலைவன்.
18. இனிப்புப் பொருள்.
20. சேர்ந்தது அல்ல.
21. யாழ்ப்பாணம் இந்த வடிவத்தை உடைய நாடு என்பர்.
22. ஆள்களை வைத்து சுமந்து செல்வது இதில்

### மேலிருந்து கீழ்

1. பிசகு பண்ணல்
2. அழகானது/யௌவனம்
3. ஒரு மூலப்பொருள்.
4. மனைவி.
5. இறப்பு.
6. அரைக்கும் இயந்திரம்.
8. தம்பதிகளின் பெற்றோருக்கு இடையிலான உறவு முறை.
10. மேல்நாட்டுக் குடிவகை.
11. பழக்க தோசம்
14. ஒளி/ மறை.
15. இப்பெண்.
16. பாதி.
17.இதற்குத்தான் அரசியல்வாதிகள் போட்டியிடுவர்
19. ஆட்டில் ஆண்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 138 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)அதிகம்.(4)பசுமை.(6)மண்டை. (7) நன்மை. (8) சிவிகை. (10) தாவி. (12)வகு. (14)வங்கி. (15)திருமுகம். (17) கிரி. (18) விரல்.(20) பொச்சு. (21) அவதி. (23) திசை. (24)தன்னிறைவு.

### மேலிருந்து கீழ்

(1)அமராவதி. (2)திண். (3) கடைசி. (4) பண். (5)சுமைதாங்கி. (7) நகை. (9)விக்கல்.(11)சிகிரியா.(13) குருவிச்சை.(16)முரசு.(19)கவனி. (20)பொதி. (21)அன். (22)திறை.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 138 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** ச.ஜெயாந்தினி, சந்தை வீதி, உடுப்பிட்டி.

**2 ஆம் பரிசு** கை.கணேசசர்மா, வாரிவனநாத சிவன் கோயில், சாவகச்சேரி.

**3 ஆம் பரிசு** கௌஷா இராமச்சந்திரா, லவ் லேன், உடுவில், சுன்னாகம்.

**4 ஆம் பரிசு** மு.க.பாத்திமா றிஸ்லியா, பலாலி ஆசிரியர் கலாசாலை, திருநெல்வேலி.

**5 ஆம் பரிசு** திருமதி யூ.குகதாஸ், அரசினர் வைத்தியசாலை, வல்வெட்டித்துறை.

### பாராட்டுப் பெறுவோர்

(1) இ.ரதுர்ப்பிரியா, இல.165, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(2) இ.திரிகா, ஏழாலை மேற்கு, ஏழாலை

(3) வி.யசோதரன், R.D.S. ஒழுங்கை, மல்லாகம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப் பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 140**

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*

*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 08.12.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.*

7. சொற்சிலம்பம் போட்டி இல.140 இல் வெற்றி பெறுவோர்களது விபரம் 12.12.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

# பெத்தாச்சி...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் சுத்திச் சுழல சூரியனும் மணலை விட்டு மறையதத் தொடங்கிவிட்டான்.

''மோன கெதியா. அந்தா. தூரத்தில தெரியிற பெரிய சவுக்கப் பாத்து நட - குண்டன்ரி வீடா இருக்கோணும். அங்க போனாச் சரி...''

''ம் பராக்கு பாக்காமல் நட''

அதட்டியபடி வேகமா நடந்தாள் பெத்தாச்சி.

குடுகுடுவெண்டு இப்படி ஓடிக்கொண்டிருக்கிற பெத்தாச்சியாவது வீட்டில நிக்கிறதாவது.

படலையைத் திறந்துகொண்டு வீட்டுக்குள்ள போக கண்ணில பட்டுது, சரிஞ்சிருந்த பூவரசு. எனக்குள்ள ஏதோ அறுபட்டுது.

பெருமூச்ச இழுத்து விட்டபடி பூவரசைப் பாத்தன்.

ஆரோ வெட்டித்தான் விழுத்தியிருக்கிறாங்கள்

அது பெத்தாச்சியின்ர வேலியில இருந்த மொக்குப் பூவரசு.

ஆச்சி அடிக்கடி எனக்கு பூவரசக் காட்டி சொல்லிக்கொண்டிருப்பா.

''டேய். மோன. இந்தக்குத்திதான் என்ரநெஞ்ச வேக வைக்கோணும். அதுக்காகத்தான் இத விட்டு வச்சிருக்கிறன்''

கிளைகள் அறுபட்டு மணலில் கிடந்த பூவரசைப் பாத்தன் கண்களில கண்ணீர் கீறியது.

யாரோ எனது கையப் பிடிச்சு பக்கத்திலிருந்த நிழலுக்குள்ள இழுத்திச்சினம்.

என்ர கண்கள் ஒருத்தரயும் அறிஞ்சு கொள்ளேல்ல.

காற்று மட்டும் சூடான மூச்சுக்களைக் காவி எனக்கு ஏதோ நினைப்பூட்டவெண்டு என்னில மோதிச் சுழண்டு திரிஞ்சுது.

நான் பூவரசையே வெறிச்சுப் பார்த்துக்கொண்டு நிண்டன்.

இது பெத்தாச்சியின்ர பூவரசு

ஒருக்கா எங்கட சுடலைக்கு மயிலம்மான் என்னைக் கூட்டிக் கொண்டு போய்க்காட்டினவர்,

''டேய் இஞ்ச பார். இது நேசத்த எரிச்ச இடம்...''

...அதுதான் கொப்புவ எரிச்ச இடம்...

அதில காடாத்துக்காக அணைச்ச, பூவரசங் குத்திகள் நூந்திருந்தது.

கொஞ்சநேரம் அதைத் தொட்டபடியே குந்தியிருந்தன்.

இடைக்கிடை லீவில ஊருக்குள்ள வரேக்குள்ள உடும்பு வேட்டைக்கும் பன்றி வேட்டைக்குமெண்டு இழுபட்டிருக்கிறன். அப்பவும் சுடலையும் பூவரசம்குத்திகளும் கண்ணில படும். பாத்துக்கொண்டே ஓடுவன். கண்கள் நனைஞ்சுகொண்டே கடக்க, மனமும் அதில தோஞ்சு சிலிர்க்கும்.

பத்து வருசமா என்னால எங்கட சுடலையை பார்க்க முடியேல்ல. ஊருக்கு வாற நேரங்களிலெல்லாம் நீளமான முள்ளுக்கம்பி வேலிய மட்டும் கொஞ்சநேரம் பாத்துத் திரும்பியிருக்கிறன்.

திரும்பேக்குள்ள புதுசா இடம்பிடிச்சுக் காத்திருக்கிற புதுச்சுடலையையும் கடந்துதான் வருவன். ஊருக்கு நல்லாக் கிட்ட இருக்கிற சுடலை, மனசில எந்த மூலையையும் அருட்டினதில்ல.

கண்ணீர் விழுந்து கைகள் குளிர்ந்திச்சுது. நிமிந்து பாத்தன், பக்கத்தில அம்மா இருக்கிறா. நான் எழும்பி படலையைக் கடந்து மெதுவா மணல் பக்கமா நடந்தன்.

''நேரம் போகுது நீ எங்கயடா போறாய்?''

அம்மா கேக்குறது, தூரமாக வந்தது.

எங்கட சுடலையைத் தேடினன்.

அப்புவின்ர, நேசத்தின்ர ஊமையப்புவின்ர, பெரியண்ணாவின்ர... எல்லாற்றையும் சுடலை இதுதான்.

கண்டுபிடிக்கேலாமல் கிடக்கு.

ம்.. இந்த ஆலமரத்த மட்டும் கண்டுபிடிக்ககூடியதாக் கிடக்கு.

இதுதான் ஆசையையாவின்ர அண்ணன் படுத்திருந்த ஆலடி.

ஆசையையாவின்ர அண்ணன் மூளை சுகமில்லாமல் மணலுக்கு வந்து ஒரு பத்தையச் சுத்து சுத்தெண்டு சுத்தி, பிறகு இந்த ஆலடியிலதான் படுத்திருந்தவராம்.

வல்லிபுர சுவாமியை இந்த ஆலடியில வைச்சுத்தான் பராமரிச்சவை...

எனக்குத் தெரியும்.

ஆலமரம் மிகப்பெரிசாய் பெரிய இடத்தை பிடிச்சு வைச்சிருக்குது.

நிலத்தில குப்பையளும் தடியளும்

வல்லிபுர சுவாமி இப்பவும் இருக்கிறாரோ?

பராமரிக்க இங்க ஒருத்தரும் இல்ல.

அண்ணன் மாதிரி ஆலமரத்த நான் சுத்தத் தொடங்கினன். கொஞ்ச நேரத்துல ஏலாமப் போட்டுது.

நாக்கு வறளத் தொடங்கிட்டுது.. உடம்பெல்லாம் தொய்ஞ்ச மாதிரி..

நிழலில சுருண்டு படுத்தன்.

பெத்தாச்சி தன்னை எங்கட சுடலையிலதான் எரிக்கோணும் எண்டு வாய்க்குவாய் சொல்லுறவ..

பெத்தாச்சிய நினைக்க நினைக்க மனசு கீறுப்பட்டு, வலிதான் பெருகுது.

...அங்க... பெத்தாச்சி... பொக்கைவாய்ச் சிரிப்போட அப்புவின்ர வண்டில்ல ஏறியிருக்குறா...

என்னப்பார்த்து கை காட்டுறாவோ...!?

எனக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்துது.

மணலில முகம் புதைய அழுதுகொண்டேயிருந்தன்.

## மன்னித்தல் என்னும் உயர்ந்த பண்பு

மற்றவர்கள் விடுகின்ற தவறுகளையும், குற்றங்குறைகளையும் மன்னிக்கின்ற மனப்பாங்கு எமக்கு எப்போதும் இருத்தல் வேண்டும். பிறரை மன்னிக்கின்ற பண்பினைப் பெற்றவன் மிகுந்த மன ஆற்றலைப் பெற்றவனாகின்றான். மற்றவர்கள் எரிச்சலை ஏற்படுத்துகின்ற வேளையிலும் கோபப்படாமல் அமைதியான மனவலுவுடன் இருப்பது எமது மன ஆற்றலைச் சிறப்பாக வெளிப்படுத்துகின்றது.

பிறரின் செயற்பாடுகள் எம்மைப் பாதித்தாலும் அல்லது பாதகம் செய்தாலும் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராகிவிட்டால் அதன் வெளிப்பாடுதான் மன்னித்தல் என்னும் பண்பாகும். மன்னித்தல் என்பது மிகச் சிறந்த பண்பு என்றும் அதனை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் நாம் கற்ற எல்லா நூல்களுமே வலியுறுத்தி நிற்கின்றன.

**- சில்லையூர் தனம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரங்களின் பயன்கள்

மண்ணிலே வேர் ஊன்றி மாநிலத்தில் நிழல் பரப்பி செழித்து வளர்ந்து நிற்பன மரங்கள் ஆகும். தளபாடம், விறகு என்பவற்றைத் தருகின்றது மரங்கள். தென்னை மரத்தை வளர்த்திட்டால் தேங்காய், இளநீர், கிடுகு என்பவற்றைப் பெறலாம். மா மரத்தை வளர்த்திட்டால் மகிழ்ந்தே கனிகள் உண்டிடலாம். பனை மரத்தை வளர்த்திட்டால் பயன்கள் பல பெற்றிடலாம். பலா மரத்தை வளர்த்திட்டால் பகிர்ந்து உண்டு மகிழ்ந்திடலாம். வாழை மரத்தை வளர்த்திட்டால் வளமாய் உடல் நலம் பெற்றிடலாம். பப்பாசி மரத்தை வளர்த்திட்டால் பளபளா மேனி பெற்றிடலாம். பல மரங்கள் வளர்த்திட்டால் பல்லாண்டு நலமாய் வாழ்ந்திடலாம். வீட்டில் மரங்கள் வளர்த்திட்டால் விளங்கும் நாடு செழிப்பாகும். மரங்களின் அசைவு மூலம் தென்றலை உணர முடியும். மரங்களின் இலைகள் பச்சை நிறத்தில் இருக்கும். வயது முதிர்ந்த இலைகள் மஞ்சள் நிறத்தில் காணப்படும். மரங்கள் வளர்ப்பதால் சூழலுக்கு குளிர்ச்சி ஏற்படும். ஆதிகால மனிதன் மரப்பொந்தில் வாழ்ந்தான். ஆதிகால மனிதன் மரப்பட்டைகள், இலை, குழைகள் என்பவற்றை உடையாக அணிந்திருந்தான்.

நேசராஜ்குமார் வித்யாசாகர், தரம் 6B,
கிளி/கிளிநொச்சி ம.வி.

## காசினியில் சிறந்திடு

கல்வியைப் நீ அனுபவி தினம்
காலை வேளை கற்றிடு
சிரமமாக இறைவனைக்
கீதம் பாடி வணங்கிடு
குணத்தில் சிறந்த நண்பனோடு
கபடி விளையாடிடு
கெட்டிக்காரன் என்று சொல்லும்
கேடயத்தை வாங்கிடு
கைத்தொழிலை கற்றிடு
கொடுத்துக் கொடுத்து சிறந்திடு
கோபத்தை நீ மறந்திடு
கௌரவமாய் வாழ்ந்து நீ
காசினியில் சிறந்திடு

க.பகீரதன், தரம்-9D, யா/மத்திய கல்லூரி.

## பொது அறிவு

★ உலகில் முதல் தமிழ்ப்புத்தகம் யாது?
வணக்கம்

★ உலகின் தட்டையான சமதளமான நாடு யாது?
மாலைதீவு

★ உலகை எளிதில் இணைக்க உதவிய முதல் கண்டுபிடிப்பு யாது?
தொலைபேசி

★ உலக மக்கள் அமைதியாக வாழ மிகச்சிறந்த நாடு எது?
நோர்வே

★ உலக அஞ்சல் தினத்தை ஒட்டி ஒக்ரோபர் 3 அஞ்சல் திணைக்களத்தால் நடத்தப்பட்ட கட்டுரையின் தலைப்பு யாது?
கடிதம் வந்தது

★ உலகின் முதல் சிறுகதை ஆசிரியர் யார்?
வாஷிங்ரன் இர்வில்

சி.சிவலோஜி தரம் -7C
அச்சுவேலி மத்திய கல்லூரி.

## மரத்தில் பூக்காத பூக்கள்

★ மனிதன் புகழும் பூ - சிறப்பு
★ மலர்ச்சியில் வரும் பூ - சிரிப்பு
★ காலையில் விழும் பூ - விழிப்பு
★ கோபத்தில் வரும் பூ - வெறுப்பு
★ பாதங்களை காக்கும் பூ - செருப்பு
★ மனிதன் பேண வேண்டிய பூ - மதிப்பு
★ மானம் காக்கும் பூ - உடுப்பு
★ பயத்தினால் வரும் பூ - படபடப்பு
★ வயலில் உள்ள பூ - வரம்பு
★ படகோட்டியிடம் உள்ள பூ - துடுப்பு

ப.ஸிந்துஜா, தரம் -9,
யா/மாதகல் சென்.யோசப் மகா வித்தியாலயம்.







சதானந்தன் நிந்துஜன், தரம் -7 A,
யா/அச்செழு சைவப்பிரகாச
வித்தியாலயம்.



அர்த்தநாரீஸ்வரன் சோபிகன், தரம் -8 C,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



வ.ரெஜியன், தரம் -3,
யா/கற்கோவளம் மெ.மி.த.க.



தி.கோபிராஜா,
கலைகாட்டி.



உ.ஷர்மிலாதேவி, தரம் -6,
யா/ உடுப்பிட்டி மகளிர்
கல்லூரி.




### உங்களுக்கும் பரிசில்கள்... விடை தெரியுமா?84

1. ஆங்சான் சூகிக்கு அமைதிக்கான நோபல் பரிசு எவ்வாண்டு வழங்கப்பட்டது?
2. சுமார் 1000 ஆண்டுகள் பழைமை வாய்ந்த மத்திய லண்டனில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தின் பெயர் என்ன?
3. யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள பொறியியற் பீடத்தின் இணைப்பாளர் யார்?
4. 100m ஓட்டப்போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற ஜப்பான் வீராங்கனை யார்?
5. 'நாவலர்' எனும் பட்டம் ஆறுமுகநாவலருக்கு எங்கே வழங்கப்பட்டது.

### உங்களுக்குத் தெரியுமா? 82 இற்கான விடைகள்

1. ஓபராவின்பிரே
2. இந்தோனேசியா
3. 11.11.2010
4. பாலைவனக் கப்பல்
5. பொன் கழுகு

### விடை தெரியுமா?

தெரிந்தால் 03.12.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### பரிசுபெறுவோர் விபரம்

01. ம.மதுமிதா, தரம் - 5, யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
02. க.கபிலன், தரம் - 7, உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்.
03. ம.சங்கீதா, தரம் - 5, சங்குவேலி அ.த.க.பாடசாலை.
04. ம.ஜனுஷன், தரம் - 7, யாழ்.பரியோவான் கல்லூரி.
05. செ.இலக்கியா, தரம் - 8, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.

## நீங்களும் எழுதலாம்

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................
..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி முருகேசு பராசக்தி



அரியாலை மேற்கு, இல.103, கனகரத்தி னம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பி டமாகவும் கொண்ட திருமதி முருகேசு பராசக்தி நேற்று (27.11.2010) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப் பிள்ளை- தங்கம்மா தம்பதியினரின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற வல்லிபுரம்- நாகமுத்து தம்பதியினரின் அன்பு மரு மகளும் முருகேசு (இளைப்பாறிய மின் சாரசபை உத்தியோகஸ்தர்) அவர்களின் பாசமிகு மனைவியும் சாந்தமலர், சுஜிதமலர் (ஆசிரியை, நயன்மார்கட்டு மகேஸ் வரி வித்தியாலயம்), சோபனா ஆகியோரின் அன்புத் தாயும், துரைசிங்கம் அன்புச் சகோதரியும் குமரேஸ்வரன், சுஜிதரன் (சமுர்த்தி உத்தியோகஸ்தர் - சண்டிலிப்பாய் பிரதேச செய லகம்) ஆகியோரின் அன்பு மாமியும் சுல்க்சிகனின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (28.11.2010) முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல 103, கனகரத்தினம் வீதி,
அரியாலை மேற்கு

தகவல்:
(106586) வை.முருகேசு (கணவர்).

**பணிப்பெண் தேவை**

சிறிய குடும்பமொன்றுக்கு வீட்டுப்பணிப்பெண் தேவை.
தொடர்பு: 0718474312.
(106583)

**தேங்காய் விற்பனை**

முல்லைத்தீவிலிருந்து கொண்டு வரப்பட்ட தேங்காய் மொத்த மாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யப்படும்.
வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
தொடர்பு: மல்லி பாம் சென்ரர்
61, இராமநாதன் வீதி, கலட்டி
தொ.பே.: 0773001763.
(106573)

**MULTIMEDIA COURSES**

100% செய்முறை பயிற்சி
எண்ணங்களின் பிரதிபலிப்பு
Diploma in Digital Video Production
(Audio & Video Editing)
Advanced Diploma in Digital Pre-Press
தற்பொழுது பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பம்
ASIAN - CSC COMPUTER EDUCATION
26,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222-5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P:021-2262399
230,1ம் மாடி,கண்டி வீதி,சாவகச்சேரி.T.P:021-2270267

## பாம்பினால் கடியுண்ட இளைஞன்

தென்மராட்சி, நவ.28

காணி துப்பரவாக்கும் பணியில் ஈடுபட்ட இளைஞர் பாம்பி னால் கடியுண்டார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை பளை தர்மக்கேணி யில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கண்ணதாசன் (வயது 27) என்பவர் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவ கச்சேரி ஆதார வைத்திசாலையில் அனும்திக்கப்பட்டுள்ளார். (204-207)

## விபத்தில் சிக்கி இருவர் காயம்

தென்மராட்சி, நவ.28

வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி இருவர் காயமடைந்துள்ளனர்.

கைதடிப் பகுதியில் வானும் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் ஆர்.ரமணி (வயது- 26) என்பவரும், கச்சாயில் வானும் சைக்கிளும் மோதிக்கொண்டதில் ஜென்சன் (வயது - 21) என்பவரும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (204-207)

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை பாலச்சந்திரன்



பலாலி கிழக்கு, வயாவிளானைப் பிறப்பிடமா கவும் சூசையப்பர் கோயிலடி, பத்தமேனி, அச்சு வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பாலச்சந்திரன் (26.11.2010) வெள்ளிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத் துரை- சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ஸ்ரீரங்கநாதன் (இத்தாலி), செல்வநாயகி, மனோகரன் (இத்தாலி), வனிதா (கனடா), உமா (ஆசிரியர், செட்டி குளம் மகா வித்தியாலம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கரு ணாகரன், ரவீந்திரன், நந்தகுமாரி, றோஜினி, அருட்குமரன் ஆகி யோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2010) ஞாயிற் றுக்கிழமை பி.ப 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தீத்தாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சூசையப்பர் கோயிலடி,
பத்தமேனி,அச்சுவேலி

தகவல்:
(106585) குடும்பத்தினர்.

**EUROPEAN Film Festival Sri Lanka**

**2010**

**1-5 December (Jaffna)**
**1.00 p.m. and 3.00 p.m.**

The Centre for Performing Arts
Kalathuthu Theatre Complex,
286, Main Street, Jaffna

**ENTRANCE FREE**

For more information visit
www.europeanfilmfestsrilanka.com
or contact British Council on 011-4521521 (Colombo)
or 081-2222410 (Kandy)

Full film schedule is available at the venue and online

Presented by:
European Union
.be
NORWEGIAN EMBASSY
GOETHE-INSTITUT
BRITISH COUNCIL
Web Media Partner
pyxle
Jaffna Venue Partner
NFC

**UNIVERSITY OF EAST LONDON** UEL

**Top Modern University in London**

*Special Merit Scholarships For Sri Lankan Students*

- BEng Civil Engineering
- BSc Construction Management
- BEng Electrical & Electronic Engineering
- BSc Software Engineering
- BSc Computer Networks
- BSc Computing
- BSc Multimedia
- Bsc Pharmacology
- BSc Sports Coaching
- BSc Sport and Exercise Science
- BA Business Management
- BA Accounting & Finance
- BA Finance, Money & Banking
- BA International Tourism Management
- BA Events Management
- BA Sociology
- BA Community Studies
- BA English Literature
- BA Special Education Needs
- BA / MA Early Childhood Studies
- MA TESOL (Teaching English for Speakers of Other Languages)
- MA English Language Teaching
- LLM General
- LLB
- MSc Civil Engineering
- MSc Information Security
- Msc Information Technology
- MSc Mobile Communications
- MSc Computer Systems Engineering
- BSc/MSc Biomedical Sciences
- MSc Biotechnology
- BSc/MSc Toxicology
- BSc/MSc Public Health
- BSc/MSc Psychology
- BSc/MSc Health Promotion
- BSc Health Services Management
- BSc Surveying and Mapping Sciences
- Msc Molecular & Biomedical Immunology
- MSc Bioinformatics
- MSc Molecular Medical Microbiology
- MBA Masters in Business Administration
- MSc International Marketing
- MSc Project Management
- MSc Financial Management
- Msc International Accounting & Finance
- BA/MA International Human Resource Mgt
- BA Music Industry Management

Feb/Sept 2011 Intake

*Over 220 Undergraduate and Postgraduate programmes available visit www.uel.ac.uk*

LOHOS TOPS 400 STUDENTS

*Over the last 6 years Mr Loho has successfully counselled, guided and placed more than 400 students to U.K. Universities*

- Advanced entry for students with CIM, CIMA, ABE, NCC, BCS, HND, ACCA and other recognised qualifications
- G.C.E. A/L students can apply pending results
- Students having good O/L's / other qualifications / related work Experience may be considered for entry
- Students who are unable to complete their university studies may also apply

Meet Mr. LOHO LOHOS GROUP
Please call Sri Lanka Representative's Office for more details
HELPLINE CALL LOHO 0777 917929
Lucky Plaza Building, 4 / 7, 4th Floor,
St. Anthony's Mawatha, Kollupitiya. Tel.: 2577768 / 0777 917929
E-mail : lohosgroup@sltnet.lk / lohosgroup@yahoo.com
www.lohosgroup.com

**An UEL Academic will visit Lohos Group Office on 7th December and SPOT OFFERS will be given to suitably qualified students**

தமிழில் தொடர்புகளுக்கு : Dr. இந்திராணி - Tel: 0773-498660

**FREE ADVICE + FREE VISA GUIDANCE**
**All our services are FREE**
BRITISH COUNCIL APPROVED IELTS TEST CENTRE
DON'T MISS THIS OPPORTUNITY REGISTER NOW

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைநகர் நாவலர் இன்றிருந்தால்!

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணம் நல்லூரில் அவதரித்தார். சைவத்தையும் , தமிழையும் இருகண்களாகக் கருதப்போற்றி வளர்த்து வந்தார். இவரது பாலபாடம், சைவவினாவிடை, இலக்கணச்சுருக்கம், மற்றும் உரைநடை நூல்கள் இன்றும் பயன்பாட்டில் உள்ளன.

ஆறுமுகநாவலரின் எழுத்தாக்கங்கள் பல அறிஞர்களாலும் மதிக்கப்பட்டு வந்துள்ளது. இவ் வகையில் நாவலரினால் எழுதப்பெற்ற கண்டன அறிக்கைகள் சர்ச்சைக்குரியனவாகக் காணப்பட்டன. பெற்றோரை மதிக்காத செயல் நடக்கும் போது அதனைத் தட்டிக் கேட்க வேண்டிய பொறுப்பு மைந்தனுக்கு உண்டல்லவா ? இந்த அடிப்படையிலேயே நாவலரின் கண்டன அறிக்கைகள் எழுந்தன. மனதில் எழுந்த கருத்தினை யாருக்கும் அஞ்சாது சமுதாய நோக்குடன் எழுதினார்.

நாவலர் இன்றிருந்தால் எவற்றுக்கு எதிராக கண்டன அறிக்கை எழுதியிருப்பார் என்ற சிந்தனையில் எழுந்தது இந்தக் கட்டுரையாகும்.


ஆகமம் சாராத ஆலயங்களில் நடைபெறும் கிரியைமுறைகளையும் நிர்வாக முறையையும் அன்று கண்டனம் செய்தவர் இன்றிருந்தால் ஆலயம் இடாம்பீகத்தில் திகழ்வதையும் பூசைமுறைகளையும் பணம் தேடும் நோக்கில் நடைபெறும் கிரியைகளையும் விழாக்களையும் மட்டுமல்ல தமிழ் மொழியில் அமைந்த இறைப்பாக்கள் ஒதுக்கப்பட்டு வருவதையும் கண்டனத்திற்கு மேல்கண்டனம் செய்து வருவார். இன்று நடைபெறும் இத்தவறுகளைத் திருத்த முயலாது அதற்கு ஒத்துப்போகும் அன்பர்களும் கண்டனத்துக்கு உள்ளாகியிருப்பார்கள். நமது மொழிக்கும், சமயத்திற்கும் உரிய பண்பாடுகளை எக் காரணத்தினாலும் அழிந்து போக அனுமதிக்கக்கூடாது. இவற்றைப் பாதுகாத்து அடுத்த சந்ததிக்கு கொடுக்கவேண்டிய பாரிய பொறுப்பு சமூக ஆர்வலர்களுக்குரியதாகும்.

ஆறுமுகநாவலர் திண்ணைப்பள்ளிகள் அமைத்து பாடம் நடத்தி வந்தார் என்பதை அறிவோம். ஆங்கில மோகம் நம் தமிழ் மொழியையும், மாற்றுமதம் சைவத்தையும்கபளீகரம் செய்துவிடக்கூடாது என்பது அவரது இம்முயற்சிக்கான நோக்கமாகும். ஆறுமுகநாவலரினால் யாழ்ப்பாணத்திலும், சிதம்பரத்திலும் பாடசாலைகள் அமைக்கப்பட்டு தாய்மொழி, சமய பாடங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு கற்பிக்கப்பட்டு வந்தன. இன்று நமது பாடசாலைகள் பெரிய கல்லூரிகளில் தமிழ், சமய பாடங்களின் நிலை நாவலரின் கண்டனத்துக்கு உட்பட்டிருக்கும் தகுதியற்ற ஆசிரியருக்குரிய ஒழுக்கச் செயற்பாடுகளை நிராகரித்து நடக்கும் ஆசிரியர்கள் (இவர்கள் ஆசிரியர்கள் தானா என்பது வேறு விடயம்) கடும் கண்டனத்துக்கு உட்பட்டிருப்பார்கள்.

யாழ்ப்பாணக் கல்வியை மட்டுமல்ல, மாணவர்களின் ஒழுக்கச் செயற்பாட்டிற்கும் பாதுகாவலர்களான ஆசிரியர்கள் தமது கடமையை சரிவரச் செய்வது அவசியமாகும். பாடசாலையில் கற்பிக்காது விடுதல், மாணவர்களுக்கு தவறான வழிகாட்டித்திகழ்தல், தனியார்துறையை நோக்கி மாணவர்களை இழுத்துச் செல்லுதல், பாடசாலை நிகழ்வுகளுக்கு ஆதரவு வழங்காமை, தமது நலம் ஒன்றையே நோக்கமாகக் கொண்டு நடத்தல்.... இப்படியாக இதற்கு மேலான பல தவறுகள் சில ஆசிரியர்கள் செய்து வருகின்றார்கள். நாவலர் இன்றிருந்தால் புனிதமான ஆசிரியத் தொழிலுக்கு களங்கம் ஏற்படுத்தும் இத்தகையவர்களுக்கு புள்ளி விபரங்களுடன் கண்டன அறிக்கை மட்டுமல்ல அறம்பாடியிருப்பார் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை.

புனிதமான ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் அனைவரும் இளம் சமூதாயத்தின் நலன் கருதிச் செயற்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்திவரும் சந்ததியை வளமுடன் வாழவைக்கமுயலவேண்டும். இதுவே நாவலரின் சேவையாகும்.

அரச நிர்வாகம் சரியாக நடைபெறுதல் அவசியமாகும். நாவலர் அரசபணியில் சிறப்பாக சேவையாற்றினார். ஏழை மக்களின் துன்பம் நீக்குவதே அவரது முதற்பணியாக இருந்து வந்துள்ளது. இன்றுள்ள நிலை... அரசபணி என்பது ஊதியத்துக்காகவும், பொருளீட்டுவதற்காகவும் என்றாகி விட்டது. அரசபணி மக்களுக்கு சேவையாற்றக் கிடைத்த வாய்ப்பு என்பதை மறக்கக் கூடாது. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனும் அடிப்படையில் கண்டனம் கிளம்பியிருக்காதா? சிந்தியுங்கள்.



நாவலர் சமூகப்பணி என்பது தமிழையும், சைவத்தையும் வளர்ப்பதுடன் நின்று விடவில்லை. ஆறு முகநாவலர் சிறந்த அரசியல்வாதி தமிழ்மக்களுக்கு சேவையாற்றக்கூடிய அரசியல் தலைவர்களை இனங்கண்டு, அவர்களைத் தலைவர்களாக்கியதில் நாவலருக்கு கணிசமான பங்குண்டு. சமயவாதிகள் அரசியலில் ஈடுபடலாமா? எனும் வினாவிற்கு விடை, ஆறுமுகநாவலர் தான் என்பதை மனதிற் கொள்ள வேண்டும். இன்று "தமிழ் அரசியல்" படும்பாட்டை நாவலர் கண்டிறிந்தால் என்னவாகியிருக்கும்? தலைமைக்கான குடும்பிச் சண்டையும், தீர்க்க தரிசனமற்ற அரசியல் நடவடிக்கைகளும், ஒற்றுமைப்பட்டு செயற்பட வேண்டிய இக்காலத்தில் ஒற்றுமையின்றிக் காணப்படுவதும் வேதனைகள் அல்லவா! தமிழினத்தை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் எனதந்தை சொன்ன மந்திரம் நினைவுக்கு வருகிறது. அரசியல்வாதிகளின் தவறானசெயல்களுக்குக்கண்டனம் தெரிவிக்க அஞ்ஞா நெஞ்சமுடைய ஆறமுகநாவலர் மீண்டும் பிறக்கவேண்டும்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# மண்ணில் விழுந்த விதையாய்....


இறப்பு மனித வாழ்வின் மறுக்க முடியாத ஒரு பகுதி. பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்வின் ஏதோ ஒரு கட்டத்தில் இறப்பை எதிர்கொள்கின்றான். ஆனால் அவன் இறப்பை எதிர் கொள்ள நேரும் விதமும் இறப்பிற்கு முன்பு அவன் வாழ்வைத் வாழ்ந்த வகையும் அவனது வாழ்வின் வீச்சைத் தீர்மானிக்கின்றன. ஒருவன் தனது வாழ்வை தனக்காக வாழ்தல் என்பதிலிருந்து பிறருக்காக வாழ்தல் என்பதை நோக்கி நகர்த்திச் செல்லும் பாங்கும் தனது வாழ்வின் முடிவாகிய மரணத்தை அவன் பிறருக்காக ஏற்றுக் கொள்ளும் அல்லது எதிர்கொள்ளும் தன்மையும் அவனது இவ்வுலக இருப்புக்கே புதிய பரிமாணம் ஒன்றை வழங்கி விடுகின்றது. அவனது இவ்வுலக வாழ்வை காலாதிகாலத்துக்கும் நினைவு கூரத்தக்க ஒன்றாக மாற்றிவிடுகின்றது.

மரணம் வாழும், மரணம் ஆழும் ஒரு மக்களினத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள். பயங்கரமான அடக்குமுறைகளை எதிர் கொண்டு ஒரு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து அதன் உச்சமாக பயங்கரமான போர் ஒன்றைச் சந்தித்து இழப்புக்களையே எம் சொத்தாக்கி மரணத்தையே எம் சொந்தமாக்கி சோகத்தையே எம் சுகமாக்கி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள் நாங்கள். அதனால் எம் நினைவுகளில் நிழலாடும் முகங்கள் ஏராளம். பயங்கரமான அந்தப் போரின் பின்னணியில் எமது உறவுகள் சந்தித்த மரணங்களின் வகைகளும் ஏராளம். எண்ணுந்தோறும் மனங்கள் விம்முகின்றன. இதயம் அழுகின்றது. சோகம் சுமந்த மக்களினமாக எமது வாழ்வு நகர்கிறது.

இத்தகைய பின்னணியில் கிறிஸ்தவ மக்களாகிய நாங்கள் கார்த்திகை மாதத்தில் நுழைந்துள்ளோம். கார்த்திகை மாதம் நாங்கள் இயல்பாகவே இறந்தவர்களை நினைக்கும் காலம். இறந்த எம் உறவுகளை நினைத்து அவர்கள் நித்திய வாழ்வு பெற செபிக்கும் காலம். எமது மண்ணில் பின்னணியில் இறந்த எமது இரத்த உறவுகளை மட்டுமல்ல எமது இன உறவுகளையும் நினைக்கவும் செபிக்கவும் இந்நாள்களில் விசேடவிதமாக நாம் அழைக்கப்படுகின்றோம். நாம் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டது போல தமது விருப்பமின்றியே தமது உயிரைக் கையளிக்க நேர்ந்தோரின் பரிதாப நிலை ஒரு புறம் இருக்க தமது வாழ்வையும் வாழ்வின் முடிவையுமே மற்றவர்களுக்காகக் கையளித்தவர்களை நாம் எண்ணிப் பார்க்கின்றோம். கிறிஸ்தவ நோக்கு நிலையிலிருந்து இத்தகைய மரணங்களோடு தனிப்பரிமாணங் கொண்டவை. இவை கிறிஸ்துவின் சிலுவை மரணத்தோடு நெருக்கமான தொடர்பு கொண்டவை.

இயேசு ஏன்படுகொலை செய்யப்பட்டார் என்ற வினாவை நாம் எழுப்புவோம் என்றால் அதற்கான விடை இயேசு தமது மக்களை தீமையின் பிடியிலிருந்து விடுவித்து அவர்களுக்கு புதுவாழ்வு வழங்க முயன்றதால் தான் என்பதாகவே அமையும். உண்மையில் இயேசு தமது மக்களை அன்பு செய்தார். அவர்கள் மகிழ்வாகவும் நிம்மதியாகவும் வாழ வேண்டும் என்று எதிர்பார்த்தார். அவர்களை அடிமைப்படுத்தியவர்களையும் ஒதுக்கிவைத்தவர்களையும் எதிர்த்தார். அவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டினார். அனைவரையும் மனமாற்றத்துக்கு அழைத்தார். ஆனால் அவர்களோ சினந்தனர். அவரைத் தொலைத்துவிட வழி தேடினர். ஈற்றில் ஒன்று கூடிச் சதி செய்து அவரைக் கொன்றே போட்டனர். மற்றவர்களுக்காக வாழ முன்வந்ததன் பரிசை அவருக்கு வழங்கினர். இயேசு முன்வைத்த இறையாட்சி என்னும் புதிய நெறி தமது சுயநல வாழ்வுக்கு பெருந்தலையிடியாய் அமையும் என்றுகருதியவர்கள் ஒன்று சேர்ந்து அவரைக் கொன்றுபோட்டனர். இயேசு யாரையும் வெறுக்கவில்லை, எவரையும் கொலை செய்யவில்லை. அனைவரும் மனம் மாற வேண்டும் என்றே அவர் விரும்பினார். இருப்பினும் அவர்கள் அவரைக் கொலை செய்தனர்.

தீமையினால் நன்மையை வென்று விடலாம் என்றே அவர்கள் கருதினர். ஆயினும் அது தவறு என்று இறைவன் வெளிப்படுத்தினார். தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தர்மம் மறுபடி வெல்லும் என்பது ஆன்றோர் வாக்கு இதற்கு இயேசு முன்னுதாரணமானார். இயேசுவின் உயிர்ப்பு உலக வரலாற்றில் புதிய அத்தியாயம் ஒன்றை ஆரம்பித்து வைத்தது. தன்னலம் மறுக்கும் வாழ்வும் வாழ்வின் முடிவும் ஒருபோதும் வீண் போகாது. அது மண்ணில் விழுந்த விதையாய் அறுபதும் முப்பதும் நூறுமாக மிகுந்த பலன் தரும் என்பதை அது உணர்த்தி நின்றது.



ஆகவே எமது மண்ணில் நடந்த நிகழ்வுகள் எம்மைச் சோரவைக்கும் போதெல்லாம் நாம் சிலுவையை நிமிர்ந்து பார்ப்போம். அது தரும் நம்பிக்கையின் பாடத்தைக் கற்றுத் தெளிவோம். பலியின் இரத்தம் என நாம் வார்த்த உயிர்கள் ஒரு போதும் வீண் போகாது என்பதை மனம் கொண்டு எம்மையே தேற்றிக் கொள்வோம். இயேசுவுக்கு பின் சிலுவை வெறுமனே துன்பத்தின் சின்னம் மட்டுமல்ல அது உயிர்ப்பின் சின்னமும் என்பதை எண்ணிப்பார்ப்போம். கல்லறைகள் கடப்பதற்குரியவை என்பதை கருத்திலெ டுப்போம். நான் என்னைக் கடக்கும் போது இந்த உலகைக் கடக்கிறேன். உலகைக் கடக்கும் போது உயிர்ப்பைக் காண்கின்றேன் என்கின்ற கிறிஸ்தவ நம்பிக்கையை இந்த நாள்களிலே ஆழப்படுத்திக் கொள்ளுவோம்.

தமது இன்னுயிரை முழு மனுக்குலத்துக்குமான ஈகம் செய்த எங்கள் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து மானுட வாழ்வினதும் மரணத்தினதும் உட்பொருளை விளக்கும் உன்னதமானவராக உயர்ந்து நிற்கின்றார். எமது மண்ணிலும் பலர் தமது இன்னுயிரை ஈகம் செய்து எமக்கு பிறரன்பு வாழ்வின் முன்னுதாரணமாக திகழ்கின்றார்கள். சுயகடப்பே உண்மைப் பாஸ்கா என்பதை அவர்கள் எல்லோரும் வாழ்ந்து காட்டி யிருக்கிறார்கள். ஆகவே இந்த நாகளிலே அவர்கள் அனைவரையும் நினைப்போம். அவர்களது வாழ்வையும் மரணத்தையும் இயேசுவின் வாழ்வோடும் மரணத்தோடும் சேர்த்து இறைவனிடம் ஒப்புக் கொடுப்போம். எமது மண்ணில் உண்மையான இறையாட்சி மலர நீதியும் அன்பும் மன்னிப்பும் ஒற்றுமையும் சமத்துவமும் சகோதரத்துவமும் ஆட்சி செய்ய இவர்கள் அனைவரதும் வாழ்வும் மரணமும் ஆகுதியாக வேண்டும் என வேண்டுவோம். நாங்கள் ஒவ்வொருவரும் இவர்களுடைய வாழ்வில் இருந்து கற்றுக் கொண்ட விடயங்களை எமது வாழ்விலும் நடை முறைப்படுத்துவதன் மூலம் நாங்களும் எமக்குரிய வழியில் இயேசுவின் சிலுவைப் பாதையில் பங்கு கொள்ளும் துணிவு பெற எங்கள் ஒவ்வொருவருக்கும் தூய ஆவியின் பலத்தைத் தரவேண்டும் என்றும் இறைவனிடம் வேண்டுவோம்.

எம்மை ஒறுத்து இன்றும் எமது மண்ணில் துன்பம் சுமக்கும்மக்களின் துயர் துடைக்கும் மனப்பாங்கு எம்மில் பெருகவும் அதன்மூலம் எமது பிறரன்பு வாழ்வுக்கான அடித் தளங்களை நாங்களும் இட்டுக் கொள்ளவும் முயல்லுவோம்.

*"மரணம் சுமந்த மனிதர்களை*
*மனதில் இருத்துவோம்*
*நினைவில் நிழலாடும் முகங்களை*
*நெஞ்சில் நிறுத்துவோம்*
*அவர்கள் செந்நீரையும்*
*எங்கள் கண்ணீரையும்*
*கல்வாரிப்பலியோடுகலந்து விடுவோம்"*

நித்திய சாந்தி அளித்தருளும் இறைவா! நீர் அவர் பரிசாய் இருந்தருளும்!!

**அருள்பணி.ம.வி.இ.இரவிச்சந்திரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலங்கை சின்மய மிஷன் யாழ்ப்பாணம்

வழங்கும்

# முருக வழிபாடு

(சிறப்பு ஆன்மீகச் சொற்பொழிவு)

நடத்துபவர்: சுவாமி இராமகிருஷ்ணானந்தா அவர்கள்
(இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார்)

இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
காலம்: 28.11.2010 ஞாயிற்றுக்கிழமை
மாலை 5 மணிக்கு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அனுமதி இலவசம்

இலங்கை சின்மயமிஷன், யாழ்ப்பாணம்.
36, கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
தொ.பே: 0777730708
(106575)

## கனினி வன்பொருள் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், நவ.28

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணினி வன்பொருள் பயிற்சி யாழ்ப்பாணப் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறிக்கு க.பொ.த (சா/த) வரை கற்றவர்கள் கலந்து கொள்ளலாம். விண்ணப்பதாரி 16 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தகுதி உடையவர்கள் தமது முழுப் பெயர், பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய சுயமாக எழுதிய விண்ணப்பத்தினை அடுத்த மாதம் 8ஆம் திகதிக்கு முன்னர் 'NAITA', இல.7, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் தெரிவித்துள்ளார். (201-311)

## சுன்னாகம் நகர்ப் பகுதியில் பிளாஸ்ரிக் கழிவுத் தொட்டிகள்

சுன்னாகம், நவ.28

சுன்னாகம் நகர்ப் பகுதியில் கழிவகற்றும் நடவடிக்கைகளுக்கென பிளாஸ்ரிக் கழிவுத் தொட்டிகளை வலி.தெற்கு பிரதேச சபை நிறுவியுள்ளது. மேலும் சுன்னாகம் நகர வர்த்தக நிலையங்களின் முன்பாக நிறுவப்பட்டுள்ள மேற்படி கழிவுத் தொட்டிகளில் வர்த்தகர்கள் கழிவுகளை இட வசதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கென இலக்கமிடப்பட்ட கழிவுத் தொட்டிகள் வர்த்தக நிலையங்கள் முன்பாக வைக்கப்பட்டுள்ளதுடன், தினமும் கழிவுகள் அகற்றப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (201-38)

## அதிபர் பதவி வெற்றிடம் விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ.28

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலைக்கு (வகை III பாடசாலை) அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3, இலங்கை ஆசிரியர் சேவை 1 வகுப்பு 2-Iஐச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய தங்கள் விண்ணப்பப் படிவங்களை உரிய முறையில் பூரணப்படுத்தி எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆராஜேந்திரன் கேட்டுள்ளார். (201-313)

## ஐயப்ப விரத மண்டல பூசை

யாழ்ப்பாணம், நவ.28

நயினாதீவு ஸ்ரீ மலையின் ஐயனார் ஆலயத்தின் ஐயப்ப விரதமண்டலபூசை, 18 படி திருவிளக்குப் பூசை ஆகியன கடந்த 17ஆம் திகதி ஆரம்பமாகின.

எதிர்வரும் டிசெம்பர் 27ஆம் திகதி வரை 41 நாள்கள் நடைபெறவுள்ளன.

இறுதிநாள்நிகழ்வாக காலை அஷ்டோத்திர சங்காபிஷேகம், 18 படி திருவிளக்குப்பூசை, [illegible] ஆகியன இடம்பெறும். (ற)

## அறிவித்தல்

### வலி.கிழக்கு பிரதேச சபை உப அலுவலகம், கோப்பாய்

**ஆதன பெயர் மாற்றம் வட்டாரம் 03 அரசடி ஒழுங்கை**
**ஆதன இல-55.55/1.55/2**

ஆதன இல-55.55/1.55/2 அரசடி ஒழுங்கை 03ஆம் வட்டாரத்தில் இலட்சுமியம்பாள் வைரமுத்து உ.கோ.A. தம்பு என்னும் பெயரிலுள்ள ஆதனத்திற்கு கந்தசாமி தேவகுமார், றொபின் மாலினி, ரவீந்திரன் மைதிலி, தெய்வன் லோகநாதன், யோகராசா வனிதாராணி, இளையவி தேவராசா, ஆறுமுகம் கபிரியேல்பிள்ளை, மகாலிங்கம் ஜீவரட்ணம், கந்தசாமி ஜெயசாந்தராஜா, வனதாசன் லூர்த்தம்மா, ஜெயசீலன் சுபிதா என்பவர்கள் குறித்த ஆதனம் தமக்கு உரிமையானது என வெளிப்படுத்தல் உறுதி சமர்ப்பித்து ஆதனவரிப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார்கள். இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் எவரேனும் இருப்பின் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக இவ்விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாள்களுக்குள் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து கந்தசாமி தேவகுமார், றொபின் மாலினி, ரவீந்திரன் மைதிலி, தெய்வன் லோகநாதன், யோகராசா வனிதாராணி, இளையவி தேவராசா, ஆறுமுகம் கபிரியேல்பிள்ளை, மகாலிங்கம் ஜீவரட்ணம், கந்தசாமி ஜெயசாந்தராஜா, வனதாசன் லூர்த்தம்மா, ஜெயசீலன் சுபிதா என்னும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

(சி/572592)
(த.நடராசா) செயலாளர்,
வலி.கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.

## கண்ணீர் அஞ்சலி



### செல்லத்துரை அன்னலிங்கம்

[இளைப்பாறிய காணிப்பதிவாளரும், யாழ். மேலதிக மாவட்டப் பதிவாளரும் முன்னாள் உடுவில் பிரிவு விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளரும்]

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்ினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையஇறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரேஷன் றோட், கோண்டாவில் மேற்கு.
திருமதி வரதலக்ஷ்மி சோமசூரியசிங்கம்
விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர்.

## மரண அறிவித்தல்



### செல்லத்துரை ஜெயவீரசிங்கம்


காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஜெயவீரசிங்கம் கடந்த 23.11.2010 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப.11 மணியளவில் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.48, ஜின்னா வீதி, யாழ்ப்பாணம்.
தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே: 0777072117

## நெஞ்சிருக்கும்வரை நீங்காத 03ஆம் ஆண்டு நினைவு நாள்



### குகபாலன் திலீபாகரன்

பிறப்பு 02.01.1981

மறைவு 01.12.2007

தங்கக் கோபுரமாய் இருந்து ஒளிர்ந்த எங்கள் குல விளக்கான அன்புச் செல்வன் கு.திலீபாகரனின் 03ஆம் ஆண்டு நினைவில் எங்கள் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

தம்மளை, அளவெட்டி மேற்கு, அளவெட்டி.
குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி



### Dr. கனகசபை நவரட்ணம்

பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எம்மையெல்லாம் உருவாக்கி
வாழ்வதற்கு வழிவகுத்த
ஐயாவே உங்களைப் பிரிந்து
ஆண்டு ஒன்று ஆனாலும்
என்றென்றும் உங்களது
ஆசியுடன் வாழ்ந்திடுவோம்
வையகத்தில்

பிரிந்து வாடும்: குடும்பத்தினர்
958/31, கே.கே.எஸ்.வீதி, தலையாளி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 300 7036

தோற்றம்: 20.12.1932
மறைவு : 08.12.2009 (106580)

## மரண அறிவித்தல்கள்

### இராமுப்பிள்ளை இராசரத்தினம்



அச்செழுவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை இராசரத்தினம் கடந்த (26.11.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம்- கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் கிரிஜா, பத்மராஜா பிறிந்தா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் மனோகரன், அனுஷா, கஜமுகன் ஆகியோரின் அன்பு மாமனும், ஸானுகா, ரசிகா, நிவிதா, சகானா, அபிஷானன், மபிஷனன், ஹரீஸ் (கனடா) ஆகியோரின் அன்பு பேரனும், கனகசபாரத்தினம், செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பேரின்பநாதன், ஏகாம்பரநாதன் (கனடா), தனலக்சுமி (கனடா), சிவநாதன் (ஜேர்மனி), ஜெயந்திமாலா, சசிகலா (கனடா), ஏகாம்பரதேவி (லண்டன்), திரவியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், துரைராஜா (கனடா), தங்கராஜா (கனடா), ஆனந்தராஜா, பத்மராணி (இந்தியா), பத்மலோஜினி (ஜேர்மனி), ரஜனி (கனடா) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரின் இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அச்செழு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புத்தூர் வீதி, அச்செழு, நீர்வேலி.
0779672074
(106568)
தகவல்: குடும்பத்தினர்.

### சரவணமுத்து தனஞ்செயன்



வேலணை இளைப்பாறிய தபாலதிபர் காலஞ்சென்ற சரவணமுத்து தம்பதியரின் இரண்டாவது மகனும் மேலைக்கரம்பனைச் சேர்ந்த காலஞ்சென்ற வே.நா. கந்தையா தம்பதியரின் மருமகனுமாகிய, பிரதிக் கல்விப்பணிப்பாளராக இருந்து இளைப்பாறியவரும் தற்போது கனடாவில் வாழ்ந்து வந்தவருமாகிய தனஞ்செயன் வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆசிரியை சிவசுந்தராவின் அன்புக் கணவரும், ஆதித்தன், மங்களா(கனடா), அனுஷா(துபாய்), கல்பனா(கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும், மாதுமை, நந்தகுமார், புனிதநாதன், நிமலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிரா, சாயிரா, ஹரி, மதுஷா, மிதுஷா, மயூரா, அருண் ஆகியோரின் அன்புப் பேரனும், இளைப்பாறிய தபாலதிபர் நல்லைநாதன், இளைப்பாறிய ஆசிரியர் சிவம், செந்தில்நாதன் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் திங்கட்கிழமை 29.11.2010 கனடாவில் நடைபெறும்.

தொடர்புகளுக்கு-T.P-0014164460508
முகவரி- 1908 1208 YORK MILLS ROAD, N.YORK,ONTARIO,CANADA
(106560)
தகவல்: க.ஸ்ரீபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆயுதம் ஏந்தாத எல்லாப் போராட்டங்களும் அகிம்சைப் போராட்டங்களாக இருக்க முடியாது

நாவற்குழியில் சிங்கள மக்களின் சட்டத்துக்குப் புறம்பான அத்துமீறிய குடியேற்றமானது ஒரு வன்முறையாகும். இவ்வன்முறையின் விளைவாக ஏற்பட்ட எதிர்வினையே தமிழ் மக்களின் அத்துமீறிய குடியேற்றம். நாவற்குழி குடியேற்றத்தின் மூலம் தமிழ், சிங்கள மக்களிடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. நல்லிணக்கத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக கூறிக்கொண்டு இத்தகைய சூழ்நிலையை ஏற்படுத்தலாமா? சிங்கள குடியேற்றத்தை மீளப்பெறலே பொறுப்புள்ள புத்திசாலித்தமான செயலாகும்.



**கிளிநொச்சியில் வன்முறை**

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபரின் இடமாற்றமும் இராணுவத்தின் அத்துமீறல் வன்முறைக்கான செயற்பாடாகவே நடந்துள்ளது. ஏற்கனவே கூறியது போன்று, நல்லிணக்க சமாதானத்தை எதிர்பார்ப்பவர்கள் இத்தகைய செயற்பாடுகளைத் தடுக்கவேண்டும். இல்லையேல் நாட்டின் அமைதி குலைந்துவிடும். வீணான இன அழிவுகள் மீண்டும் ஏற்படும். தற்போதைய சூழ்நிலையில் கிளிநொச்சி மக்கள் தமது தனிப்பட்ட வாழ்வை ஒழுங்குபடுத்தி வாழ்வாதாரத்தை மேம்படுத்த முயல்கின்றனர். இது உலகறிந்த நிலையாகும். எனினும் இப்போது அந்த மக்கள் மனங்கொதித்து போராட்டம் என்ற செயற்பாட்டில் ஈடுபட யார் அத்திபாரம் போட்டது? அரச காணிகள் பெருமளவு கிளிநொச்சியிலிருந்தும், மக்களின் குடியேற்றக் காணிகளிலிருந்து அவர்களை அப்புறப்படுத்தும் இராணுவத்தின் செயலானது நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது. அன்பின் வயப்பட்ட செயலே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும். தற்போதைய அரச இராணுவச் செயற்பாடுகள் இன மோதல்களைத் தொடக்கி வைக்கும் செயற்பாடாகவே காணப்படுகின்றன. அத்துடன் திருமுறிகண்டி கோயில் நிர்வாகத்தைக் கையளியாமை, கிளிநொச்சியிலுள்ள சிவதொண்டன் நிலைய காணியில் இராணுவ முகாம்



அமைந்துள்ளமையும் தவறான எண்ணக்கருவைக் கொண்டுள்ளதையே காட்டுகின்றன. இவை எல்லாம் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் செயல்களேயாகும். மீண்டும் ஒரு போர்ச் சூழல் தோற்றம் பெற இத்தகைய செயல்கள் தூண்டுகோலாக அமைந்துவிடல. திருமுறிகண்டியைக் கைப்பற்றி வைத்திருப்பதும், சிவதொண்டன் காணியில் இராணுவமுகாம் அமைந்திருப்பதும் விடுதலைப் புலிகள் செய்ததையே அரசும் இராணுவமும் செய்வதாகக் கருதலாம். இவை அதர்மச் செயல்கள். இத்தகைய செயல்களை தமிழர்களுக்காகப் போராடிய ஆயுதக் குழுக்களும் செய்ததாலேயே அவர்களுக்கும் அழிவுநிலை ஏற்பட்டது. இதே அதர்மச் செயல்களை அரசும், இராணுவமும் தொடருமாயின் அதே அழிவுகளுக்கு உட்படும். இது தவிர்க்க முடியாத கர்ம நியதிச் சக்கரத்தின் விளைவாக அமையும். இது கவலை அளிப்பதாக உள்ளது. எனவே கௌதம புத்தர் போதித்த பரஸ்பர அன்பை வெளிப்படுத்தும் செயல்பாடுகளில் ஈடுபடமுனையுமாறு அரசையும் இராணுவத்தையும் வேண்டிக்கொள்கின்றேன். நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலைக்கவேண்டும் என்பதே பிரார்த்தனையாகும். ஏற்கனவே குறிப்பிட்டபடி பௌத்த போதனையை பின்பற்றும் பண்பாளர்கள் தற்போது உருவாகிக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் நாட்டில் மீண்டுமொரு போர் அழிவு ஏற்படுவதை தடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். பரஸ்பர அன்பில் நல்லிணக்கத்துடன் நாட்டுமக்கள் வாழ்வதற்கு பெரும்பான்மை, அரச அதிகாரம் கையிலுள்ளவர்களே பொறுப்புணர்ந்து செயல்படவேண்டும்.

**சத்தியாக்கிரகம்**

சத்தியத்தின் வழிநின்று தர்மவழியில் தமக்குரியதைக் கேட்டு நிற்றலே சத்தியாக்கிரகம் என்ற சொற்பதம் குறிக்கும். இந்திய சுதந்திர போராட்ட காலத்தின்போது மகாத்மா காந்தியடிகளின் போராட்ட வடிவத்துக்கு ஒரு சொற்பதம் தேவைப்பட்டது. ஏற்கனவே இருந்த போராட்டச் சொற்பதங்கள் காந்தியடிகளின் சத்தியப் போராட்டத்துக்குப் பொருத்தமானதாகக் காணப்படவில்லை. புதிய சொற்பதத்தின் தேவை காந்தியடிகளால் முன்வைக்கப்பட்ட போது காந்தியடிகளின் மகனே அகிம்சை என்ற இப்பதத்தை உருவாக்கினார். சக மக்களினதும், எமதும் வாழ்வியல் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பது தர்மத்துள் அடங்கும். அதனுடைய செயல்வடிவம் சத்திய, தர்ம, அன்பு, அகிம்சை வயப்பட்டதாக அமைய வேண்டும். அப்பொழுதே அதைச் சத்தியாக்கிரகம் அல்லது குறைந்தளவில் அகிம்சைப் போராட்டம் என்று குறிப்பிடலாம். இதில் சத்தியமும், தர்மங்களும் காக்கப்படுவதுடன் எதிராளியின் மீது அன்பும் பேணப்பட வேண்டும்.

**அன்புடன் உரிமை கேட்டல்**

காந்தியடிகள் இந்திய மக்களின் சுதந்திரத்துக்காகப் போராடினாரே தவிர, பிரிட்டிஸ் இராணுவத்தையோ, மக்களையோ வெறுக்கவில்லை; அழிக்க முனையவில்லை. காரணம் பிரிட்டி ஸ்காரர் மீதும் காந்தியடிகள் அன்பு காட்டினார். தன்னை எதிர்த்தவர்களுக்கும் மரியாதை காட்டினார் அன்பின் உயரிய வளர்ச்சியிலேயே இது சாத்தியமாகும். அத்துடன் காந்தியடிகளும் ஏனைய சுதந்திர போராட்டத் தலைவர்களும்

**'அன்பின் அரவணைப்பில் விளைவதே நல்லிணக்கம்' என்ற தலைப்பில் கடந்த வாரம் வெளியான கட்டுரையின் இரண்டாவது பகுதி இது**

இறை நம்பிக்கை, விசுவாசத்துடன் கூடிய வாழ்வையே வாழ்ந்தனர். தமது போராட்டத்தையும் அதற்கமையவே வடிவமைத்தனர். எனவே அவர்களுக்கு இறை அருளும், இறை வழிகாட்டுதல்களும் கிடைத்தன. எமது கோரிக்கையில் நியாயம் இருந்தாலும் அதை அடையும் வழியும் தர்மத்துக்கமைவானதாக இருந்திடல் வேண்டும். அப்பொழுதே எமது கோரிக்கை இறைவனால் பூர்த்தியாக்கப்படடும். எமக்கு கெடுதல் செய்பவர்களையும் நேசிக்கும் பக்குவம் வளர்க்கப்பட வேண்டும். எல்லோரும் ஒருதாய் (பிரபஞ்ச தாய்) பிள்ளைகளே. அன்பே மிகப்பலம் வாய்ந்த ஆயுதமாகும். நாம் அன்பைத் தக்கவைத்துக் கொண்டால் மற்றவரில் மனமாற்றம் ஏற்படும். வெறுப்பை வெளிப்படுத்தினால் வெறுப்பும் எதிர்ப்புமே மிஞ்சும்.

**சத்திய தர்மத்தில் நடத்தல்**

எமது பாதையும் இறைவனுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும். உரிமை கேட்டலில் சத்தியம் (உண்மை, நேர்மை) காக்கப்பட வேண்டும். இதில் மகாத்மா காந்தி உறுதியாக இருந்தார். எங்கே சத்தியம், தர்மம் காக்கப்படுகிறதோ அங்கே வெற்றி நிச்சயம். சத்திய தர்மங்கள் மீறப்படும்போது இயற்கையாகவே தோல்வியும் அழிவும் வந்தமைகின்றன. இது தவிர்க்கமுடியாதது.

**இறை சக்தியின் செயற்பாடு**

எமது கோரிக்கையில் நியாயமும், எம்மிடம் திறமையும் இருந்துவிட்டால் மட்டும் போதாது. நாம் பயணிக்கும் பாதையின் தன்மையும் வெற்றியைத் தீர்மானிப்பதில் பங்குவகிக்கும். உரிமைப் பாதை, தர்மத்திற்கு அமைவானதாக இருக்கவேண்டும். அப்பொழுதே இறை அருள் எமக்கு பக்கபலமாக நிற்கும். வெற்றி உறுதிப்படுத்தப்படும். எமது போராட்டத்தில் இறைசித்தம் புறக்கணிக்கப்பட்டது. தர்மத்தினூடான செயல்கள் என்பதும் விளங்கிக்கொள்ளபடவில்லை. தமிழர் பிரதேசங்களில் மகாத்மா காந்தியினூடான போராட்டமுறைகள் பின்பற்றப்பட்டாலும் அதனுள் இறை அம்சம் சேர்க்கப்படவில்லை. போதிய கவனிப்பு எடுக்கப்படவில்லை.

**அரசியல் போராட்டம் அகிம்சைப்போராட்டம்**

ஆயுதம் தூக்காத போராட்டம் எல்லாம் அஹிம்சைப் போராட்டம் என்ற கருத்தே தமிழ் அரசியல் வாதிகளிடமிருந்தது. திலீபன் உண்ணாவிரதம் இருந்தது. கூட அஹிம்சைப் போராட்டம் என்று கூறப்பட்டது. மகாத்மா காந்தியின் அஹிம்சையில் சத்தியம், தர்மம், அன்பு என்பன கடைப்பிடிக்கப்பட்டது. சத்தியம், தர்மம் கடைப்பிடிக்கப்படும் போது அன்பு ஏற்படுகின்றது. அன்பின் வளர்ச்சியில் அஹிம்சை ஏற்படுகின்றது. அன்பான உள்ளத்தால் மற்றவர்களுக்கு துன்பம் ஏற்படுத்த முடியாது. மற்றவரை அவமதிக்க முடியாது. எனவே அஹிம்சைப் போராட்டத்தில் சத்திய, தர்மம் பேணப்பட்டு அன்பும் மரியாதையும் வழங்கப்படும். இது முழுமையாக நெறிப்படுத்தப்படும் போது சத்தியாக்கிரகம் ஆகின்றது. சத்தியாக்கிரகம் எதையும் வென்றெடுக்கும். ஏனெனில் அதற்கு இறை ஒத்துழைப்பு இருக்கும். இத்தகைய அம்சங்களைக் கைக்கொள்ளாதவிடத்து அது அரசியல் போராட்டம் என்றும் கூறப்படலாமே அன்றி அகிம்சைப் போராட்டம் என்று கூறமுடியாது. சத்தியம், தர்மம் பேணப்படாத போராட்டங்கள் வெற்றியைத் தேடித்தராது. நன்மைகள் கிட்டாது. இதுவே இயற்கை நியதி ஆகும். சத்திய தர்மத்துடன் திறமை சேர்ந்தாலே வெற்றி நிச்சயம்.

**பரஸ்பர அன்பே நல்லிணக்கம்**

இரு இனங்களும் உண்மை அன்புடன் கைகோர்க்கும் போதே நல்லிணக்கம் சாத்தியம். பௌத்த இந்து சமயங்கள் அன்பையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.

**டாக்டர் இ.சிவசங்கர்**

ஒரே நெறிகளையே போதிக்கின்றன. ஒற்றுமை காண்பது இலகு. இதில் பெரும்பான்மை இனத்தவர்களின் பௌத்த ஆன்மிக நெறியாளர்கள் பொறுப்புணர்ந்து செயலாற்ற முன்வர வேண்டும். இராணுவ பலத்தினால் சற்று தடுமாறி நிற்கும் இராணுவத்திற்கும் அரசியல் வாதிகளுக்கும் பௌத்த நெறிப்படுத்தல் - அவசர - அவசியமாகின்றது. விரைந்து செயற்படுவது நாட்டில் மீண்டும் ஓர் அழிவு ஏற்படுவதைத் தடுக்கும். முன்வருவீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்பத்தித்துறை சார்ந்த தொழிற்றுறை உருவாகினால்தான் தன்னிறைவான பிரதேச அபிவிருத்தி நாட்டில் ஏற்படும்

யாழ்ப்பாணம்,நவ.28

பிரதேச அபிவிருத்தி ஒன்று எமது மண்ணில் ஏற்பட வேண்டுமானால் அங்கு உற்பத்தித்துறை சார்ந்த தொழிற்துறைகள் உருவாக்கப்பட வேண்டும். அப்போது தான் ஒரு பிரதேசம் தன்னிறைவுகொண்ட ஒரு பொருளாதாரமாக வளரும் இவ்வாறு தெரிவித்தார் எந்திரி. இ.த.இராமச்சந்திரன்.

வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தித்திட்டமிடலுக்கான (II.DP) "தூர நோக்கு உருவாக்கம்" தொடர்பான அபிவிருத்திக் கூட்டம் நேற்று முன்தினம் பிரதேசசெயலர் திருமதி.தே.பாபு தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:-

ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தித்திட்டம் கல்வி, சுகாதாரம்,வீதி,பொழுது போக்கு, பயன்பாட்டு சேவை உள்ளிட்ட 12 துறைகளை உள்ளடக்கியுள்ளது. இத்துறைகள் ஊடாக பிரதேச அபிவிருத்தி ஏற்பட வழியுண்டு.

ஆனால் மெய்பிறந்த ரீதியில் ஒரு பிரதேசத்தின் உண்மையான அபிவிருத்தி ஏற்படவேண்டுமானால் தன்னிறைவு அடைய வேண்டுமானால் அங்கு பொருளாதாரம் வளர்ச்சி அடைய வேண்டும்.

இந்தப் பொருளாதார வளர்ச்சிக்கு தரிசு நிலங்களை முழுமையாகப் பயன்படுத்தி அந்நிலங்களில் பல வகையான தொழில் துறைகள் உருவாகி அதன் ஊடாக வேலைவாய்ப்புகள், முதலீடுகள் உருவாகும்போது அங்கு தன்னிறைவுப் பொருளாதாரம் தானாக மிளிரும்.

இதனை விடுத்து வெறும் பொருளாதார முன்னேற்றம் என்பதன் ஊடாக எவ்வித அபிவிருத்தியும் ஏற்படாது என்றார். வலி.மேற்கு பிரதேச சபை நிர்வாக அதிகாரி க.பாலசுப்பிரமணியம் வரவேற்புரை வழங்கினார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட வலி.மேற்கு பிரதேச செயலர் திருமதி. தே.பாபு உரையாற்றுகையில்:-

வடக்கில் 34 உள்ளூராட்சிச் சபைகள் உள்ளன.இதில் வலி.மேற்கு பிரதேச சபை உள்ளூர் அபிவிருத்திட்டமிடலுக்காக தெரிவு செய்யப்பட்டது உண்மையில் நாம் அதிஷ்டசாலிகள் என்றே கூற வேண்டும் என்றார்.

தொடர்ந்து வலி. மேற்கு பிரதேச சபையின் ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தி திட்டமிடல் இணைப்பாளரும் உள்ளூராட்சி உதவியாளருமான திருமதி சோ.ஜெயந்தா உரையாற்றுகையில்:-

வலி.மேற்கு பிரதேசத்திற்கான மூல வள திரட்டு இறுதி வரைபு முடிவடைந்துள்ளது. துறை சார்ந்த திணைக்கள தலைவர்கள் பூரண பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

எனவே அடுத்ததாக வலி.மேற்கு பிரதேசத்திற்கான அபிவிருத்தி திட்டம் தயாரித்து எதிர்வரும் 20 ஆண்டுகளில் தயாரித்த திட்டங்களை நிறைவேற்றி பிரதேச அபிவிருத்திக்கு உதவுவதே எமது திட்டத்தின் நோக்கும் இலக்கும் என்றார் அவர்.

நிகழ்வின் இறுதியில் "வலிகாமம் மேற்கின்ன 2020 இல் பொருளாதார வள மிக்க தன்னிறைவுப் பிரதேசமாக கட்டியெழுப்புதல்" என்ற தூர நோக்கு (VISION) வாசகம் 56 புத்திஜீவிகளால் ஒப்புதல் பெறப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(201-302)


Study in UK



IELTS இன்றி செல்ல
இறுதிச் சந்தர்ப்பம்.....
Apply Now!
Intakes Jan/ Feb 2011
அடிப்படை தகமை G.C.E.(O/L)
Spot Admission on
06th December 2010 @ IBT - Colombo
The leading visa consultant in Sri Lanka
IBt
Hotline : 0777113777, 0727113777
INSTITUTE OF BRITISH TECHNOLOGY (PVT) LTD
No:538-3/1, Galle Road, Colombo - 03, Sri Lanka. | Branch: Kalmunai
E-mail: info@ibtedu.lk | academics@ibtedu.lk
Web : www.visa.ibtedu.lk | www.ibtedu.lk
We raise the limits to your Success.....



தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள எமது ஸ்தாபனத்துக்கு SALES GIRL, SALES BOY & STORE KEEPER தேவை. ஓரளவு முன்னனுபவம் உள்ள STORE KEEPER விரும்பத்தக்கது. திறமைக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:-
வீஎ.இல.4094
C/o உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி:
suren@metrohomes.lk



SALES REP

- Around 25 years of age
- 2-3 Years experience in selling
- Should be minimum O-Level Qualified
- Ability to converse in Tamil/ English
- Should possess a valid riding licence
- Salary & Sales commission exceed Rs. 50,000 pm
- Company maintained Motorbike
- Medical provided

APPLY TO
E-mail : hrd@tradesmann.com
Fax: 011 5565610
PO Box: 168, Jaffna.

FOR FURTHER DETAILS
Contact: 077 756 7147

TRADESMANN
Tradesmann is a diversified business model in Manufacturing, Trading & Distribution sectors since 1956
THE TRADESMANN SL (PVT) LTD
40, Borupana Ferry Road, Ratmalana.
www.tradesmann.com



இலங்கை வங்கி

கொள்வனவு செய்ய வெற்றுக்
காணி/கட்டிடத்துடன் காணி தேவைப்படுகின்றது

பின்வரும் நகரில் முக்கிய வர்த்தக எல்லைகளுள் பாதையை முன்நோக்கியதாக 50-60 அடிகளைக் கொண்ட 25-40 பேர்ச்சுகள் விஸ்தீரணமுடைய காணி தேவைப்படுகின்றது

பருத்தித்துறை

இதற்காக முன்வைக்கப்படும் விலை மனு, காணி தொடர்பான விபரம், உரிமை உறுதியினதும் அளவை வரைபடத்தினதும் பிரதி மற்றும் எதிர்பார்க்கப்படும் ஆகக்குறைந்த விலை ஆகியவற்றை 2010.12.17 இற்கு முன்னர் உரிமையாளர்களிடமிருந்து மாத்திரம் எங்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி,
14ம் தளம், இலங்கை வங்கி தலைமை அலுவலகம்,
இல. 4, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01
தொலைபேசி இல. 011-2544310, தொலைநகல் 011-2449629


## நெஞ்சை விட்டகலாத முதலாம் ஆண்டில்..





| அமரர் கணபதிப்பிள்ளை காங்கேஸ் | அமரர் கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு |
|---|---|
| மண்மகள் அடியில் 26.11.1931 | மண்மகள் அடியில் 24.11.1940 |
| விண்ணிறை அடியில் 23.03.2009 | விண்ணிறை அடியில் 08.12.2009 |

ஆண்டொன்று மறைந்தாலும் ஆறவில்லை எம்துயரம்
எம்மோடு நீங்கள் வாழ்ந்த பசுமை நினைவுகள் அத்தனையும்
என்றென்றும் எம்மனதில் நிறைந்திருக்கும் நிலை கொள்ளும்
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவன் பாதம் பணிகின்றோம்.

உங்கள் நினைவுகளுடன்:
மனைவிமார், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர், சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிமார், உறவினர்கள்.

45, கெண்டலடி லேன்,
நல்லூர்.

(106577)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## அடைக்கலசாமி தவஞானதாஸ்

(பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் மட்டக்களப்பு)

காங்கேசன்துறை ஊறணியை பிறப்பிடமாகவும் கல்லடி மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திரு அடைக்கல சாமி தவஞானதாஸ் (பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் கல்லடி, மட்டக்களப்பு) அவர்கள் கடந்த (25.11 .2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அ.அடைக்கலசாமி, காலஞ்சென்ற நேசம் மிலோமினா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு. திருமதி மத்தியாஸ் மரியாம்பிள்ளை (சம்மட்டியார்) தம்பதியினரின் அருமை மருமகனும் திரேஸ் நிர்மலாவின் பாசமிகு கணவரும், தமயந்தி (தபால் அதிபர் பிரதேச நிர்வாக அலுவலகம், தபால் திணைக்களம், மட்டக்களப்பு) கமில்டன் பெனி, டல்சன் ஜெறி, பிரியந்தி (மாணவி மட்/விவேகானந்த மகளிர் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் பிலிப்லியோனாட், றெஜீனா லைசாவதி ஆகியோரின் அருமைச் சகோதரனும் ரூபன், ஆனந்தரூபினி (ஆசிரியை, யா/நவாலி மகா வித்தியாலயம்), அருள்நாதன், தேவி (கனடா), அருள்நேசன் (பிரான்ஸ்), அருள்தாசன் (ஜேர்மனி), அருள்ஞானம் (பிரான்ஸ்), சாந்தினி (இத்தாலி), றாஜினி (கனடா), அருள்ராஜன் (டென்மார்க்) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (29.11.2010) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மட்டக்களப்பு தாண்டவன் வெளி காணிக்கை மாதா தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப் பட்டு, கள்ளியங்காடு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

அ.பிலிப் லியோனாட்

சென்.பீற்றர்ஸ் லேன்,
நவாலி வடக்கு, மானிப்பாய்.
0779280282

(சி/572607)

# பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ். வாழ்த்து

யாழ்ப்பாணம், நவ.28

தேசிய வாழ்வினுள் தமிழ், முஸ்லிம் மக்கள் உள்வாங்கப்படும் விதமாக அரசியல் அதிகாரப் பகிர்வு நிகழ வேண்டும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது பதவிக் காலத்தில் இதனை உறுதிப்படுத்தி சரித்திரத்தின் செழுமைமிகு பக்கங்களில் தனது பெயரைப் பொறிக்க வேண்டும். இவ்வாறு பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்புக்கான வாழ்த்துக் கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளமை வருமாறு:

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாக பதவியேற்பதற்கு பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

விமானப் போக்குவரத்து, மின்சாரம், வர்த்தகம், அறிவு, சமுத்திரம் ஆகிய ஐந்து துறைகளிலும் இலங்கை எதிர்காலத்தில் பிரகாசிக்குமெனவும், சமாதானம் நிலைநாட்டப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

இவை மகிழ்ச்சிகரமானவை, சகல இனமக்களுக்கும் தெம்பூட்டுபவை. எனினும் இலங்கையின் இனங்களுக்கிடையே நிலவும் அரசியல் அதிகாரப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதனூடாகவே இந்த இலக்குகளை அடைய முடியும். உலக வரலாற்றில் ஜனநாயகமும், சமூகங்களிடையே சமத்துவமும் நிலைநாட்டப்பட்ட நாடுகளிலேயே வெற்றிகரமான சமுக பொருளாதார சாதனைகள் நிகழ்ந்துள்ளன.

இலங்கை அனைத்து இன மக்களினதும் நாடு, பல்லினங்களின் நாடு என்பது உறுதிப்படுத்தப்படுவதும் நாம் முன்னேற்றப் பாதையில் செல்வதற்கான நிபந்தனைகளாகும்.

30 வருடமாக நிலவிய யுத்தத்தை முடிவுக்கு கொண்டு. வந்தது போல் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றை அடைவதிலும் ஜனாதிபதி ஆற்றலுடன் செயற்பட வேண்டுவுமென நம்புகின்றோம். - என்றுள்ளது. (ம-15)


## இன்று முதல்
### குதூகல ஆரம்பம்



கொழும்பில் பெரும் வரவேற்பை பெற்ற

**Jeya Beauty Salon**

உரிமையாளர்: N.Nagularani
(Dip.in. BTHD in SriLanka & India)

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க
யாழ்ப்பாணத்திலும் அழகுக்கலை
டிப்ளோமா 28.11.2010
இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு
சாந்தி பவனம், நாவலடி ஒழுங்கை
திருநெல்வேலியில் ஆரம்பமாகின்றது
அனுமதிக்கு இன்றே முந்துங்கள்
மேலதிகத் தொடர்புகளுக்கு : 0772378726

(106590)



## உங்களது செயற்திறன்கள் கனடா நாட்டிற்குத் தேவைப்படுகிறது.

இன்றே உங்களுடைய குடிபெயர்வுச் செயலாக்கங்களை தொடங்குங்கள்
தனித்தன்மைவாய்ந்த வெளிநாட்டு குடிவரவு ஆலோசகர்கள் ஆன் ஆர்பர் ஆலோசகர்கள் நிறுவனத்தோடு இணைந்து சான்றிதழ் பெற்ற குடிவரவு ஆலோசகர் (M024390)

**" எங்கே அதிகளவு திறமைகள் தேவைப்படுகிறதோ அங்கு உங்களுடைய திறமைகளை எடுத்துச் செல்ல இது வாழ்நாளிலே உங்களுக்கு கிடைத்த ஒரு நல்ல சந்தர்ப்பமாகும் "**

எல்லா பிரிவுகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட குடிபெயர்வாளர்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுவர்

- மருந்தாக்கவியலாளர்கள்
- பதிவு செய்யப்பெற்ற தாதிகளும் அத்தாட்சியுரிமை பெற்ற அனுபவமுள்ள தாதிகளும்
- வைத்தியர்கள் (பொது வைத்தியர்கள் /குடும்ப வைத்தியர்கள் / ஆயுர்வேத வைத்தியர்கள்)
- பல் வைத்தியர்கள்
- உடற்பயிற்சிச் சிகிச்சையாளர்கள்
- மருத்துவ ஒளிக்கதிர் தொழில்நுட்பாளர்கள்
- உடற்கூருவியலாளர்கள்
- சமையல் நிபுணர்கள் / சமையற்காரர்கள்
- கட்டிட சிற்பிகள்
- சந்தைத்துறை ஆலோசகர்கள்
- விளம்பரத்துறை பொறுப்பதிகாரிகள்
- வணிகத்துறை நிர்வாக ஆலோசகர்கள்
- விளம்பரத்துறை முன்னேற்ற நிபுணர்கள்
- காப்பீடுகளை சரிசெய்பவர்கள்

அதிக முன்னுரிமை செயலாக்கம் மூலமாக 6 முதல் 12 மாதங்களுக்குள்ளாக உங்கள் கனடா நாட்டிலே குடியேறச் செய்ய எங்களால் உதவ முடியும்.

வணிகத்துறைக்குரிய எவரெஸ்ட் கல்லூரி, தொழில்நுட்பம், மற்றும் சுகாதாரப் பராமரிப்பு போன்ற துறைகளில் மாணவர்கள் அமர்த்தவும்! நாட்டு விடயத்திற்கான அனுமதி இசைவு (விசா), மாணவர்க்கான அனுமதி இசைவுதவி, மற்றும் பொதுமக்கள் தொடர்பான காரியங்களிலும் நாங்கள் விசேஷித்துவம் பெற்றிருக்கின்றோம்.

ஆகவே, ஓர் இலவசம் மதிப்பீட்டிற்கு இன்றே எங்களை அழையுங்கள்!
தொலைபேசி இல : 011 318 0670 மின்னஞ்சல் : shalini@annarbour.com
தனித்தன்மைவாய்ந்த வெளிநாட்டு குடிவரவு ஆலோசர்கள் (ஆன் ஆர்பருக்கான இலங்கை முகவர்கள்)

www.annarbour.com


எமது அருமை மூத்த செல்வம்

# பங்கயச்செல்வியின் ஓராண்டு நினைவலைகள்



மலர்வு: 02.09.1987
உதிர்வு: 08.12.2009

கல்வியின் கலங்கரை விளக்காய் திகழும் நேரம்
காதல் எனும் மாயமான் வீட்டினுள் வர
உன் மனது தடுமாறிக் கலங்கிய வேளையிலே
காலமறிந்து உன் பெற்றோர்
திருமண பந்தத்தில் பெரும் செல்வியாய்
நீ வாழ மண் பொன் பொருள் அள்ளித் தந்து
யாம் மரணப் படுக்கையில் இருக்கும் வேளை
பால் பருக்கி பாசமுடன்
சுடுகாடு அனுப்பி வைப்பாய் என்றிருக்க
பாவிகளான உன் பெற்றோரை விட்டு
காலன் எனும் மாயமான்- உன்
இதயம் கவர்ந்த காரணம் தான் யாம் அறியோம்
உற்றாரும் ஊராரும் ஒவ்வொரு கதை பேச
உனக்காக என்றும் ஈரவிழிகளுடன் நாமிருக்க
எம்மைப் பரிதவிக்க விட்டதேனோ?
பெற்றெடுத்த எம் வயிற்றில் பத்தி எரியும் தீயோ
எம்மிருவர் சுடுகாட்டில்தான் அணையுமம்மா



(1064442)

குருநாதன் வைத்தியசாலை
சிலம்புப்புளியடி வீதி, சங்கானை.

Dr.ஸ்ரீ கணநாதன் (குருநாதர்) குடும்பம்
(பெற்றோர்)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

## கதிர்காமத்தம்பி சிவபாக்கியம்



அன்னை மடியில்
06.09.1938



ஆண்டவன் அடியில்
29.10.2010

அன்பென்ற சொல்லுக்கு அர்த்தமான அம்மாவே!
இன்பத்தை எமக்குள்ளே விதைத்து வைத்தீரே!
பாசத்தின் திருவுருவம் நீர்தான் தாயே- எம் வாழ்வில் ஒளி வீச வழிவகுத்த நீர்
எங்கு அம்மா சென்று விட்டீர்.

கடந் 29.10.2010 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எம் குடும்ப விளக்கின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.00 மணியாளவில் வத்தனைப் பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெறும். இந் நிகழ்விலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்.

மேற்கு, பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



### கணபதிப்பிள்ளை சின்னத்தங்கம்

பாமன்தோட்டம், வல்வெட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிளை சின்னத்தங்கம் (26.11.2010) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வைராத்தை தம்பதியரின் மருமகளும், சின்னத்தம்பி கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவகலா மற்றும் சிவகுருநாதன், ரவிநாதன், செல்வகலா, யோகேஸ்வரி, வைகுந்தநாதன், சூரியகலா ஆகியோரின் பாசமிகு தாயாரும், விக்கினேஸ்வரன், அருள்மணி, சுசிஜந்தினி, தபேந்திரராஜா, சீனிவாசன் (தபாற்கந்தோர், புத்தூர்), தர்சினி, சுகுமார்(ரவி) ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிரா, அஞ்சுதன், நிதுஷா, வினுஷ், சப்ரினா, றொபின், ஜஷ்மினி, தர்சிகன், தர்சிகா, சோபிகா, விதுரன், விகாஷகன், ராகவி, சரண்யா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.11.2010 செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊறணி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாமன் தோட்டம், வல்வெட்டி. (106597)

தகவல்: சுகுமார் (மருமகன்).

### கந்தையா சுப்பிரமணியம் (சுப்புறு)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்புறு என்று அழைக் கப்படும் சுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் (26.11.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காலான்டி கந்தையா- கண்மணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பத்மாவதியின் அன்புக் கணவரும், சுபாஷினியின் அன்புத் தந்தையும், ஸ்ரீமோகனின் அன்பு மாமனாரும், கோபிகாவின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு (முன்னாள் ஊழியர், யாழ். போதனா வைத்தியசாலை) மற்றும் மகாலிங்கம், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் குகதாசன், ரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கருணாதேவி, ஜெயராணி, யோகராணி, இந்திரகுமாரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் 8/1, சுப்பிரமணியம் வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

க. பாலேந்திரன்,
8/1, சுப்பிரமணியம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல். க. பாலேந்திரன் (10660-)

## பணியாளர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 28

மானிப்பாய் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஓய்வுபெற்ற சிறந்த பணியாளர்கள், அங்கத்தவர்கள் முன்பள்ளி ஆசிரியர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வு கடந்த 22ஆம் திகதி திங்கட்கிழமை சங்கத்தின் சந்திரராசா மண்டபத்தில் சங்கத்தலைவர் அ.சரவணன் தலைமையில் நடைபெற்றது.

ஓய்வுபெற்ற சிறந்த அங்கத்தவர்கள் 27 பேர், ஓய்வுபெற்ற சிறந்த பணியாளர் 3 பேர், முன்பள்ளி ஆசிரியர்கள் 17 பேர், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர்களின் பிள்ளைகள் 10 பேரும் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் சங்கத்தின் பொதுமுகாமையாளர் க.சற்குணலிங்கம், ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேசமூர்த்தி மாவட்ட கூட்டுறவு அலுவலர் த.பத்மானந்தன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(201-9)

## சிந்தனைக் கூடக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 28

சிந்தனைக்கூடத்தின் ஏற்பாட்டில் "18 ஆவது திருத்தமும் உள்ளூராட்சித் தேர்தல் திருத்தமும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்றுகாலை 9 மணிக்கு தியாகி அறக்கொடை நிலையத்தில் இடம்பெறும்.

சட்டத்தரணி புஞ்சிஹேவ கருத்துரை வழங்குவார். (ஒ-ஐ)

## ஐயப்பன் ஆலயத்தில் இன்று தீப வழிபாடு

யாழ்ப்பாணம், நவ. 28

கோண்டாவில் கிழக்கு சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தில் அடியார்கள் சுவாமிமார்கள் ஏற்றும் நீராஞ்சனம் தீப வழிபாடு இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று அடியார்கள் சுவாமிமார்கள் வீதியுலாவாக பதினெட்டுபடி பிரபு சபரீச ஐயப்பனுக்கு தீபங்கள் ஏற்றி ஒளியால் இறைவனை வழிபடுவர். (ஒ-10)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகாம்பிகை பஞ்சலிங்கம் (அம்பிகை)

(இளைப்பாறிய ஆசிரியை)



யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை பஞ்சலிங்கம் (அம்பிகை) 23.11.2010 செவ்வாய்க் கிழமையன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா -பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு இளைய மகளும் சண்டிலிப்பாயைச் சேர்ந்த இராமலிங்கம்-இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பஞ்சலிங்கம் (முன்னாள் பிரதம எழுதுவினைஞர், யாழ்.மாநகரசபை) அவர்களின் அன்பு மனைவியும் நந்தினி, ஜெயந்தினி,சுகந்தினி, பிரிந்தினி, நிரஞ்சன், கலாரஞ்சன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருபரன், குலேந்திரன், சற்குணநாதன், பிரிந்தகுமார், குயிலி, தர்சிலீ ஆகியோரின் அன்பு மாமியும் யாதவன், கிரிஷாந், விரோஷன்,அர்த்தனா,மிரன்,மிதுரன்,மினோரன், நிவாஷினி, விஷ்னி, பிரணவன், ஜனுஷா, அபிஷகன், ரிதுனா, தஜென் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, குமாரவேல், விஷ்வலிங்கம் மற்றும் மகேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கமலம்மா, சண்முகராஜா மற்றும் கிருஷ்ணராஜா (கனடா), காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் பத்மராணி (யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2010) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணிக்கு Golders Green Crematorium, Hoop Lane, London NW 117 NL இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு: நிரஞ்சன்: 02089984630, 07710266498 (சி-573123)

தகவல்: பிள்ளைகள்


SHAMROGK
ஈச்சமோட்டை, யாழ்.

A/L - 2012

★ பொருளியல்.
Mon,Fri 5.30 pm
Mr.V.ஞானவேல்
B.B.A(Fm.spl)

★ புவியியல்.
Thur 5 pm, Sat 4.pm
Miss S.ஜீவ்சியா
B.A. (Geo.spl)

★ அளவை.
Mon,Tue 5.pm.
Mr.S.ஜெகேஷியன்
B.A(phi.spl.)



பாடசாலை அதிபர்களே!

2011ஆம் ஆண்டுக்கான புதிய பாடத்திட்டத்திற்கான விரிவான வேலைத்திட்டப் பாடப்பதிவுப் புத்தகங்கள், பாட முன்னாயத்த புத்தகங்களையும் உங்கள் பாடசாலைப் பெயர், இலட்சினை என்பன அச்சிட்டுப் பெற்றிட உடனே முன்பதிவு செய்திடுங்கள். 2011ஆம் ஆண்டுக்கான கணிப்பீட்டுப் புத்தகங்கள், தேர்ச்சி அறிக்கைகளுக்கும் பதிவுசெய்யலாம்.

ஷாம்பவி பதிப்பகம்,
276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (கஸ்தூரியார் சந்தி அருகில்)
0212224143, 0776184842 5 (இ/572615)



கோழிக்குஞ்சு விநியோகம்

BAH12AHA NO-1 புறொயிலர் குஞ்சுகள் 01.12.2010 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

★ ராஜீவ்,
நாவலி வீதி,
ஆனைக்கோட்டை

T.P.No.021-222-2867,
0776090926



MEGA CD SALE
மாபெரும் மலிவு விற்பனை
சகலவிதமான original ACD, VCD, DVD, MP3
software CD கள், Game CD கள்
தமிழ், ஆங்கில, ஹிந்தி, தமிழாக்க திரைப்படங்கள்
தமிழ், ஆங்கில, ஹிந்தி, Re Mix பாடல்கள்
சிறுவர்களுக்கான CD கள் கிறிஸ்மஸ் CD
தற்பொழுது விற்பனையில்
பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய் சந்தி,இருபாலை. 0773695662


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி கவிதாமலர் சுஜிதரன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி முருகேசு பராசக்தி அம்மா**

அவர்கள் காலமானார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை, அதிபர், ஆசிரியர்கள், பணியாளர், மாணவர்கள். (106594)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க அங்கத்தவர் திரு.கே.மகேந்திரகுமார் அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் கனகலிங்கம் கனகம்மா**

அவர்கள் காலமான செய்தி அறிந்து நாமும் ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!,

பாதுகாப்புத் திணைக்களம்
பாதுகாப்பு உத்தியோகத்தர், நலன்புரிச் சங்கம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## மரண அறிவித்தல்கள்



### புண்ணியமூர்த்தி யோகராசன்

நாயினாதீவைப் பிறப்பிடமாகவும், தாண்டிக்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட புண்ணியமூர்த்தி யோகராசன் நேற்று (27.11.2010) சனிக்கிழமை காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ரமணன், வாகினி நகைமாடம், பவித்திரன் பல்பொருள் வாணிபம்.

(106588) 0777238506- 0776047317- 0773889401.



### திருமதி பவளம்மா செல்லத்துரை

நல்லூரைப் பிறப்பிடமாகவும், சுழிபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பவளம்மா செல்லத்துரை 26.11.2010 வெள்ளியன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகேசு செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும், தம்பியையா, சின்னத்துரை, ராசம்மா, மகாலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுப்பிரமணியம் (அப்பு அண்ணா), குணசேகரம் (குணம் - ஜேர்மனி), கலைவாணி (கிளி - ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ராசாத்தி, பிறேமா, அருள்ராஜா ஆகியோரின் மாமியாரும், சுரேஸ் (லண்டன்), சுவர்ணா (சுவிஸ்), கருணா (ஜேர்மனி), பிரிதா, விஜிதா, சுமிதா (ஜேர்மனி), குகா, சுகன்யா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இலக்கியா, சாதனா, அபிராமி (சுவிஸ்), பிரித்திகா, ஆர்த்திகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் தெற்கு, சுழிபுரம். (106606)

தகவல்: பிள்ளைகள்.


பாடசாலை மாணவர்களுக்கு உரியவை, மொனிற்றர் டீச், ரிறிபெக்ட் டீச், பிளாஸ்ரிக் அடையாள அட்டை, மெடல்கள், கேடயங்கள், பெயர்ப்பலகை என்பவற்றை உடனுக்குடன் செய்து பெற்றுக்கொள்ள.
எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்
NO. 381, கே.கே.எஸ் வீதி,
T.P: 0777110610 0217903020 யாழ்ப்பாணம்.



வேலையாள்கள் தேவை
பெண்களுக்கான ஆடைகள் வெட்டித் தைக்கக்கூடிய அனுபவமுள்ள, யாழ். நகரில் வேலை செய்யக்கூடிய பெண்கள் உடன் தேவை.
தொடர்பு: 0777146175



வாகன விற்பனைக்கு
உங்கள் தேவைக்கு ஏற்ற அனைத்து ரக மறுசீரமைக்கப்பட்ட வாகனங்களையும் சிறந்த விலையில் ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்து கொள்ள விரும்புகிறீர்களா...
தொடர்பு கொள்ள aajapanmotors@gmail.com


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வேதனை தரும் தனியார் வைத்தியசாலைகள் — சாதனை கொண்ட நோயாளர் மனங்களுக்கு

நோயாளர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகிறது. தொற்று நோய், இதய நோயாளர்கள், புற்று நோயாளர்கள் எண்ணிக்கை உலகளாவிய ரீதியிலே அதிகரித்து வருகிறது. இதற்கு எமது பிரதேசமும் விதிவிலக்கல்ல. நோய்ப் பரம்பல் அதிகரிப்புக்கு பல்வேறுபட்ட காரணங்கள் கூறப்படுகின்றன. எது எவ்வாறு இருந்தாலும் நோய் தீர்ப்பதற்காக வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய நிலைக்கு பெருமளவான மக்கள் தள்ளப்படுகிறார்கள். இப்படியான நோயாளர் தேவை கருதி சுகாதாரத் திணைக்களங்கள், தனியார் சுகாதார நிறுவனங்கள் தமது உன்னத சேவையை உலகளாவிய ரீதியிலே செய்துவருகின்றன.

பிரதேச ரீதியில் பல்வேறுபட்ட அரச வைத்தியசாலைகள் இருந்தாலும் பெரும்பாலான நோயாளர்களது தெரிவு யாழ். போதனா வைத்தியசாலையாகவே இருக்கிறது. இதற்கு அவ்வப்போது யாழ். பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை பல்வேறுபட்ட காரணங்கள் ஏதோ கூறி ஒரு புறம் இருக்க, யாழ்.போதனா வைத்திய சாலையிலும் பல்வேறு நெருக்கடிகளையும், பிரச்சினைகளையும் நோயாளர்கள் சந்திக்காமல் இல்லை. இவ் வைத்தியசாலைக்கு அடுத்தபடியாக நோயாளர்கள் தனியார் வைத்தியசாலைகளையே விரும்புகிறார்கள். இதற்கு பல்வேறுபட்ட காரணங்கள் கூறப்பட்ட போதிலும் நேரச் சிக்கல்களும் போக்குவரத்து வசதிகளுமே முக்கிய காரணிகளாக இதற்கு இருக்கிறன. ஆனால் தனியார் வைத்திய நிலையங்களில் நடைபெறும் நிகழ்வுகளும், செயற்பாடுகளும் நோயாளர் மனங்களை பெரிதும் புண்படுத்துவதுடன் வைத்தியர்களையும் முகஞ்சுளிக்க வைக்கின்றன.

### சுத்தமும் சுகமும்

"சுத்தம் சுகம் தரும்" என்ற வாக்கியத்தைப் பாவிக்காத சுகாதார அமைப்புகளே கிடையாது. ஆனால் யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான தனியார் வைத்திய நிலையங்கள் இதற்கு மாறாகவே உள்ளன. அண்மையில் ஒருவர் தனியார் வைத்திய நிலையத்துக்குச் சென்ற போது பெருமழை பெய்துகொண்டிருந்தது. அங்கு அவர் ஒரு கையில் குடை பிடித்தபடியும் மேசையின் மேலே கால் வைத்தபடியும் நீண்ட நேரமாக அந்த நோயாளி இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. காரணம் மேலே மழை ஒழுக்கு, கீழே வெள்ளம். வைத்திய நிலையம் முதலில் அழகாகவும், சுத்தமாகவும் இருக்கவேண்டும். அப்போதுதான் அங்கு வரும் நோயாளிகளுக்கும் ஒரு மன அமைதி கிடைக்கும். ஏனெனில் மனச் சஞ்சலிப்புடன் நோய் தீர்க்க இயலாது. அடுத்து தாராளமான காற்றோட்ட இட வசதி இருக்க வேண்டும். தென்பகுதியில் உள்ள தனியார் வைத்திய நிலையங்கள் பல்வேறுபட்ட முன்னேற்ற நிலைகளில் உள்ளன. தாராளமான இட வசதி அங்குண்டு. அத்துடன் வாகனத் தரிப்பிடம் கூட அங்கு உள்ளன. அழகு வர்ணம் பூசப்பட்டுள்ளது. பல்வேறுபட்ட நோயாளர்களுக்கு பல்வேறுபட்ட பிரிவுகள் தனித்தனியாக ஒதுக்கப்பட்டுள்ளன. சிறுவர் பகுதியில் அவர்களுக்கு ஏற்ற விதத்தில் வர்ணங்களும், ஓவியங்களும் மனதை மகிழ்விப்பதாக அமைந்துள்ளன. அங்கு வரும் குழந்தைகள் விளையாடக் கூடிய உரிய வசதிகள் உள்ளன. அண்மையில் தென்பகுதியிலே இருந்து யாழ்ப்பாணம் வந்த ஒரு சிறுமிக்கு நோய் ஏற்பட்டதால் தனியார் வைத்தியசாலை ஒன்றுக்குக் கொண்டு சென்றார்கள். முதல்முறை மருந்து எடுத்து இரண்டாம் முறையும் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. ஆனால் அச்சிறுமி வைத்தியசாலை செல்ல மறுத்துவிட்டாள். இதேவேளை தென் பகுதியில் அவர்கள் செல்லும் வைத்திய சாலைக்கு, நோய் இல்லாவிட்டாலும் சிறுமிபோக ஆசைப்படுவதாகப் பிள்ளையின் தாய் கூறினார். அத்துடன் இங்குள்ள தனியார் வைத்தியசாலையின் நிலைமை பற்றியும் கவலையுற்றார்.

தென்பகுதியில் பெரும்பாலான தனியார் வைத்தியசாலைகள் குளிரூட்டப்பட்டும் உள்ளன. இருப்பதற்கு மிகவும் சொகுசான இருக்கைகள். ஆனால் இங்கு நோயாளர்கள் இருப்பதற்கு ஒழுங்கான கதிரையும் இல்லை, இடமும் இல்லை. காற்றோட்டமும் இல்லை. காத்திருக்கும்போது பொழுது போக்க தொலைக்காட்சியும் இல்லை. அடுத்தவரோடு கதைத்துப் பக்கத்தில் உள்ளவர்களது நோயைப்பட்டு கேட்டு யோசித்து நோய் மேலும் அதிகரித்த நிலையில் வீட்டுக்கு வந்து சேர்பவர்கள் பலபேர் .

### அன்பும் அரவணைப்பும்

பெரும்பாலான நோயாளர்கள் தனியார் வைத்திய நிலையங்களுக்கு சென்று திரும்பும் போது ஏன் போனோம் என்ற முகச்சுழிப்போடு தான் வருகிறார்கள். ஏனெனில் அவர்களுக்கு அங்கு நல்ல 'கவனிப்பு' கிடைத்துள்ளது.நோயாளி வைத்தியசாலைக்கு வரும் போது அன்பாக வரவேற்கப்பட்டாலே அரைவாசி நோய் நீங்கிவிடும். உதாரணத்திற்கு ஒரு தனியார்வைத்திய சாலைக்கு ஒரு பெரியவர் சென்றார். அவர் வயதிலும் பெரியவர் தகுதியிலும் பெரியவர். ஆனால் அங்கு கடமையில் இருந்த தனியார் வைத்திய சாலைத் தாதியர்களால் அவர் சிறிமைத் தனமாகவே நடத்தப்பட்டார். பெயரைக் கூப்பிடும் பொழுது கூட "கந்தசாமி" என்று அந்த தாதியச் சிறுமியால் அழைக்கப்பட்டுள்ளார். ஐயா கந்தசாமி என்று அழைக்காவிட்டாலும் கந்தசாமி என்று கூட அழைத்திருக்கலாம். தொலைக்காட்சி விளம்பரம் ஒன்றில் அங்குள்ள உத்தியோகத்தர்கள் "நாங்கள் இருக்கிறோம் உங்களுக்காக" என்று கூறுவார்கள். ஆனால் இங்கு நோயாளர்கள் தான் அப்படிக் கூறவேண்டிய நிலை.

இதற்கு முக்கிய காரணம் தனியார் வைத்திய நிலைய நிர்வாகம் குறைந்த செலவில் நிறைந்த இலாபம் அடைய நினைப்பதுதான். சுகாதாரமும், கல்வியும் சேவை சார்ந்தது. அவர்கள் இத் தொழிலைச் செய்யும் போது பணம் மட்டுமல்லாது சேவை மனப்பான்மையையும் வளர்த்துக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் இத் தொழிலுக்குள் வர முற்படக் கூடாது.

அங்கு கடமையில் இருக்கும் தாதியப் பெண்களுக்கோ/ உத்தியோகத்தர்களுக்கோ உரிய வேதனம் வழங்கப்படுவது இல்லை. தொழிலாளர் திணைக்களச் சட்டத்திற்கு உட்படுவதும் இல்லை. ஆரம்பத்தில் " பயிற்சியாளர்கள்" என்று வேதனமே வழங்குவதில்லை. இப்படியான நிலைமையில் நல்ல கல்வி அறிவுடைய, ஒழுக்கமும், பண்பு உள்ளவர்களை வேலைக்கு அமர்த்துவது கடினம் தான். தேர்ச்சி பெற்றவர்கள் வேலைக்கு வந்தாலும் நின்று நிலைப்பது கடினம்தான். வைத்தியர்களின் அறிவுறுத்தல்களைக் கூட விளங்கிக் கொள்ள முடியாதவர்களாக இவர்கள் இருப்பதால், வைத்தியர்களுக்கும் நோயாளிகள் முன்னால் தர்மசங்கடம் கூட ஏற்படுவதுண்டு.

### நோயாளர் தனிமையும் இரகசியமும்

நோயாளி வைத்தியருடன் தனிமையில் தமது நோய் சம்பந்தமான பிரச்சினைகள் உரையாட விரும்புவார். பல தனியார் வைத்திய நிலையங்களில் இப் பிரத்தியேகத் தன்மை பேணப்படுவதில்லை. வைத்தியர் பரிசோதிக்கும் அறை தனிமைப்படுத்தப்பட்டு இருப்பதில்லை. பல நோயாளிகள் அங்கு எட்டிப்பார்த்துக் கொண்டு இருப்பார்கள் . சில நேரங்களில் பெரிய அறை ஒன்று திரையினால் பிரிக்கப்பட்டிருக்கும். வைத்தியரும் நோயாளரும் உரையாடுவதை அங்குள்ள அனைவருக்கும் கேட்கக் கூடிய தன்மையே காணப்படும். இதனால் சில சந்தர்ப்பங்களில் குறிப்பா கப் பெண் நோயாளர்கள் தமது நோய்த் தாக்கங்கள் பற்றிய விவரங்கள் முழுவதையும் வைத்தியர்களுக்கு எடுத்துரைக்க முடியாமல் திரும்புகின்றனர். இதனால் பூரண மற்ற சிகிச்சைகள் மேற் கொள்ளப்படவும் வாய்ப்புகள் உண்டாகின்றன. நோயாளிகளுக்கான சிகிச்சைகளும், ஆய்வு அறிக்கைகளும் இரகசியத்திற்குரியவை. ஆனால் பலர் மத்தியில் அங்குள்ள பணியாளர்கள் அவற்றைக் கூறு வதால் இரகசியத்தன்மை கெட்டுவிடுகிறது.

### நிர்வாகத்தின் நிலைப்பாடு

தனியார் வைத்திய நிலைய நிர்வாகிகள் குறுகிய காலத்துக்குள் குறைந்த செலவில் நிறைந்த பயனைப் பெற வேண்டும் என்ற மனப்பான்மையுடனேயே செயற்படுகின்றனர். சேவை மனப்பான்மை என்பதற்கு கடுகளவேனும் இடம் இருப்பதாகத் தெரியவில்லை. மருத்துவசேவை மகத்தானது என்பதை உணர்ந்து அவர்கள் செயற்பட வேண்டும்.

முன்னைய காலங்களில் நாட்டின் அசாதாரண சூழலைக்காட்டி பிழைப்பு நடத்தினர். ஆனால் தற்போது நிலைமை மாறிவருகின்ற போதிலும் வசதிகளில் மாற்றங்கள் ஏற்படவில்லை. பழைய நிலைமையே தொடர்கின்றது. நோயாளர்களிடம் வாங்கும் பணத்துக்கு ஏற்ப அவர்களுக்கு வசதிகளை வழங்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் ஒரு நோயாளியிடம் வைத்தியசாலைக் கட்டணமாக 100/= அறவிடுகிறார்கள். கொழும்பில் 200/= தொடக்கம் 300/= வரை அறவிடப்படுகின்றது. அதாவது தென் பகுதியில் மேலதிகமாக பணத்தை அறவிடும் அதேசமயம் பல மடங்கு வசதிகளையும் நோயாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள்.

அங்கு கட்டடங்களுக்கான வாடகை பல மடங்காகக் காணப்பட்ட போதும், தாராள இடவசதி, வாகனத் தரிப்பிட

### பஞ்சவர்ணன்

வசதிகள், குளிரூட்டப்பட்ட அறைகள், மின்விசிறி, வர்ணமயமாக அழகுபடுத்தப்பட்ட கட்டடம், தொலைக்காட்சி, தொலைபேசி வசதி, பிரத்தியேக அறைகள், அன்பான, பண்பான பணியாளர்கள், இலகுவான ஒழுங்கு விதிகள், போதிய வைத்திய ஆலோசனைகள் போன்று பல வசதிகள் காணப்படுகின்றன. இதனால் அறவிடும் பணத்தின் அளவு வீதம் ஒப்பீட்டளவில் அங்கு குறைவாகவே காணப்படுகிறது எனலாம்.

எனவே இங்குள்ள தனியார் மருத்துவ நிலைய நிர்வாகங்கள் நோயாளர் மனங்களை மதித்து செயற்படல் வேண்டும். சில பொறுப்பு வாய்ந்தவர்கள் கூட தமது சுயலாபம் கருதி இவர்களுக்குத் துணை போகலாம். அவர்களும் கூட நோயாளர் நலன்களிலும் கவனம் எடுத்துச் செயற்படுவது அவர்களது தரத்தை மேலும் உயர்த்தும் என்பதில் ஐயமில்லை. தவறும் பட்சத்தில் நோயாளரும், வைத்தியர்களும் தேவை கருதி ஓரணி திரள வேண்டும்.


## மரண அறிவித்தல்

### திருமதி மத்தியாஸ் றோசம்மா



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மத்தியாஸ் றோசம்மா நேற்று (27.11.2010) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மத்தியாஸ் பொன்னையாவின் அன்பு மனைவியும், நவரத்தினம், அருட்சகோதரி யோலண்ட் (மாகாணத் தலைவி திருக்குடும்ப கன்னியர் சபை) புஸ்பராணி, கிறேஸ்மேரி, காலஞ்சென்ற மரியற்றா, அலோசியஸ் ஆகியோரின் அன்புத் தாயும், வசந்தா, இராசேந்திரம், அன்ரன், குணறட்ணம், அமலறூபா, ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (29.11.2010) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வதிரி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித மரியன்னை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வநிவாசா,
பெற்றோல் செட் ஒழுங்கை,
நெல்லியடி.

தகவல்:
மத்தியாஸ்
நவரத்தினம்(மகன்)

(சி-5(2818)

## வேலையாள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் - பிரபல்யமான போன் சொப் ஒன்றிற்குப் பெண்பிள்ளை தேவை. கணினி அறிவு விரும்பத்தக்கது.

## மரண அறிவித்தல்

### ஜெயவேல்சிங்கம் தயாளசீலன்

(முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர், சாமுவேல் சன்ஸ் அன் கம்பனி)



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயவேல் சிங்கம் தயாளசீலன் நேற்று(27.11.2010) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஜெயவேல்சிங்கம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், பூமாலக்குமியின் அன்புக் கணவரும், துவாரகன் (பிரான்ஸ்), சாருண்யா (பிரான்ஸ்), திவ்யா ஆகியோரின் பாசமிகு தந்தை யும், தினேஸ் (பிரான்ஸ்) அன்பு மாமனாரும், விஜயகுமார், திருமதி விஜயகுமார் தவஜோதி (ஜேர்மனி), அருள்ஜோதி, பாலமோகன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி நடராசா கமலாதேவி, கனகசபை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

தகவல்
(106608) மனைவி, பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.நகரில் பலாலி வீதியில் இந்திய உதவித் தூதரக அலுவலகத்தை நேற்று முற்பகல் வைபவரீதியாகத் திறந்துவைத்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இப்படிக் கூறியுள்ளார்.

அலுவலக வாசலில் இருந்து அமைச்சர் கிருஷ்ணா மங்கள வாத்தியங்கள் சகிதம் விழா மேடைக்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

இலங்கைக்கான இந்தியத் தூதர் அசோக் கே.காந்தா, வரவேற்புரை நிகழ்த்தினார்.

அதைத் தொடர்ந்து உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா தமது உரையில் கூறியவை வருமாறு:-

பொதுவாக வடமாகாணத்தைச் சேர்ந்த மக்களுக்கும் விசேடமாக யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த மக்களுக்கும் தென்னிந்திய மக்களுடனான உறவைப் பற்றிக் குறிப்பிடாவிட்டால் இலங்கைக்கும் இந்தியாவுக்குமான உறவுகள் பற்றிய குறிப்புப் பூரணமற்றதாகவேயிருக்கும்.

பல நூற்றாண்டுகளாக யாழ்ப்பாணம் எப்போதும் இந்தியாவின் வரலாறு, கலாசாரம், சமயம் அரச மற்றும் அரசதானிகள், வர்த்தக மற்றும் வாணிகம், கலை, நடனம், இலக்கியம் போன்றவற்றுடன் சம்பந்தப்பட்டே இருந்துள்ளது. யாழ்ப்பாணத் துறைமுகமானது இந்தியாவின் முக்கிய கடல் மார்க்கத்தில் அமைந்துள்ளது. தமிழ் இலக்கியத்தில் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் யாழ்ப்பாணம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காஞ்சிபுரத்திலிருந்து யாழ்பாடி ஒருவருக்குப் பரிசாக அரசனால் வழங்கப்பட்டதால் யாழ்ப்பாணம் எனப்பெயர் பெற்றதாகப் புராணக் கதைகள் கூறுகின்றன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுமுகநாவலர், சி.டபிள்யூ. தாமோதரம்பிள்ளை போன்ற கல்விமான்களும் அறிஞர்களும் பழந்தமிழ் இலக்கியத்தில் தங்களுடைய அறிவாலும் ஆராய்ச்சிகளாலும் தமிழ் இலக்கியத்துக்குப் பெரும் பணி செய்தனர். எனவே இந்திய உதவித் தூதரக அலுவலகம் ஒன்றைத் திறப்பதற்கு முடிவு செய்தபோது யாழ்ப்பாணமே அதற்கு இயல்பானதும் தவிர்க்க முடியாததுமான இடமாகவிருந்தது இயற்கையானதே.

இங்கு பிரசன்னமாக இருப்பவர்களில் பலர் திருச்சிக்கும் பலாலிக்குமிடையேயான நேரடி விமானச் சேவையும் தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்குமான கப்பல் சேவையும் நடைபெற்ற நாள்களைக் கண்டிருப்பீர்கள். அப்போது 'மெட்றாஸ்' என்றழைக்கப்பட்ட சென்னைக்கு உங்களிற் சிலர் திரைப்படம் பார்ப்பதற்காவும் சென்றிருப்பீர்கள். அந்தத் தொடர்புகளுக்குப் புத்துயிர் அளிக்கவேண்டிய சரியான தருணம் இதுவேயாகும்.

### இலங்கையின் முன்னுள்ள பெரும் சவால்கள்

இலங்கையானது சரித்திரத்தின் மிகவும் கடினமானவொரு காலத்திலிருந்து மீண்டுள்ளது. சென்ற ஆண்டு முடிவடைந்த ஆயுதப் போராட்டமானது இலங்கையின் சகல சமூகங்களிடையேயும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த போதிலும் அது பெருமளவில் வடமாகாண மக்களையே பாதித்தது. அவர்களால் ஏற்படுத்தப் பட்டிராதவொரு யுத்த நடவடிக்கைகளின் மத்தியில் அப்பாவி ஆண்கள், பெண்கள் சிறுவர் ஆகியோர் அகப்பட்டிருந்தனர். மனித கேடயங்களாகப் பயன்படுத்தப்பட்ட பல்லாயிரக் கணக்கான உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் யுத்த வலயத்திலிருந்து மீண்டு வெளியே வந்தனர். இலங்கையின் முன்னாலுள்ள பெரும் சவாலானது உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரை மீளக்குடியேற்றுவதும் இலங்கையின் வடபகுதியை மீள்நிர்மாணம் செய்வதுமாகும்.

வடபகுதியிலுள்ள மக்கள் அடைந்த கஷ்டங்கள், கிலேசங்கள் ஆகியவற்றை நிவர்த்தி செய்வதற்கு இந்தியா தன்னால் இயன்றளவு பங்களிப்பை வழங்க முயன்றது. முதலில் உணவு, உடை, மருந்து வகைகள் மற்றும் நாளாந்த தேவைகளுக்கான பொருள்கள் ஆகியவற்றை விரைவாக முகாம்களுக்கு அனுப்பி வைத்தது. எங்கள் அவசர கள வைத்தியசாலை முதலில் புல்மோட்டையிலும் பின்னர் மெனிக்பாம் பகுதியிலும் ஐம்பதினாயிரம் பேருக்கு மேல் வைத்திய உதவியளித்தது. அத்துடன் இந்திய வைத்தியர்கள் மூவாயிரத்துக்கும் அதிகமான சத்திர சிகிச்சைகளைப் புரிந்துள்ளார்கள். இது யுத்தத்தின் கடைசிக் கட்டத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்டோருக்கான இந்தியாவின் அக்கறையின் ஓர் எடுத்துக்காட்டாகும்.

கடந்த மாதங்களில் தங்களுடைய சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு அவர்கள் தற்காலிகத் தங்குமிடங்களை அமைத்துக் கொள்ளும் பொருட்டு கூரைத்தகடுகள், சிமெந்து போன்றவற்றையும் சிறிய அளவில் அவர்கள் தோட்ட வேலைகளை ஆரம்பிக்கும் பொருட்டு விவசாய உபகரணங்களையும் வழங்கினோம்.

### வீடுகளின் நிர்மாணம்

நாங்கள் தற்போது வடமாகாணத்தின் புனருத்தாரணம் மற்றும் மீள்நிர்மாணப் பணிகளில் ஈடுபடுவதன் மூலம் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளுக்குத் துணையாகவுள்ளோம். இன்னும் சற்று நேரத்தின் பின்னர் இந்திய அரசாங்கத்தால் வடக்கிலும் கிழக்கிலும் அமைக்கப்படவுள்ள ஐம்பதாயிரம் வீடுகளின் நிர்மாணத் தொடக்க வைபவத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளேன். இம்மாத ஆரம்பத்தில் இந்தியா விதைகளையும் ஐந்நூறு டிராக்டர்களையும் அதன் இணைந்த பாகங்களுடன் வட மாகாணத்திலுள்ள கமநல நிலையங்களுக்கு வழங்க ஆரம்பித்துள்ளது. வடமாகாண மக்களின் ஜீவனோபாயத்தை மீளமைத்து அவர்கள் தங்கள் வாழ்க்கையைக் கட்டியெழுப்பச் செய்வதில் இந்தியா ஈடுபடும்.

உடனடித் தேவைகளான நிவாரணம் மற்றும் புனரமைப்புப் பணிகளில் எமது கவனத்தைச் செலுத்தும் அதேநேரத்தில் நீண்ட கால மீள் நிர்மாணப் பணிகளும் முக்கியமானவையாகும். அப்படியான பணியை மேற்கொள்வதிலும் இந்தியா உறுதியாகவுள்ளது. இன்னும் சற்று நேரத்தில் இர்கொன் (IRCON) எனப்படும் இந்திய நிறுவனத்தினால் முன்னெடுக் கப் படும் மதவாச்சியில் இருந்து மடு வரையிலான ரயில்பாதை நிர்மாணப் பணிகளை அங்குரார்ப்பணம் செய்து வைப்பேன். மடு- தலைமன்னார் மற்றும் ஓமந்தை - பளை ரயில் பாதைகளை அமைக்கும் பணிகளும் சம காலத்தில் ஆரம்பமாகும்.

### விரைவில் கப்பல் சேவைகள்

இந்தப் பிராந்தியம் அமைதிக்கும் இயல்பு நிலைக்குத் திரும்பும்போது இரு நாடுகளுக்கும் இடையேயான பழைய தொடர்புகளை மீண்டும் தொடர்வதற்கு முன்னுரிமையளிக்க வேண்டியது இரு நாடுகளினதும் கடப்பாடாகும். இதைக் கருத்தில் கொண்டு கொழும்பு - தூத்துக்குடி மற்றும் தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவைகளைத் திரும்பவும் ஆரம்பிப்பதற்கு வேண்டிய புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றிற்கான பேச்சுவார்த்தைகளை சமீபத்தில் நிறைவேற்றியுள்ளோம். தலை மன்னாரிலுள்ள பழைய கப்பல் துறையும் மீளமைக்கப்படும்.

காங்கேசன்துறைத் துறைமுகப் புனரமைப்பு மற்றும் மீள் நிர்மாணப் பணிகளை நாம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம். இது யாழ்ப்பாண வாணிபத்தின் மையமாக மீண்டும் உயிர் பெறும். கலிமர் முனையானது காங்கேசன்துறையில் இருந்து 40 கடல் மைல் தூரத்திலேயே உள்ளது. பலாலி விமான நிலையத்தை மீண்டும் அபிவிருத்தி செய்து இந்தியாவுக்கு இடையேயும் மற்றும் உள்நாட்டு விமான சேவைகளுக்கும் பொருந்தமான இலங்கை அரசாங்கம் அபிவிருத்தி செய்யுமென நம்புகின்றோம்.

எதிர்வரும் வருடங்களில் இத்தகைய பல்தரப்புத் தொடர்புகள் மக்களுக்கும் மக்களுக்குமிடையேயான தொடர்புகளை மட்டுமின்றி இரு நாடுகளின் உள்நாட்டுத் பொருளாதாரத்திற்கும் ஒரு செயலூக்கத்தை அளிக்கும் என நாம் நம்புகின்றோம்.

யாழ்ப்பாணக் கலாசார எழுச்சிக்குப் புத்தூக்கமளிக்கும் முகமாக இந்திய உதவித் தூதரக அலுவலகம் யாழ்ப்பாணத்தில் ஒரு கலாசார நிலையத்தை அமைப்பதற்கும், துரையப்பா விளையாட்டரங்கைச் செப்பனிடுவதற்கும் வேண்டிய உதவிகளை வழங்கும்.மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வரம் ஆலயத்தைத் புனருத்தாரணம் செய்யும் பணிகளையும் இந்தியா ஏற்றுள்ளது.

2009ஆம் ஆண்டு மே மாதத்தில் முடிவடைந்த ஆயுதப் போராட்டமானது முக்கியமான பிரச்சினைகளைப் புரிந்துணர்வுடனும், பரஸ்பர விட்டுக் கொடுப்புடனும் அணுகி உண்மையான தேசிய நல்லிணக்கத்தை நோக்கிய நகர்வுக்கான அரிய சந்தர்ப்பத்தை அளித்துள்ளது. 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் அமைந்த அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுப் பொதி ஒரு நிரந்தர அரசியல் தீர்வுக்கான சூழ்நிலையை ஏற்படுத்தும் என நாம் நம்புகின்றோம். அதற்கான பேச்சுவார்த்தைகள் எல்லா சமுகங்களினதும் பங்களிப்புடன் விரைவில் ஆரம்பமாகும் என நாம் நம்புகின்றோம். அதன் இறுதியான குறிக்கோள் கௌரவத்துடனும் சமாதானத்துடனும் வாழ்வதேயாகும்.

எனது உரையை முடிப்பதற்கு முன் இந்த உதவித் தூதரக அலுவலகத்தைத் திறப்பதற்குச் சகல ஒத்துழைப்புகளையும் வழங்கிய பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையிலான இலங்கை வெளியுறவு அமைச்சுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் வடமாகாண ஆளுநர் மற்றும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் ஆகியோரது அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் இந்த அலுவலகத்தை அமைப்பதில் ஆற்றிய உதவிகளுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய ஒத்துழைப்பும், உதவிகளும் மேலும் தொடரும் என எதிர்பார்க்கின்றேன். இத்தகைய அபிவிருத்தியானது எதிர்காலத்தில் இரு நாடுகளுக்குமான உறவுகளை மேலும் மேலோங்கச் செய்யும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை - என்றார்.

கிருஷ்ணாவின் பேச்சை அடுத்து வெளிவிவகார அமைச்சர் ஜீ.எஸ். பீரிஸ் உரையாற்றினார். அதன் பின்னர் யாழ். துணைத் தூதரக அதிகாரி வி. மகாலிங்கம் நன்றியுரை ஆற்றினார்.

### தூதரக அலுவலகம் திறப்பு

அதனைத் தொடர்ந்து வெளிவிவகார் அமைச்சர் கிருஷ்ணா தூதரக அலுவலகத்தை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா யாழ்.மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன், அ.வினாயகமூர்த்தி, எம்.ஏ. சுமந்திரன், ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின், ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, யாழ்.அரச அதிபர் இமெல்மடா சுகுமார் மற்றும் அரச, அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (ஒ-ஐ-14-15)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 16.11.2010 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டத்தைப் பெற்ற

**செல்வி தயானந்தன் சசிதேவி**

அவர்களை உளம்மகிழப் பாராட்டுவதோடு மேன்மேலும் பல பட்டங்களோடு பதவிகளும்பெற்று சிறப்புடன் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: திரு.இ.ஷாம்குமார்,
திருமதி ஷா.கல்யாணி
துஷாந், திலக்ஷாயினி,
கிரிஷாந்.

மானிப்பாய் கிழக்கு,
மானிப்பாய்.

(சி-572600)



## வேலைவாய்ப்பு

நெல்லியடியும் அதனை அண்மித்த பகுதிகளிலுமுள்ள வர்த்தக நிலையங்களில் பணிபுரிவதற்கு மனேஜர், விற்பனை உதவியாளர், Book Keeper , சிற்றூழியர், கணினி மற்றும் பைண்டிங் தெரிந்தவர்களும் மற்றும் சகல தரத்தினருக்கும் வேலை வாய்புண்டு. சுயவிவரங்கள் தகைமைகளுடனும் அண்மையில் எடுத்த புகைப்படமொன்றுடன் இருபாலாரும் 05.12.2010 இற்குமுன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பப் படிவங்களை கீழ்க்காணும் முகவரியில் காலை 9 மணி முதல் 12 மணி வரைக்கும் நேரில்கையளிக்கவும்.

**நெல்லியடி வாணிபர் கழகம்,**
**பழைய சந்தை மேல்மாடி,**

குறிப்பு: பணியாளர் தேவைப்படும் வர்த்தகர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்/ செயலாளர்,
நெல்லியடி வாணிபர்கழகம்.



## தவறிவிட்டது

இல.77, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி என்னும் முகவரியுடைய வேலு சுந்தரலிங்கம் (513492189V) என்னும் இலக்கமுடைய தே.அ. அட்டை மற்றும் C.M.U. IC Card உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் 20.10.2010 அன்று யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் [illegible] கீழ்க்காணும் முகவரியுடன் [illegible]

தொடர்பு. 158, கோயில் வீதி, நல்லூர். 0771159659



## இதயம் நெகிழ்ந்த அஞ்சலிகள்



எமது சங்கத்தின் முன்னாள் தலைவரும், முன்னாள் யாழ். மேலதிக மாவட்டப் பதிவாளரும், முன்னாள் உடுவில் பிரிவு விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளரு மாகிய

**செல்லத்துரைஅன்னலிங்கம்**

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

யாழ்.மாவட்ட விவாக, பிறப்பு,
இறப்புப் பதிவாளர்கள்சங்கம்,
யாழ்ப்பாணம்.

(சி/572621)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகசாலை

## நூல் ஆய்வு:




மறுமலர்ச்சி, கலைச் செல்வி, மல்லிகை, சிரித்திரன், வசந்தம் ஆகிய சஞ்சிகைகள் யாழ்ப்பாணத்திலிருந்து தோன்றி கணிசமான இலக்கியப் பங்களிப்புகளை வழங்கி மக்கள் மனங்களில் நீங்காத இடத்தைப் பெற்று நிற்கின்றன.

இந்தப் பின்னணியில்தான் ஈழத்து இலக்கியவானில், கடந்த மூன்றாண்டுக ளுக்கு முன்பு தோன்றிய 'ஜீவநதி' தனது இருபத்தைந்தாவது இதழை விரித்துள் ளது. மூன்றாவது ஆண்டின் நிறைவாக வெள்ளிமலரை வெளியிட்டு மணம் பரப்பி நிற்கின்றது. நதியின் உள்ளே கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், நேர்காணல், நூல் விமர்சனம், அனுபவக் குறிப்பு ஆகிய பல்வகை இலக்கிய அம்சங்கள் விசை கொண்டு குதிக்கின்றன.

இன்றைய இளைஞர் சமுதாயம் ஏனோ தானோ என்று ஓடியலைகின்ற காலகட்டத்தில் ஈழத்து இலக்கியத்தின் தொய்வு நிலை கண்டு மனம் வெதும்பி தம்மாலான இலக்கியப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்ற உந்துதலில் ஒரு சில இளைஞர்களாவது ஈடுபட்டு வருவது ஆரோக்கியமான செயற் பாடு என்றே கூறவேண்டும். அந்த வகையில் யாழ்ப்பாணத்திலிருந்து க.பரணீதரன் என்பவரைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு 'ஜீவநதி' என்ற இலக்கியச் சஞ்சிகை தொடர்ந்து வருவது கண்டு இலக் கிய ஆர்வலர்கள் மகிழ்ச்சி கொள்கிறார்கள். இந்த இலக்கியப் பணிக்கு கலாநிதி த.கலாமணி, தெணி யான், கி.நடராஜா, வெற்றிவேல் துஷ்யந்தன் ஆகியோர் உந்து சக்தியாக விளங்குகின்றார்கள்.

ஈழத்தில் தமிழ்ச் சஞ்சிகைகள் வெளியிடுவது என்பது ஒரு அக்கினிப் பரீட்சை என்று சொல்லுவார்கள். அதையும் தாண்டி 3 வருடங்களாக ஜீவநதி வெளிவருவது ஒரு சாதனைதான்.

"ஜீவநதியில் மூத்த எழுத்தாளர்களின் ஆக்கங்கள் எந்த அளவுக்கு இடம் பெறுகின்றனவோ அந்த அளவுக்கு இளைய தலைமுறைப் படைப்பாளிகளின் ஆக்கங்களும் இடம் பெறவேண்டு மென்ற விருப்பத்திற்குச் செயலுருவம் கொடுத்தோம்" என்று ஆசிரியர் கூறியிருப்பது வரவேற் கத்தக்கது.

இந்த மலரில் உள்ள ஆக்கங்கள் அத்தனையும் கனதியாக அமைந்துள்ளன. வாசகர்கள், இலக்கிய ஆர்வலர்கள் அவற்றைத் தேடிப்படிக்க வேண்டிய பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும். 200 ரூபா பெறுமதிகொண்ட இந்நூல் பல்வகைப்பட்ட படைப்பாளிகளின் ஆக்கங்களைத் தாங்கி வாச கர்களுக்கு விருந்தாக அமைந்துள்ளது. தமிழ் இலக்கியத்துறைக்கு வளம் சேர்த்து தன் பாதையில் ஜீவநதி தொடர்ந்து பயணிக்கும் என்ற நம்பிக்கையை வெள்ளி மலர் ஏற்படுத்தி நிற்கிறது.

தம்பு சிவா.

# நாம் தரிசித்த சிந்தனைச் செல்வர்

1956 ஆம் ஆண்டு தை மாதம் 16 ஆம் திகதி என் வாழ்கையின் பசுமை நிறைந்த நாளாகும்.சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சிபெறச் சென்ற கன்னி நாள் அது.அன்று காலை விரிவுரை களுக்குச் செல்ல நாம் ஆயத்தமாகி நின்றவேளை, இரண்டாம் வருடத்திற் பயிற்சி பெற்ற ஒரு அக்கா எம்மிடம் வந்து 'எல்லோரும் நெற்றியிற் பொட்டு வைத்துச் செல்லுங் கள் அல்லாவிடில் உப அதிபர் உங்கள் மனசை வாசித்து விடுவார்' என எச்சரிக்கை செய்தார். நமக்கும் பேரதிர்ச்சியாக இருந்தது. எனினும் அவரின் சொல்லை எல்லோரும் சிரமேற் கொண்டோம்.

உபஅதிபர்,வைஸ் பிறின்சிபல்,வைஸ்ஜயா என்றெல்லாம் எம்மால் அன் போடும் பயபக்தியோடும் அழைக்கப்பட்ட எங்கள் உபஅதிபர் மௌன தவமுனிவர் சிந்தனைச்செல்வர் திரு பொ. கைலாசபதி (B.Sc.)அவர்களது நினைவு தினம் இன்றாகும்.அகத்தியரை ஞாபகம் செய்யும் திருத்தோற்றம், அழ கிய பொன்னிறமேனி, தீர்க்கமாக நோக்கும் கண்கள் இவற்றைக் கொண்டவரே எங்கள் உப அதிபர் ஐயா அவர்கள்.திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலை 1928 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது. உப அதிபர் அவர்கள்1930 ஆம் ஆண்டு பேராசிரியராக இணைந்து கொண்டார். 1957 ஆம் ஆண்டு வரை சேவை செய்து ஓய்வு பெற்றார். உபஅதிபர் அவர்கள் (B.Sc.)பட்டம் பெற்ற வர்.கணி தம்,விஞ்ஞானம் ,அளவையியல் இவற்றில் பாண்டித்தியம் படைத் தவர். இந்த அளவிலேயே அவர் களது வாண்மை விருத்தி இருக்கும் என நினைத்திருந்தால் அது மிக்க தவறான சிந்தனையாகும். ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் தோட்டப்பாடம் முதல் பாலர் கற்பித்தல்முறை என்பவற்றோடு உளவியல் என்பவற்றில் நிரம்பிய அறிவுத்திறன் கொண்டவராக எமக்குக் கற்பித்துள்ளார்.

உப அதிபர் அவர்களுக்கு எல்லாத்துறைகளிலும் எல்லாப் பாடங்களிலும் திறமை இருந்தது. இளமையிலேயே தமிழ் ,ஆங்கிலம் இரண்டையும் கற்றுத் தேறினார்.ஞாபகசக்திக்கு அவருக்கு நிக ராக நாம் வேறெவரையுமே காண முடியாது.சங்கீதத் துறையிலும் அவருக்கு மிகுந்த புலமை இருந் தது. அவருடைய வீட்டுக்கு அயலில் அவர் கள் பரம்பரையினர் கட்டிய மடம் ஒன்று இருந்தமையி னால் பண் முறைகளிலும் அவர் ஆழமான அறிவினைப் பெற்றிருந்தார். கலா சாலையில் ஓய்வு நேரத்தில் சாய்மனைக் கதிரையில் இருக்கும்பொழுது அவர் மனதினுள் பண் ஓதுவதை நாம் அவதா னித்ததுண்டு. உப அதிபர் அவர்கள் ஒரு பேசாமடந்தை. அவசி யமற்று எந்தச் சொல்லையுமே பேச மாட்டார். பிற்காலத்தில் ஒரு நாளைக்குத் தான் எத்தனை வீண் சொற்களைப் பேசினார் என் பதை எண்ணியதும் உண்டு என எங்கள் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஐயா கூறியுள்ளார். போதனைகள் யாவற்றையும் சாதனையாக்கிய பெருமை வைஸ்ஜயா அவர் களுக்கே உண்டு.

## நீத்தார் நயப்புரை

வறுத்தவித்து,மௌன தவமுனிவர் என்ற பெருமைக் குரிய ஐயா அவர்கள் சைவசித்தாந்தம்,தமிழ் இலக்கண இலக்கியம் இவற்றில் ஆழ்ந்த அறிவு படைத்தவர். மாணவர்களாகிய நாம் கேட்கும் சில அசட்டுத்தனமான வினாக்களுக்குகூடப் புன்சிரிப்புடன் பதில் கூறுவார். வெளி உலகச்சல சலப்பை அவர் ஒரு பொழுதும் விரும் பியதில்லை. ஆன்றவிந்து அடக்கிய கொள்கைச் சான் றோனாகவே அவர் விளங்கினார். இந்தமானுடப் பிறவியல் நாம் உதித்தமை கடலைக் கையால் நீந்தினன் காரியம் எனச் சித்தியார் கூறிவைத்த கூற்றை நன்கு உணர்ந்து மதித்துப் போற்றி வாழ்ந் தவர் அவர். இந்த உலகியல் வாழ்வில் அமிழ்ந்திச் சஞ்சலக்கடலில் மூழ்கித் தவியாமல் மாணவர் களாகிய நாம் வாழ்வதற்கு வழி சொல்லித்தந்தவர். நன்றும் தீதும் பிறர்தரவாரா என்ற ஔவை வாக்கும்,உனக்கு நன்மை செய்யத் தெரியுமா? என்ற வினாவும்,தருமம் என்றொரு பொருள் உளது என்ற சிந்தனைக் கூற்றும், தீண்டாதே, தீண்டப்படாதே என்னும் வரம்பும், ,ஒருவனைப் பற்றி ஓர கத்திரு என்னும் சட்ட வரம்பு வைஸ் ஐயா எமக்குத் தந்த சிந்தனைத் துளிகள். இவ்வுலகில் பிராரத் துவ வினையை விருப்பு வெறுப்பின்றி நாம் புசிக்க வேண்டுமென்பதை ஆணித்தரமாக எடுத்துக் கூறியதுடன்,தமது வாழ்கையில் கடைப்பிடித்தும் வாழ்ந்தவர்.

உப அதிபர் அவர்களைப்பற்றி,அவரது சிந்தனைத்துளிகள் பற்றி எடுத் துக்கூறி விளங்க வைத்தவர் எங்கள் பண்டிதமணியாவார்.அவருடைய சிந் தனைகளைப் பேச்சிலும்,எழுத்திலும் நன்கு விளங்க வைத்தார் பண்டிதமணி அவர்கள். இன்று உப அதிபர் அவர்களது சிந்தனைகள் பல் கலைக்கழகத்தில் ஆய்வு செய்யப்படுகின்றது.அவரது தத்துவார்த்தமான கருத்து மிகநுணுகிச் சிந்திக்க வல்லவர்களுக்கே விளங்கும். பார்வையிலே குருவாகிப் பண்பிலே தெய்வமாக விளங்கி யவர் அவர். கலாசாலை மாணவர்கள் தாமெடுக்கும் ஒவ்வொரு கருமத்தையும் அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கியே தொடங் குவார்கள். அவ்வாறு ஆசிபெற்ற நாம் மிக ஆனந்தமாகவே வாழ்கின்றோம்.

1902 ஆம் ஆண்டு யூன் மாதம் ஒன்பதாம் திகதி அளவெட்டிக் கிராமத்தில் திரு அவதாரம் செய்த பெரியார், 1961 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் இவ் வுலகை நீத்து இறைபதம் அடைந்தார். இருபத்தேழு வருடகாலம் சைவாசிரிய கலாசாலையில் ஒளிர்ந்த ஞானச் சுடர் அவர்.

பண்டிதை பொன்.பாக்கியம்,

# நான் பட்ட துயர்.....???

கிளிநொச்சியிலிருந்து
மாத்தளன் தொங்கல் வரை
உள்ளதும் கெட்டு உடு துணியோடு
ஊரினை விட்டு ஓடி வந்தேன்
ஆணிக்கால் கொதிக்க
ஆருயிரும் குலை நடுங்க
தோணிக்கரை கடந்தேன்
தொல்லை பல நான் சுமந்தேன்

ஆறாப்பிணி பிடித்து- என்
உறவு மடிந்ததுவும்
கூறாய் பிரிந்த சொந்தம்
காட்டில் மறைந்ததுவும்
நாராய் இழைத்த உடல்
நோய்க்கோர் மருந்தின்றி
ஆறாத் துயர் பெருக
ஆறுதல் தேடி ஓடி வந்தேன்

பாதை மருங்கு மூடி
பற்றை வளர்ந்து நின்று
ஆரைத் தேடுகின்றீர்
இங்கே என்று கேட்கும்!
காலைப்பிடித்து அழ
கேற்றில் நாயும் இல்லை
கூரை வீட்டிற்கு இல்லை
கட்டில் மேசையில்லை

பாடநூலும் இல்லை
பெட்டகத்தின் பூட்டும் இல்லை
ஆரைக் கேட்டு இங்கு
என் துயர் சொல்வதிங்கு
போரை நோவதின்றி
பட்டதுயர் என்ன சொல்ல....???
உறவில்லா ஊனமானேன்
இறுதியில் நானும் இன்று......

பா.றொணாசி.

# சேதி கேட்டோoooo!

**சத்தமில்லாமல் முற்றத்துக்கு...!**

நாட்டில்.....
இனப்பிரச்சினையே
இல்லையாம்....!
நாலக தேரர்
நன்கு கற்றுக் கொண்ட
பாடமாம் இது!

மட்டக்களப்புக்கு
சிங்கள இன
வேட்பாளரை
நிறுத்த வேண்டுமாம்!

திருகோணமலைக்கு
சிங்கள
பிரதேச செயலாளர்
வேண்டுமாம்!

யாழ்.பொன்னாலைக்கு
சிங்கள
இராணுவம்தான்
தேவையாம்!

வட மாகாண
தமிழ் மக்களுக்கு
சிங்களத்தில்தான்
ஆர்வமாம்!

மொத்தத்தில்
தேரர்
சொல்ல வருவதென்ன......?
அவர் சொல்வதெல்லாம்
இனவாதம் இல்லையாமோ...?
"சத்தமில்லாமலே எமது
முற்றத்துக்கே வந்துவிட்டார்
தேரர்.........!"

"தம்பியுடையான்
சண்டைக்கஞ்சான்
என்பார்களே....!
இன்று நாம்
அஞ்சுகிறோமா.....?

ஏ.எம். கமால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவுடனான அரங்கத்தின் சந்திப்பு மிகத் திருப்தி தருகின்றது என்கிறார் டக்ளஸ்

## டிராக்டர் கையளிப்பு நிகழ்வில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 28

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தமிழ்க் கட்சிகளின் அரங்கம் நடத்திய சந்திப்பு மிகவும் திருப்திகரமாக அமைந்ததாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் டிராக்டர் கையளிப்பு நிகழ்வு நேற்று முற்பகல் யாழ். பொது நூலக முன்றலில் இடம்பெற்ற போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொது உடன்பாடு கண்டு செயற்பட்டுவரும் தமிழ்க் கட்சிகளின் அரங்கம் ஜனாதிபதி மஹிந்தவைச் சந்தித்து பேச்சு வார்த்தைகளை நேற்றுமுன்தினம் நடத்தியிருந்தது. இந்தச் சந்திப்பானது மிகவும் திருப்தியானதாகவும், நம்பிக்கையானதாகவும், முன்னேற்றம் தருவதாகவும் அமைந்தது.

மக்களின் விடிவுக்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்து அரசியல் கட்சிகளும் தமது முரண்பாடுகளை மறந்து நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகளில் இறங்கிச் செயற்பட முன்வர வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தமிழ்க்கட்சிகளின் அரங்கத்தில் இணையவருமாறு அழைப்பு விடுக்கின்றேன் - என்றார்.

இதேவேளை தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஜனாதிபதியுடனான சந்திப்பு தொடர்பில் திருப்தியில்லை என்று தெரிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(ஒ-14-15)


**பிறவுண் வீதியில் காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, பிறவுண் வீதிக் கிளை ஒழுங்கையில் இரண்டாவது காணி. பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி என்பனவற்றுக்கு அருகில் 1 பரப்பு 13 குழி (அண்ணளவாக 1¾ பரப்பு) காணி சுற்றுமதில், கேற், கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

**தொடர்புகளுக்கு : 0777354177**

**இலங்கை வங்கி**

முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை கருத்தரங்கு

இன்று (ஞாயிறு) 1.00 மணி - 5.00 மணிவரை

★ பொது அறிவு ★ பொது உளச்சார்பு

★ ஆங்கிலம்

ஏனைய நேரங்கள் : வகுப்பில் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : 0212223382

யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புகள் பிரிவு, யாழ்.போதனா வைத்தியசாலை எதிரே


### பண்டத்தரிப்பு இந்துவில் 'இந்து நாதம்' வெளியீடு

யாழ்ப்பாணம். நவ. 28

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தின் ''இந்து நாதம்'' நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் சண்முக சுந்தரம் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

மாணவன் து.தனஞ்செயன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை பீடாதிபதி பேராசிரியர் மா. சின்னத்தம்பியும் சிறப்பு விருந்தினராக ஹட்டன் நஷனல் வங்கி மானிப்பாய் கிளை முகாமையாளர் எம். ஜே. லோறன்ஸ் ஆகியோர் கலந்து கொள்வர்.

(ஒ-10)


**VACANCY**

Dwellco (Pvt) Ltd

**Take your career to New heights with Dwellco**

Over the past 20 years, Dwellco has achieved a well-earned reputation for excellence in the Building Construction industry, building homes and commercial buildings of exceptional design, durability and aesthetics offering **TURNKEY** solutions to our customers.

We currently have vacancies in the following categories:

**SITE ENGINEERS**

Applicants should possess qualifications in NDT (Civil) or NAB (Special Apprenticeship) with over 5 year's experience is essential Should be committed and willing to work long hours.

**SITE SUPERVISOR (CIVIL)**

Over 10 year's experience in the building construction industry, attention to detail and the willingness to work long hours are a must. Knowledge of plumbing and drainage would be an advantage.

**SITE SUPERVISOR (STEEL)**

Previous experience at a similar level in the fabrication of steel buildings is essential for this position. Selected candidates should be committed, methodical, honest and willing to work extra hours.

**Please apply immediately with your C.V. by e-mail or post to;**

**The Human Resource Manager,**

**Dwellco (Pvt) Ltd,**

1090, Sri Jayawardenapura Road, Rajagiriya.

Tel: (011) 2873471-3 Fax: (011) 2873475

E-mail: dwellco@sltnet.lk, Website: www.dwellco.com

Jaffna Branch: Point Pedro Road, Kopay South, Kopay.

Tel: 0212230003 Fax: 0212230004

(106504)

**SPECIAL AIR FARES**



| | |
|---|---|
| COLOMBO/ LONDON / COLOMBO | 79000.00 |
| COLOMBO/ DOHA | 24500.00 |
| COLOMBO/TORONTO | 76000.00 |
| COLOMBO/SINGAPORE/COLOMBO | 27500.00 |
| COLOMBO/TIRUCHIRAPALLY/COLOMBO | 13300.00 |
| COLOMBO/ CHENNAI/COLOMBO | 13500.00 |
| COLOMBO/ KULALUMPUR/COLOMBO | 26900.00 |
| COLOMBO/ ROME/COLOMBO | 80000.00 |
| COLOMBO/SYDNEY/COLOMBO | 92500.00 |

ALL TAXES INCLUDES — CREDIT CARDS ACCEPTED

ABOVE FARES ARE SUBJECT TO SEAT AVAILABILITY

FUTHER DETAILS PLEASE CONTACT

METRO TRAVELS & TOURS (PVT) LTD TEL:0215673555, 5673666

No- 62/33, Stanley Link Road, Jaffna. FAX 021 2220404

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

**The Only Official French Language Centre in Jaffna**

**Learn French the French Way**

சர்வதேச மொழியான French மொழி வகுப்புக்கள் French Embassy இன் அனுசரணையுடன் பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாகக் கற்பிக்கப்படுகின்றது.

மாணவர்கள், சிறுவர்கள், வெளிநாட்டுக்குப் போகிறவர்கள் எவரும் கற்றுக்கொள்ளலாம்......

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

**61, Kachcheri-Nallur Road, Jaffna**

**Phone : 0212228093**

**E-mail : alliancejaffna@yahoo.com**

மேலதிக விவரங்களை நேரில் / தொலைபேசியினூடாகப் பெறலாம்.

(106598)

**இறைச்சிக் கோழி விற்பனை**

நிறைகூடிய புறொயிலர்,கல்பேட்ஸ் என்பன சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் தினமும் எந்த நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.

(புறொயிலர் சுத்தம் செய்யப்பட்டது 450/= மட்டும்)

தொடர்பு:- மஸ்ரியாம் சென்ரர்,

61, இராமநாதன் வீதி, கலட்டி. T.P: 021 7912783

***Personal English Classes***

**பிரத்தியேக சிறுகுழு ஆங்கில வகுப்புகள்**

134, இராசாவின் தோட்ட வீதி, (நாவலர் வீதிக்கு அருகில்), யாழ்ப்பாணம், தொ.பே: 0776110802

தொலைபேசியில் முன்பதிவு செய்து வரவும்

**General English Leading to Spoken**

அடிப்படை இலக்கணம், பிழையற்ற சொற்பிரயோகம், வசன அமைப்பு, வாசித்துக்கிரகித்தல், கட்டுரையாக் கல், சம்பாஷனைகள் (Role Play), என்பவற்றின் மூலம் கற்பிக்கப்படும்.

***Business English Communication & Presentation***

தொடர்பாடல்களின் அடிப்படை முறைகள், கருவிகள், இடையூறுகள், வணிகக் கடிதங்கள், விவரணங்கள், விளம்பரங்கள், நேர்காணல் (Interview) என்பவற்றின் மூலம் கற்பிக்கப்படும்.

**Deutsch, Dutch, French, Italian**

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

**Vivekananda Academy**

**(Centre for International Language Studies)**

**No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.** (அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்

GOV. Reg. No W/A 76795

T.P : 077 4842464, 021 3216928, 0779927117

**தெகிவளையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தொடர் மாடி மனைகள் விற்பனைக்குண்டு**



தெகிவளை பீற்றர்ஸ் வீதியில், Northpole Construction (Pvt) Ltd. நிறுவனத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள 15 சொகுசு வீடுகள் மட்டுமே கொண்ட தொகுதியில் 3 Bedroom, 4 Bedroom வீடுகள் விற்பனைக்குண்டு. விலை 73 இலட்சத்திலிருந்து.

**தொடர்பு: 0777 354177**

**கலைமகள் அழகு நிலா**

**Beauty Accademy**



2010 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு அகவொளி மண்டபத்தில் 21.11.2010 அன்று சான்றிதழ் வழங்கும் வைபம் இடம்பெற்று, கியூடெக் கரித்தாஸின் முன்னாள் இயக்குநர் அருட்பணி கி.பே.ா.ஜெயக்குமார் அவர்களால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

புதிய பிரிவு எதிர்வரும் 2010.12.01 அன்று ஆரம்பமாகும். பயிற்சி முடிவில் Diploma சான்றிதழ் வழங்கப்படும்.

வயதெல்லை இல்லை. அனைவரும் பயிற்சிகளில் பங்குபற்றி சான்றிதழினைபெற்றுக்கொள்ளலாம்.

**பயிற்சிக்கான அனுமதிக் கட்டணம் 3,000/-**

பயிற்சி நேரம்: மு.ப. 10 மணிமுதல் - மாலை 4 மணிவரை

மேலதிக விவரங்களுக்கு: கலைமகள் அழகுநிலா, இல 390, பிரதான வீதி, பஸ்தியன் சந்தி

தொடர்பு: 0773719071, 0214908151.

**உங்கள் குழந்தையின் ஒளிமயமான வாழ்விற்கு சிறந்த அத்திவாரமிட வேண்டுமா?**

யாழ்.நகரில் Jan, 20முதல் AMI முறையிலான பாலர்கல்வி

Trilliam Montessori "Our Children Bloom"

- Dr.Montessori ஆல் அறிமுகப்படுத்தப்பட்ட பாலர்கல்விமுறை
- சிறுவர்களுக்கான நூலகவசதி
- சிறார்களுக்கான சிறந்த வகுப்பறை வசதி

Medium : ஆங்கிலம், தமிழ்

2½ வயது முதல் 5 வயது வரையான குழந்தைகளுக்கான அனுமதிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அனுமதிகள் மற்றும் மேலதிக விவரங்களுக்கு

Mrs.P.Pirathajine (AMI (Dip), Bsc (Teaching Tech)

45, Sangilian Veethy, Nallur, Jaffna.

T.P: 077 6078580

**பட்டதாரிகளுக்கான ஓர் சந்தர்ப்பம்!**

**Study in London**

விரும்புகின்ற துறையில் பட்டப்பின்படிப்பை (Post graduate) விரும்புகிறீர்களா?

குடும்பத்துடன் லண்டன் பயணமாக விருப்பமா?

★ ஆங்கில அறிவுபற்றிக் கவலைப்படவேண்டாம்

★ நீங்கள் விரும்புகின்ற பல்கலைக்கழகம்/கல்லூரிக்கு செல்லும் சந்தர்ப்பம்

★ கல்லூரிக் கட்டணம் குறைந்தது 2000 ஸ்ரேலிங் பவுண் (316,000/-)

★ Sponsor ஏற்பாடுகள் குறைந்த செலவில்

★ HNDM/HNDA/HNDIT/NDT/ etc உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ படிக்கும் காலத்தில் பகுதிநேர வேலைவாய்ப்பும் பூர்த்திசெய்தன் பின்னர் 2 வருட Work Permit உத்தரவாதம்

★ உங்களுடைய அனைத்து ஆவணங்களுடனும் முன்கூட்டியே தொலைபேசியூடாக அனுமதிபெற்று நேரில்வரவும்.

Note: ஆங்கிலம் மற்றும் பட்டப்படிப்பிற்கு London செல்வதற்கான விண்ணப்பங்களும் எம்மால் ஏற்கப்படும்.

**05 வருட அனுபவம் பெற்ற நம்பிக்கையான நிறுவனம்**

SEC, 620, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (நாச்சிமார் கோயிலுக்கு எதிரே)

021 222 0555

Hotline 0777919293

www.sec.edu.lk


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருளைக் கிழங்கை விண்ணில் செலுத்தி இங்கிலாந்து குழந்தைகள் சாதனை



அமெரிக்காவின் டிஸ்கவரி விண்கலம் திட்டமிட்டபடி புறப்படுவது மிக அரிது. புறப்படும் நேரத்தில் எரிபொருள் தாங்கி சரியில்லை என்பார்கள். வெளியில் ஓடு கழன்று விழுந்துவிட்டது என்பார்கள். நாலைந்து நாள் கவுன்ட் டவுன் முடியப்போகும் நேரத்தில் விண்கல இன்ஜினை நிறுத்தி விட்டு இறங்கி விடுவார்கள்.

இங்கிலாந்தில் சத்தமில்லாமல் ஒரு சாதனையைப் படைத்திருக்கிறார்கள் டேவன் கவுன்டியின் ஆஷ்பர்டன் நகரில் உள்ள ஆரம்பப்பள்ளி குழந்தைகள்.

குடித்துவிட்டு தூர வீசிய பழைய பிளாஸ்டிக் போத்தல், ஒரு உருளைக்கிழங்கு, ஹீலியம் நிரப்பப்பட்ட அழுத்தமான பலூன் என்பவற்றை நூல் போட்டு கட்டினார்கள். காட்சிகளைப் பதிவு செய்ய ஒரு சிறிய கமரா. எங்கே தரையிறங்குகிறது என கண்டுபிடிக்க ஜிப்எஸ் கருவி. வேகமாகத் தயாரானது விண்கலம்.

குழந்தைகளால் தயாரிக்கப்பட்டதால் உருளைக்கிழங்குக்கு கிறிஸ்துமஸ் தாத்தா போல அழகுபடுத்தினார்கள். வெள்ளை தாடி, மீசை, சிவப்பு தொப்பி தயாரிகிவிட்டார் சான்டாகிளாஸ் டிரைவர்.

பிளாஸ்டிக் போத்தலில் அவரை வசதியாக உட்கார வைத்தார்கள். பாடசாலைக்கு அருகே உள்ள பூங்காதான் ஏவுதளம். லாஞ்ச் பண்ணலாமா மிஸ் எனக் குழந்தைகள் கேட்டனர். மிஸ் பச்சைக்கொடி அசைக்க.. பலூனை பறக்கவிட்டது மழலைப் பட்டாளம்.

ஸ்புட்னிக்2 என்று பெயரிடப்பட்ட விண்கலம் மெதுவாக உயரே புறப்படத் தொடங்கியது. கைதட்டியும் உற்சாகக் குரல் எழுப்பியும் விடைகொடுத்து அனுப்பின குழந்தைகள்.

நூறு, இருநூறு அல்ல.. 90 ஆயிரம் அடி உயரம் (சுமார் 27 கி.மீ.) வரை சீராகப் பறந்தது. பலூன் அதற்கு மேல் தாக்குப்பிடிக்க முடியவில்லை. டமார் என தயாராய் விரிந்தது பரசூட். கிறிஸ்துமஸ் தாத்தாவின் போத்தல் விண்கலம் மெல்ல இறங்கத் தொடங்கியது. காற்றின் போக்கில் பறந்து 225 கி.மீ. தொலைவில் உள்ள ஹாம்ப்ஷயர் நகரில் தரையிறங்கியது. ஜிப்எஸ் உதவியுடன் மிகத் துல்லியமாக விண்கலத்தைக் கண்டுபிடித்தனர் குழந்தைகள். விண்ணில் அது எடுத்த புகைப்படங்களை ஆச்சரியப்பட்டு ரசித்தனர்.

தங்களது விளையாட்டு சிறப்பாக முடிந்ததில் அவர்களுக்கு அபரிமிதமான மகிழ்ச்சி. சவாலான விடயத்தை சர்வசாதாரணமாக சாதித்திருக்கும் குழந்தைகளை இங்கிலாந்தே பாராட்டுகிறது.

## உலகின் அதிவேக கார் உருவாக்கம்; இங்கிலாந்து விஞ்ஞானிகள் ஆர்வம்

உலகில் அதிவேகமாகச் செல்லக்கூடிய கார் ஒன்றை இங்கிலாந்து உருவாக்கவுள்ளது. உலகிலேயே அதிவேகமாக இயங்கும் புல்லட் ரயிலை விட இது அதி வேகம் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதிவேக புல்லட் ரயில் சீனாவில் ஓடுகிறது. இது மணித்தியாலத்துக்கு 1200 கி.மீ. வேகத்தில் பாய்ந்து செல்கிறது.

ஆனால் அதைவிட அதிவேகமாகச் செல்லக்கூடிய கார் ஒன்றைத் தயாரிக்கவுள்ளதாக இங்கிலாந்து விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

மணித்தியாலத்துக்கு சுமார் 1600 கி.மீற்றர் வேகத்தில் பாய்ந்து செல்லத்தக்க விதத்தில் இக்காரை இங்கிலாந்து விஞ்ஞானிகள் உருவாக்க உள்ளனர்.

கார் தயாரிக்கும் பணியில் ரிச்சர்ட் நோபல் என்பவர் தலைமையிலான குழுவினர் ஈடுபட்டுள்ளனர். இப்பணி எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட உள்ளது.

அதில், அதிசக்தி வாய்ந்த ஜெட் என்ஜின் மற்றும் ரொக்கெட் பொருத்தப்படுகிறது. மேலும், இதன் பாகங்கள் மிக மெல்லியதான உலோக கலவையினால் அமைக்கப்பட உள்ளன. மேலும் 4 அலுமினிய சக்கரங்களும் பொருத்தப்பட உள்ளன. எதிர்வரும் 2012ஆம் ஆண்டு இக்கார் பாவனைக்கு வரும். அப்போது அதிவேகமாக இயங்கி உலக சாதனை படைக்கும் என விஞ்ஞானி ரிச்சர்ட் நோபல் தெரிவித்துள்ளார்.

ரிச்சர்ட் நோபல் ஒரு சிறந்த பொறியியலாளர். சாதனை படைப்பதில் ஆர்வம் படைத்தவர். கடந்த 1983ஆம் ஆண்டு மணிக்கு 1,019 கி.மீற்றர் வேகத்தில் செல்லும் டர்போ ஜெட் காரை நிவேதா பாலைவனத்தில் ஓட்டிக் கடந்து இவர் சாதனை படைத்துள்ளார் .

சுவர்ணமஹால்
பினான்ஸியல் சேர்விஸஸ் லிமிடட்
யாழ் மக்களுக்கு ஒரு பொன்னான சந்தர்ப்பம்
03 மாத நிலையான வைப்புக்கு ஆண்டு ஒன்றிற்கான வட்டி வீதம்
14.00%
(A.E.R.14.75%)
(சிரேஸ்ட பிரஜைகளுக்கு)
இந்த அரிய வாய்ப்பு எமது கிளை யாழில் தடம் பதிக்கும் நாளான 06.12.2010 அன்று மட்டுமே
இல. 338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு : டிலாணி 077 22 68 555
: ராகுலன் 077 22 68 723
எமது பிரதான சேவைகள்
- நிலையான வைப்புகள்
- சேமிப்பு வைப்புகள்
- தங்க நகை அடகு சேவை
- வாடகை கொள்வனவு
- நிதிக்குத்தகை (லீசிங்)
SFS
சுவர்ணமஹால்
பினான்ஸியல் சேர்விஸஸ் லிமிடட்
A trust etched in gold
இல: 654, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 0112 556160-4
தொலைநகல் : 0112 595062/2589923 மின் அஞ்சல்: info@sfs.lk இணையத்தளம்: www.sfs.lk
பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்:
கலாநிதி சோமா எதிரிசிங்க (அவைத்தலைவி) ஜே.எச். எதிரிசிங்க (பிரதி அவைத்தலைவர்) ஏ.டி.. எதிரிசிங்க (பணிப்பாளர்) என்.பி. எதிரிசிங்க (பணிப்பாளர்) ஏ.எஸ்.எதிரிசிங்க (பணிப்பாளர்) சுனில் அபேரட்ன (பணிப்பாளர்) FCA(SL), FSCMA(UK), FCMA (SL), CMA (AUS) மஹேந்திர டி சில்வா (பணிப்பாளர்) MBA, FCA, FSCMA (AUS) சமீர கனேகொட (பணிப்பாளர்/நிறைவேற்று அதிகாரி) ACA, B.B.Mgt.(Acc), ASCMA.
இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் 1988ம் ஆண்டின் 78ம் இலக்க நிதி கம்பனிகள் சட்டத்திற்கமைவாக நிதிக்கம்பனியாக பதிவு செய்யப்பட்டுள்ளது
பதிவு இல : PB 594



Run one
ரன் வன்
உங்கள் தங்க நகைகளை
இலவசமாக
மீட்டுக்கொள்ளும்
வாய்ப்பு!
நிபந்தனைகளுக்கு உட்படும்
முதலாம் பரிசு ரூ.100,000/=
இரண்டாம் பரிசு ரூ. 75,000/=
மூன்றாம் பரிசு ரூ. 50,000/=
3 மாதங்களுக்கு ஒரு சீட்டிழுப்பு!
உங்கள் தங்க நகைகளுக்கு அதிகுறைந்த வட்டியில் அதிகூடிய கடன் தொகை!
24 K ரூ. 33,500/=
மாதாந்த வட்டி 1.16%
முதலாவது சீட்டிழுப்பு (ஜூலை 15 – ஒக்டோபர் 14)
வெற்றியீட்டிய அடகுச் சீட்டு இலக்கங்களும் கிளைகளும் கீழே தரப்பட்டுள்ளன.
1499 - வவுனியா கிளை 3301 - குருநாகல் கிளை 1093 - குருநாகல் கிளை
தொடர்பு கொள்ளவும்: (011) 2370870
யூனியன் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வை-பை கதிர்கள் மனிதர்களைத் தாக்குகின்றதா?

வை-பை ( wi&fi) கதிர்களினால் தாவரங்களின் வளர்ச்சி பாதிக்கப்படுவதாகவும் , சிலவேளைகளில் இவை மனிதர்களிலும் பாதிப்பை ஏற்படுத்தலாம் எனவும் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த வெகனிங்கன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.இந்த ஆய்வின்போது விஞ்ஞானிகள் வெவ்வேறு வகையான கதிர்களை 20 மரங்களுக்கு சுமார் 3 மாதங்கள் வரை வழங்கி ஆராய்ச்சி செய்துள்ளனர்.

இதன்போது வை-பை கதிர்களுக்கு அண்மையில் காணப்பட்ட மரங்களின் இலைகள் வேகமாக உதிர்ந்ததுடன், மரங்களில் கசிவுகளும் ஏற்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இதனூடக வெளிப்படும் மின்காந்த அலைகள் சோளப்பயிர்களின் வளர்ச்சியினையும் பாதித்ததாகவும், சில வேள்ளை இவை மனிதனையும் பாதிக்கும் சாத்தியம் அதிகம் எனவும் அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்..

இது தொடர்பான ஆய்வு தற்போது ஆரம்ப கட்டத்திலேயே உள்ளதெனவும் இதனை சரியாக உறுதிப்படுத்த சில மாதங்கள் ஆகலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.


இக்கதிர்கள் மட்டுமன்றி வாகனங்களில் இருந்து வெளியாகும் புகை, கையடக்கத்தொலைபேசி கோபுரங்களில் இருந்து வெளியாகும் கதிர்கள் கூட தாவரங்களைப் பாதிக்கின்றமை நிரூபிக்கப்பட்ட உண்மையாகும்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FORCE
FORCE MOTORS LIMITED

# குறைந்த விலையில் உங்களுக்கு பொருத்தமான சவாரியை தேர்ந்தெடுங்கள்

JIALING

TEMPO Traveller

NEW TEMPO TRAVELLER



மேர்சிடெஸ் பென்ஸ் தொழினுட்பத்துடன்

ஒரு வருடம் அல்லது கி.மீ. 100000 இற்கான உத்தரவாதம்

ரூ. 2,450,000/-
(VAT அடங்கலாக)

விசேட தன்மைகள்
• ரூப் ஹெச் • வெப்ப வெளியேற்றி • மேலதிக மின்குமிழ்
• தீயணைக்கும் கருவி • உடன் உயிர்ப்பிக்கக்கூடியது

எமக்கு சுமையில்லாது, எமது சுமையை சுமக்கக்கூடிய இலங்கையின் ஒரே 2WD வாகனம்

KARGO KING
கார்கோ கிங்

2WD



ஒரு வருடம் அல்லது கி.மீ. 100000 இற்கான உத்தரவாதம்

JIALING-HONDA கூட்டு தொழினுட்பத்தில் உறுவானது



ST49 - 49 CC
ரூ. 79,990/-



JL90-A - 90 CC
ரூ. 108,990/-



JL100-8 - 100CC
ரூ. 114,990/-



CG125 - 125CC
ரூ. 109,990/-



ST150ZH - 150 CC
முழுத்தொகை
219,990/-
விசேடவிலை
189,990/-

சகல அபான்ஸ், அபான்ஸ் உந்துருளி, JVC/HAIER, A-Z காட்சியறைகளிலும் கிடைக்கும்

அபான்ஸ் ஒடோ இல 212, நீர்கொழும்பு வீதி, பேலியகொடை • கொழும்பு: 077 7458327, 077 4537513, 077 6300901 • கம்பஹா, குருணாகலை மற்றும் கிழக்கு: 0773 569569 • வடமத்திய, மத்திய மற்றும் வடக்கு: 077 3226475 • அனுராதபுரம்: 0777 05800 • தெற்கு: 077 3697559

உந்துருளி காட்சியறைகள்
நெல்லியடி: 077 5122911/021 2264934/021 2262472
சுண்ணாகம்: 021 2240440 • சங்கானை: 021 4920660
திருநெல்வேலி: 077 7684068/021 2220248

அபான்ஸ்



# சர்வதேச புகைப்பட மற்றும் விளம்பர கண்காட்சி

Don't Miss

# Image TODAY COLOMBO

CONCURRENT EVENTS

ஆபிஸ் எக்யூப்மெண்ட், பர்னிச்சர் & கம்ப்யூட்டர் கண்காட்சி

Office TODAY COLOMBO

www.office2day.biz

Be there to Benefit

மொபைல்ஸ், லேப்டாப் & எல்க்ட்ரானிக் கேட்ஜெட்ஸ் கண்காட்சி

MOBILE X LAPTOP Expo

www.office2day.biz

## 3, 4 & 5 Dec 2010

Timing: 10.00 am - 6.30 pm

பி எம் ஐ சி எச், கொலம்போ

www.imagetoday.biz



ORGANISERS
BUY SELL interactions

GOLDEN SPONSOR
HAYLEYS Consumer
FUJIFILM







MEDIA PARTNERS
Colombotown.com
SIGN GRAPHICS

ONLINE PARTNERS
indiamart.com
tradeindia.com
trade4india.com

| 100 அதிகமான எக்ஸிபிட்டார்ஸ் | நியூ டெக்னாலஜி | வைடு ரேன்ச் ஆஃப் ப்ராடக்டு | பெஸ்ட் டிஸ்கவுண்ட் | இன்னவேடிவ் கான்செப்டு | க்ரியேட்டிவ் ஐடியாஸ் | இன்டர்நேஷனல் எக்ஸிபிட்ஸ் | ப்ராடக்ட் லாஞ்சஸ் | மேஜர் பிராண்டுஸ்

For Details Contact : +94 755735131 / 724572918 / 777783422


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## நவம்பர் 28 முதல் டிசெம்பர் 04 வரை

தருபவர் - வித்யா



### மேடர்

குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். மதிப்பு, கௌரவம் மேம்படும். புதியவர்கள் சிலரின் உதவிகள் கிடைக்கும். செலவுகள் அதிகரிக்கும். குறைந்த செலவில் முடியும் என நினைத்த காரியங்களுக்கு எல்லாம் அதிக அளவில் செலவாகும். உடல் நலக்குறைவால் அவ்வப்போது அலுப்பு, சலிப்பு ஆள்கொள்ளும். வளர்ந்த பிள்ளைகள், பெண் குழந்தைகள் வழியிலும், அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றவும் கணிசமான பணத்தைச் செலவிடலாம். நீண்ட தூரப் பயணங்கள் செல்லத் திட்டம் போடுவீர்கள். எதிர்ப்பு, போட்டிகள் விலகும். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் திருப்தி கரமான நிலைமை காணப்படும். அரசியல்வாதிகள், அதிகாரிகள், தந்தை, உறவுப் பெண்கள், சகோதரிகள், மனைவி வழி உறவுகள், சகோதரர்கள், பங்காளிகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். ஆதாயமில்லாத அலைச்சல் உண்டு. மற்றவர்களுக்காகச் செலவிடலாம்.



### இடபர்

ஊக்கம் உற்சாகமாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில காரியங்களைச் செய்வீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கிக் கொடுப்பீர்கள். திட்டமிட்ட வேலைகளை செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும் சூழ்நிலை உருவாகும். பல நாள்களாக இழுபறியாக இருந்த கடன் மிகுதிகள் வரலாம். பிள்ளைகளுக்காக மனைவி, மக்களுக்காக பொன், பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். அவர்களின் ஆலோசனைகளை கேட்டு செயற்படுவதன் மூலம் ஆதாயம் பெறலாம். தம்பதியர் இடையே சண்டை, சச்சரவுகள், வாக்குவாதங்கள், வீண் விவகாரங்கள் உருவாகலாம். சகோதரர்களின் ஏட்டிக்குப் போட்டியான செயல்பாடுகளாலும், அவர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்காததாலும் எரிச்சல் அடையலாம். பணிபுரியும் பெண்கள் கடும் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். தேக ஆரோக்கிய விடயத்திலும் அக்கறை காட்ட வேண்டும். வாகனங்களால் திடீர் செலவுகள் உருவாகலாம். மருத்துவச் செலவு கூடும். பணம் வரும். பரபரப்பாகச் செயற்படலாம்.



### மிதுனர்

எந்தக் காரியத்தையும் ஒன்றுக்கு இரண்டு முறை யோசித்துச் செய்ய வேண்டும். எதிர்பாராத திடீர் செலவுகள் உருவாகலாம். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். ஆதாயமில்லாத அலைச்சல்கள் அதிகரிக்கும். புத்துணர்ச்சி, உத்வேகத்துடன் செயற்படுவீர்கள். நீண்ட நாள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். எந்த வேலையையும் பொறுப்பாகச் செய்து மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். தொழில் ரீதியான விடயங்களில் எச்சரிக்கையாக செயல்பட வேண்டும். அசமந்தமாக இருந்தால் மேலதிகாரிகளின், நிர்வாகத்தினரின் கண்டிப்பிற்கு ஆளாகலாம். விமர்சனங்களையும் சந்திக்கலாம். மனைவி அல்லது கணவன், குழந்தைகள் தொடர்பான வகையில் வீண் பிடிவாதங்களைத் தவிர்த்து, விட்டுக் கொடுத்து செல்ல வேண்டும். உடல் நலத்திலும் அதிக அக்கறை காட்ட வேண்டியது அவசியம். எதிர்பார்த்த பணம் வராமல் இழுத்தடிக்கலாம். எந்த வேலையையும் சுலபமாக நடத்திக் கொள்ள முடியாமல் தவிக்கலாம். சக ஊழியர்கள், வேலையாள்கள் உங்களின் வேகத்திற்கு செயல்படாமல் எரிச்சல் உண்டாக்கலாம். சகோதரர்கள், பங்காளிகள், தகப்பனார், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்களால் நன்மை உண்டு. குழப்பம், தடுமாற்றம் நேரும். செலவு கூடும்



### கடகர்

சுக, சௌகரியங்கள் அதிகரிக்கும். விருந்து, விசேஷங்களால் வீட்டில் கலகலப்பு உண்டு. அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகி திருப்தி தரும். எதிர்பாராத திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். நடக்காத சில விடயங்களை நினைத்து வருத்தம் அடைவீர்கள். தடைப்பட்ட சுபகாரியங்களில் முன்னேற்றம் உண்டு. தொழில் ரீதியான செல்வாக்கு அதிகரிக்கும். சிறிது, சிறிதாக சேமித்த பணம் கணிசமாக கைக்கு கிடைத்து, அதை நிலம், பூமியிலோ , பொன் நகைககள் வாங்குவதிலோ முதலீடு செய்யலாம். உறவினர்கள் மத்தியிலும், ஊரார் மத்தியிலும் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். உடன் பிறப்புக்கள் உதவிகரமாக இருப்பர். புதிய இடங்களில் பணிபுரிந்தோர், விரும்பிய இடங்களுக்கு அதிக செலவில்லாமல் இடமாற்றம் பெறலாம். வழக்கு விவகாரங்களில் வெற்றி கிடைக்கும். தகப்பனார், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் சிரமங்கள், செலவுகள் உண்டாகலாம். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத உதவிகள் கிடைக்கும்.



### சிங்கர்

திட்டமிட்ட காரியங்கள் சரியான நேரத்திற்கு நடக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். நீண்ட நாள்களாக வராமல் இழுத்தடித்த பணவரவு வரலாம். எதிர்பாராத பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். நண்பர்கள் வழியில் உதவி கிடைக்கும். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். உடல் உபாதைகளாலும், நோய் பாதிப்புகளாலும் அவ்வப்போது சிரமப்படலாம். குறுக்கு வழி சிந்தனைகளை தவிர்த்து எதிலும் நேர் வழியில் செயல்பட வேண்டும். சுபகாரிய விடயங்களில் எதிர்பார்த்த முன்னேற்றம் காண்பது கடினம். வளர்ந்த பிள்ளைகளை விமர்சிப்பதால், அவர்களின் கோபத்திற்கு ஆளாகலாம். பணவரவுகளிலும் திருப்திகரமான நிலைமை இருக்காது. பெண்கள், பயணங்கள், பொழுது விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். அரசாங்க காரியங்கள் எளிதில் முடிவடையாமல் இழுத்தடிக்கலாம். அரசியல்வாதிகள் அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். தாயார் உடல் நலன் தொடர்பான வகையிலும் கவனம் அவசியம். செலவு, அலைச்சல்களுக்கு ஆள்படலாம்.



### கன்னி

தேக ஆரோக்கிய குறைபாடுகளால் அவதிப்படலாம். எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறாமல் ஏமாற்றத்தைச் சந்திக்கலாம். ஒரு காரியத்திற்காக கணிசமான பணத்தை செலவிடலாம். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த காரியங்கள் முடிவுக்கு வரும். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். எதிலும் ஊக்கம், உற்சாகமாக செயல்படும் சூழ்நிலை உருவாகும். தொழில் ரீதியாக பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள் மத்தியில் உங்களின் முக்கியத்துவம் அதிகரிக்கும். மனைவி, குழந்தைகளின் தேவைகளை குறைவின்றி நிறைவேற்றி வைப்பீர்கள். அவர்களின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். மந்தம், சோம்பலை விலக்கி எதிலும் சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் முன்னேற்றமான நிலைமை காணப்படும். அரசகாரியங்கள் அனுகூலமாக முடியும். அரசியல்வாதிகளை நம்பி இறங்கிய வேலைகளும் எளிதில் முடியும். தந்தை மீதான பாசம் கூடும். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. பணவரவுகளைப் பெறலாம். கடன் வசூலாகும்.



### துலார்

பயணங்களில், திட்டமிட்ட காரியங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். எதிர்பாராத தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளு உண்டு. கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். முடிந்து விட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம். தேவையான பணத்தைப் புரட்டிக் கொள்வது கடினமாக இருக்கும். அதேநேரத்தில், அதோ, இதோ என, பல வழிகளிலும் செலவுகள் அதிகரித்துக் கொண்டிருக்கும். வழக்கு விவகாரங்களில் இழுபறி நிலைமை காணப்படும். எந்தக் காரியமும் எதிர்பார்த்த வேகத்திற்கு நடைபெறாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். பணிபுரிவோர் சக ஊழியர்களையும், மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும். கடினமான பேச்சுவார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும். நம்ப வைத்து கழுத்தை அறுப்பவர்களேஅதிகம் என்பதாலும், எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. குதர்க்கமான பேச்சுக்களை, குத்தலான பேச்சுக்களை தவிர்க்க வேண்டும். உங்களைத் தூண்டி விட்டு சிலர் வேடிக்கை பார்க்கலாம் என்பதால், கவனம் அவசியம். உறவினர்கள் வழியில் சுபச் செலவுகள் நேரும். காரிய வெற்றி உண்டு. நல்ல செய்திகளைக் கேட்கலாம்.



### விருச்சிகர்

உருப்படியான சில காரியங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். நண்பர்கள், உறவினர்கள், சக ஊழியர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். அவர்கள் மூலம் சில காரியங்களை நிறைவேற்றுவீர்கள். எதிலும் பொறுமை, நிதானமாக செயல்பட வேண்டும். குடும்ப உறுப்பினர்களுடன் சண்டை, சச்சரவுகள் ஏற்படலாம். அதிக விலைக்கு பொருள்களை வாங்கியும் அதில் திருப்தி கிடைக்காது. தடைப்பட்ட காரியங்கள் எல்லாம் விறுவிறுப்பாக நடக்கும். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. பிள்ளைகள், மனைவியின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள். பழைய பொன், பொருள்களை மாற்றி விட்டு, புதிய பொருள்கள் வாங்குவீர்கள். பூர்வீக சொத்துக்கள் மூலம் ஆதாயம் பெறும் சூழ்நிலை உருவாகும். விலகிச் சென்ற சொந்தங்கள் திரும்பி வந்து சேரலாம். அடிக்கடி உணர்ச்சிவசப்பட்டு மற்றவர்களிடம் எரிந்து விழுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் சண்டை போடுவதாலும் மன நின்மதி பாதிக்கப்படலாம். பெண்கள், வாகனங்கள் வழியில் செலவு உண்டு. எதிர்பாராத சந்திப்பு நிகழும். பக்தி நாட்டம் கூடும்.



### தனுசு

மனதின் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். பணவரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகளை, கட்டண மிகுதிகளை செலுத்துவீர்கள். தடைப்பட்ட காரியங்கள் முடிவுக்கு வரும். உங்களுக்காகவோ அல்லது குடும்பத்தினருக்காகவோ சில பொருள்களை வாங்கலாம். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு. பயணங்கள் அதிகரிக்கும். விருந்து, விசேஷங்களில் பங்கேற்பதால் செலவுகள் அதிகரிக்கும். தாயார் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். தேக ஆரோக்கியத்திலும் பாதிப்புகள் வராமல் சிறு தொந்தரவு உருவாகும் போதே, மருத்துவரிடம் செல்வது நல்லது. பண விடயங்களில் எச்சரிக்கை அவசியம். புதியவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்காமல் அனைத்தையும் நீங்களே செய்வது நன்மை தரும். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் ஏற்பட்ட தடை, தாமதங்கள் விலகும். சிரமப்பட்டாவது வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். எதிலும் முன்யோசனையுடன் செயற்பட வேண்டும். மதிப்பு, மரியாதைக்கு பாதிப்பு வரலாம்.



### மகரர்

பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகள் நேரும். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடிவடையாமல் அவற்றை நீங்களே செய்யலாம். சில விடயங்களில் முடிவு எடுக்க முடியாமல் குழப்பம், தடுமாற்றங்களுக்கு ஆளாகலாம். தொழில், வியாபார ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் வரலாம். உறவினர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். பணப்பிரச்சினைகள் அதிகரிக்கும். தொழில் ரீதியான விடயங்களில் நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். தவறு, குற்றம் குறைகளுக்கு ஆளாகலாம். உறவினர்களின் சுபகாரிய விடயங்களுக்கு செலவு செய்யலாம். சகோதரர்கள், பங்காளிகள் வகையில் அனுகூலம், உதவி பெறலாம். தடைப்பட்ட கட்டடப் பணிகளை முடக்கி விடுவீர்கள். விவசாயிகள் விளைபொருள்கள் விற்பனை மூலம் இலாபம் பெறலாம். பொலிஸ் தொடர்பான வகையில் அனுகூலம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு கூடும். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையின் தேவைகளை நிறைவேற்றி அவரின் அன்பைப் பெறுவீர்கள். மருத்துவச் செலவுகள் குறையும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் ஆதாயம், உதவி பெறலாம். அவர்களின் சந்திப்பு நிகழும். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். பிரியமானவர் சந்திப்பு உண்டு.



### கும்பர்

ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். வேலைப்பளு கூடும். உறவினர்கள் தொடர்பான வேலைகளுக்காக அலையலாம். மற்றவர்களுக்காக செலவு செய்யலாம். சிறிய விடயங்களை நினைத்து பெரிய அளவில் பயம் கொள்வீர்கள். சிலருடன் வெளியூர்களில் உள்ள ஆலயங்களுக்கு சென்று வழிபாடு நடத்தலாம். சோர்வு, சோம்பல் கூடும். தொழில் ரீதியான பணவரவுகள் அதிகரிக்கும். எதிர்பார்த்த கடனுதவிகள் சரியான நேரத்தில் கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். பிள்ளைகள் நலன் கருதியும், அவர்களின் சுபகாரியங்களை நடத்தவும் மேற்கொண்ட முயற்சிகளில் நல்ல திருப்பங்களைக் காணலாம். நீண்ட நாள்களாக சேமித்த பணம் கைக்கு கிடைத்து அதை நல்ல காரியம் ஒன்றுக்கு பயன்படுத்துவீர்கள். தெய்வகாரிய பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். தடைப்பட்ட வேலைகள் எல்லாம் சுறுசுறுப்பாக முடியும் சூழ்நிலை உருவாகும். பெற்றோருடன், சகோதரர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்ந்து பாசம் அதிகரிக்கும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் நீங்கள் கேட்காமலேயே சில உதவிகளைச் செய்யலாம். முகவர் தொழில்புரிவோருக்கு ஆதாயம் கூடும். பணவரவு உண்டு. சந்தோஷ அனுபவம் பெறலாம்.




### மீனர்

அடுக்கடுக்காக பல வேலைகளை திட்டமிட்டு நிறைவேற்றுவீர்கள். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள்களை சகாய விலைக்கு வாங்கலாம். தொழில், வியாபார ரீதியாக வரவேண்டிய பணவரவுகளைப் பெறலாம். குடும்ப நலனில் அக்கறை காட்டுவீர்கள். அலைச்சல், திரிச்சல் உண்டு. கடன் மிகுதி வசூலாகும். குடும்பத்திற்கு தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். நீண்ட தூர பயணம் செல்லலாம். ஆரோக்கிய குறைவுகள் அடிக்கடி ஏற்படலாம். வரவேண்டிய பணம் வராமல் இழுத்தடிக்கலாம். வாக்குக் கொடுத்தவர்கள் அதைக் காப்பாற்றாமல் சாக்குப் போக்கு சொல்லி சமாளிக்கலாம். கடன் பிரச்சினைகளாலும் கவலைகள் உண்டாகும். சிலருடன் மனஸ்தாபம் ஏற்படலாம். புதிய பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் தள்ளிப் போகலாம். பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைப்பதும் கடினம். சிலர் தொழில் ரீதியாக இடமாற்றங்களை எதிர்கொள்ளலாம். கணவன் மனைவி உறவில் பிரச்சினைகள் ஏற்படலாம். இருந்தாலும், பெரிய அளவில் சங்கடங்கள் நேராது. சுக, சௌகரியங்களுக்காகச் செலவழிப்பது தொடரும். தகப்பனார் வழியிலும், மருத்துவ சிகிச்சை மேற்கொள்வதிலும் கணிசமான பணம் கரையலாம். குழப்பம், தடுமாற்றம் நேரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியவர்களை விட குழந்தைகளுக்கே பால் எளிதில் சமிபாடடையும்



பெரியவர்களை விட குழந்தைகளுக்கு பால் குடித்தவுடன் சமிபாடு நன்றாக இடம்பெறுகிறது. இதற்கு ஒரு வகை பக்ரீரியாவே காரணம் என ஆய்வில் தெரியவந்துள்ளது. இதன் பெயர் பலாங்கம் இன்பேன்டிஸ் ஆகும். இது குழந்தை பருவத்தில் சமிபாட்டுத் தொகுதியில் காணப்படும்.

பாலில், சிக்கலான வடிவமைப்பைக் கொண்ட ஒலிகோசாக் கரைடுகள் என்ற திடப்பொருள் உள்ளது. இது சமிபாடடைவதற்கு நீண்ட நேரம் எடுத்துக் கொள்கிறது. பலாங்கம் இன்பேன்டிஸ் பாலில் உள்ள காபன் பொருள்களை எளிதில் எடுத்துக் கொள்கிறது.

பக்ரீரியாவின் இந்த செயற்பாடுகளால் உணவு சமிப்பாட்டு உறுப்புகள் நாளடைவில் நன்கு வளர்ச்சியடைகின்றன என ஆய்வு முடிவு தெரிவிக்கிறது. கலிபோர்னியா, டேவிஸ் மற்றும் உத்தா மாநில பல்கலை கழகங்களை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஜீன்கள் பற்றிய ஆய்வில் இதனை தெரிவித்துள்ளனர்.



# முல்லைப் பூவின் மருத்துவ குணங்கள்

முல்லைப் பூ தலையில் சூட மட்டும் அல்லாமல் பல்வேறு மருத்துவ குணங்களையும் கொண்டுள்ளது. அதாவது, முல்லை மலரை தலையில் சூடிக் கொண்டு, அதன் மணத்தை முகர்ந்தாலே மனோ வியாதிகள் நீங்கி மனத்தெளிவு உண்டாகும் என்று கூறப்படுகிறது.

முல்லைப்பூவின் சாறு பிழிந்து 3 துளி மூக்கில் விட தலைவலி தீரும்.

முல்லைப் பூவின் சாற்றினை 2 அல்லது 4 துளி வீதம் கண்ணில் விட்டு வர கண் பார்வைக் குறைவு குணமாகும்.

முல்லைப் பூவை அரைத்து அல்லது அப்படியே வைத்து மார்பில் கட்டி வர தாய்ப்பால் சுரப்பு குறையும்.

ஒரு கைப்பிடி அளவு முல்லைப் பூவை நீர் விட்டுக் காய்ச்சி அரைவாசிக்கு வற்றியதும் 15 மில்லி அளவு குடித்து வர மாதவிடாய் கோளாறுகள் குணமாகும்.

உடலில் சொறி, சிரங்கு இருந்தால் நாம் வேலைகளில் ஈடுபட முடியாது. எப்போதும் கை சொறிந்து கொண்டிருப்பதிலேயே மும்முரமாக இருப்போம். எனவே, முல்லைப் பூவை அரைத்து உடல் முழுவதும் தடவி அரை மணித்தியாலம் நேரம் கழித்து குளிக்கவும். ஒரு நாள் விட்டு ஒரு நாளாக 3 நாட்கள் செய்து வர நல்ல குணம் கிடைக்கும்.

முல்லைப் பூவைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கஷாயம் கருப்பை நோய்களை போக்கும் தன்மை கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

முல்லைப் பூ மட்டுமல்லாமல், அதன் இலை, வேர்ப்பகுதிகளுக்கும் அதிக சிறப்பு உள்ளது.




# விளாம்பழத்தின் மருத்துவ குணங்கள்



விளாம்பழம் பல நோய்களைக் குணப்படுத்தும் சிறந்த பழமாகும். இதில் இரும்புச் சத்தும், சுண்ணாம்புச்சத்தும், விற்றமின் ஏ சத்தும் உள்ளது. இப்பழத்துடன் வெல்லம் சேர்த்துப் பிசைந்து 21 நாள்கள் சாப்பிட்டு வந்தால் பித்தம் சம்மந்தமான அனைத்து நோய்களும் குணமாகும்.


பித்தத்தால் தலைவலி, கண்பார்வை மங்கல், காலையில் மஞ்சளாக வாந்தி எடுத்தல், தினமும் வாயில் கசப்பு, பித்த கிறுகிறுப்பு, கை கால்களில் அதிக வியர்வை, பித்தம் காரணமாக இளநரை, நாவில் சுவை உணர்வு அற்றநிலை என்பன உண்டாகும். இவைகளை விளாம் பழம் குணப்படுத்தும். விளாம்பழத்திற்கு குருதியில் கலக்கும் நோய் அணுக்களை அழிக்கும் திறன் உண்டு. எனவே எந்த நோயும் தாக்காமல் பாதுகாக் கும். சமிபாட்டுக் குறைபாட்டைப் போக்கி பசியை உண்டுபண்ணும் ஆற்றலும் விளாம்பழத்திற்கு உண்டு. முதியவர்களின் பல் உறுதி இழப்பிற்கு விளாம்பழம் நல்ல மருந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WESTERN UNION | yes!

money transfer

# yes! வெஸ்டர்ன் யூனியன் மூலம் வெளிநாட்டிலிருந்து பணத்தினைப் பெற்று பெறுமதி மிக்க பரிசுகளை வென்றிட ஒரு அரிய சந்தர்ப்பம்!



மாதாந்த சீட்டிழுப்பின் மூலம் தங்க நாணயங்களை வென்றிடும் அதிர்ஷ்டசாலிகள் ஐவரில் ஒருவராகவோ அல்லது ஐரோப்பாவிற்கான பயணமொன்றினை வென்றிடும் அதிர்ஷ்டசாலிகளாகவோ விரும்புகிறீர்களா?

2010 ஒக்டோபர் 20ஆம் திகதியிலிருந்து எந்தவொரு வட பிராந்திய வெஸ்டர்ன் யூனியன் பிரதிநிதிகள் மூலமாகவும் பணத்தைப் பெற்றுக்கொண்டால், மாதாந்தம் இடம்பெறும் அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் நீங்களும் பங்குபற்றி தங்க நாணயங்களையும், இருவர் ஐரோப்பா பயணிப்பதற்கான அதிர்ஷ்டத்தினையும் வென்றிடலாம்

| சீட்டிழுப்பு | வெற்றியாளர் தொகை | சீட்டிழுப்பு திகதி | பரிசுகள் |
|---|---|---|---|
| 1 வது சீட்டிழுப்பு | 05 | 24 நவம்பர் 2010 | 5 தங்க நாணயங்கள் |
| 2 வது சீட்டிழுப்பு | 05 | 28 டிசெம்பர் 2010 | 5 தங்க நாணயங்கள் |
| 3 வதும் இறுதியுமான சீட்டிழுப்பு | 07 | 17 ஜனவரி 2011 | 5 தங்க நாணயங்களுடன் இருவருக்கான ஐரோப்பா பயண டிக்கெட் |

தாமதம் செய்யாதீர்கள்! உடனேயே பணம் அனுப்புபவருக்கு அறிவித்து பெறுமதிமிக்க பரிசுகளை
'றிடும் சந்தர்ப்பத்தினைப் பெறுங்கள்.
மேலும் விபரங்களுக்கு எந்தவொரு வெஸ்டர்ன் யூனியன் பிரதிநிதி நிலையங்களையும் அணுகுங்கள்.

## வெஸ்டர்ன் யூனியன்

- விரைவானது
- நம்பிக்கையானது
- இலகுவானது
- சட்டபூர்வமானது
- நாடளாவிய 4100 பிரதிநிதிகளையும் இலங்கையின் வட பகுதியில் 70 கிளைகளையும் உள்ளடக்கியது.

- இந்நிகழ்வு 2010 ஒக்டோபர் 20ஆம் திகதி ஆரம்பித்து 2011 ஜனவரி 15ஆம் திகதியுடன் முடிவடையும்.
- 5 தங்க நாணயங்களின் வெற்றியாளர்கள் ஒவ்வொரு மாதமும்: 24 நவம்பர் 2010, 28 டிசெம்பர் 2010, 17 ஜனவரி 2011. ஒரு சீட்டிழுப்பில் பங்குபற்றும் ஒருவர் ஒரு தங்க நாணயத்தினை மாத்திரமே வெல்லலாம். வெஸ்டர்ன் யூனியன் மூலம் பணம் பெற்றுக்கொள்ளும் ஒருவர் எத்தனை சீட்டிழுப்பிலும் பங்குபற்றலாம்.
- எந்த அளவு பணத்தினைப் பெற்றுக்கொண்டாலும் ஒரு பரிமாற்றத்தினை மேற்கொள்ளும் ஒருவர் ஒரு முறை மாத்திரமே பங்கு பற்றுவதற்கு தகுதியுடையவராவார்.
- ஐரோப்பா பயணத்திற்கான வெற்றிபெறும் தகுதி இருவருக்கு உரியது.
- இச்சீட்டிழுப்பு 2011 ஜனவரி 17 ஆம் திகதி இடம்பெறும்.
- இதன் ஏற்பாட்டாளர் முன்னறிவத்தலின்றி பயணிக்கும் நாட்டில் மாறுதலை ஏற்படுத்தலாம்.
- வெற்றியாளாகள் தமது பரிசுகளை 2011 ஜனவரி 22ஆம் திகதி இடம்பெறும் இறுதி இசை விழாவின்போது பெற்றுக்கொள்ளலாம். பரிசுகளை பெறுவதற்கான இறுதித் திகதி 2011 பெப்ருவரி 15ஆம் திகதியாகும். பயணச் சீட்டுகளை வெல்வோர் பயணிக்கும் தினத்தினை சீட்டுகளை பெறமுன்னரே அறிவிக்கவேண்டும்.
- ஏற்பாட்டாளரின் அனுமதியுடன், விமானச் சீட்டினை பணமாக மாற்றிக் கொள்ளலாம்.
- பயணச் சீட்டும், சேவையும் மூன்றாந்தரப்பினர் அல்லது பயண முகவரினாலோ மேற்கொள்ளப்படும். இச்சேவையினரால் அளிக்கப்படும் சேவைக்கோ பயண செலவு மற்றும் மேலதிக வரிக்கட்டணங்கள் வீசா கட்டணங்கள் அல்லது பயணத்தின்போது ஏற்படும் செலவுகளுக்கு வெஸ்டர்ன் யூனியன் பொறுப்பாளிகள் அல்ல.

**தங்க நாணயங்கள் மற்றும் ஐரோப்பா பயண அதிர்ஷ்ட சீட்டிழுப்பு நிபந்தனைகளையும் சட்ட திட்டங்களையும் உள்ளடக்கும்**

licence No. WP/GT/3168

பிரதான பிரதிநிதிகள்

MMBL Money Master | NDB வங்கி | மக்கள் வங்கி | ශ්‍රී ලංකා තැපැල් இலங்கை அஞ்சல் SRI LANKA POST | UNION BANK If it's important to you, it's important to us

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org